உ

கடவுள் துணை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புஸ்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த <u>யோக ஞான சாஸ்திரத் திரட்டு</u> என்னு மிப் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற ஒவ்வொரு மகான்களிடத்திலும் ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சகல சுதந்தரத்துடன் பெற்று, என் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுச் சாஸ்திரங்களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப் போதுமான திரவியத்தைச் செலவு செய்து என்னால் (கெவர்ண்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொண்டேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை

உ

கடவுள் துணை.

# முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனால் உற்பத்தியாக்கப்பட்ட பலவுயிர்களிலும், சுவேதஜம்-அண்டஜம்-உற்பீஜம்-சராயுஜமாகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளிற் சிரேஷ்டமானது இம்மானிடப்பிறவியேயாம்; இதில் ஜெனிக்கும் சிசுக்கள்-பாலர்-குமாரர்-எவ்வனர்-விருத்தர்களாகிய ஆண் பெண்ணினங்களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காம மோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக் கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மய சொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலை ஏடுகளி லெழுதி, வீடுகளில் காலை மாலை பூசையில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்பர் இ. ராம. குருசாமிக்கோனார் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏட்டுப் பிரதிகள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும், கனம் ந. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருந்த ஓலைச் சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதினெண் சித்தர்கள் பாடல்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனியும், எள்ளும் ஒளியும் இருப்பது போல, என்பாற் பிரியா தெழில் நட்பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பர்" இ. ராம. குருசாமிக்கோனாரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வகடாக்ஷத்தால் திருப்பழனியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச போகம[illegible]ஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்ப[illegible]தண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவா[illegible]கையாண்டுவந்த பலசாஸ்

திரங்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கையில் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டு வரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுகை மோனைக ளேதுமில்லா திருந்தன. அவைகளைப் பூர்த்தி செய்யவேண்டி, இப்புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும் ஒவ்வொரு சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற நமது ஆத்மநண்பர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஓலையேட்டுப் பிரதிகளைப் பெற்று அவற்றுள் வரைந்துள்ள லிகிதப்பிரகாரம், அனேக மகான்களின் உதவியைக்கொண்டு என் சிற்றறிவுக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி, இதற்கு தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோக ஞான சாஸ்திரத் திரட்டு" எனத் திருநாமஞ் சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவதற்காகப் பொருட் செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டு சதா துணைக்கருவியாயிருந்த மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரியும், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்காரருமாகிய நமது நேயர் இ. ராம. குருசாமிக் கோனாரவர்களது நன்றியும், தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்களது நன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய பெரிய சாஸ்திரங்கள் ஒரு புஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்தகத்தி லில்லாதிருப்பதால், பன்னிரண்டு வாலியத்தையும் பார்ப்ப தவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனை வாங்கிக் கையாண்டு வருவீர்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்,

த. குப்புசாமி நாயுடு,

மதுரை.

உ

கணபதி துணை.

# மூன்றாவது புஸ்தகம்.

## தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# யோகஞான சாஸ்திரத்திரட்டின்

## அட்டவணை.


| இலக்கம் | சாஸ்திரங்களின் பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 68 | கடைப்பிள்ளை | ஞான சைதன்யம் 7 | ... | 513 |
| 69 | ஷை | ஞான சமாதி தீட்சை 17 | ... | 516 |
| 70 | ஷை | ஞானத் கண்டகம் 50 | ... | 521 |
| 71 | ஷை | ஞானக் கக்கிஷம் 80 | ... | 535 |
| 72 | ஷை | சிவயோக ஞானம் 100 | ... | 556 |
| 73 | ஷை | கலைக்கியானம் 120 | ... | 582 |
| 74 | ஷை | ஞான தீட்சாவிதி 16 | ... | 613 |
| 75 | ஜெயமுனிவர் | திருமந்திர ஞானம் 37 | ... | 618 |
| 76 | கல்லுளிச்சித்தர் | ஞானனந்த சூஸ்திரம் 19 | ... | 628 |
| 77 | ஷை | பாடல் 16 | ... | 633 |
| 78 | கஞ்சமலைச்சித்தர் | கலைக்கியானம் 23 | ... | 636 |
| 79 | ஷை | பாடல் 25 | ... | 642 |
| 80 | புலிப்பாணி முனிவர் | பூஜாவிதி 50 | ... | 646 |
| 81 | கௌசிக முனிவர் | ஞான சூஸ்திரம் 30 | ... | 660 |
| 82 | மிருகண்டமகாரிஷி | மெய்ஞ்ஞானம் 30 | ... | 668 |
| 83 | குருராஜர் | ஞான ரத்தினபரணம் 50 | ... | 676 |
| 84 | ஷை | சிவயோக சிந்தாமணி 50 | ... | 689 |
| 85 | இராமரிஷி | சிவயோக ஞானம் 18 | ... | 702 |
| 86 | அத்திரி மகாரிஷி | உண்மை ஞானபோதகம் 30 | ... | 707 |
| 87 | புசண்ட மகாரிஷி | மெய்ஞ்ஞான விளக்கம் 80 | ... | 716 |
| 88 | ஷை | ஞான காவியம் 33 | ... | 737 |
| 89 | ஷை | ஞானோப நிடதம் 32 | ... | 746 |
| 90 | ஷை | ஞான சூஸ்திரம் 19 | ... | 755 |
| 91 | ஷை | ஞானக் குறள் 19 | ... | 758 |
| 92 | மௌனச்சித்தர் | ஞானம் 8 | ... | 760 |
| 93 | ஷை | பாடல் 12 | ... | 763 |
| 94 | சூதமகாமுனி | ஞான சூஸ்திரம் 14 | ... | 765 |

உ

சிவமயம்.

அறுபத்தெட்டாவது:

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சைதன்யம் எ.

வெளிகடந்த வெளியொளியே சுழிமுனைகாப்பு
வேதாந்த விபரத்தி னறிவேகாப்பு
தளிர்தனலுங் காலுமொன்றாய் மூன்றும்நவ்வில்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமேகாப்பு
அளிகருவி லெட்டாகி நாலுஞ்சேர்ந்த
அதிசயமே பூரணத்தி னறிவேகாப்பு
களிவுறுதி சைதன்ய ஞானங்கூறக்
கணபதியே முத்தியருள் காப்பதாமே.

தானென்ற உப்போடு காரசாரம்
தனித்துநின்ற திரிப்பொடியாம் மண்டலமுமூன்றாய்
வானென்ற பூதமஞ்சாய் ஆதாரமாறாய்
மருவியது பஞ்சீத கிருதமாகி
வேனென்ற தத்துவமாய் மனசுநாலாய்
வேதாந்தஞ் சித்தாந்தம் மனமுமாகிக்
கோனென்ற சூட்சத்தில் நின்றுதப்பா
கொள்கியதி லோர்ஞானங் கூறக்கேளே. (1)

கூறுகிறோம் தத்துவத்தைக் கேட்டுத்தள்ளிக்
கொண்டுநின்ற ஆறுதலைக் குறியுந்தள்ளிக்
கூறுகிறோம் மாயையெல்லாம் குறியோடேதள்ளிக்
கூறுகின்ற வாசனையைக் குமட்டிநீக்கிக்
கூறுகிறோம் மனதோடே புருவமையத்துநீ
கொடுமனசை அசையாமற் கெட்டிபண்ணிக்
கூறுகிறோம் அகாரமுத லுகாரந்தாக்கிக்
குவிந்துநின்ற மவுனத்தை அறிவிற்றாக்கே. (2)

தாக்கையிலே புருவமையம் கனத்துவிம்மும்
சாதகத்துக் கேறுவது தாக்குதாக்கு
நோக்கையிலே பளிச்சென்று நாதங்காணும்
நன்னையஞ்சேர் நாதம்போம் அறிவுஞ்சேரும்
பார்க்கையிலே ஒன்றுமில்லை சடமுமில்லை
பாரென்ற மவுனமில்லை அறிவுமில்லை
காக்கையிலே அகண்டமுள்ளே கொல்லுங்கொல்லும்.
காராட்டா லொன்றுமில்லை காருபாரே. (3)

பாரிந்த அகண்டத்துக் காதியந்தம்
பாவை்திற் கூட்டுகிற துறையோகோடி
நேரிந்தப் படியல்லோ நேர்ந்தார்நேரே
நிமிஷத்தில் நெருவிக்குஞ் சூதமொன்றுபோதம்
சாரிந்தச் சமனுக அருளோடு பொருளுஞ்
சாதகமாய்ச் சொன்னதெல்லாம் பொய்யாம்பொய்யே
கூரிந்தக் குருவருளாற் குகையிற்சென்று
குவியாட்டாற் குருவகைக்குங் குளிகைசெய்யே. (4)

செய்யப்பா குளிகைமுந்தித் துரியத்திற்சொக்கும்
செகசால மட்டாங்கஞ் சேரஆடும்
வையப்பா மனசையந்த அகண்டத்துள்ளே
மற்றொன்றில் வையாதே மயக்கமாகும்
மெய்யப்பா முக்காலுஞ் சொன்னேனும்பாரு
வேறொன்று மெண்ணுதே மனமுரைக்கமுத்தி
பொய்யாயெண் ணுதேவுப சரிக்கச்சித்தி
புகழ்பெரிய வல்லோர்கள் போக்கிதாமே. (5)

போக்கோடே தேசமெங்குந் திரியுமக்காள்
புகழாக விந்நூலைப் பாடம்பண்ணி
வாக்கோடே நாதாக்கள் நாதங்கெட்டால்
மயங்காதே யிம்முறையை வகையாய்ச்சொல்லு
தாக்கோடே ஆறுமந்தத் துரியமீது
தானவனுஞ் சச்சிதா னந்தகுருமூலம்
தூக்கோடே பணிந்துமக்காள். வாயைப்போற்றிச்
சோத்தியமாய்ப் பிதாபெயரைச் சொல்வேன்பாரே. (6)

சொல்லுகிறேன் மூலகுரு நாலாம்பேரன்
சொற்றவருக் கொங்கணற்குப் பிள்ளையானேன்
சொல்லுகிறேன் உனையழைத்து அணைத்துக்கொள்வார்
சூழுலகி லறுபத்து நாலுபதியோரும்
சொல்லுகிறே னதிலறிந்த மட்டுஞ்சொன்னோம்
துடியான நாதாக்கள் நூளும்பெற்றேன்
சொல்லுகிறேன் மூலகுரு போகர்பாதம்போற்றிச்
சுத்தசை தன்னியமென்றும் வேதாந்தமுற்றே. (7)

கடைப்பிள்ளை ஞானசைதன்யம் எ

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் கு. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

அறுபத்தொன்பதாவது:

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சமாதி தீட்சை ௰௭.

ஆதிசிவ மூலகணபதியைப் போற்றி
அருள்பெருகுஞ் சமாதியுட தீட்சைசொல்ல
நீதியுள்ள நந்தீசர் மூலனாயன்
நிலையறிந்த காலாங்கி போகமூர்த்தி
சோதியெனும் பூரணதே சிகராய்நின்ற
துணையான கொங்கணவர் பாதங்காப்பு
ஓதியதோர் மந்திரகலை சமாதுதீட்சைக்
குண்மையுள்ள கணபதிதாள் சரணந்தானே. (1)

தானான தீட்சையடா சமாதிதீட்சை
தனையறிந்து மந்திரமாம் மூலபீடம்
கோனான பீடமதை யார்தான்காண்பர்
குறித்தபடி சொல்லுகிறேன் குறியைக்கேளு
தேனான மூலமடா அக்கினியுமாச்சு
திருவான முக்கோண மாலின்வீடு
வானான அண்டமடா புருவமத்தி
வளமான மதியினுட மனந்தான்பாரே. (2)

பாரப்பா மூன்றினுட விபரஞ்சொன்னேன்
பதிவாக அவர்களுட மூலங்கேளு
நேரப்பா அடிமூல மக்கினியின்பீசம்
நிலையான பீசமடா ஓம்-ஆம்-உம் மென்றோது
காரப்பா நடுவான கதிரினுடபீசம்
கருணைவளர் ஐங்கிலியும் சவ்வென்றோது
மேரப்பா முடிவான மதியின்பீசம்
விளங்கிநின்ற நமசிவய மென்றுகாணே. (3)

காணவே மண்டலங்கள் மூன்றில்நின்ற
கருணைவளர் தேவதைகள் பீசஞ்சொன்னேன்
பூணவே மனங்குவிந்து செவிக்கமைந்தா
புத்தியுடன் வகைவிபரம் புகலக்கேளு
தோணவே உதயாதி தன்னில்நீயும்
சுத்தமுள்ள மனக்கண்ணால் மூலம்பார்த்து
ஊணவே ஓம்-அம்-உம் மென்றேதான்
உத்தமனே நூத்தெட்டு உருவேசெய்ய. (4)

உருவறிந்து ஓதயிலே மூலத்தீய்தான்
ஓமெனவே தான்சொலித்து வேர்வைமீறும்
கருவறிந்து தானெழுந்து நித்தியகர்மம்
கட்டளையைத் தான்முடித்து தன்னைநோக்கித்
திருவிருந்த சத்தியடா முக்கோணத்தில்ச்
சென்றிருந்த மனக்கண்ணால் நன்றாய்ப்பார்த்துக்
குருவிருந்த பதிநோக்கித் தியானம்பண்ணிக்
குணமாக அய்யுங்கிலியுஞ் சவ்வென்றோதே. (5)

ஓதுவது நூத்தெட்டு உருவேசெய்தால்
உத்தமனே பரிதிமதி யொன்றாய்க்கூடி
மாதுவளர் பூரணமாய் அண்டத்தேகி
மகத்தான சுழினையிலே தீபங்காணும்
கோதுபழு தில்லாதத் தீபங்கண்டால்க்
கூர்மையுள்ள கண்கள்ரெண்டுஞ் சிவப்புமாகும்
ஆதரவாய் அந்தநிலை யறிந்தேகொண்டு
அப்பனே மதிவீட்டை அடுத்துக்காரே. (6)

அடுத்துமன தாருதியினால் புருவத்தேகி
அப்பனே யிருசுடரின் அந்தத்தாலே
தொடுத்துமிகச் சிவயநம வென்றுதானுஞ்
சுத்தமுடன் நூத்தெட்டு உருவேசெய்து
நடுத்தரமாய் நின்றநடு விண்ணைநோக்கி
நாட்டமுடன் சந்திரனோ பிரகாசிக்கும்
திடத்துடைய சந்திரனோ பிரகாசித்தால்த்
தேகமதிற் குளிர்ச்சியுமே செம்மையாமே. (7)

ஆமப்பா கயிலாச வர்க்கத்தோர்கள்
அப்பனே புருவமதின் னருளைக்காண்பார்
தாமப்பா சொல்லுகிறேன் மூலவர்க்கஞ்
சங்கையுடன் நடுவான தொளிமையப்பார்பார்
ஓமப்பா யிருவருக்கும் ஒன்றேசூட்சம்
உருதியுள்ள சூட்சமடா மூலாமூலம்
காமப்பால் காணலப்பால் கொண்டுநல்லக்
கருவான மூலத்தைக் காருகாரே. (8)

காரப்பா மூலமது கணபதியின்தியானம்
கருவான முக்கோணம் நந்தியுடதியானம்
ஓரப்பா புருவமது சதாசிவத்(தின்)தியானம்
உண்மையுடன் நித்தியமுந் தியானித்தாக்கால்
தேரப்பா மனந்தேறும் வாசிதேறும்
சிவசிவா கெவுனசித்துத் தானேஉண்டாம்
நேரப்பா தினந்தோறுந் தியானஞ்செய்ய
நீடுலகில் நீயுமொரு சித்தன்காணே. (9)

காணவே மூலத்தால் முத்திபெற்றார்
கருணையுள்ள ரிஷிமூவர் சித்தரெல்லாந்
தோணவே மூலத்தால் சித்துமுண்டாம்
துலங்கிநின்ற அடிமூலம் ஆர்தான்காண்பார்
பூணவே அடிமூலம் தன்னொளிவாய்நிற்கும்
புருவநடுச் சுழிமுனையடா விண்ணொளிவாய்நிற்கும்
பேணவே விண்ணொளிவை விண்ணிற்சேர்த்து
பெருகநின்ற ததினாலே சமாதாம்பாரே. (10)

பாரப்பா சமாதினுட பருவங்கேளு
பதிவான மூலமது தீயுமாச்சு
நேரப்பா நடுமனைதான் வாய்வுமாச்சு
நேர்ந்திரெண்டும் வொன்றொன்றாய்க் காயமாச்சு
சாரப்பா ரெண்டையுமே ஒன்றுபண்ணித்
தானவனாய் நின்றதினால் சமாதியாச்சு
ஆரப்பா அறிவார்கள் சமாதிதீட்சை
.ஆதியந்தம் நீயெனவே அறிவாய்க்காணே. (11)

காணவே சொல்லுகிறேன் மதிக்கும்மேலே
        கலந்துபார் அறிவுடனே திசநாதத்தைப்
பூணவே யிருதயராய் நெஞ்சில்த்தானும்
        புகழான ரவியினுட பிரகாசத்தைத்
தோணவே ஆதார மூலம்பாரு
        சுடர்க்கொடி போலவுமே தீபங்காணும்
ஊணவே நலமனதாய் மூன்றும்பார்த்து
        உத்தமனே உகந்தந்த யிடத்தைக்கேளே. (12)

கேளுநீ ஆதியடா மூலாதாரங்
        கிருபையுள்ள சுதாகரமாம் நிராதாரந்தான்
வாழுநீ பிர்மமது மைந்தாகேளு
        வலுமையுள்ள மவுனமடா துரியாதீதம்
வேழுநீ மாலினுட வீடுதானும்
        விளங்கிநின்ற கருணையடா துரியம்பாரு
சூழுநீ ருத்திரனார் மலையில்த்தானும்
        சுழியதுவும் நின்றதடா அறிந்துகொள்ளே. (13)

அறிந்துகொள்ளு மயேஸ்பரத்தில் மைந்தாமைந்தா
        அப்பனே சொற்பனந்தா னடங்கிநிற்கும்
விரிந்துநின்ற மணித்தாயின் வீட்டுக்குள்ளே
        விளைந்திடுமே சக்கரந்தான் மேன்மையாக
வரிந்துநன்று யாதாரம் நன்றாய்ப்பார்த்து
        வழிதுறையும் வாசியுட நிலையுங்கண்டு
திருத்தியதோர் துரியாதீ தத்தில்நின்று
        சிவாயகுரு தேசிகனார் பாதம்பத்தே. (14)

பத்திமனம் பத்துவது மூலத்தீயில்ப்
        பாங்கான சுழியதனு லச்சுழியிற்சென்று
சுத்தமுள்ள சதாசிவனார் மனையிலேதான்
        சுடரொளியாந் தூண்டாத தீபமாகும்
சித்தமுள்ள தீபமடா பிராணநாதம்
        சென்றெழுந்த யிடத்திலது சேருங்கண்டாய்
புத்தியுடன் அந்திடத்தில் மனதைவைத்துப்
        பூரணமாய்க் கேசரியைப் பூசைபண்ணே. (15)

பூசையென்ன தேகமது கோயிலாச்சுப்
புத்தியுடன் கோவிலுக்குட் செல்லும்போது
நேசமுடன் மூலகண பதியைப்போற்றி
நிலையான நந்தியடி பூசைபண்ணி
வாசமுடன் சதாசிவனார் மனையில்ப்புக்கி
மகத்தான பராபரனார் ஒளியைக்கண்டு
பாசமுடன் நேசமதாய்த் தியானஞ்செய்யப்
பதிவான சமாதினுட தீட்சைமுற்றே. (16)

முத்தியுள்ள சமாதினுட தீட்சைதன்னை
முந்தண்ட யோகசிவ ஞானிக்கீவாய்
சித்தமுள்ள சிவயோக முத்தற்கீய்வாய்
சிவஞ்ஞான குருதேசி தனக்குமீய்வாய்
சுத்தமுள்ள சமாதினுட தீட்சைமார்க்கம்
சோசியமாய்ச் சொன்னதைநீ பதனம்பண்ணி
சத்தமது தான்பிறந்த யிடத்தில்நின்று
சதாகாலம் பூரணத்தில்ச் சார்வாய்முற்றே. (17)

கடைப்பிள்ளை ஞான சமாதி தீட்சை யௗ

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

எழுபதாவது:

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஞானத் தண்டகம் ருய.

அண்டமெனும் எமகூட மலையில்வாழும்
ஆதிநந்தி காலாங்கி மூலர்போகர்
விண்டபடி நடனமிடுஞ் சிலம்பைக்கண்ட
வேதாந்தக் கொங்கணவர் பாதம்போற்றி
கண்டதொழி லடக்கமதாற் றண்டக்கத்திற்
கருவுருவாய்ப் பாடுதற்கு கமலங்காப்பு
மண்டலத்துக் காதார மானநந்தி
மகத்தான மூலகண பதிகாப்பாமே. ❋

பதியான பதியதுவும் முக்கோணந்தான்
பார்மகனே உந்தியென்ற சுழினைமீதிற்
கெதியான மோட்சகெதி வீடென்றெண்ணிக்
கிருபையுள்ள ரவிமதியை ஒன்றாய்க்கூட்டி
விதியான தெழுத்தெனவே மவுனமாக
வேதாந்த சரந்தொடுத்து விண்ணைநோக்கித்
ததியான கால்மென வுருவேசெய்து
தாயான கொங்கணர்க்கு மகன்தானென்னே. (1)

மகனான கடைப்பிள்ளை யானசித்தர்
மார்க்கமுடன் வாவெனவே அமிர்தமீய்ந்து
அகமான தேசமதிற் சூட்சங்காட்டி
அஞ்செழுத்துக் குயிரான ஆதிகாட்டி
சுகமான பதிகாட்டிச் சொரூபங்காட்டிச்
சோதியென்ற கற்பூர நிலையுங்காட்டிச்
செகமாயை தன்னுடைய வழியுஞ்சொல்லிச்
செம்மையுடன் சிவயோகந் திறஞ்சொன்னேனே. (2)

சொன்னமொழி மெய்யெனவே தன்னைப்பார்த்துச்
சொரூபநிலை தனையறிந்து விண்ணைநோக்கிக்
கன்னுமனக் கண்ணறிந்து தன்னைப்பார்த்துக்
காலறிந்து மேலான கமலவீட்டில்
உன்னிவிளை யாடிமனக் கண்ணினாலே
உரிசையுடன் மதியமுர்த வுண்மைபெத்துத்
தன்னருளே தானாகத் தன்னைப்போற்றித்
தவசியென்ற கடைசிநடு விண்ணைப்பத்தே. (3)

பத்தியுள்ள குருபரனைக் கண்டால்மைந்தா
பருதிமதி சுடரதின்பின் பதியைக்கேளு
முத்தியுள்ள ஆதார முடிவைக்கேளு
மூர்க்கமுள்ள வாசியுட கருவைக்கேளு
சித்தியுள்ள கற்பமதின் செயலைக்கேளு
சிவசிவா பஞ்சகண் தீக்ஷைகேளு
சுத்தமுடன் மனம்நிறுத்திச் சுருதிகேளு
சொரூபநிலை யென்னவென்று தொழுதுகேளே. (4)

கேளடா பிர்மநிஷ்டை தன்னைக்கேளு
கிருபையுடன் நிருவிகற்பம் சமாதிகேளு
வாளடா சிவயோக வாழ்க்கைகேளு
மந்திரத்துக் குயிரான மணியைக்கேளு
காலடா ஓடிநின்ற யிடத்தைக்கேளு
கண்மூடி அறிவழிந்து கதையைக்கேளு
மாளடா மாண்டவிடந் தன்னைக்கேளு
மதிகதிரும் நின்றகுறி மார்க்கங்கேளே. (5)

மார்க்கமுடன் மூலமுத லாறுதாரம்
வகையுடனே அறிந்தந்தச் சுழியில்நின்றால்
ஏர்க்கையுடன் நினைத்தவண்ணம் முடிக்கலாகும்
எட்டிரண்டும் ஒன்றான இன்பத்தாலே
பார்க்கமணிக் கண்ணாலே நன்றாய்ப்பார்த்துப்
பத்திகொண்டு தேகமதைச் சித்திபண்ணு
சேர்க்கையுள்ள தேகமடா தேவரூபம்
சிவவிந்து நாதமொன்றாய்ச் சேர்ந்துசித்தே. (6)

சுத்தியுள்ள வகையேது என்றால்மைந்தா
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் மார்க்கமாக
முத்திகொண்ட அகாரமடா விந்துவிந்து
முதலான விந்துவடா தண்ணீரப்பா
புத்திகொண்டு தண்ணீரை யொன்றில்வாங்கிப்
புகலாதே வால்மிளகுப் பொடியைத்தூவிப்
பத்தியுட னுதையாதி தன்னிற்கொண்டாற்
பாலகனே தேகமது வாலையாமே. (7)

ஆமப்பா வாலைவய தாகுந்தேகம்
அந்தரங்க மானதொரு அமிர்தன்னால்
தாமப்பா தன்நிலையை யறிந்துகொண்டு
சதாகாலம் பூரணத்தில் மனத்தைநாடி
காமப்பால் கானல்பால் ரெண்டுங்கொண்டால்
கயிலாச தேகமடா காலனேது
ஓமப்பா சத்தியமாய்ச் சொன்னவார்த்தை
உறுதிவைத்துச் சத்தியமா யுத்துப்பாரே. (8)

உத்தமொழி சத்தியமாய்ச் சொல்லக்கேளு
உறுதியுடன் மனதுறுதி யாகநின்று
பத்தியுடன் ஓம்நம வசியயென்றே
பார்மகனே உருவேற்றப் பலிக்குஞ்சித்தி
சுத்தமுடன் தேகம்வச்ர காயமாகும்
சுருதியனல் மூலமடா முக்கோணத்தில்
புத்தியுடன் சதாகால முருவேசெய்தாற்
பூரணத்தில் நின்றுகெதி காணலாமே. (9)

காணவே வாமப்பால் தண்ணீராகும்
கருணையுள்ள கனற்பாலே நாதம்நாதம்
பேணவே நாதமென்றால் அறிவாரில்லை
பெண்குழந்தை யமுரியடா குமரிகற்பம்
தோணவே அந்தநீ ரொன்றில்வாங்கிச்
சுகமாக வால்மிளகு ஊறப்போட்டுப்
பூணவே ஊறியபின் னெடுத்துக்கொண்டு
புத்தியுடன் பின்னுமந்த நீரிற்போடே. (10)

போடப்பா பத்துமுறை நன்றாய்நீயும்
புண்ணியனே தானெடுத்து வைத்துக்கொண்டு
நாடப்பா அதையெடுத்துப் பதனம்பண்ணி
நடுவான பூரணத்தைத் தியானஞ்செய்து
வீடப்பா பெலப்பதற்கு மைந்தாநீயும்
விபரமுட னந்திசந்தி யுச்சிமூன்றாய்த்
தேடப்பா அய்யஞ்சாய்க் கொண்டுதேர்ந்தால்
தேகத்தில் நின்றதொரு நோய்கள்போமே. (11)

நோயான தின்னமொன்று அமிர்தகற்பம்
நுண்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
தாயான ஆனந்த மூலிச்சாற்றில்
தயவான சாதிக்காய் ஊறப்போட்டு
வாயாறக் காயினிலோ ரெட்டுப்பங்கு
வரிசையுட னேநறுக்கித் தானும்வைத்த
காயான சாதிக்கா யூரித்தானாற்
கணக்கஞ்சு முறைசெய்து வுலர்த்திக்கொல்லே (12)

கொல்லப்பா உதையாதி தன்னிலேதான்
குணமாக வொருதுண்டு வாயிற்போட்டு
மெல்லப்பா மென்றுரசங் கொண்டாயானால்
வேதாந்த வாசியது சித்தியாகும்
செல்லப்பா வாசியிற்சென் றேறியந்தத்
திருவான நடுமனையாஞ் சிகாரவீட்டில்
நில்லப்பா நின்றுநிலை கொண்டால்மைந்தா
நிலமான மூலமது நிலைக்கும்பாரே. (13)

நிலையான சிவகனீ வலுவாய்நிற்கும்
நிசபூசை விதிதீட்சை விதியாந்தன்னை
கலையாத மனதாகப் பூசைசெய்தாற்
கருவான தேகமது முத்தியாகும்
சிலையான தேகமது முத்தியானாற்
சிவசிவா சிவயோக மிதுதான்பாரு
அலையாதே வெறும்வீணர் பேச்சைநம்பி
ஆசைகொண்டு திரியாதே அண்டத்தேறே. (14)

அண்டபகி ரண்டமெல்லாம் நொடியிற்சுத்த
அவையடக்க மாகவொரு குளிகைசொல்வோம்
கண்டபடி சொல்லுகிறேன் மைந்தாகேளு
காயான சாதிக்காய் விராகன்பத்து
கொண்டபடி கிராம்பதுவும் விராகனஞ்சு
குணமான ஏலமது விராகனஞ்சு
விண்டபடி மதுரமது மூன்றுங்கூட்டி
விரைவாகக் கல்வத்திற் பொடித்துக்கேளே. (15)

கேளப்பா ஆனந்த மூலிச்சாற்றிற்
கிருபையுடன் நன்றாக அரைத்துமைந்தா
கேளப்பா ரவிதனிலே உலர்த்திப்பின்னால்
கெணிதமுடன் பின்னுமந்தச் சாறுவிட்டு
கேளப்பா யிப்படியே பத்துமுறைசெய்து
கிருபையுடன் கல்வத்தில் நன்றாயாட்டி
கேளப்பா ஆட்டியபின் வழித்தெடுத்து
கேள்வியென்ன பின்னுமதை நன்றாயாட்டே. (16)

ஆட்டப்பா மைப்போலே வழித்தெடுத்து
அப்பனே மிளகதுபோ லுருட்டிமைந்தா
நீட்டப்பா ரவிதனிலே காயப்போட்டு
நீமகனே தங்கமதாற் சிமிழ்தான்செய்து
போட்டப்பா பத்திரமாய் வைத்துக்கொண்டு
பூரணமா யொருகுளிகை வாயிற்போட்டு
நாட்டப்பா வாசிதனைச் சுழினைக்கேற்றி
நாதாந்த அமிர்தமது கொண்டுதேறே. (17)

தேறுவது யேதெனவே மைந்தாகேளு
சிவசிவா பிராணையஞ் செய்துகொண்டு
ஏறுவது வாசியினால் மூலங்கண்டு
ஏகாந்தச் சற்குருவைத் தியானம்பண்ணி
மாறுவித மறிந்துவுரு வேறினக்கால்
மகத்தான பிராணையஞ் சித்தியாகும்
பூருவமாய் நின்றதொரு ஆறாதாரம்
பொருந்திநின்ற சிவகலை யமுதமாமே. (18)

அமுதரசக் கற்பமுடன் குளிகைகொண்டு
அந்தரங்க மாகவேநீ கொண்டால்மைந்தா
அமுதரசத் தேகமதா யிருக்கும்பாரு
ஆதியந்த நாதவிந்தைச் சொல்லக்கேளு
அமுதரச மானதுவுங் குயப்பாலாகும்
அப்பனே நாதமது தேனுமாமே
அமுதரச குயப்பாலுந் தேனுங்கூட்டி
அப்பனே ஆண்டொன்று இருபோதுண்ணே. (19)

உண்ணையிலே கபமகலும் வாசியேறும்
உறக்கமென்ற அசதியது ஓடிப்போகும்
கண்ணுமனக் கண்ணதுவு மொன்றாய்ச்சேர்த்துக்
காலான வாசியது கண்டுதேற
விண்ணான சுழினையிலே நடனங்கொண்டு
மெய்யான கற்பூர வீட்டிற்சென்று
ஒண்ணான சுடரதுதான் வாசியோடே
ஒடுங்கிநின்ற யிடமதுதான் சுழியுமாமே. (20)

சுழியறிய வகையோடே சொல்லக்கேளு
சுகாசனமா யிருந்துமன தறிவால்மைந்தா
வழியோடே போம்வாய்வு சிவமதாகும்
மார்க்கமுட னுட்புகுதல் சத்தியாகும்
நெளியாமற் கண்டமதில் அங்கென்றாணி
நேசமுடன் சத்திசிவ மொன்றாய்நின்று
அழியாத பேரின்ப வீட்டிற்செல்லும்
அவ்விடந்தான் சிகாரமடா சுழியாம்பாரே. (21)

பாரப்பா ரவிவீடு மூலாதாரம்
பதிவான மதிவீடு புருவமத்தி
நேரப்பா சுடரதுதான் சிகாரத்தந்தம்
நிசமான முச்சுடரு மிதுதான்பாரு
பேரப்பா முச்சுடரே மும்மலமுமாகும்
பேரண்ட மிதுவாகுங் கண்டுகொள்ளு
காரப்பா யிதையறிந்து நடுவில்நின்றாற்
கருவான சிலம்பொலிதான் நாதமாமே. (22)

நாதமென்ற நாதமடா அண்டத்தங்கம்
நடுவான சூட்சமடா விந்துப்பிள்ளை
சூதமென்ற விந்தோடே நாதஞ்சேர்க்கச்
சொல்லுகிறேன் கருமானஞ் சுருக்கிநன்றாய்
நீதமென்ற அமுதமதில் விந்துசேர்த்து
நிசமான விந்துரெட்டி ஒன்றாய்க்கூட்டிப்
போதமுடன் வெந்தெடுக்க வாலையாச்சு
புத்தியுட னவ்வாலை சுத்திபண்ணே. (23)

சுத்திசெய்து வாலைதனை வைத்துக்கொண்டு
சுருதியுள்ள நாதமதைச் சரியாய்ச்சேர்த்துப்
பத்தியுடன் கற்பத்தில் மத்தித்தாக்காற்
பாலகனே நாதவிந்து ஒன்றாய்க்கூடி
சித்தியுள்ள மெழுகதுபோ லிருக்கும்மைந்தா
சிறுமணியாய்ப் பதினாறு மணியைச்செய்து
முத்திபெற்ற தமர்ச்செய்து பழத்தினுள்ளே
மூடிவைக்க மணியதுவு மிறுகிப்போமே. (24)

இறுகிநின்ற மணியெடுத்துக் கமலப்பாலில்
இன்பமுடன் சுத்திசெய்து யெடுத்துமைந்தா
உறுதியுடன் கோர்வைசெய்து வைத்துக்கொண்டு
உத்தமனே முகமணிதான் தங்கம்தங்கம்
பருதியென்ற தங்கமணி முகப்பில்வைத்துப்
பக்குவமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணிச்
சுருதியுடன் மந்திரங்கள் செபித்தாயானாற்
சொல்லவொண்ணா அச்சரங்கள் சித்தியாமே. (25)

ஆமப்பா மனோமணியைத் தியானம்பண்ணி
அருள்பெருகுஞ் செபமாலை கையில்வாங்கித்
தாமப்பா தன்னிலையே புருவமத்தி
தாயான இருதயமா முக்கோணத்தில்
வாமப்பால் மகிமையினால் வாசிபூட்டி
வகையுடனே கண்டமதில் அங்கென்றாணி
ஓமப்பா உள்மூலச் சுழியில்நின்றால்
உத்தமனே சத்திசிவ முறுதியாமே. (26)

உறுதியுடன் பிராணாயக் கருவைக்கேளு
ஓம்சிவா வசியநம வென்றுசொன்னாற்
சுருதியுடன் மாத்திரையொன் றூச்சுமைந்தா
சுகமாக ரேசிப்பாய் பதினாறையா
பருதியுடன் பூரிப்பாய் முப்பான்ரெண்டு
பார்மகனே கும்பிப்பாய் இருபான்நாலு
வரிதியுடன் மாத்திரைதா னெரித்துதானால்
மனக்கண்ணால் வெளியொளியை மருவிநேரே. (27)

நேரப்பா யின்னமொரு கருவைக்கேளு
நேர்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
தேரப்பா போம்வாய்வு ரேசகந்தானாகும்
திரும்பியது உட்புகுதல் பூரகந்தான்மைந்தா
சேரப்பா ரெண்டையுமே ஒன்றுபண்ணித்
திருவாய் சுழினையென்ற சிகாரவீட்டிற்
காரப்பா மனக்கண்ணால் நிறுத்திப் பார்த்தாற்
கருணையுள்ள கும்பகமென் றறிந்துகொள்ளே. (28)

கொள்ளப்பா வசியமொன்று சொல்லக்கேளு
கூர்மையுள்ள புழுகதிலே சவாதுகூட்டி
விள்ளப்பா ரண்டையுமே ஒன்றாய்ச்சேர்த்து
மெய்ஞ்ஞான வசியமென்று மத்தித்தேதான்
தெள்ளப்பா தங்கமென்ற சிமிழில்வைத்துச்
சிவசிவா நெற்றிதனிற் றிலதம்போட்டு
உள்ளப்பா அஞ்செழுத்தைத் தியானம்பண்ணி
ஓமெனவே நீயிருக்க வுண்மைகேளே. (29)

உண்மையின்று சொல்லுகிறேன் மைந்தாகேளு
உனதுடைய சமுகமதைக் கண்டோர்க்கெல்லாம்
வண்மையென்ற நோய்களெல்லா மகன்றுபோகும்
வஞ்சனையும் பில்லிமுதல் மாண்டுபோகுந்
திண்மையென்ற மனதகன்று நன்மையாவார்
சிவசிவா திலதமதின் செயல்தானையா
நன்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
நாதாந்தப் பூரணத்தில் நாடிநில்லே. (30)

காடிநின்று னுன்சமுகங் காண்போரெல்லாம்
நல்லோரும் பெரியோருந் தொண்டுசெய்வார்
ஆடிநின்ற அம்பலவர் மனதிற்சென்று
அருள்ஞானத் தீபமதைக் காட்டிவைப்பார்
மூடிநின்ற திரையகற்றித் தீபங்கண்டால்
மூவுலகில் நீயுமொரு சித்தனுவாய்
வாடிநின்று அலையாதே பொய்சொல்லாதே
வஞ்சகர்க்கு மாரணத்தை வழுத்தக்கேளே. (31)

கேளடா மாரணத்தின் கருவைநன்றாய்க்
கேசரத்திற் கேசரியாள் சொன்னவித்தை
கேளடா யிடதுகையில் விபூதிவைத்துக்
கெணிதமுடன் கற்பூரக் கட்டிதன்னைக்
கேளடா தீபமதிற் கொளுத்திமைந்தா
கிருபையுடன் விபூதியின்மேல் வைத்துஅந்தக்
கேளடா சத்துருவின் பேரைச்சொல்லிக்
கெட்டியாய் நசிநசியென் றெழுதியோதே. (32)

ஓதுவது பதினாறு உருவேசெய்து
உறுதியுடன் நெற்றிக்கண் நடுவேதூக்கிச்
சூதுடனே ஊதிவிட மைந்தாகேளு
சுருதியுடன் மெய்மறந்து தூங்கலாவான்
வாதுடைய துட்டரைச்சங் காரஞ்செய்ய
மந்திரமா மோங்கார விழிதானுச்சு
நீதியுட னோர்மனதாய் நசியென்றோத
நின்றதொரு பாவமெல்லாம் நீறிப்போச்சே. (33)

போச்சப்பா சத்துருவாய் நின்றநோய்கள்
பொறிப்பட்ட பஞ்சதுபோல் வெந்துநீறும்
நீச்சப்பா மாரணத்துக் கிதுவேமூலம்
நிலையறிந்து வாசியினால் நெற்றிக்கண்ணில்
மூச்சப்பா நிறுத்தியொரு மனதாய்நீயும்
முக்காலும் மூணுதர மூதினுக்காற்
காச்சப்பா மூலமென்ற தீயினாலே
கற்பூரத் தீபமதைக் காணுவாயே. (34)

காணவே யின்னமொரு கருவைக்கேளு
காயான சாதிக்காய் தன்னைமைந்தா
தோணவே குயப்பாலா லுரைத்துக்கொண்டு
சுகமாக மூன்றுநாள் பெண்ணுக்கீய்வாய்
பூணவே பெண்களுட கெற்பந்தன்னிற்
பொல்லாத நோயகன்று பிள்ளையுண்டாம்
பேணவே புத்திகொண்டு பாருமைந்தா
பெருமையுடன் பிள்ளையுமே பிறக்குந்தானே. (35)

தானவனாய் நின்றுதவஞ் செய்யவேணும்
தன்மையுடன் பூரணத்தைக் காணவேணும்
கோனவனாய் நின்றகுறி மூலாதாரம்
குருவான ஆதாரம் சிகாரமாச்சு
நானவனாய் நின்றுநிலை தன்னைக்கண்டால்
நடுவான பூரணமே யேகவஸ்து
வானவர்கோ னறியாத வஸ்துதன்னை
வணக்கமுடன் மனக்கண்ணால் மகிழ்ந்துபாரே. (36)

பாரப்பா தீட்சைவிதி தன்னைப்பாரு
பத்திகொண்டு பூசைவிதி பதிவாய்ப்பாரு
நேரப்பா நின்றநிலை தன்னைப்பாரு
நிசமான சக்கரத்தின் நேர்மைபாரு
பேரப்பா வட்சரத்தின் மகிமைபாரு
பேரொளியின் நாதகீ தத்தைப்பாரு
தேரப்பா கர்மத்தின் செயலைப்பாரு
தெளிவான வாசியினாற் கண்டுதேறே. (37)

தேறுவது வாசியினாற் றேறவேணும்
சிவசிவா சிவயோகத் திருக்கவேணும்
நேருவது சுழிமுனையை நேரவேணும்
நிசம்வைத்துப் பூரணத்தில் நிலைக்கவேணும்
சாருவது புருவநடுக் கமலமீதிற்
சதாசிவனும் மனோன்மணியுந் தானேதானாய்ச்
சேருவது சுழினையென்று சிகாரவீட்டிற்
றேனருவி பாயுதடா தினமுங்கொள்ளே. (38)

கொள்ளுதற்கு இன்னமொரு கருமானங்கேள்
கூர்மையுள்ள தாதுபுஷ்டி யாகத்தானும்
நள்ளுறவா யுண்டாகக் குணத்தைக்கேளு
நலமான ஆவினுட பாலிலேதான்
துள்ளுகிற நெரிஞ்சிப்பூ முருங்கைப்பூவுந்
துப்பறவாய்ப் பாலிலிட்டுக் காய்ச்சிமைந்தா
தெள்ளுதற்குக் கற்கண்டு பொடித்துப்போட்டுச்
சிவசிவா வுதயத்திற் புசித்திடாயே. (39)

புசித்திடுவா யீராறு தினமுமைந்தா
பூரணமாந் தாதுவது புஷ்டியாகும்
வசித்ததொரு தேகமது சித்தியாகும்
மன்மதனும் நிகரில்லா வலுவுண்டாகும்
நசித்ததொரு நீர்க்கடுப்பு வெட்டைதீரும்
நடுவான விந்ததுவுஞ் செபிக்கும்பாரு
விசுத்தியின்மே லாக்கினையாம் புருவமீதில்
வேதாந்தக் கற்பூரத் தீபம்பாரே. (40)

பாரப்பா மூலமதின் கனலைத்தூண்டிப்
பதிவான முக்கோணச் சிகாரவீட்டில்
நேரப்பா மனதறிவால் நின்றுபாரு
நின்றிலங்கும் கற்பூரத் தீபந்தானும்
சாரப்பா அத்தீபந் தன்னிலேதான்
சார்வாக வாசியைநீ சூட்டிப்பாரு
ஆரப்பா அறிவார்க ளாதிதீபம்
அறிவான வாசியினால் மூலம்பாரு. (41)

மூலமென்ற மூலமதை யார்தான்காண்பார்
முச்சுடராய் நின்றதொரு மூலந்தன்னில்
மூலமென்ற நடுமூலம் முக்கோணந்தன்னில்
முளைத்தெழுந்த சிகாரமடா றீங்காரந்தான்
மூலமென்ற றீங்காரம் நடுவேவிந்து
முன்னான ரவியோடே மதியைச்சேர்த்து
மூலமென்ற கண்ணாடிக் குள்ளேபாரு
முத்திகொண்ட தீபமடா பிராணனுமே. (42)

ஆமப்பா பிராணனென்ற மூலத்தீயால்
அரகரா சுழினையென்ற தீபத்தேத்தி
ஓமப்பா வென்றதொரு தியானத்தாலே
ஒடுங்கிநின்ற மனதறிவால் ஊணிப்பாரு
தாமப்பா தன்னருளாற் சோதியாகித்
தயங்கியே நின்றதொரு தீபமாகிப்
போமப்பா அத்தீபச் சுடர்தான்சென்று
பூரணமாய் நின்றிலங்கும் பிராணனுச்சே. (43)

ஆச்சப்பா பிராணநிலை புருவமத்தி
அப்பனே திசையதுவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் முனையாந்தீபம்
முத்திகொண்ட யிடமதுதான் சத்தியாகும்
பேச்சப்பா யில்லைதோற் றொடுக்கம்ரெண்டும்
பெரும்பாதை சிகாரமடி மூலமாகும்
நீச்சப்பா வெகுநீச்சு நிருவிகற்பம்
நிலையான சமாதிதான் நிஷ்டையாமே. (44)

ஆமப்பா மனதுறுதி யானால்நிஷ்டை
அறிவான பூரணமாம் விந்துவிந்து
ஓமப்பா யிந்துவென்ற அமுதந்தன்னை
உத்தமனே வெண்சாரை யென்றபேர்தான்
காமப்பா வெண்சாரை தண்ணீராகுங்
கருணையுள்ள தண்ணீரும் வென்னீராகும்
தாமப்பா வெண்சாரை ஆதிகற்பம்
தன்னகத்திற் கண்டுகொண்டு தானாய்நில்லே. (45)

நில்லென்ற கருஞ்சாரை சொல்லக்கேளு
நிசமான பெண்ணமுரி நினைவாய்ப்பாரு
செல்லென்ற சாரையடா அமுதகற்பஞ்
சிந்தைமன தொன்றாகக் கொண்டுதேர்ந்தாற்
சொல்லென்ற மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
சுருதியென்ற தேகமது முத்தியாச்சு
கல்லென்ற கள்ளருக்கு இந்தநூலைக்
காட்டாதே மனதறிவால் தன்னைப்பாரே. (46)

தன்னைத்தான் தானறிந்து விண்ணைநோக்கித்
தாயான அமுதரசக் கற்பங்கொண்டாற்
கண்ணைத்தா னறிந்துமனக் கண்ணிரண்டுங்
கயிலாச மானதொரு கமலத்தீயில்
உண்ணத்தான் வகையேது கற்பத்தாலே
உள்ளடங்கிக் காண்பதுவே காட்சியாகும்
பெண்ணைத்தா னறிந்துபதந் தன்னைக்கண்டாற்
பிசகாது காயப்பெண் பிலமாம்பாரே. (47)

பிலமான மூலமடா கமலமாது
பேரின்ப மானதொரு சுழினைமூலம்
தலமான கமலமடா முதுகண்பார்வை
சங்கையுள்ள சிகரமடா தாயார்வீடு
குலமான வீடறிந்து யோகஞ்செய்தால்
குத்தமொரு நாளுமில்லை முத்தியாச்சு
நிலமான தலமாகும் பிலமாய்க்கண்டால்
நிலையறிந்து கலையறிந்தால் நிசமாம்பாரே. (48)

நிசமான வாசியடா நிசமாய்க்கண்டால்
நிலையறிந்து கலையறிந்து நேரலாகும்
தெசமான தீட்சையடா புருவத்தாதி
தேவியெனும் வாலைவிளை யாடும்வீடு
வசமான வீடறிந்து நிசமாய்நின்றால்
வாக்குறுதி மனதுறுதி ரெண்டுஞ்சித்தி
விசமான நாகமடா ராகுகேது
விள்ளகருஞ் சாரைவெண் சாரையாமே. (49)

ஆமப்பா தண்டகந் தன்னைப்பார்த்து
ஆதியந்தம் பூரணத்தை அறிந்துகொண்டு
ஓமப்பா குண்டலியைக் கண்டுதேறி
ஊடாடும் வாசியைநீ யுகந்துநின்றால்
நாமப்பா சொல்லுகிறோம் மண்விண்ரெண்டும்
நாட்டமாய்க் கண்டுகொள்ளு ஆதியந்தம்
தாமப்பா தன்னிலையே தானாய்நின்றால்
சதாகாலம் பூரணத்திற் சாருவாயே. (50)

சார்ந்திடுவாய் நித்தியதத் துவமதாகத்
　　தனியான பரவெளியின் நடனங்கண்டு
தேர்ந்திடுவாய் மெய்ஞ்ஞான போதந்தன்னிற்
　　சிறப்பாக வமுதரச கற்பமுண்ண
நேர்ந்திடுவாய் சத்துச்சித் தானந்தத்தின்
　　நிலையான வஸ்ததுவுந் தானேயென்று
ஓர்ந்திடுவாய் நின்பெருமை நிகழ்த்தப்போமோ
　　உண்மையறிந் துய்திடுவா யீதுமுற்றே. (51)

கடைப்பிள்ளை ஞானத்தண்டகம் ருய,

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

### எழுபத்தோராவது:

### கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஞான்க் கக்கிஷம் அம.

ஆதியென்ற மூலமந்த்ரம் அரியென்றோதி
அறிந்தபின்பு நவக்கிரகக் கக்கிஷத்தை
நீதியுடன் கருக்குருவாய் விளங்கவேண்டி
நிலையறிந்த கொங்கணவர் பாதம்போற்றி
ஓதியதோர் மந்த்ரகலைக் கியானமான
உண்மையென்ற வேதபூ ரணமேகாப்பு
சோதியென்ற ஆதார மூலமாகித்
துலங்குகின்ற கணபதிதாள் துணைகொண்டேனே.

கொண்டதொரு நாதவிந்து கலையினாலே
குவிந்ததொரு நவக்கிரகக் கூர்மைகேளு.
கண்டதொரு தசரேகை நேரேகீறி
கணக்காக அப்படியே குறுக்கேகீறி
ஒன்றுமுத லெண்பத்தோ ரறையுமாச்சு
உறுதியுள்ள அறைகளிலே உண்மையாக
அண்டர்பிரா னருள்தனாற் சொல்வேன்மைந்தா
அக்ஷரமும் லக்கமுட னருளக்கேளே. (1)

கேளடா முதலறையில் கம்மென்றிட்டு
கெணிதமுடன் பதினொன்று லக்கம்போடு
காளடா மறுஅறையில் சம்மென்றிட்டு
கணக்குடனே ஏழதிலே கனிவாய்ப்போடு
தாளடா மூன்றறையில் டம்மென்றிட்டு
தன்மையுடன் பனிரெண்டு லக்கம்போடு
நாளடா நாலறையில் தம்மென்றிட்டு
நாட்டடா வெட்டதிலே நலமாய்த்தானே. (2)

தானென்ற அஞ்சறையில் ரம்மென்றிட்டு
சங்கையுடன் பதிமூன்று லக்கம்போடு
கோனென்ற ஆறறையில் லம்மென்றிட்டுக்
குறியாக ஒன்பதுதான் குணமாய்ப்போடு
மானென்ற ஏழறையில் அம்மென்றிட்டு
மார்க்கமுடன் அஞ்சதிலே வளமாய்ச்சேரு
தேனென்ற எட்டறையில் உம்மென்றிட்டுத்
திறமாக லக்கம்து பத்தும்போடே. (3)

போடப்பா ஒன்பதென்ற அறையிலேதான்
புத்தியுடன் ஓம்-மென்று ஆறும்போடு
விடப்பா நவக்கிரக மொன்பதாச்சு
மேவிநின்ற நவபீசம் ஒன்பதாச்சு
நாடப்பா லக்கமெண்பத் தொன்றுமாச்சு
நலமாக நடுவணையைப் பிடித்துமாறு
சூடப்பா யெண்பத்தோன் றறையிலேதான்
சூட்சமுட னட்சரமும் லக்கம்பாரே. (4)

பாரப்பா லக்கமொடு அச்சரங்கள்
பதிவாகச் சமைப்பித்து மைந்தாகேளு
நேரப்பா ரேகைமூனே சூலம்போடு
நிசமான சக்கரமுஞ் சுத்தமாச்சு
காரப்பா சக்கரத்தின் மேலேமைந்தா
கனிவாக ரவிவளையம் மூன்றும்போட்டு
சேரப்பா வளையமதி லிதழ்கள்போட்டுத்
திருவான கோட்டைநால் வாசல்கட்டே. (5)

கட்டியதோர் நால்வாசல் தன்னிலேதான்
கருவாக நால்வேதந் தன்னைமைந்தா
திட்டமுடன் நிறுத்துதற்கு வியரங்கேளு
சிவசிவா மேல்வாசல் ருக்குவேதம்
சட்டமுடன் கீழ்வாசல் சாமவேதம்
சமரசமாய்த் தென்வாசல் யசுர்வேதந்தான்
இட்டமுடன் வடவாசல் அதர்வணவேதம்
இன்பமுடன் நால்வேதச் சுருதிகேளே. (6)

சுருதியுள்ள மந்திரந்தான் ருக்குவேதம்
சுகமான உயிரிதுதான் லஸீஹூலம்
கருதியதோர் வேதமடா சாமவேதம்
கலையான உயிரிதுதான் சசீஞசம்
பருதியுள்ள யசுர்வேத முயிரைக்கேளு
பாலகனே நகீநூ நம்மென்றேதான்
உருதியுள்ள வேதமதா் வணவேதத்தின்
உண்மையுயி ரதுரரீ ரூரம்மென்னே. (7)

என்னவே நால்வாசல் நாலுவேதம்
இன்பமுள்ள உயிரெழுத்தை யதிலேநாட்டிச்
சொன்னதொரு சக்கரத்தை யெதிரேவைத்துச்
சுகந்தமல ரட்சதையுந் தூபந்தீபம்
கண்ணிறைந்த காட்சியினு லுபசாரித்துக்
கருத்துறவே மானதமாய்ப் பூசைபண்ணிச்
சென்னிமையைத் தானோக்கிச் செபமேசெய்யச்
சிவசிவா மந்திரத்தின் செயலைக்கேளே. (8)

செயலான செயலறிந்து உருவேசெய்யத்
தீர்க்கமுள்ள மந்திரத்தைச் செப்பக்கேளு
சுயமான ஐ உ அ சிவயநம வென்று
சுத்தமுட னிருதயமாங் கமலத்தேகி
நயமாக நூற்றெட்டு உருவேசெய்தால்
நவக்கிரகக் கக்கிஷந்தான் சித்தியாகும்
பயமான நவக்கிரகக் கக்கிஷந்தான்
மார்க்கமுட னாடுகிற சித்துக்கேளே. (9)

சித்தென்ன கருவிடயம் நன்றாய்ச்சொல்வேன்
சிவசிவா நன்மைதின்மை ரெண்டுக்குந்தான்
சுத்தமுடன் நின்றுவிளை யாடுமிந்தச்
சுருதியுள்ள நவக்கிரகக் கக்கிஷந்தான்
நித்தமுமே நேமமதாய்ப் பூசைசெய்தால்
நினைந்தபடி நின்றுவிளை யாடலாகும்
புத்தியுடன் நீயிருந்து புருவத்தேகிப்
பூரணத்தின் கிருபையினாற் கருவைக்கேளே. (10)

கருவான வுறுதியென்ன வென்றுகேட்டாற்
கற்பூரமஞ்சளுடன் புழுகு சேர்த்துத்
திருவான் கமலப்பால் தன்னாலாட்டித்
திறமான நவக்கிரகந் தன்னிலேதான்
குருவான பதிநோக்கி நன்றாய்ப்பூசிக்
குணமாக மானதமாய்ப் பூசைசெய்து
உருவான மானிடர்க்குக் கட்டினக்கால்
உத்தமனே அவமிருத்து ஒதுங்கிப்போமே. (11)

ஒதுங்குமடா பில்லிமுதற் பிசாசுயேவல்
உத்தமனே கண்ணேறு நாவேறுந்தான்
ஒதுங்குமடா நெஞ்சடைப்பு மூர்ச்சைவாயு
ஒடுங்காத, அஷ்டகுன்மம் அட்டகாசம்
ஒதுங்குமடா வலிப்புடனே பிரமைதோஷம்
ஓயாத சலக்கடுப்பு மூலரோகம்
ஒதுங்குமடா வெகுகோடி நோய்களெல்லாம்
உண்மையுள்ள கக்கிஷந்தி னுறுதிகேளே. (12)

உருதியுள்ள நவக்கிரகக் கக்கிஷத்தின்
உண்மைதனை யாவருக்கு முரைத்தாயானாற்
பருதிமதி சுடரதனை மறந்துநீயும்
பாழ்நரகி லுனதுசடம் பதிவதாகும்
சுருதிதனை மறவாமல் மனத்தைக்காத்துச்
சொர்க்கபதம் சேரவென்று.லடக்கம்பண்ணு
கருதியதோர் கக்கிஷத்தை மைந்தாநீயுங்
கருத்துறவே மவுனமதாய்க் கனிந்துபாரே. (13)

கனிந்துமிகக் கருவிடயம் நன்றாய்ப்பார்த்துக்
கண்ணான பிள்ளைகட்குக் கருவைச்சொல்லு
அணிந்துமனம் பூண்டதொரு ஆசான்பிள்ளை
அன்பான சீஷருக்கு நன்றாய்ச்சொல்லு
துணிந்துமனு நீதியுள்ள ராஜபுத்ரன்
சுத்தமுடனிவர்களுக்கு ஞானமீய்ந்தாற்
பணிந்துநின்ற சீஷருக்கு மோட்சமுண்டாம்
பாலகனே குருதனக்கும் பலனுண்டாமே. (14)

ஆமப்பா யின்னமொரு சருமானங்கேள்
ஆகாத சத்துருமா ரணத்தைக்கேளு
சாமப்பா மயானத்தின் கரியோடொக்கத்
தவறாதே காந்தலொடு மண்ணுஞ்சேர்த்துத்
தாமப்பா கோழியுட வுதிரத்தாலே
தன்னரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு
ஓமப்பா சத்துருவின் பேரைநன்றாய்
உண்மையுடன் காரியத் தகட்டிற்றாக்கே. (15)

தாக்கிமறு புறத்தில்நவக் கிரககூட்சம்
தானெழுதி யறைமருந்தை யதிலேபூசித்
தூக்கியே எருவடிக்கி யதன்மேல்வைத்துத்
தூ தூ தும் என்று அனல் மூட்டினுக்கால்
நோக்கியதோர் சத்துருவும் நொடிக்குமுன்னே
நொந்துமிகக் கரைந்துஅவன் நொருங்கிப்போவான்
தீக்கொடுமை யதிலும்வெகு கொடுமையப்பா
சினந்துவரும் சத்துருமா ரணமிதாமே. (16)

தாமென்ற மாரணத்தி லநேகமுண்டு
ஜடுதியிலே கேளாது வெகுநாட்செல்லும்
ஓமென்ற கக்கிஷத்தின் வித்தைபோலே
ஒருநூலுஞ் சொல்லாது மைந்தாமைந்தா
ஆமென்ற நவக்கிரக கக்கிஷத்தை
அப்பனே பதனம்வெகு பதனம்பண்ணு
நாமென்ற அகமதனால் வெளியிற்சொன்னால்
நந்தியிலே தீப்பிடித்து நசிக்கும்பாரே. (17)

நசித்துமிகப் போகாமற் பதனம்பண்ணு
நாதாந்த நந்தியொளி நயனம்பாரு
பசித்துவரும் பரதேசிக் கன்னம்போடு
பாலகனே ஆதாரப் பதியில்நில்லு
விசித்தியின்மே லாக்கினையாம் மேலாதாரம்
விண்ணடங்காக் கண்ணொளியை மேவிப்பாரு
திசத்தில்மனம் நிலையாத மூடரோடே
நீமகனே பேசாதே நிலையைப்பாரே. (18)

பாரப்பா நிலையறிந்து நிலையைப்பாரு
பதிவான கலையறிந்து வாசியேறு
நேரப்பா நின்றநிலை வாசியாகும்
நிலையான பூரணமே போதமாகும்
காரப்பா போதமென்ற ஞானந்தன்னைக்
கண்ணுமனக் கனிவதனால் விண்ணைப்பற்றிச்
சாரப்பா தன்னறிவே தானுமென்று
சங்கையுடன் கக்கிஷத்தைத் தனதாய்க்காணே. (19)

காணவே தேசிகத்தின் கருவைச்சொல்வேன்
கருவறிந்து உறுதிபெறக் கமலம்போற்றும்
பூணவே உதயாதி தன்னிலேதான்
புத்தியுடன் தந்தசுத்தி தேகசுத்தி
பேணவே செய்யுகிற போதிலேதான்
பேசாதே மவுனமதா யிருந்துகொண்டு
தோணவே தந்தசுத்தி செய்துமைந்தா
சுகமாகக் கமண்டலநீர் தன்னைவாங்கே. (20)

வாங்கிநன்றாய்த் தேகசுத்தி செய்யும்போது
மவுனமுடன் ஸ்ரீபவ சிவவென்றேதான்
பாங்குடனே பதினாறு உருவேசெய்து
பத்தியுடன் தேகசுத்தி செய்தாயானால்
தீங்கான தீங்குகளும் விலகிப்போகும்
திருவான தேகமதிற் செயலுண்டாகும்
பூங்கமல மாதுருதி கொள்வாளய்யா
புத்தியுடன் தேகசுத்தி புனிதஞ்செய்யே. (21)

புனிதமுடன் தேகசுத்தி செய்துகொண்டு
பூரணமாய்ச் செபதபத்திற் பொருள்கண்ணூட்டி
கனிகரமாய் நித்யகர்ம அனுஷ்டானத்தைக்
காலறிந்து கலைதவறா துருவேசெய்தால்
மணிகர்ன நாதமடா செவியிற்கேட்கும்
மகத்தான கற்பூரத் தீபந்தோணும்
கெணிதமுடன் அத்தீபச் சுடர்தன்னாலே
கேள்மகனே அண்டர்பதங் காணலாமே. (22)

காணவாங் காரணமாங் கடைக்கண்ஞன
கருணைவளர் கொங்கணவர் பாதந்தன்னைப்
பூணவே மனதுருக நின்றேனப்போ
பூரணமாங் காரணத்தின் பொருளைக்காட்டித்
தோணவே அஞ்னூற்றி யைம்பத்தேழிற்
றிலங்குமணி கடேசிகடைப் பிள்ளையென்று
பேணவே மகுடமணிக் குசையுங்காட்டிப்
பெருகிநின்ற முக்குளிகை யீந்தார்தானே. (23)

தானேதான் தானவனாய்ச் சுயம்புவாகித்
தன்னருளா லாத்மாவை மவுனஞ்செய்து
தானேதான் மையமென்ற புருவமத்தி
சமரசமாய்ச் சுழினையென்ற நாட்டங்கண்டு
தானேதா னறுவறை மேலேநின்று
தற்பரமாம் நாற்பத்தி முக்கோணத்தில்
தானேதான் திரிகோணத் துள்ளேமைந்தா
சகலகலை ஆன்மாவைப் பூசைசெய்யே. (24)

செய்யப்பா சச்சிதா னந்தியென்று
தீர்க்கமுடன் மவுனத்துள் மவுனமாகி
செய்யப்பா தசமான தீக்ஷைபத்திற்
செயமான யேகமென்ற தீக்ஷைக்குள்ளே
செய்யப்பா சூக்ஷமென்ற மூலசூக்ஷந்
திருவான அண்டமென்ற தங்கமேரு
செய்யப்பா அம்மேரி விருந்துகொண்டு
சிவசிவா சிவயோகஞ் செய்துபாரே. (25)

பாரப்பா சிவயோக மதிகயோகம்
பரமான நவக்கிரகக் கக்கிஷந்தான்
நேரப்பா பொதிகைமுனி நன்றாய்ச்சொன்னார்
நிசமான நவக்கிரக பீசந்தன்னைச்
சேரப்பா அதில்மறைத்து லக்கமாகச்
செப்பினார் உட்பீசஞ் செப்பவில்லை
காரப்பா யிந்தநூல் தன்னிலேதான்
கணக்காக வகையுடனே துகைசொன்னேனே. (26)

சொன்னதொரு நவக்கிரகக் கக்கிஷத்திற்
சுகமான வித்தையொன்று சொல்லக்கேளு
சொன்னமொழி பிசகாது கிரகதோஷஞ்
சூழ்ந்துகொண்டா லக்கிரகந் தன்னைமைந்தா
சொன்னவகை யதைப்பிடித்து மாறிமைந்தா
சுகமான யேந்திரத்தைக் கட்டினுக்கால்
சொன்னபடி கிரகமதின் தோஷந்தானுஞ்
சுருக்கிலே தீர்ந்துவிடுஞ் சுருதிதானே. (27)

சுருதியுள்ள சக்கரத்தை வெளிவிடாதே
சுகமாகத் தானவனு யிருந்துபாரு
பருதிமதி தனையறிந்து சுழிமேலே
பதிவான அனுக்கிரகந் தன்னைப்பாரு
உருதியுடன் றானிருந்து வாசிபாரு
உண்மையென்ற பொருளறிந்து ஞானம்பாரு
சரியையொடு கிரியையுடன் யோகஞானம்
சகலகலை மூலமென்ற சூட்சந்தானே. (28)

தானென்ற சூட்சதிரி கோணவட்டம்
தன்மையுட னதின்விபரஞ் சாற்றக்கேளு
கோனென்ற சிகாரமடா சிவரூபந்தான்
கொள்கின்ற றீங்காரஞ் சத்திரூபம்
ஊனென்ற சத்திசிவ மொன்றாய்நின்று
உறுதியுள்ள வோங்கார வட்டமாச்சு
வானென்ற வட்டமதின் நடுவிலேதான்
மங்காத தீபமடா அங்கந்தானே. (29)

அங்கமென்ற வுருவெடுத்தா லையாகேளு
ஆத்துமத்தின் செயலறிந்து அடக்கங்கண்டு
எங்குநிறைந் திருந்ததொரு சோதிதன்னை
ஏகநிரா மயமெனவே பூசைபண்ணிச்
சங்கையுடன் றோற்றொடுக்கம் ரெண்டுங்கண்டு
தன்மயமும் விண்மயமு மொன்றாய்ப்பார்த்துத்
திங்களென்ற சந்திரனை ரவியிற்சேர்த்துத்
திருவாசி வாசியென்ற திரத்தில்நில்லே. (30)

திரமான நடுமனையி லுறமாய்நின்று
சிவசிவா சிவமான அகாரதீக்ஷை
பரமான சற்குருவாற் கடாக்ஷம்பெற்றுப்
பக்குவமா யுருவேற்ற அறியாதாகில்
உரமான தேகமடா தளன்றுபோகும்
உண்மையென்ற மந்திரங்க ளறிவிற்றங்கா
சிரமான தீபமது தேய்ந்துபோகுஞ்
செயலாக நடப்பதற்குத் திரங்காணாதே. (31)

காணாதே போவதென்ன புத்தியாலே
கருணையுடன் பூரணமாய் அகாரதீக்ஷை
தேனான அமுதரசம் போலேமைந்தா
செம்மையுட னுதயாதி தன்னிலேதான்
கோனான குருவருளாற் செபித்தாயாகிற்
குடிலமென்ற நோயகன்று குணமதாகும்
பேணாமல் தேகமதை மறந்தாயானால்
பேருலகிற் செல்வமெல்லாம் வீண்வீண்தானே. (32)

வீணாகப் போகாமல் மைந்தாகேளு
வேதாந்த அகாரமதைச் செபித்துக்கொண்டு
தானாகத் தானவனாய்த் தனித்துநின்று
தாயான பூரணிதன் பாணங்கொண்டால்
சானான தேகமடா யெண்சாண்தேகம்
சமரசமாய் நின்றிலங்கும் வாலையாக
ஊனான தேகமது வாசியாகும்
ஒருதீங்கு மில்லையடா நமன்னாடானே. (33)

நமனான யெமதூத ரிரண்டுக்கால்
நஞ்சமுத முண்டசிவன் கறைகண்டத்தில்
இமனான கபமதுதா னிருக்கக்கட்டி
யிருந்திடத்தில் மடிந்ததடா காற்றுந்தீயும்
சமனான பிரதிவியும் அப்புரெண்டும்
சார்ந்ததடா இனத்தோடே இனமதாகத்
தமதிடமாய் நின்றதடா ஆகாசத்திற்
றுண்டிநின்ற அறிவுபூ ரணமுமாச்சே. (34)

பூரணமாய் நின்றதிரு வுருவிலேதான்
பொருந்திநின்ற கபமறுக்க வகையைக்கேளு
காரணமாம் அகாரமதை மைந்தாகேளு
கருணையுட னுண்டொன்று செபித்தபின்பு
தாரணையாம் உகாரமடா சத்திமாது
சமரசமாய் மாதுரதி யானந்தன்னைச்
சாரணையாய் நவகுளிகை தனக்குமைந்தா
சங்கையுடன் தான்புகட்டத் தான்தானுமே. (35)

ஆமப்பா அகாரமுடன் உகாரம்ரெண்டும்
அறிந்துமன துரிமையினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றுவன்றான்
பொருந்திநின்ற மூலஅனல் தன்னால்மைந்தா
ஓமப்பா ஓமுடிந்து அகன்றுபோகும்
உத்தமனே மறுபிறவி யில்லையில்லை
காமப்பால் கானற்பா லறிந்துகொண்டு
கக்கிஷமாம் நவக்கிரகச் சூட்சம்பாரே. (36)

பாரப்பா சூட்சமென்று லேகசூடசம்
பதிவான நவக்கிரக மூலசூட்சம்
காரப்பா சூட்சநிலை கமலவீடு
கருணையுள்ள சிகாரமடா ஒளிகாண்பார்வை
நேரப்பா நிலையறிந்த பார்வைதன்னால்
நிலையான கண்ணறிந்து தன்னைப்பாரு
தூரப்பா அடிமுடியுந் தானேதானாய்
சோதியென்ற ரூபமடா அரூபந்தானே. (37)

தானான ரூபமடா அரிஓம்யென்று
சங்கையுடன் ரூனறியத் தன்னைப்பார்த்துக்
கோனான நந்திகொலு வாகிநின்ற
குருவான பீடமடா புருவமத்தி
தேனான மத்தியடா முனைமையத்திற்
றேனருவி பாயுதடா அடியில்நின்று
ஊனான அமுதரசங் கொண்டுதேறி
உள்ளபடி நிலைவாசல் தன்னைக்காரே. (38)

காரடா படிநிலையை யறிந்துகொண்டு
கண்மூக்கு மத்தியிலே யிருந்துபாரு
நேரடா நிலையான வாசல்தன்னில்
நின்றிலங்கும் கோபுரந்தான் சோதிபோலே
பாரடா அடிமுடியு மொன்றாய்க்கண்டு
பத்தியுட னங்கனையே தன்னைப்பாரு
தூரடா அடிமுடியு மொன்றாய்நின்று
துலங்குமடா சொரூபமது அரூபந்தானே. (39)

தானாகி யுள்ளமதே சோதியாகத்
தன்னொளிவாய் நின்றபொருள் தான்தானாகி
ஊனாகி யுள்ளொளிவாய் வாசியாகி
யுற்றகலை ரவிமதியாஞ் சுழினையாகி
நானாகி நானவனு மவன்றானாகி
நந்திகொலு வாகிநின்ற நடுவுமாகிக்
கோனாகித் தானவனாய் நின்றதீபம்
குருவான பூரணமாய் பிரமமாச்சே. (40)

ஆச்சப்பா பிர்மமய மாகிநின்ற
அக்கினியின் ஆவியடா சுத்தமாச்சு
பேச்சப்பா பெருகிநின்ற சத்தவெள்ளம்
பெருகிநின்ற அருவியடா அமுததாரை
நீச்சப்பா நிலையான தாரைதன்னில்
நினைவுகொண்டு மனதறிவால் தியானம்பண்ண
மூச்சப்பா ஓடாது நடுவில்நின்று
முழங்குமடா நாதவொலி செவியிற்கேளே. (41)

கேளடா தனித்திருந்து தன்னைப்பார்த்துக்
கேசரத்தின் சரமாறிக் கலையிலேறி
ஆளடா அந்தமனோ சொந்தமாக
அதிலிருந்து வாசியினாற் புருவத்தேகி
வாளடா மதியமுதந் தன்னைக்கொண்டு
வகையறிந்து சிவயோக வளமைபார்க்கக்
காலடா கலையறிந்து வாசிபார்க்கக்
கலையாகச் சரமறியக் கருவைக்கேளே. (42)

கருவான இடகலைதான் சந்த்ரன்வீடு
கருணையுள்ள வலதுகலை சூர்யன்வீடு
உருவாக விருவருமே யுகந்துநின்று
உரிமையுடன் சரமாறு முண்மைகேளு
திருவான மூலவனல் வாசியேறிச்
சிவசிவா அண்டபதஞ் சுத்திநல்ல
பருவமுட னிடதுபுற நாசிதன்னிற்
பரிகிறது சந்த்ரகலை பரிந்துபாரே. (43)

பாரப்பா வலதுபுர நாசிதன்னிற்
பதிவாக ஓடுகிற சரந்தான்மைந்தா
நேரப்பா சூர்யகலை யென்பார்மேலோர்
நிலையறிந்து இருகலையு மொன்றாய்க்கூடி
காரப்பா சுழினையென்ற மையத்தேகிக்
கால்மாறி யாடுகிற கருவைக்கேளு
சாரப்பா சந்த்ரகலை தன்னைமைந்தா
சங்கையுடன் சூரியனிற் சாரப்பண்ணே. (44)

பண்ணுவது யெந்தவித மென்றால்மைந்தா
பதிவான வலதுகா லிடதுகால்மேல்
தண்ணுறவாய்த் தானிருந்து விண்ணைநோக்கச்
சதாபோதை சூரியனே பிரகாசிக்கும்
எண்ணுமந்தப் படியிருந்து சுழினைமேவி
இன்பமுடன் ஜெபதபங்கள் செய்தாயாகில்
கண்ணுமனக் கண்ணதுவு மொன்றாய்க்கூடி
கயிலாச தேகமதாய் வாழலாமே. (45)

ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயைமாயை
ஓமப்பா மாயைதனை நீக்கிமைந்தா
ஒளிவான சூரியனை நம்பினக்கால்
போமப்பா சகலவினை யொழிந்துநல்ல
பொற்கமலம் போலவுமே தேகமாகும்
காமப்பால் கானைப்பா லறிந்துமைந்தா
கலைதவறா துருவேறக் கருணையாமே. (46)

கருணையுள்ள நவக்கிரகக் கக்கிஷத்தைக்
கண்ணுமனக் கண்ணாலே தியானம்பண்ணி
ஒருமையுடன் நினைத்தபடி யுரிமையாகும்
உண்மையென்ற அனுக்கிரகந் தன்னைப்பார்த்தால்
அருமையுள்ள வாசியடா நிலையில்நின்று
அங்கமது தங்கமய மாகும்பாரு
புருவமையத் தொளிவான நந்திபாதம்
புத்திகொண்டு சுத்தமதாய்ப் பூசைபண்ணே. (47)

பூசைசெய்யும் நவக்கிரகந் தன்னைக்கேளு
புத்தியுடன் கொங்கணவர் பாதம்போற்றி
நேசமுள்ள சூரியனுஞ் சந்த்ரன்ரெண்டும்
நேர்மையுள்ள நேத்திரமாய் நின்றுதையா
பாசமுள்ள நேத்திரமாம் பதிவைக்கண்டு
பக்குவமாய்ச் சுழினையிலே பதிவாய்ப்பார்த்தால்
மோசமென்ற சூழ்வினைகள் தானேநீக்கித்
துலங்குமடா கற்பூர தீபந்தானே. (48)

தானான தீபமதைத் தினமும்நோக்கிச்
சாந்தகுண மாகவேநீ யிருந்தாயானாற்
கோனான ரவிசோமன் தன்னால்வந்த
குற்றமொரு நாளுமில்லை சுத்தமாகும்
ஊனான காயமடா கிரகபீடம்
உறுதியுள்ள பீடமதி லுரிமைவைத்துத்
தேனான ருசிபோலே காத்தாயானால்
செம்மையுள்ள தேகமது உண்மையாமே. (49)

உண்மையுள்ள செவ்வாயும் புதனும்ரெண்டு
உற்றகெந்த மனுசரிக்கும் மூக்குமூக்கு
தண்மையுடன் மூக்குநுனி தன்னைப்பார்த்துச்
சரமறிந்து சரமாறிச் சரத்தில்நின்றால்
வண்மையென்ற கூற்றுவனும் மாறிப்போவான்
மகத்தான சோதியடா பிரகாசிக்கும்
நன்மையுள்ள தேகமது தளராதையா
நாட்டமுடன் சரமறிந்து ரவியில்நில்லே. (50)

நில்லடா சூரியனார் கிரகந்தன்னில்
நினைவாகச் சந்திரனைச் சேர்ந்துகொண்டு
நில்லடா அக்கினியாஞ் சுடரைப்பற்றி
நின்றதினாற் கிரகமெல்லாம் நேர்மையாகும்
நில்லடா அந்தநிலை சொந்தமாக
நேமமுடன் கலைதவறு திருந்தாயானால்
நில்லடா வென்றுசொல்ல வொருவருண்டோ
நீமகனே சகலகலை முத்தனாமே. (51)

முத்தியுள்ள வியாழனுடன் வெள்ளிரெண்டு
முழங்கிநின்ற ஆகாசங் காதுகாது
சித்தமுட னாகாச மானகாதிற்
சிவசிவா மனதொருமை யாகநின்றாற்
சுத்தமுடன் பலதொனியாய் நாதங்கேட்கும்
சுகமான நாதமதே சத்தஞ்சத்தம்
பத்தியுள்ள சத்தமது வென்னவென்றால்
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் கேளுகேளே. (42)

கேள்மகனே சத்திசிவ மானசோதி
கேசரத்திற் றில்லைவனந் தன்னிலேதான்
கேள்மகனே இருவருமே வாதுகூறிக்
கெணிதமுடன் திருநடன மாடும்போதிற்
கேள்மகனே சத்தியுட திருக்கால்தன்னில்
கிளம்பிநின்ற சிலம்பினுட நாதகீதம்
கேள்மகனே பலதொனியாய்க் கேட்டசத்தங்
கேள்வியென்ன சக்கரத்தி னுட்டந்தானே. (53)

தானென்ற சக்கரத்தி னாதந்தன்னைத்
தன்மையுட னாதார மூலங்கண்டு
கோனென்ற கொங்கணவ ரந்தநாதங்
குறிப்பறிந்து ஆறுவரை கண்டாரப்பா
ஏனென்றால் நவக்கிரகச் சித்துதன்னை
இருந்துசிவ யோகமதாற் கண்டுகொண்டால்
நானென்ற தத்துவங்கள் தானாய்நின்று
நாதாந்த பூரணமாந் தேகமாமே. (54)

ஆமப்பா சனியதுவும் வாக்கேயாகும்
அவ்வாக்கிற் சரஸ்வதியுங் குடியிருந்தாள்
ஆமப்பா அவளிருந்த பதியிலேதான்
அருவிசுனை பாய்கிறதோர் நாக்குநாக்கு
ஆமப்பா அண்ணுக்கு உண்ணுக்கோடே
அப்பனே மனதுறுதி யாகநின்று
ஆமப்பா மந்திரங்கள் செபிக்கும்போதில்
அப்பனே சனிதோஷம் விலகிப்போமே. (55)

போகுமடா நாவில்நின்ற தோஷமெல்லாம்
புத்தியுட னச்சரங்கள் ஜெபிக்கும்போதில்
ஏகுமடா மதியமுதம் நாவில்நின்று
இன்பமுட னந்தமுதங் கொண்டாயானால்
வாகுடைய தேகமதில் நோயோயில்லை
மைந்தனே உன்வாக்கு அமுதவாக்கு
பாகுடைய வாக்கதினாற் சொல்லும்வார்த்தை
பலிக்குமடா அச்சரத்தைப் பதிவாயோதே. (56)

பதிவான ராகுவுட கிரகமேது
பாலகனே சொல்லுகிறேன் லிங்கம்லிங்கம்
கெதியான லிங்கமடா பிரமலிங்கம்
கேசரத்திற் பூரணமா மமுதலிங்கம்
விதியான விதிவளரும விந்துலிங்கம்
வேதாந்த அமுதரசஞ் சொலிக்கும்லிங்கம்
நதியான லிங்கமதில் மனதைநாட்டி
நழுவாமல் மனதிருக்கப் பூசைபண்ணே. (57)

பூசையென்ன அந்தலிங்கந் தன்னிலேதான்
பூரணமாய் நிறைந்துவரு மமுதம்வாங்கி
நேசமுடன் சதாகாலம் பானம்பண்ணி
நின்றேகந் தனக்குமொரு பகையுமில்லை
ஆசையுடன் தேகமதைக் காக்கவேணும்
அன்புவைத்து ஜெபதபங்கள் செய்யவேணும்
வாசமுட னேகாந்த மாகநின்று
மைந்தனே சாத்திரத்தைப் பார்த்துத்தேறே. (58)

தேறுவது சாஸ்திரத்தாற் றேறவேணும்
சிவசிவா மதியமுதங் கொள்ளவேணும்
நேறுவது புருவமையச் சுடரேமைந்தா
நேர்ந்துகொண்டு தீபமதைப் பார்க்கவேணும்
ஏறுவது வாசியினால் மூலம்பார்த்து
ஏகாந்த நடுமனையி லிருந்துகொண்டு
சாறுவது வெளியோடே வெளியைச்சேர்த்துத்
தன்மயமும் விண்மயமாய்த் தானேநில்லே. (59)

தானான கேதுவுட கிரகமேது
சங்கையுடன் சொல்லுகிறேன் மூலம்மூலம்
கோனான மூலமடா ஆதாரந்தான்
குருவான அக்கினிகொண் டிருந்தவீடு
ஊனான அவ்வீட்டிற் குடிலம்ரெம்ப
உத்தமனே அதையறிந்து மனதைநாட்டித்
தேனான ஓங்காரப் பிரணவத்தைத்
தினந்தோறு மதில்நிறுத்தி இம்மென்றூதே. (60)

ஓதுவதா லதிலிருந்த குடிலம்நீங்கும்
உத்தமனே உன்தேகம் பிரகாசிக்கும்
ஏதுவினை வந்தாலும் மூலம்பார்த்தால்
என்மகனே வாசிசிவ யோகமாகும்
மாதுபரி பூரணமே தானாய்நின்று
மைந்தனே நவக்கிரகம் வலுவாய்நிற்கும்
சூதுதொழில் தனைநிறுத்தி யாதிபார்த்தால்
துலங்குமடா அனுக்கிரகம் நீதான்பாரே. (61)

பாரடா நவக்கிரக நிலையுஞ்சொன்னேன்
பதிவான அட்சரமும் லெக்கஞ்சொன்னேன்
காரடா கர்மதர்மம் ரெண்டுஞ்சொன்னேன்
கலந்துநின்ற கிரகமதைக் காக்கச்சொன்னேன்
ஆரடா யெனைப்போலே யாருஞ்சொல்லார்
அப்பனே தேவனிலே ராமதேவன்
நேரடா ஆயிரமாய்ப் பாடும்நூலில்
நிட்சயமாய் நவக்கிரகத் தொழிலைப்பாரே. (62)

தொழிலான வழிதுறைக ளென்னவென்றாற்
சுத்தமுடன் நவக்கிரகக் கருவெடுத்துத்
தொழிலான அஷ்டகர்மஞ் செய்தான்பாரு
சுத்தமுள்ள திரமதிலே யவன்தான்மைந்தா
தொழிலான பலதொழில்கள் கருவினாலே
தொர்ந்தவினை தனையகற்றி யந்தம்பார்த்தான்
தொழிலான சகலகர்மக் கிரகத்தாலே
சுருதிகண்டு சொரூபசித்தி பெற்றேன்பாரே. (63)

பாரப்பா பராபரமா மகண்டத்துள்ளே
பதிவான மானிடர்கள் தனக்குமைந்தா
வீரப்பா கொண்டதொரு வியாதிக்கெல்லாம்
விருப்பமுடன் பூருவமதின் மேலாய்நின்று
நேரப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
நேமமுடன் ஓம்-சம்-சம் சிவவென்றேதான்
காரப்பா விபூதியைநீ தியானம்பண்ணிக்
கர்மவினை நோயாளர் தனக்குக்கேளே. (64)

கேளடா நோயாள ரெதிரேவந்தாற்
கிருபையுடன் விபூதியைநீ கடாட்சித்தப்பாற்
கேளடா நோயாளி தன்னைநீயும்
கெருடபா ருவையாக நன்றாய்ப்பார்த்தால்
கேளடா சகலபிணி யொழிந்துபோகும்
கெணிதமுடன் பூரணத்தைத் தியானம்பண்ணி
கேளடா நவக்கிரகக் கக்கிஷத்தைக்
கெட்டியாய்த் திட்டமுடன் பூசைபண்ணே. (65)

பண்ணப்பா இன்னமொரு கருவைக்கேளு
பார்தனிலே பெண்களுக்குக் கெற்பரோகம்
முண்ணப்பா செய்ததவக் குறையினாலே
மூடிநின்ற பாசமது அகலக்கேளு
விண்ணப்பா தானோக்கி (நவக்)கிரகசூட்சம்
மேன்மைபெறத் தானெழுதித் தியானம்பண்ணி
நண்ணப்பா பெண்களுக்குக் குளிசங்கட்டி
நன்மையுள்ள வரிசையொன்று இன்னங்கேளே. (66)

கேளடா கருக்குழியில் நின்றபாசம்
கிருபையுடன் ருன்விலக மருந்துகேளு
கேளடா அவள்குளித்த மூன்றுநாளிற்
கெணிதமுடன் நல்லெண்ணெய் தன்னைவாங்கிக்
கேளடா அந்தஎண்ணெய் தன்னிலேதான்
கேள்வியென்ன பெருங்காயந் தனையுரைத்துக்
கேளடா பெண்ணுடம்பிற் றடவித்தானும்
கெட்டியாய்ப் புருடனையும் பேசச்சொல்லே. (67)

சொல்லடா நாள்மூன்று தினத்தில்மைந்தா
சுத்தமுடன் மாதரதி தனக்குத்தானும்
நில்லடா அப்போதே கருவுந்தங்கி
நேர்மையுள்ள கெற்பமதாய்ப் பிள்ளையுண்டாம்
அல்லடா இதின்விபரம் மைந்தாநீயும்
ஆருக்குஞ் சொல்லாதே அறிவாய்நில்லு
செல்லடா இந்தமுறை நாதன்சொல்லச்
செம்மையுடன் தானறிந்து தெளிந்தேன்பாரே. (98)

தெளிந்துகொண்டு நவக்கிரக கக்கிஷத்தைச்
செம்மையுடன் சற்குருவின் பாதம்போற்றி
அழிந்துமனக் கனிவதனாற் பூசைபண்ணி
ஆதார மூலமதை யன்பாய்க்கண்டு
நெளிந்துமன மலையாமல் வாசியேறி
நெற்றிநடுப் புருவமையச் சுடரைப்போற்றிக்
குளுந்துவரு மமுதரச் பானம்பண்ணிக்
குருவான பதிதனிலே குவிந்தேன்பாரே. (69)

பாரப்பா குவிந்துமனங் கொண்டுநல்ல
பதிவான கலைக்கியானந் தன்னைப்பார்த்துக்
காரப்பா சத்திபதம் பூசைபண்ணி
கனிந்துவரு மமுதரச பானங்கொண்டு
நேரப்பா நின்றுதவஞ் செய்தாயாகில்
நிலையான பூரணமும் நீதானாகும்
வீரப்பா கொண்டதொரு புத்தியாலே
மெய்மறந்து நின்றதினால் வீண்தான்காணே. (70)

காணப்பா ஜெபதபங்கள் செய்வதற்குக்
கருவான பூமியுட வளமைகேளு
பூணப்பா குறிஞ்சிபிரு திவியுமாகும்
புகழான நெய்தநிலம் அப்புவாகும்
பேணப்பா மருதநிலம் தேயுவாகும்
பிலமான முல்லைநிலம் வாயுவாகும்
ஊணப்பா பாலைநிலம் ஆகாயந்தான்
உத்தமனே அஞ்சுநிலத் துண்மைதானே. (71)

உண்மையுள்ள பஞ்சநில மஞ்சிலேதான்
உத்தமனே மூன்றுநில முண்மையுண்மை
நன்மையுள்ள மூன்றுநில மேதென்றக்கால்
நலமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
தன்மையுள்ள குறிஞ்சிநிலஞ் சித்தர்க்காகும்
தயவான கெவனிகட்குஞ் சார்வாமைந்தா
தின்மையில்லா மௌனசிவ யோகிக்கெல்லாஞ்
சிவசிவா குறிஞ்சிநிலந் திரந்தான்பாரே. (72)

பாரப்பா இல்லறத்தோ டொத்துநின்று
பதிவான ஞானசிவ யோகிக்கெல்லாம்
நேரப்பா மருதமுல்லை நிலமிரண்டும்
நேர்மையுள்ள செபதபத்துக் குறுதியாகும்
காரப்பா சம்சாரிக் காகுமிந்தக்
கருணையுள்ள நிலமதுதான் மெத்தநன்று
வீரப்பா பாலைநெய்தல் நிலமிரண்டும்
வெகுகடினம் வெகுகடினம் சுத்தப்பாழே. (73)

சுத்தமுள்ள நிலமதிலே யஞ்சில்மூன்று
சுகமான அகமதிலே சூழ்ந்துபாரு
பத்தமுடன் பார்த்ததிலே பதிவாய்நின்று
பதியறிந்து கெதியறிந்து பதிவாய்நின்றால்
புத்தியது கோசரமாய்ப் பிரகாசிக்கும்
பூரணமுங் காரணமும் பொருந்திவாழும்
சித்தமுடன் நிலையறிந்து நிலையைப்பெற்றுச்
சின்மயமாய்த் தன்மையுடன் நன்மைபாரே. (74)

பாரப்பா பதியறிந்து மூலத்தேகி
    பத்தியுடன் நவக்கிரகக் கக்கிஷத்தை
நேரப்பா நிலையறிந்து அந்தங்கண்டு
    நிலையான அனுக்கிரகச் சாயைக்குள்ளே
காரப்பா கண்ணுமனக் கண்ணுங்கொண்டு
    கருமையுடன் மானதமாய்ப் பூசைசெய்து
சாரப்பா சார்புநிலை யறிந்துகொண்டால்
    சகலகலை பூரணமாய்த் தானுவாயே. (75)

தானான பூரணமே சோதிசோதி
    தன்மயமாய் நின்றதிரு ஞானதீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி
    மகத்தான கமலமடா ஆதிபீடம்
கோனான பீடமதின் நடுவிலேதான்
    குவிந்தெழுந்த நாதமடா வேதத்தந்தம்
தேனான நாதமதி னந்தங்கண்டு
    திருவேற வுருவேறுந் திரந்தானுமே. (76)

திரமான தேகமடா நாதரூபம்
    திருவாசி பூரணமாய் நின்றரூபம்
பரமான ரூபமதை யார்தான்காண்பார்
    பாலகனே கோடியிலே யொருவன்றானும்
சரமான சரமறிந்து சரத்தில்நின்று
    சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
உரமாக நடுமனையில் நின்றுபார்த்தால்
    உண்மையென்ற வெளிபரம ரூபமாச்சே. (77)

ஆச்சப்பா பரமவெளி போதமாக
    அதிலிருந்து சகலகலைக் கியானம்பாரு
மூச்சப்பா நிறைந்ததிரு வாசிபாரு
    முனையான சுழிமுனையை நன்றாய்ப்பாரு
பேச்சப்பா பேசாத மௌனத்தேகு
    பெருகிநின்ற அமுதரச பானங்கொள்ளு
நீச்சப்பா நிலையறிந்து யோகம்பாரு
    நின்றநிலை தனையறிந்து நினைவாய்நில்லே. (78)

நில்லென்ற கலைதனிலே நினைவாய்நின்று
நிசமான பூரணமாய் நிலைகண்டோர்க்குச்
செல்லென்ற தசதீட்சை கடாக்ஷம்பண்ணித்
திருவான பூரணமு மவனுக்கீய்ந்து
சொல்லென்ற சாத்திரசூத் திரமுமீய்ந்து
சுருதியுள்ள மந்திரத்தின் சூட்சங்காட்டி
ஓல்லென்ற ஆதாரம் ஆறுதாரம்
ஓமென்ற அனுக்கிரக உண்மைசொல்லே. (79)

உண்மையுள்ள கிரகமதை யறிந்துகொண்டு
உத்தமனே சகலகலை வாசியேறி
நன்மையுள்ள நாட்டமதாய் நயனம்பார்த்து
நயனமென்ற கண்ணறிந்து விண்ணைநோக்கித்
தன்மையுடன் தன்னறிவே தானுமென்று
தன்னொளிவும் விண்ணொளிவு மொன்றாய்க்கண்டு
சின்மயமுந் தன்மயமு முண்மையாகத்
தெளிந்துசிவ சிவமயமாய்த் தெளிவாய்முற்றே. (80)

கடைப்பிள்ளை ஞானக்கக்கிஷம் ௮௰,

முற்றிற்று.

திருச்செந்தூர் வைத்திய ஞானனந் தானந்தேந்திர சரஸ்வதி யதி அவர்களாற் கிடைத்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

எழுபத்திரண்டாவது:

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# சிவயோக ஞானம் ௱.

## காப்பு.

பூமகள் மலர்க்கண் வாலை பொருந்திய நந்தி காப்பு
மாமகள் மவுனத் தாதி வாசியுள் மூலங் காப்பு
நாமகள் கமலக் கண்ணாள் நாதாந்தத் தந்தங் காப்பு
மூமகள் கிருபை யாலே முன்னவன் காப்புத் தானே. (*)

பூத்திடு முருகன் காப்பு புருவமை யக்கண் காப்பு
சேத்திடு மருட்கண் காப்பு சின்மயக் கண்ணே காப்பு
வேத்திடு மையன் பங்கன் வேதாந்தக் கனலி புக்கன்
காத்திடு மொளிகண் காப்பு கடைக்கண்முப் பாழ்கண் காப்பே.

### வேறு.

காப்புலி சீப்புலி கருத்தங் கோப்புலி
தீப்புலி தின்றுநான் செத்து நின்றுகொண்
டாப்புலி யுள்ளூரை யடங்கிச் சூத்திரம்
பூப்புலி மலிகுடி யூரிற் புக்குவாம். (*)

புலியூரிற் கரடியென்றே னப்பாபூனை
புலிபோலே பாய்ந்துதடா பாச்சல்கண்டு
புலிபோலே பதிங்கியொரு புத்திற்சார்ந்தேன்
புற்றில்வளர் குளியனது யெட்டிக்கொத்த
நலியாமற் புத்தரவு சீறிச்சீற
நானுமொரு கரடியெனப் புத்தில்நின்று
வலியாம லரவுபட மறித்துக்கொண்டு
வாயிலுள்ள விஷத்தையங்கே வாங்கினேனே. (1)

வாங்கியொரு சில்லிலெட்டு எலியைக்கண்டேன்
வலுத்தஎலி யெட்டையஞ்சு கடுவன்மூன்று
பாங்குபெற எலிக்குவழி பெண்டான்வேறே
பக்கமதி லிருக்குமதைத் தொக்காய்க்கண்டேன்
தாங்கியதிற் பெண்டானில் வழியேசெல்லத்
தாட்டிகமா யெட்டெலியுந் துன்னித்துன்னி
ஓங்கியது பெண்டானில் வழியேவோடி
ஒருமிக்க வந்ததடா ஒருமித்தேனே. (2)

ஒருமித்தேன் பெண்டானி லெலிதானெட்டும்
ஓமுடிந்து போகவல்லோ வந்ததப்பா
தருமித்தேன் பெட்டையது அஞ்சில்மூன்று
தனிப்பட்டு வந்ததடா திரும்பவஞ்சும்
ஒருமித்துப் பஞ்சரன்றன் படுக்கைபார்க்க
ஓடாது அஞ்சில்ரெண்டு மூன்றுதுண்டாய்
ஒருமித்து எதிரேறிப் பெண்டான்றேடி
ஓரைந்து மூன்றுமொன்றாய்ச் சுண்டானுச்சே. (3)

சுண்டானைப் பெண்டானிற் சுட்டுத்தின்றேன்
சுட்டதிலே பச்சையடா வெடிவால்வீசுங்
கண்டாலு மூரிலுள்ளோ ரடிப்பாரென்று
கரையடியி லொருபுறமாய் வெளியில்வந்தேன்
உண்டான தோரடியில் மச்சங்கண்டேன்
ஓகோகோ அம்மச்ச மானேனப்பா
சுண்டானில் முன்னெலிபோற் சுருக்கிக்கொண்டு
சுவாசம்விட்ட குறையாலே வழிகண்டேனே. (4)

வழியேதான் பாதையிலே குளியன்பாம்பு
வால்மடித்துச் சிரசுபடம் விரித்துக்கொண்டு
வெளியாடிச் சீறியங்கே பாதைகட்டி
விரட்டியது தூரத்திமெத்த வேகங்கொண்டு
குளியான் குளியனது அலகுசாய்த்துக்
கொத்தயிலே கைவாசிக் குளிகைகொண்டு
தெளிவான சித்தரென்று பிடித்தேன்பாம்பைச்
சிக்கியொரு பக்கமதாய்ச் சுகியமாச்சே. (5)

சுகியமா யிருக்கையில்வா சுகியனென்று
சுருக்காக வந்திருகால் சுற்றிக்கொண்டு
சுகியமென அரையளவு படமுமுக்கால்
சுமதலையாய்ச் சுற்றியொரு கபடஞ்செய்ய
முகியவுமே யிதினுடைய மனத்தைக்கண்டு
முழுமோசம் வந்ததென்று முழித்துக்கொண்டேன்
விகிதமுடன் மூலிகையாஞ் சிறியாணங்கை
வேர்பிடுங்கிச் சமூலங்கை யடக்கினேனே. (6)

அடக்கினே னவையடக்கஞ் சிறியாணங்கை
அங்கைகண்டு வாசுகியு மென்கையாகி
விடக்கியது படமெடுக்கக் கருந்தேளெட்டும்
விரியனெட்டுங் கொம்பேறி மூக்கனோடே
புடைக்குமொரு கருவழலை செந்தலையன்பாம்பு
பூநாக மிதுமுதலாய்ப் புற்றில்வாழும்
ஒடுக்கமறிந் திடமறிந்து யிடத்தில்நின்று
ஒருமிக்க ஒருதலையாய்ப் பிடித்தேனப்பா. (7)

பிடிக்கையிலே பூநாக மனேகமாச்சு
புத்திலுள்ள கடுவிடங்க ளெல்லாம்போச்சு
அடிக்கையிலே அடக்கமென்ற சிறியாணங்கை
ஆகாகா கொடுஞ்சுருக்கு பூநாகத்தைத்
தடுக்குமது கைவசமா யென்னுக்குள்ளே
தந்ததப்பா பூநாகந் தங்கம்போலே
கொடுக்குமடா வங்நாகஞ் செம்பொன்கோடி
கோடியென்றே னெத்தனையோ கோடிதானே. (8)

தானான பூநாகந் தன்னாகந்தான்
சாய்ந்தயிடை சமதலையாய் விமலையாச்சு
மானான புவனைதிரி புரையின்வாலை
மவுனமடா விமலையுட பூநாகந்தான்
தேனான பூநாகந் தொந்தங்கோடி
சித்தருக்குச் சதகோடி தொந்தமாடும்
பானான ரவியினுட பக்கம்பாரு
பருதியிட மதியொளியின் விண்ணைப்பாரே. (9)

விண்ணொளியிற் கதிர்மதிதான் கண்ணேயாகும்
மெய்யெதோ பொய்யெதோ கண்தான்காணும்
விண்ணொளியிற் சூரியன்றான் பகலாய்வந்த
விதமான மதியதுதான் ராவாய்வந்த
கண்ணொளியே கண்டதல்லால் வேறொன்றில்லை
கருத்துவைத்தா லுங்கருணைக் கண்ணைக்காணூர்
ஒண்ணொளியே வேறுமில்லை கண்ணேயொன்று
ஓகோகோ பொய்யல்ல மெய்யுமாச்சே. (10)

மெய்யினாற் பொய்யுமுண்டு அதினாலெல்லாம்
விழலாகச் சாத்திரங்கள் பொய்யாய்ப்போச்சு
செய்யினாற் குற்றங்களில்லையில்லை
தீர்க்கமற்ற மனதாலே யெல்லாம்போச்சு
அய்யினா லுய்யும்வகை அப்பினாலே
அப்பறிந்து அப்பினால் மவுனமாகும்
பொய்யினால் மெய்யதிலே தங்கம்பூணப்
பூரணமாய் நின்மனப்பூ ரணமுமாச்சே. (11)

ஆச்சப்பா கதிர்மதியா லிரவுபகலாச்சு
அம்மதியின் கதிரறியார் பேசலாச்சு
பேச்சப்பா அட்சரங்க ளொன்றுமில்லை
பின்னுமில்லை முன்னுமில்லை முக்கால்முக்கால்
மூச்சப்பா வற்றிடந்தான் முடிவுமாகும்
மோசமில்லை யடிமுடிவா யுள்ளம்பாரு
நீச்சப்பா வெள்ளத்திற் காலையூண
நிலைக்குமடா கால்தலையாய் நிலைக்கும்பாரே. (12)

நிலைக்குமோ நிலையாதோ வென்றுநீயும்
நின்றாக்கால் வாரிவிடும் நிலைக்கொட்டாது
தலைக்குமேற் காலானால் மலைக்கவேண்டாம்
சமதலையா யடிமூலம் நிறுத்திக்கொண்டு
மலைக்குமன மலையாமல் முக்கால்பாரு
மனதாலே மனதுரைக்கு முக்காலூணச்
சிலைக்குநா ணேத்திசரந் தொடுக்குமாப்போற்
சீக்கிரத்தாற் குறிதைத்த சுருக்கமாமே. (13)

சுருக்கமடா பூரணத்தின் முனையைப்பாரு
சொல்லாலே தெரியாது முக்காலப்பா
தருக்குமடா தருகாமல் தருக்கவென்றால்
தன்வாயில் நாக்கிருக்க வூமையாச்சு
வெருக்குமடா மனம்வெருக்கச் சொல்லப்போமோ
வெரும்பிலுக்காய்ப் பேசுநாக் குள்நாக்காமோ
கருக்குமடா கருநாக்குப் பலிக்குமப்பா
கண்ணென்றும் பொல்லாது கடினந்தானே. (14)

கடினமது திட்டிரெண்டு மொன்றும்பார்வை
கள்ளனடா கிருஷ்ணனவன் கபடஞ்செய்வான்
கடினமவன் மாயைவெளிக் கண்ணன்கண்ணன்
கசடருக்குச் சங்கார ருத்ரன்ருத்ரன்
கடினமடா யிவர்களுட மூலமப்பா
கண்டவர்கள் கசடறுப்பார் கண்ணைக்கொண்டு
கடினமடா யிதற்குமொரு மூலங்கேளு
கபடத்துச் சொல்லுகிறேன் கருத்தான்கேளே. (15)

கேளப்பா கருவூரிற் கொள்ளைகொள்ளை
கேட்டவர்க்குங் கேளாமற் கூ கூ கூ கூ
நாளப்பா யந்நாளில் நாவிதின்றேன்
நான்செத்தேன் பிழைத்தனடா நட்டமென்ன
கோளப்பா சொல்லறியேன் கோலங்கோலம்
கோலமெனக் கூக்குரல்போற் கூவுங்கோழி
தேளப்பா கருவிடையந் தெளிவாய்ச்சொன்னேன்
தேள்கொடுக்கு மறியாட்டாற் கொட்டுந்தேளே. (16)

தேளிருக்குஞ் சுவரோர மடுக்கப்போமோ
செந்தேளுங் கருந்தேளுங் கொடிதாமப்பா
ஆளிருக்குஞ் சிவக்காய்தை நிழலுக்குள்ளே
அமர்ந்திருக்குஞ் சாண்முழத்துக் கடைசியப்பா
ஆளிருக்கு மிடந்தேடி யெழுந்தேள்மீறி
அசைந்தசைந்து அசையாமல் நாலுநாலும்
கோளிருக்கக் கோளறுமோ கொட்டுந்தேளைக்
கொட்டினாற் கொல்லுமது கொட்டிக்கொல்லே. (17)

கொல்லத்திற் கொச்சியடா மஞ்சளிஞ்சி
கொடிதான துலாவேற்ற மிறைவைத்தண்ணீர்
கொல்லத்திற் கால்வாய்க்கா லிடக்காலூடே
கொடுஞ்சுருக்கு மடைவாயிற் குமிழிபாயும்
வல்லத்துக் கோட்டையடா மவுனராஜன்
வங்கணமாய்ச் சிங்கமுக மானுன்பாரு
சொல்லற்றுக் கூக்குரல்போற் கூகூவென்னச்
சுகமவுன ராஜனவன் சோதிப்பானே. (18)

சோதிப்பான் சிங்கவங் கணமேசெய்தான்
சொல்லரிது மடைவாயிற் பட்சிபோலே
சோதித்து வருமச்சங் கண்டுபாரு
தொந்தமென வந்துவிடு மந்தாவந்தா
போதித்தி ராப்பகலாய்க் கண்டுபோதி
போகமென்ன சிவயோகஞ் சிவயோகந்தான்
பேதித்து வாழாதே போதம்போதம்
பேசாதே மவுனமது கூக்கலாமே. (19)

கூக்கலென்று லதன்பெருமை சொல்லப்போமோ
கூகமென்ன சொல்லுகிறேன் குமரிகற்பம்
பார்க்கவென்றாற் கொடுமையடா பஞ்சவர்னம்
பட்டமரம் பாலூறும் பஞ்சவர்னம்
மார்க்கமிது பெரியோர்க ளாருஞ்சொல்லார்
மாச்சரியம் மெத்தவுண்டு உண்மைசொன்னேன்
தீர்க்கமிதை யறிபவனே சித்தன்சித்தன்
திறம்வேணும் மனதுறத்தாற் றிறமுமாமே. (20)

திறமான மனதுறக்கக் கருத்தான்கேளு
சித்தருடன் முனிவோருஞ் சொல்லார்சொல்லார்
அறமான தில்லறமே சொர்க்கஞ்சொர்க்கம்
அந்தரமே யளிநாக மாகும்ஆகும்
அறமான தில்லறத்தின் சூட்சங்கேளு
அடிக்கடிதான் சொல்லவனு போகமப்பா
உறமான தனுபோகஞ் செய்யும்போது
உற்பனமாற் தப்பாது உண்மைகேளே. (21)

உண்மையென்றும் உறுதியென்றும் திறந்தானென்றும்
உற்பனமாய் மனதுறத்துப் பார்ப்பேனென்றும்
தண்மையுள்ள மனத்தாலே புத்திமெத்த
தயவுண்டு கல்மிஷங்க ளில்லையில்லை
நன்மையிது தானெனவே பெண்கள்தன்னை
நயந்தவரை உபசாரஞ் செய்துவிந்தைப்
பெண்மையவள் மையல்கொண்ட நாதம்வாங்கிப்
பிரியமுடன் வேணவிதஞ் செய்வார்பாரே. (22)

செய்வார்கள் கைமுறையாய்ச் செய்யமாட்டார்
சிவயோகஞ் சிவலிங்கங் காணமாட்டார்
கைவாசி சுத்தமென்று கொள்ளமாட்டார்
கருத்துவைத்துக் கருவிடையுங் காணமாட்டார்
மெய்வாய்கண் ணொளியொன்று மவுனஞ்செய்து
வீணருக்குத் தெரியாமல் விழலாய்ப்போச்சு
உய்வாய்தன் யோனிதனிற் பூசைபண்ணி
உபயமது சிவலிங்க மொன்றும்பாரே. (23)

ஒன்றான லிங்கமா விடையுமாகும்
உற்பனமாஞ் சித்தருட பூசையாகும்
ஒன்றான சத்தியுட பூசைமார்க்கம்
ஓகோகோ ஆனந்த மானமார்க்கம்
ஒன்றான தீட்சைவழி மார்க்கமப்பா
உலகத்தோ ரறியாமற் கெட்டார்பாரு
ஒன்றான பூசையடா வாதிசத்தி
உற்பனமாம் பூசையிது வுண்மைதானே. (24)

தானான சத்தியுட தீட்சைபூசை
தானவனைச் செய்வார்கள் கூடச்செய்வார்
மானான பெண்ணையொரு கொடியபெண்ணை
மவுனத்தாற் றியானித்து மகத்வமானார்
தேனான திப்பூசை தேவிபூசை
ஜெகஜாலச் சித்தருக்குத் தோணப்பூசை
ஊனான தன்மையடா பெண்ணாள்தேவி
உறவின்முறை குருமுறையா யுரைக்கக்கேளே. (25)

உரைக்குமுறை கருவறியா ரிந்நூல்பார்த்தால்
உள்நின்று பகையறியா ருறவுமாகார்
உரைக்கமன துறக்கவல்லோ சொன்னேனப்பா
உன்கருத்தா லுள்ளமதி லுள்ளந்தோணும்
உரைக்கமனந் தன்னிலேயே உறவுமாகும்
உள்ளமதி லபிஷேக மனமாம்பூசை
உரைபழுதாய்ப் பழுதொன்றுஞ் சொல்லவில்லை
உன்மனைத்தா யுன்மத்த மாளுள்பாரே. (26)

பாரிதுவே பெரிதுசிறி திதுவேயூரும்
பதிவாகு முறவின்முறைப் பண்புமாகும்
பாரிதுவே முறையோடே யுறவாங்கன்னி
பண்டுளதாய் நீயாகி வந்தயோனி
பாரிதுவே ஆணாகிப் பெண்ணுமாகிப்
பகலென்றும் இரவென்றுந் தோன்முக்கண்ணாய்
பாரிதுவே கண்ணான கண்ணேமக்காள்
பழுதில்லை பழுதில்லை கனியுந்தானே. (27)

கனியாதே மனதுமிகக் கனிந்தாலப்பா
கசடருக்குட் கனிதோணக் கன்னிகன்னி
இனிதான கன்னியடா யென்தாயாளுள்
என்மக்கா ளுங்களுக்கு இவளேவாளுள்
தொனியாதே பாதகர்க்குச் சொல்லவேண்டாம்
தோலாசை கொண்டவர்க்கு விள்ளவேண்டாம்
செனியாதே பேரின்ப வீடுயர்ந்தால்
தெரியாதே தெரியுமடா யின்னங்கேளே. (28)

இன்னமுமே வெளிதோணச் சொல்லக்கேளு
இன்பமுற்றுக் கேளாட்டாற் சிவமேயென்பான்
முன்னையுமே சொன்னதெல்லாம் நுணுக்கம்பாரு
முழுதுமது தெரியாட்டாற் பின்னேபாரு
கன்னமுமே தகர்வடா அடித்துச்சொல்வேன்
கருத்தொட்டுக் காட்டையிலே கருவாய்ப்பாரு
அன்னமுமே பொசித்தாக்காற் பசியுண்டாமோ
அற்பிசியிற் கார்த்திகையில் அமையுந்தானே. (29)

அமைந்ததுதான் மார்கழியாய்ப் போனவண்ணம்
அத்தையுமே மருமகளாய் வாசியானாள்
சமைந்தணங்கைத் தடகுயத்தைத் தழுவிக்குக்காற்
சந்தோஷ மானசுக மானேபெண்ணே
சமைந்தணங்கும் நீயுமொன்றாய்ச் சாருமப்போ
தனித்திருபேர் கண்ணாலே கண்டாற்சூட்சம்
சமைந்தணங்கைப் பார்த்ததெந்தக் கண்ணேகண்ணு
தல்கண்ணு மவள்கண்ணுங் குருடாய்ப்போச்சே. (30)

குருடர்கரு வறியாத குருடர்மெத்தக்
குருக்கண்ட கண்ணறியார் குருவைப்போற்றார்
குருடரவர் கீாலுக்குக் குரடுபோட்டுக்
குத்திரமாய் வேடங்கள் தரித்துக்கொண்டு.
திருடரவர் சத்திசிவ் பூசைகொண்டு
தேசத்திற் சென்றலைந்து பணங்கள்வாங்கி
வருடமவன் பெண்டிர்பிள்ளை பிழைப்புக்காக
வாய்ப்பேச்சாய்த் திரிவார்கள் மடையர்தானே. (31)

மடையருக்குள் ளிப்படியே வெகுபேருண்டு
மயக்கத்தால் வாய்ப்பேச்சால் மருளவேண்டாம்
கடையருக்குங் கண்மணியே கண்ணைக்கண்டு
கைப்பிடியாய்ப் பிடித்தந்தக் கண்ணைப்பார்த்து
உடையவனும் லிங்கமா லிடையாமென்று
உண்ணப்பா கண்ணப்பா உள்ளன்பேகண்
தடையொருநாள் வாராது லிங்கபூசை
சண்முகமாய்ப் பெற்றதிந்தப் பூசைதானே. (32)

பெற்றவளே யுற்றதிவ்ள் தாரமானாள்
பிரியாத பார்வையினாற் பெண்மையானாள்
கற்றவளே கடைக்கண்ணாற் பார்த்தாள்பார்த்தாள்
கபடமாய்ச் சொல்லறியேன் கண்டேன்கண்டேன்
குற்றமவள் பூசையிலே ஒன்றுமாகா
குமரிசிறு பிள்ளையடா கூச்சமிச்சாள்
சற்றவளைத் தியானத்தாற் பூசைசெய்யத்
தன்பேரு மவள்பேரு மொருபேராச்சே. (33)

ஒருவருக்குந் தெரியாது ரூபாரூபம்
ஒருமண்டா யொன்றாகி யுலகமானாள்
ஒருவருக்குந் தெரியாமல் மாண்டார்கோடி
ஒருமுடியாய் முடிந்துவிட முறுதியாச்சு
இருபேர்க்கும் முப்பேரா யிருந்தாளாத்தாள்
எத்தனையோ பேரிவட்கு எண்ணப்போமோ
அருபேர்க்கும் அறுமுகமா யொருத்தியானாள்
ஆகாகா யிவள்பேரை அறியோம்பாரே. (34)

பாரறிய வூரறியப் பரமசிவனிவளைப்
பற்றினபே ரெத்தனையோ அய்யோ அய்யோ
கூரறியச் சிறுபிள்ளை யென்றாள்கன்னி
குணமிவளைப் பார்க்கநிற் குணமேயானாள்
ஆரறிய வூரிலவி சாரியாடி
அமர்ந்தயிடந் தெரியாம லரங்கியானாள்
ஊரறியக் கைபிடித்தார்க் கவளேயாகி
யுத்தமியா யிருந்துமன தொடுங்கினாளே. (35)

ஒடுங்கிமன தொடுக்கமிவ ளடக்கங்கேளு
உள்ளமடா தெரியார்க்குக் கள்ளங்கள்ளம்
கடுகளவு முழியிருக்க முழியினுள்ளே
கள்ளமுழிப் பார்வையதில் நயனமொன்று
அடங்குகடை விழிப்புனலாங் குமிழிவெள்ளம்
அருவியடா கறுப்பாகும் நடுவேபச்சை
இடங்கருவி லமைத்தபடி யென்றாள்கன்னி
யிவள்கருவை யறியாதித் தனையுமாச்சே. (36)

இத்தாறு கோணமுக் கோணம்நந்தி
ஏகோபி மகாமந்த்ர மிவளேகற்றாள்
கத்தருவி லிவளொருத்தி முத்தியானாள்
கண்டருக்குப் பெண்டாகிக் கண்ணுமானாள்
அத்தமவள் கையிருக்க முகத்தைப்பார்க்க
அவள்முகமே கண்ணாக நின்றாள்கன்னி
உத்தமனை யிவள்மனைக்குக் கத்தன்கத்தன்
உச்சத்தா லிவள்பேச்சு மிச்சமாச்சே. (37)

ஆச்சப்பா ஆதிசிவ பூசையாலே
அவனவளு மொன்ருகத் தோணுந்தோணும்
காச்சப்பா பழுத்ததொரு பழத்தைப்போலக்
கனிவான பொருளிதப்பா கண்டுதேறு
பேச்சப்பா சொல்லாதே சொல்வேன்கேளு
பேரறியே னூரறியேன் மவுனத்தாயை
வாச்சப்பா சத்தியிடப் பாகம்நிற்க
வரிசையுட னிறுத்தியொரு வலத்தில்நில்லே. (38)

நில்லடா சற்புத்திர னுனற்கேளு
நிற்கையிலே யிருகையு மிலாடமேத்த
நில்லடா மனம்புத்தி நினைவுமொன்ருய்
நிறுத்தியே மனதிலொரு கருவைக்கேளு
அல்லடா முன்மவுன மாத்தாள்தந்த
அமுதமது வுண்ணையிலே அங்கைரெண்டும்
சொல்லடா யெங்கையப்பா பாயுங்கையும்
சொற்பமென்று எண்ணுதே சொல்லக்கேளே. (39)

சொற்கேளாப் பிள்ளையென்றுற் சொல்லவேண்டாம்
சொல்லினுல் தோஷமடா கிளையும்நாசம்
முற்கோதிப் பேசாதே மூலங்கேளு
மும்மூல மொன்றுன மூலமப்பா
சட்கோண வட்டமடா தனமாம்பாரு
சத்திசிவ லிங்கமென வந்தமூலம்
இட்கோல மானசத்தி தனமிரண்டும்
இந்துகதி ரானகுறி யின்னங்கேளே. (40)

கேளப்பா யிந்திரனி லிருந்துகொண்டு
கிருபைபெற்ற சிவானந்தி தியானம்பண்ணக்
கேளப்பா குறிசொல்வேன் நினைவாய்க்கேளு
கிரியென்றும் ஸ்ரீயென்றும் இரண்டுமூன்ருய்க்
கேளப்பா மும்முகிற்று டகையுமானுள்
கிரிலகிரி கொண்டேறும் மலைக்கவேண்டாம்
ஆளப்பா யிவள்தன்யம் இடதுதன்யம்
ஆகிருஷ்ண னதற்குற்று லெய்தும்பாரே. (41)

பார்க்கையிலே மும்மூகிலு மிரண்டேயாகும்
பகலவனு மிராக்கதிரு மானவாறும்
பார்க்கையிலே ஞாயிறுமே மறுநாள்திங்கள்
பகலவனைத் திங்களிலே மாறிப்பாரு
சேர்க்கையிலே ஆதித்தன் சேருந்திங்கள்
சேர்ந்திரண்டு மொன்றான தன்யமப்பா
மூர்க்கமிதைப் பூசைபண்ண முத்தியாகும்
மும்மூன்று மொன்றான சூட்சந்தானே. (42)

சூட்சமதைப் பார்க்கப்பால் வண்ணரானார்
சுயம்பாக முளைத்தெழுந்த லிங்கமானார்
ஆட்சியிவள் தன்னையுந்தா னறியுமுன்னே
அரகரா தலைவனையுங் கண்டாள்கண்டாள்
காட்சியிவள் கண்டகடைக் கண்ணேகாட்சி
கண்ணென்றாற் கண்ணுள்ளே கண்டுசோதி
சூட்சமிவள் முழியறிந்து மாயைநீக்கிச்
சோதித்துப் பார்த்ததெல்லா முத்தியாமே. (43)

முத்தீயு மொன்றாகி முளைத்தலிங்கம்
முளைத்ததிலே ஆவிடையு மானலிங்கம்
சத்திசிவ மானசிவ லிங்கபூசை
சதானந்தி சச்சிதா னந்தியானாள்
சத்தியமா யிப்பூசை சொன்னாளாச்சி
தன்னியத்திற் கண்ணுடையாள் கண்ணேபத்துச்
சித்திபெற யிக்கண்ணை யறிந்தாற்பூசை
செய்யலாஞ் சிவபூசை தீர்க்கமாமே. (44)

ஆமப்பா யிப்பூசை ஆச்சிக்குள்ளே
அடக்கமடா சித்தருடன் முனிவர்சொல்லார்
நாமப்பா கொங்கணற்குக் கண்ணேயாகி
நடுக்கண்ணிற் கடைக்கண்ணு லொளியேபார்த்துக்
காமப்பால் கானற்பா லிரண்டுங்கொண்டு
கண்கண்ட படியாலே சொன்னேனப்பா
ஓமப்பா யிப்படியே கண்டோர்க்கல்லால்
உரையறியா ரொளியறியா ருலகத்தோரே. (45)

உலகமதில் வேணபடி பூசைசெய்வார்
　　உள்ளபடி வள்ளல்செய லுணரமாட்டார்
பலகலைக ளோதுமிலை யென்றேமாண்பர்
　　பற்றறியார் சத்தியுட தீட்சைபாரார்
கலகமிடு வார்வீணே தர்க்கம்பேசிக்
　　கத்தபம்போற் றர்க்கமிட்டுத் திரிவார்மாண்பர்
விலகிவிடு மவர்கள்தனைக் கண்டாலப்பா
　　மெய்யான நந்திதனைக் கண்ணிற்காணே. (46)

காணாத காட்சியெல்லாங் கண்ணிற்காணும்
　　கண்டகடைக் கண்ணாலே யொளியுங்காணும்
தோணாத வேதாந்தப் பொருள்தான்தோணும்
　　சொற்குற்ற மிந்நூலி லொன்றுமில்லை
ஆணாக ஆண்பிள்ளை யென்றேகேளு
　　அங்கேயறி கொங்கணரைக் கண்ணிற்காணு
வீணாகத் திரியாதே மனத்தையூணு
　　விட்டகுறை யிதுதானே வெளியுமாச்சே. (47)

வெளியொளியும் விண்ணான கண்ணேகண்ணே
　　வேதாந்தம் பாராமற் சும்மாவீணே
பழியாதே பெரியோரைப் பாவம்பாவம்
　　பாழ்நரகில் வீழாதே சொன்னேன்சொன்னேன்
வழியான பாதையடா யின்னாலப்பா
　　மங்கையர்மே லாசைகொண்டு மருளவேண்டாம்
தெளிவான மனம்ரண்டும் ஒன்றாய்க்காணச்
　　சிவானந்த மதிபார்வை யிதுதான்காணே. (48)

இதினாலே வொருஜோலி யில்லையில்லை
　　இப்பொருட்குப் பணங்காசு செலவுமில்லை
இதினாலே காட்சியடா தனங்கள்கோடி
　　இகபரமு முண்டாகுந் தேகஞ்சித்தி
இதினாலே பாவங்க ளறப்பார்சித்தர்
　　இந்தமுறை வேதாந்தத் தாதியந்தம்
இதினாலே பூரணமுங் கண்ணிற்றோணும்
　　இடரொன்றும் வீராது திடனாம்பாரே. (49)

திடமான மனதல்லோ திடந்தானப்பா
திருவான லட்சுமிப்பெண் ணூக்கமானாள்
குடமான தன்னியத்திற் பத்துக்கண்ணும்
கூர்விழியாங் கண்பத்து தனத்திரண்டிற்
சடமான கொங்கைக்குட் கண்தானேது
சாத்திரத்திற் பெரியோர்கள் சொல்லாரப்பா
அடமான மங்கையடா சொல்லக்கேளு
ஆகாகா கொங்கைதன்னிற் கண்ணைக்கேளே. (50)

கண்ணான தொருகொங்கைக் கஞ்சேகண்ணும்
கதித்தெழுந்த கொங்கைதனிற் பத்துக்கண்ணும்
ஒண்ணான கொங்கைக்கு ஒன்றேகண்ணும்
ஒன்றுமுதல் மூன்றாக இருந்தால்நன்றாம்
கண்ணான திருகொங்கைக் கஞ்சேகண்ணாய்க்
கண்டாலு மெத்தவன்று ஆறுங்கண்ணே
பெண்ணான கொங்கைக்கே கண்தான்பத்தும்
பிரியாம விருந்துதென்றால் முத்தியாமே. (51)

முத்தியா மிப்படிக்கண் ணாலுங்கண்டால்
முக்கியமாம் பூசைவிதி முறையுமாமே
சத்தியாஞ் சித்தியடா முதுகண்பாரு
சண்முகற்கு மமுதளித்த கொங்கைகொங்கை
புத்தியாய்க் கண்டறிவா யிந்தப்பூசை
புண்ணியற்கு மெய்துமடா கர்மிக்கில்லை
உத்தியாய்ப் பாராதே குருவைக்காரு
உன்மனத்தைக் கண்டுகுரு வுபதேசிப்பார். (52)

உபதேசம் நந்திகுரு வாய்க்கவேணும்
உன்மனத்தா யமுதுகண்பால் கொள்ளவேணும்
உபதேசஞ் சற்குருவைக் காண்பதெப்போ
உன்தேகஞ் சத்தியமாய் வாழ்வதெப்போ
உபதேச மானதெட்டு மிரண்டும்பத்தாய்
உட்கொண்ட தப்பாலு முதுகண்பத்தாய்
உபதேச மானதிந்த முதுகண்பார்க்க
ஒருபிள்ளை பிறவாதோ கருவாய்த்தானே. (53)

கருப்பத்தி யறுப்பத்துங் கண்ணேபிள்ளாய்
கைப்பத்திக் கொண்டதைநீள் முதுகண்பார்த்து
உருப்பத்திப் பத்திலேயும் வந்தாய்வந்தாய்
உற்பத்தி கண்ணாலே குருவைப்பாரு
திருப்பத்தி நந்தியொளி கண்ணேகண்டாற்
சிவானந்தி குருவாகுங் கருவைச்சொல்வாள்.
விருப்பத்து அதைக்கேளு விண்ணைப்பாரு
விள்ளாதே கசடருக்கு வெளியாகாதே. (54)

ஆகாத பிள்ளையென்று லடித்துத்தள்ளு
அந்தமூது கண்ணறிந்துண் டாகச்சேரு
வேகாத கால்தலையை யோதச்சொல்லு
விள்ளாத வேதாந்த முடிவைச்சொல்லு
சாகாத தலையறிய முக்கால்சொல்லு
சமூலமாய்க் காணுதற்கு மூலஞ்சொல்லு
போகாத புனல்காட்டி மதியைக்காட்டிப்
புத்தியாய்ச் சிவசத்தி பூசைசொல்லே. (55)

சொல்லக்கேள் வாதமுறை சூட்சந்தன்னைத்
தொடுகுறியாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
கல்லுக்கு ளத்தாலே பாரையுப்பைக்
கண்டுப்பைக் கண்டுமதி யுப்போடப்பா
புல்லுக்குள் நாதவிந்து உண்டுஉண்டு
புத்தியா யுப்பெடுத்து அப்புவோடே
மல்லுக்கு யென்னோடே கைகட்டாதே
வாதுக்குச் சொல்லுகிறேன் வாதம்பாரே. (56)

வாததிரத் தாலேகால் வாதமாச்சு
வாய்ப்பாச்சு பொய்யென்றால் வீணாய்ப்போச்சு
நாதத்தில் விந்துவடா பூவிற்றுக்கு
நாக்குண்டு பேசுதற்குப் போக்கைக்கேளு
காதத்துக் கப்பாலே தூரமல்ல
கண்ணுக்கு மூக்குக்குச் செவிதோணாது
சூதத்துக் கதினாலே யெல்லாந்தோணும்
சொன்னாலுந் தெரியாட்டாற் சும்மாபோமோ. (57)

போமோதான் சூதத்தில் வேதைசும்மா
போக்கறிந்தாற் சூதமடா அந்தாஅந்தா
ஆமோதா னிதினாலென் றெண்ணவேண்டாம்
அமுரியடா உப்பாலே குமரிநாதம்
வேமோதான் கோமுகத்தில் வேகம்வேகம்
வேகமா முப்புடக்குக் குடமாம்வேதை
ஓமோமோ சரக்குவகை சொல்லவில்லை
ஒருசரக்கும் வேண்டாங்கா ணுறுதியாமே. (58)

உறுதியா யெட்டுக்கு ளண்டபிண்டம்
உட்கருவும் வெளிக்கருவு மொன்றாய்க்காணும்
உறுதியடா வேதையிது வுண்மைபாரு
உட்புகுந்து கருவிடையம் பார்த்தாற்கேளு
உறுதியடா கோமுகத்தில் வாதவித்தை
உப்பாலே ஆடுமடா தொந்தங்கோடி
உறுதியடா யிதைவிட்டா லொன்றுமில்லை
உத்தமர்க்கு உள்ளாமே யுள்ளந்தானே. (59)

உள்ளபடி சாத்திரங்கள் சித்தர்சொன்னார்
உட்புகுந்து முதுகண்பார்த் தொளித்தாரப்பா
கள்ளமன்றிச் சொன்னேனா னிந்தநூலிற்
கருவிடையம் பார்த்திதனைக் கண்டாலப்பா
உள்ளமதிற் கன்னியடா ஓமசத்தி
உள்மணித்தாய் மணிகாட்டி யுரைப்பாளப்பா
விள்ளவென்று லிதைப்பார்க்க விள்ளப்போமோ
வெளிதோணக் கருவிடையம் வெளியாய்த்தானே. (60)

வெளியல்லோ செவிக்குரைத்தார் சூட்சத்தாலே
விண்கண்ட தெந்தக்கண் கண்ணேகண்ணே
வெளியல்லோ செவியாலே நன்றாய்க்கேளு
வேதாந்தஞ் செவிகேட்க இன்னங்கேளு
வெளியல்லோ மூச்செனற காலாற்றியை
வேகத்தால் மூட்டியல்லோ வெளியைக்கண்டால்
வளியல்லோ வாயிருக்க நாவும்பேச
வார்த்தையென்ன புருவமையம் நாவுமாச்சே. (61)

நாவாலே பேசுதற்கு நாவுமுண்டோ
    நாதாக்கள் பேசார்கள் வேதாந்தத்தைச்
சாவாலே செத்தாலே அந்தம்போச்சு
    சார்ந்துநின்று லந்தமது அந்தமெத்தப்
பூவாலே நாறுமது மணமுமாச்சு
    புத்திகெட்ட மனத்தாலே வீணாய்ப்போச்சு
ஆவாலே யுளவாட வுங்கைகொண்டு
    அணைக்கட்டிக் காலாலே அமுதங்கொள்ளே. (62)

அமுதமடா புத்திகெட்ட மாடேகேளு
    அப்புவடா ஆயிரத்தெட் டிதழாய்நின்ற
அமுதமடா சத்தியமாய்ச் சொல்லக்கேளு
    ஆச்சரியஞ் சொல்லவென்றாற் சொல்லப்போமோ
அமுதமடா முதுகண்ணாற் பாருபாரு
    ஆனந்தம் பொங்குதடா அருவிபாயும்
அமுதமடா முதுகண்ணாற் கண்ணேயுண்ண
    அரிவரியி னெழுத்தெல்லா மந்தமாச்சே. (63)

ஆச்சந்த மாதியடா முதலேசோதி
    ஆகுமடா சரசுவதி நாவுக்குள்ளே
பேச்சென்று பேசாமற் பேசிக்கொள்ளப்
    பேர்மக்கா ளுங்களுக்குச் சூட்சஞ்சொன்னேன்
ஏச்சென்று யிந்நூலைச் சொல்லவேண்டாம்
    ஏழையைப்போல் வாய்பேசா திருந்துகொண்டு
காச்சென்று காச்சிவிடு உலகத்தோரைக்
    கைக்குள்ளாய் வருமட்டுங் கருவைப்பாரே. (64)

கருவறிய விந்நூலிற் கருத்தான்தோணும்
    கருத்துவைத்துப் பாராட்டாற் கருத்தோணாது
கருவறிய காமப்பால் கானற்பாலைக்
    கருச்சொல்லிக் காட்டாமற் கொள்ளச்சொன்னார்
கருவறியக் கண்டுகண்டு முதுகண்பார்த்துக்
    கண்டபடி கொங்கணர்தன் கண்ணேயென்று
கருவறியா வித்தையுண்டோ குருவேஅய்யா
    கண்காட்டுங் கண்காட்டு மென்றுகூவே. (65)

கண்காட்டும் என்குருகொங் கணரேஅய்யா
கருக்காட்டும் உருக்காட்டும் கண்ணேகாட்டும்
விண்காட்டும் மும்மூல வெளியுங்காட்டும்
மெய்காட்டும் கைகாட்டும் மூலர்பேரா
எண்காட்டும் வழியாலே யொளியைக்காட்டும்
ஏகாந்த விளையாட்டுங் குளிகைகாட்டும்
புண்காட்டிப் பொதியாதே நாலும்பூவும்
பூவரிய யென்கண்ணால் முதுகண்பூட்டே. (66)

பூட்டான கண்ணொட்டு மிரண்டேகண்ணும்
பூப்பட்டு முழிகுருடாய்த் தோணவில்லை
காட்டான பூவொன்று நந்தியாவட்டம்
கண்கண்ட பூவோடே சரிகைவெள்ளி
கூட்டான குளிகையது மூன்றுங்கூட்டிக்
குருடான கண்ணுக்கு குளிகைபோட்டு
ஆட்டான காலாட்டைக் கண்ணிற்காண
அய்யாகொங் கணரேநீ ரருள்செய்வீரே. (67)

அருள்செய்வீ ரென்குருவே யென்றுபோற்று
ஆகாகா அருட்கண்ணா லருளைக்காண
அருள்செய்வார் சதானந்தி குருவைக்காண
ஆச்சரியங் கண்ணாலே பார்க்கப்போமோ
அருள்செய்வார் கொங்கணர்தான் குளிகைகாட்டி
ஆடுதற்குச் சதகோடி தொந்தமாட
அருள்செய்வார் சிலம்பொலிதான் கண்டமூர்த்தி
அறுபத்து நாலுசித்து மாடலாமே. (68)

ஆடுதற்குக் கால்காட்டி மூலங்காட்டி
ஆறுவரை மேல்மூலத் தாறுங்காட்டி
ஆடுதற்கு அட்டாங்க யோகங்காட்டி
அப்பாலும் லகிரிகொள்ளுங் குளிகைதாண்டி
ஆடுதற்கு அண்டம்பே ரண்டங்காட்டி
ஆனந்த லகிரிகொண்டு யேறியேறிக்
கூடுதற்கு நிர்மயமாய் நின்றசோதி
குணமறிய நிர்க்குணமாய்க் கூடுவாரே. (69)

கூடுவா ரைஞ்னூற்றி யைம்பத்தேழிற்
குணமுடைய கடைப்பிள்ளை யாகத்தானே
கூடுவார் பதினெட்டுப் பேரோரெட்டாய்க்
கோத்திரமுஞ் சூத்திரமும் பார்க்கப்பார்க்கக்
கூடுவார் கடைக்காண்டத் தந்தத்தோடே
கோடியிலே நவகோடி சித்துங்காண
நாடுவார் கண்ணாட்டங் காண்பதேதான்
நாதாந்தப் பூரணத்தி னூலத்தானே. (70)

நாலான பூரணமே முதுகண்ணாகும்
நாதமடா நாதாந்த வித்தைக்கேளு
காலான பன்னிரண்டில் நாலேவிந்து
காலெட்டுங் காயத்திற் சூட்சமூலம்
மாலான காயத்தில் சத்தில்உண்ணில்
மகாரத்தில் மாயையைத்தா னறுப்பார்சித்தர்
வேலான வேலனுட கைவேல்சத்தி
வெத்திவே லெட்டான வேலும்ரண்டே. (71)

ரண்டெட்டும் பூரணமாய் நின்றவேலை
நாதாக்க ளறுமுகமாய்க் கண்டார்வேலை
ரண்டெட்டிற் காலாலே யெண்காலோடில்
நாட்டினார் முக்காலும் வேலைக்கொண்டு
முண்டொட்டா தசுரர்கிளை மாண்டுபோச்சு
முத்தியடா அறுமுகனார் கைவேலப்பா
ஒண்டொட்டா தசுரர்தத் துவந்தான்போச்சு
ஓராறு மொருமுகமாய்க் காணலாச்சே. (72)

காணவே சாரூப சாயுஜ்யத்தைக்
கண்கண்ட சாரூபங் கண்ணேரூபம்
தோணவே சாரூபம் வேகாக்காலைச்
சொல்லுக்குட் டெரியாது ரூபாரூபம்
ஊணவே முதுகண்ணால் மனக்கண்ணாண
உட்காலும் முக்காலாய் ரூபங்காணும்
நாணவே நாணாதே சொல்லக்கேளு
நாச்சியார் நெற்றியிலே காலையூணே. (73)

காலூணி ஊணயிலே முக்கால்காலாய்க்
கண்காணு ரூபமடா ரூபங்காணும்
காலூணி மூலத்தில் யோகம்பாரு
கருணைபுரி திருமூலர் பாதம்போற்று
நூலான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
நூறுதர முபதேசஞ் சொன்னாலென்ன
சேலான மூலருட பேரனெங்கள்
சிங்கமடா கொங்கணர்தன் செயலைப்பாரே. (74)

செயலான கொங்கணரே யெங்கள்நாயன்
சித்தான சித்தருக்குங் கீர்த்திசெய்தார்
மயலான பெண்மாயைக் கண்ணைக்குத்தி
மனமான முதுகண்ணால் மனக்கண்பூட்டி
நியமான நந்திசிவா னந்திபாதம்
நிற்குணமாய்க் கண்டறியத் தெண்டம்பண்ணி
மயமான வமுதமடா வுண்ணச்சொல்லி
மவுனத்தாற் பேர்சொல்லி வழிசொன்னாரே. (75)

வழிசொல்லு முன்னேதான் பட்டபாடு
வழியோடே சொல்லவென்றால் வெகுநாட்செல்லும்
தெளிவில்லாப் புனலாகி யன்றுகொண்டு
தேசத்தில் வாய்வீணே பேசிப்பேசி
அளியான சேற்றில்மன மழன்றேனப்பா
ஐம்பொறியாற் பரியவிட்ட மிச்சமாகி
வெளியேறி வருகையிலே வாதவூரில்
வேதியன்போ லென்குருவும் வந்தார்பாரே. (76)

பாரப்பா அவ்வூரி லையனையன்
பண்பாம்வே தியனுந்தா யாதியென்முன்
ஆரப்பா தாயாதிப் பங்குதன்னை
ஆர்கொடுப்பா ரென்னோடே பிறந்தாருண்டோ
சீரப்பா வேதியன்று னென்னைப்பார்த்துச்
சீதனமோ உன்தேட்டு யெங்கேயென்றான்
பேரப்பா சொல்லறியே னையன்சொன்ன
பேச்சாலே பிரட்டெல்லாங் கண்டேன்பாரே. (77)

கண்டேனே வேதியனைக் கண்டபோதே
கருப்பெல்லாம் வெள்ளையடா சிவப்பிற்பச்சை
பண்டேனு னறியாமற் றிண்டுமிண்டாய்ப்
பார்த்தேனுன் தாயாதிப் பங்கைக்காணேன்
தொண்டனென வேதியனைத் தொண்டுபண்ணிச்
சொன்னதிறூற் றூயாதிப் பங்கைக்கண்டேன்
உண்டேனுன் தாயாதிப் பங்கைக்கண்டு
உங்கையிலே கொங்கணர்தாள் போற்றினேனே. (78)

போற்றினேன் தாயாதி யென்றுசொன்ன
பூணநூல் வேதியன்றன் காலைப்பார்த்துப்
போற்றினேன் மூக்காலும் அங்கைரெண்டும்
பூட்டினே னெட்டுவிசை பூண்டேன்காலைப்
போற்றினேன் கால்விசையா யொட்டியோட்டிப்
போய்ப்பற்றிப் பிடித்தனடா முத்திகாண
மாற்றினே னுலகத்திற் சரத்தையெல்லாம்
மாண்டுமனம் பார்த்தனடா பார்வைதானே. (79)

பார்வையிலே வெகுசுருக்கு விராலிநாதர்
பார்த்தாக்கா லருணகிரி மிச்சமப்பா
பார்வையிலே யிவர்களுட பார்வைரெண்டும்
பகரரிது கதிர்மதியா யொன்றேபார்வை
சேர்வையிலே சுழிணையடா நந்திபார்வை
சித்தருக்குள் திருப்புகலாய் கண்டபார்வை
கூர்மையிலே கூர்மையடா முதுகண்கூர்மை
குருடனுக்கு வழிகாணுங் குறிதான்பாரே. (80)

குறிபாருங் கீழாறுந் தூலமூலம்
கொள்மூல மூச்சேறி னுற்காலப்பா
குறிபாரும் நாலுநாற் காலுங்கல்லே
குற்றமில்லை மேல்மூலம் பின்னேபாரு
அறிவாகு மூலமுத லஞ்சும்பாரு
அண்டமடா கண்டவரை யஞ்சுமொன்றும்
நெறியாக ஐயஞ்சா யஞ்சும்பார்க்க
நிலைத்தவஞ்சு மூன்றுமொன்றாய் நிலைக்கும்பாரே. (81)

நிலைத்தாக்காற் காலறிந்து தீயைமூட்டு
நெருப்பாறு மயிர்ப்பால மப்பாற்கேளு
மலைத்தாக்கா லொன்றுமில்லை மனதேகண்ணாய்
மதியத்திற் காலைத்தீயக் காலையூணு
உலைத்தாக்கா லூதையிலே நந்தீப்பற்றி
ஓகோகோ பற்பமடா கருணைவயெல்லாம்
சிலைத்தாக்குஞ் சதிரேறும் லகிரிகொண்டு
சிவசிவா கால்தலையும் வாசியாச்சே. (82)

வாசியடா கைவாசி லாடமீதில்
வதனம்சட் கோணமுக் கோணமப்பா
தேசியடா சவுதகிரி வட்டமேறிச்
சிவசிவா வென்றல்லோ மாறிமாறி
நாசியடா கண்ணுக்குஞ் செவியுங்கேட்க
நாலுமது காலாகி வந்ததேசி
வீசியடா வாய்பேசி வீசும்வீசும்
வீதியிலே யறுவீதி வட்டமேறே. (83)

வட்டமடா சூரியனே நந்திநந்தி
மதியாலே யுள்ளமதில் மதியமுதம்
வட்டமடா பிரணவமே யோதாவட்டம்
மவுனமடா நாதாக்கள் சொல்லார்சொல்லார்
வட்டமடா ஆதியிற்கண் வட்டமாகி
மனக்கண்ணால் வேதாந்தம் பார்த்தமார்க்கம்
வட்டமடா துன்மார்க்கம் நன்மார்க்கந்தான்
வந்தவித மெந்தவித மந்தம்பாரே. (84)

அந்தமடா ஆதிமுத லவ்வுஞ்சவ்வாய்
அந்தகுறி யட்சரங்க ளல்லவல்ல
அந்தமடா முடிந்தவிட மறியப்போமோ
ஆதியென்ற நாதத்தால் விந்தேயந்தம்
சொந்தமடா ஊன்கொண்ட காயந்தன்னில்
தூலமுடன் சூட்சமுமாய் நின்றதேகம்
வந்தவித மறியாமல் மாண்டேபோனார்
மவுனமடா பிள்ளைகளே சொல்லக்கேளே. (85)

சொல்லையிலே தெரியாட்டாற் றொட்டுக்காட்டு
 தொட்டுநீ காட்டையிலே தெரியாவிட்டாற்
கொல்லையிலே கூட்டிப்போய்க் கையைக்கொண்டு
 கும்பிட்டுக் கைகொண்டு திரத்தாற்சொல்லு
செல்லையிலே யிப்படியுந் தெரியாவிட்டாற்
 செப்பக்கே ளின்னமொன்று தெரியச்சொல்வேன்
அல்லையடா சொல்லுகிறேன் வில்லைக்கொண்டு
 அஸ்தவிழி தெரியவன்பாற் கண்ணையெய்யே. (86)

எய்யயிலே முக்காலு மெய்துபாரு
 இப்படியுந் தெரியாட்டா லினிமேற்கேளு
கையதிலே யிருதிவள்ளி வாயிற்போட்டுக்
 கத்தபமே போபோவென் றடித்துத்தள்ளு
நெய்யதிலே அறுசுவையுங் கண்டுபாலை
 நேத்திரமாய்ச் சிலுப்பியதை வெள்ளையாக்கி
அய்யதிலே நந்திதனி லுருக்கிக்கொள்ள
 ஆதியந்தச் சதானந்தி யாகுந்தானே. (87)

சதாநிதமும் நந்திகுரு வென்றேநின்று
 சலியாதே நலியாதே குருவைக்காண
மதாமிதமா யிருகாதே செவியேகேளு
 வாக்கான நாக்காலே நாலேகூவும்
பிதாவாதி நாதாந்த மூர்த்தியென்று
 பிசகாதே முக்காலும் வாசிவாசி
சதாநித மூங் கண்ணுகிக் கண்ணேகண்ணுய்ச்
 சாவான நாலையுந்தா னுள்ளன்பாலே. (88)

உள்ளன்போ டஞ்சுமதை யுள்ளங்கொண்டு
 உருக்கிவிடு மனதுருக வுருக்கமாகும்
கள்ளன்பு வையாதே யுள்ளங்கண்ணுய்க்
 கனிந்துவிடு தெளிவான மணியாங்கண்ணில்
உள்ளின்ப மிதுவாம்பே ரின்பமாகும்
 உத்தமனே பொய்யலவே உண்மைஉண்மை
விள்ளன்பாய் விள்ளாதே யமுதங்கொள்ள
 வெளியாகு மொளியாகும் மேவுங்காலே. (89)

காலாலே நடப்பதற்குக் கண்தான்வேணும்
　　கண்பார்த்து நடவாட்டா விடறுங்காலும்
நாலாலே முன்னுன்காய்ச் சூட்சம்நாலாய்
　　நாட்டாரிக் கட்டெட்டாய் எட்டும்ரண்டைக்
காலாலே யனுகூலம் நடந்தார்பாரு
　　கைக்குள்ளே காலாறுங் கபடமில்லை
சேலாலே செலுத்துசிவா னந்தியப்பா
　　சேர்ந்திருப்பா ருன்தேகஞ் சித்தியாமே. (90)

சித்தியாம் யோகமுதல் ஞானஞ்சித்தி
　　செப்புதற்கு மூலமுதல் வாதஞ்சித்தி
சித்தியாஞ் சிவசத்தி பூசைசெய்யத்
　　திடன்மெத்தக் கெவுனத்தின் குளிகைசெய்யச்
சித்தியா மெங்கெந்தப் பூசைக்குந்தான்
　　செய்முறைகள் தான்தவறு துண்மைசொன்னேன்
முத்தியா மிந்நூலின் கருவைப்பார்த்து
　　முறையோடே செய்தாக்கால் முத்திதானே. (91)

தானென்ற இந்நூலின் வேதாந்தத்தைத்
　　தவறாமல் மூலமுதற் சூட்சஞ்சொன்னேன்
தேனென்ற யோகமுதல் ஞானபாதம்
　　தேர்ந்தமட்டுந் தெளிவாகக் கருவைச்சொன்னேன்
வானென்ற கதிர்மதியுஞ் சுழினையோடு
　　மந்திரங்கள் தியானத்தின் வழியுஞ்சொன்னேன்
நானென்ற மதத்தாலே வாய்வீண்பேசும்
　　நாய்மட்டை கிளைநட்டம் நசியென்றேனே. (92)

என்றென்று மழியாத குருவைநந்தி
　　யென்றென்றுங் கேட்பதற்குத் தியானஞ்சொன்னேன்
நன்றென்ற நாதாக்க ளமுதங்கொண்ட
　　நாதாந்த முதுகண்ணாற் கொள்ளச்சொன்னேன்
ஒன்றென்ற சதானந்தி பூசைமார்க்கம்
　　உத்தமர்கள் செய்வதற்கு முறையுஞ்சொன்னேன்
அன்றென்ற அந்தமுத லாதிமூலம்
　　அட்சாத்தி லுட்சூட்ச மறியச்சொன்னேன். (93)

அறிவதற்குக் கால்முதலாய் முக்கால்மூலம்
அப்புமுத லுப்பாமுப் பூவுஞ்சொன்னேன்
அறிவதற்கு முத்தியுமே யொன்ருய்ச்சொன்னேன்
ஐயரெங்கள் கொங்கணரே ஆதியென்று
அறிவதற்கு முக்கண்ணுங் கண்ணூற்பத்தும்
அடிமூலம் பார்ப்பதற்குக் கண்ணைச்சொன்னேன்
அறிவதற்குப் பேரின்ப வீடுஞ்சொல்லி
ஆராறு மறுமுகம்வேல் முனையென்றேனே. (94)

முனைபார்க்கும் பார்வையின்கண் முதுகண்சூட்சம்
முழிகண்ணிற் குருடான முனையுஞ்சொன்னேன்
தனையறியத் தாய்பதமுந் தனமுஞ்சொன்னேன்
தன்னியத்திற் பால்வண்ண ரூபஞ்சொன்னேன்
மனையான ஆறுதல மனையுஞ்சொன்னேன்
வழிதுறையும் நிரைநிரையாய் வகுத்துச்சொன்னேன்
அனையான தாயாதிப் பங்குஞ்சொன்னேன்
அமுதுகண்ணில் நாலுதான் வழிசொன்னேனே. (95)

சொன்னேனு ஞதிபுலி யூர்க்குப்பாதை
சுற்றத்தார் புற்றில்வா ளரவுஞ்சொன்னேன்
சொன்னேனு னந்தரவு விஷங்களெல்லாம்
சுகமாகும் மூலிகையின் கருவுஞ்சொன்னேன்
சொன்னேனுன் முன்னேதிப் பின்னும்பாரு
சூட்சமதில் வெளிதோணக் கருவுஞ்சொன்னேன்
சொன்னேனுன் கருவெல்லாங் கருத்தாலுள்ளே
சோதித்துக் கருப்பாரு சோதிகாணே. (96)

சோதியடா நாதாந்தச் சோதிசொன்னேன்
சுருக்கடா கடுஞ்சுருக்கு விந்தேதொந்தம்
ஆதியடா விந்தான தந்தம்பாரு
அந்தரங்கஞ் சொல்லாதே அய்யாவைய்யா
நீதியடா பேர்பாதி யென்தாயாதி
நின்பங்கு மென்பங்கும் நினைவாய்வாங்கு
பாதியிலே படுபாதி சூட்சமப்பா
பக்கத்திற் சொல்லாதே பங்கைவாங்கே. (97)

வாங்கையிலே சூட்சமுடன் வாவாவென்றால்
மனம்வெறுக்க வையகத்திற் சீசீயென்றார்
நீங்காதே நீங்கவாங் காலமையா
நித்திரையிற் புத்திவரும் நினவுநீங்காப்
பாங்கான கொள்கையிது பூசைதன்னிற்
பழுத்தகனி கனிந்துவிழும் பண்புமாகும்
பூங்காவுங் காவலடா புதையுமெத்த
புத்தரவு கடியாமற் புத்திற்பாரே. (98)

புத்திவர முன்சொன்னேன் பின்னுஞ்சொன்னேன்
பொய்யென்று சொன்னாக்கால் புத்திநாசம்
புத்திரனே சொன்னேனு னிந்தநூலைப்
போற்றிப்பார் சாயுட்ச பதமுமெய்தும்
புத்தியடா சண்முகனுங் குருவாய்நின்று
பொதிகைமுனிக் குபதேசஞ் சொன்னபுத்தி
புத்தியடா தங்கம்போற் கொங்கணர்தான்
புத்திசொன்ன பெருமைமெத்தப் புதுமைகாணே. (99)

காணாத கண்காணும் முத்திகாணும்
கயிலாசச் சொர்க்கமடா பதவியுண்டாம்
தோணாத சூத்திரங்கள் முன்னூல்சூட்சம்
தோணுமடா யின்னூலிற் சொன்னேன்கண்ணே
பூணாத பூணுநூ லின்னூல்நூறும்
பூவாகும் வாசமடா சுவாசத்தந்தப்
வீணாகப் போகாது தொந்தத்தாதி
வேதாந்த சூத்திரத்தின் கண்தான்முற்றே. (100)

கடைப்பிள்ளை சிவயோகஞானம் ௱,

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி ☞ பங்காருசாமியார் அவர்கள் குமாரர் ☞ முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை.

எழுபத்துமூன்றாவது:
கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# கலைக்கியானம் ௱உ௰.

ஓமென்ற மூலகண பதியைப்போற்றி
உறுதியுள்ள கொங்கணவர் பதமேற்கொண்டு
ஆமென்ற பூரணமாங் கலைக்யானத்தை
அறிந்துமதி ரவியினுட கலையைப்போற்றி
நாமென்ற சுழிமுனைவழிக் குள்ளேசென்று
நாதாந்தம் வேதாந்தம் நன்றாய்ப்பார்த்துத்
தாமென்ற சங்கற்ப விகற்பம்போக்கி
சகலகலைக் கியானபூ ரணங்கொண்டேனே. *

கொண்டேனா னப்போது குருவாய்நின்ற
கொங்கணவர் மனமகிழ்ந்து வாவாவென்னச்
சென்றேனா னந்தநிலை தன்னைப்பார்த்துச்
சேயான கடைமணியே தெளிவாயென்னக்
கொண்டேனா னவருடைய பாதம்போற்றிக்
குறித்துமிகத் திருவடியைப் பூசைசெய்து
மண்டலமூன் றதில்நிறைந்த கலைக்கியானத்தில்
வாழ்ந்திருவென் றனுக்கிரகம் வசனித்தாரே. (1)

வசனித்து அனுக்கிரக வார்த்தைபெற்று
மார்க்கமுடன் உட்கிரக மார்க்கங்கண்டு
நிசனித்த ஆதார மூலங்கொண்டு
நிலைதவறாக் கலையறிந்து முடிமேற்சென்று
திசனித்த சுழிமுனையில் நிற்கும்போது
திருவாசி வாசியென்ற கலையைக்கண்டேன்
பசனித்த கலையறிந்து மைந்தாநானும்
பாடினேன் பன்னிரண்டும் பத்துந்தானே. (2)

தானென்ற வாசிகலை பன்னிரண்டாய்
தாரனுள்ளே தானெழுந்து தானேதாளுய்
ஊனென்ற உள்வெளியாய்ப் பாய்ந்துபாய்ந்து
ஓமுடிந்து வுலகமெல்லா முறுதிகெட்டு
கோனென்ற குருவருளை யறியாமற்றான்
கூற்றுவன்றான் பாசத்திற் குலைந்துபோனான்
ஏனென்ற சத்திசிவ கலைகாணுமல்
இடைந்துமனந் தளன்றுமுயி ரிழந்தார்பாரே. (3)

பாரப்பா உடலுயிரை யறிந்துகொண்டு
பத்தியுட னிகபரசா தகமாய்நின்றால்
காரப்பா யின்னமொரு கருத்தைக்கேளு
கைகண்ட சித்தியடா கருணைதங்கும்
நேரப்பா ஆதார மூலத்துக்கு
நிலையான பஞ்சகர்த்தாள் வசமதாக
ஆரப்பா அறிவார்க ளறியமாட்டார்
அறிந்துநிலை பெறுவதற்கு அங்கங்கேளே. (4)

கேளப்பா நாளொன்றுக் கெட்டுச்சாமம்
கிருபையுட னில்லறத்தோ டிருந்துவாழ்ந்து
நாளப்பா விடியவொரு சாமந்தன்னில்
நாட்டமுடன் றனெழுந்து நம்மையாக
நீளப்பா தன்னுலே கால்முகங்கள்
நேமமுடன் சுத்திசெய்து யிருந்துகொண்டு
சூளப்பா விபூதிது ளிதமேசெய்து
சுத்தசெப மாலைபத்தி யுடனெடுத்தே. (5)

பத்திசெப மாலைவா வெனவெடுத்துப்
பதியிட்டு கையிற்பூதி தனைநிறுத்திச்
சுத்தமுடன் விந்திட்டு விந்துள்மைந்தா
சுருதியுள பிரணவத்தைச் சுகமாய்ச்சாத்திப்
புத்தியுடன் பிரணவத்துள் ஸ்ரீறீங்கென்று
பூரணமாய்க் கேசரியில் மனக்கண்சாத்தி
சித்தமுடன் ஓம்-கிலி-அங் கென்றேமைந்தா
திருவேறப் பதினுறு உருவேசெய்யே. (6)

உருவறிந்து ஓதையிலே கணபதிவல்லபையும்
ஒளிவிளக்காய் நின்றவெளி யுடனேகாணும்
கருவறிந்து அவ்வெளியி லொளியாய்நின்று
கருணைபெற ஓம்கிலி நங்கென்றோது
தெருவறிந்து ஓம்கிலி மங்கென்றோது
சிவசிவா ஓம்கிலி சிங்கென்றோது
குருவறிந்து செய்ததினால் மைந்தாநீயும்
கூர்மையுடன் ஓம்கிலி வங்கென்றோதே. (7)

வங்கென்று வோதியபின் மைந்தாகேளு
மார்க்கமுடன் ஓம்கிலி யங்கென்றோது.
எங்கும்நிறைந் திருந்தபஞ்ச கர்த்தாவங்கே
ஏகநிரா மயமான சொரூபங்காணும்
சங்கையுடன் ஓம்சிறீங் றீங்றீங்கென்னச்
சணத்திலொளி ரவிமதியைக் காணலாகும்
மங்களமாய் நித்தியமும் விடியச்சாமம்
மார்க்கமுடன் றானெழுந்து வகையாயோதே. (8)

வகையறிந்து ஓதையிலே மைந்தாகேளு
மகத்தான பஞ்சகர்த்தா ரவரோடொக்கத்
தகையாத ரவிமதியோ டேழுபேரும்
சங்கையுடன் தன்னொளியிற் காணலாகும்
நகையாமல் மனதடங்கி விடியச்சாமம்
நாட்டமுடன் றானெழுந்து நன்மையாகத்
திகையாமற் றானிருந்து ஆறாதாரத்
தெரிசனையிற் கட்டளையாய்த் தினமும்நோக்கே. (9)

நோக்கமுடன் தானிருந்து மனக்கண்கொண்டு
நுண்மையுடன் ஆதார தியானம்பண்ணி
வாக்குமனம் ஒன்றாக மைந்தாமைந்தா
மனதடங்கிச் சுழிமுனையில் வங்கென்றோட்டி
தாக்கிமன தறிவாலே நின்றாலையா
சணத்திலே சுழினைவழி தானேகாணும்
பாக்கியமாய் சுழினைவழி கண்டால்மைந்தா
பத்தியுடன் வாசிசிவ யோகஞ்செய்யே. (10)

செய்யப்பா வாசிசிவ யோகஞ்செய்யத்
　　தீர்க்கமுடன் லங்கெனமூ லத்தில்ரேசி
பய்யப்பா மூலத்திற் ரேசித்தப்பாற்
　　பாலகனே சுழினைவழிக் குள்ளேநீயும்
மெய்யப்பா சிங்கென்று பூரிபூரி
　　மேன்மைப்பேர் ரேசகபூ ரகமாய்நின்றால்
பொய்யப்பா போகாது வாசிதானும்
　　பூரணமாய் உள்வெளியாய் பொருந்தும்பாரே. (11)

பாரப்பா மனம்பொருந்துரே சகபூரகமாய்ப்
　　பத்திமுத்தி யானவழி ராக்யமாக
நேரப்பா தானிருந்து மனக்கண்கொண்டு
　　நேமமுடன் வாசிதா ரணையேசெய்யச்
சாரப்பா திருநடன மாடிநின்ற
　　சத்திசிவ கலைகள்ரெண்டுந் தன்னுட்டங்கும்
ஆரப்பா கலையறிந்து நிறுத்தப்போரார்
　　அருள்பெருகுஞ் சுழிமுனையை அழுத்திப்பாரே. (12)

அழுத்தியந்தச் சுழிமுனையைப் பார்க்கும்போது
　　அகாரமுடன் உகாரமது மகாரமூன்றும்
சுழித்தசுழி நடுமலையிற் கண்டகாச்சி
　　சொல்லுகிறேன் ஓங்கார சுத்தமாக
வழுத்துதற்கு அரிதான வடிவேல்போலே
　　மண்ணுவிண்ணும் ஊடுருவி வளைந்துகொண்டு
செழித்தமன துறுதியுள்ள சித்தருக்குச்
　　சிவசிவா பழம்பொருளாய் விளங்குந்தானே. (13)

தானேதான் தானவனாய் விளங்குகின்ற
　　சகலகலை பூரணஓங் காரந்தன்னைத்
தானேதான் சூர்யகலை உகாரமாகும்
　　சதாபோத சுழிமுனைஓங் காரமாச்சு
தானேதான் சுழிமுனையிற் றூக்கிப்பார்த்தாற்
　　சந்திரகலை அகாரமதாய்த் தானேகாணும்
தானேதான் மூன்றுமொன்றாய்க் கண்டபோதே
　　சகலகலைக் கியானமெல்லாம் ஒன்றாய்ப்பாரே. (14)

ஒன்முன ஓங்காரம் சகலத்துக்கும்
உடலுயிரும் பொருளான உறுதியாகி
நன்முன முப்பொருளு மொன்றாய்நின்று
நாடகமாய்த் திருநடனம் நன்றாயாட்டிக்
குன்றாத முக்குளிகை தானுமாகிக்
குருவான திருமூர்த்தி முப்பாழாகி
நின்றாடக் கொண்டதொரு நாடிமூன்றாய்
நிறைந்ததுவும் மறைந்ததுவும் மாயந்தானே. (15)

மாயமென்ற வாழ்க்கையிலே உபாயமாக
மைந்தனே தானிருந்து மார்க்கமாகக்
காயமென்றே கருவிகளை யறிந்துகொண்டு
கலையான ரவிமதியின் கலையைப்பத்தி
நேயமுடன் கண்டமதி லங்கென்றாணி
நீமகனே வங்குசிங்கு வங்கென்றேதான்
தாயகமாய்க் கால்மாறி நடனங்கொண்டால்
சதாபோத யோகசிவ வாழ்வுதானே. (16)

தானான வாழ்வுசிவ யோகவாழ்வு
தன்மையுள்ள அஷ்டாங்கச் சித்துவாழ்வு
கோனான குருவருளால் தான்றானாகிக்
குருவான கலையறிந்து கலைமேற்கொண்டு
தேனான நவக்கிரக பூசைசெய்து
சிவசிவா யில்லறத்தைச் சுத்திபண்ணி
நானான அகமிருத்தி யேகமாக
நாட்டமுடன் பூசைமடந் தன்னுட்செல்லே. (17)

செல்லடா பூசைமடந் தன்னுட்சென்று
சிவாவெனவே செலமெடுத்துப் புரோசித்தப்பால்
மெல்லடா வடமுகமா யிருந்துகொண்டு
மேன்மையுட னீசான முகூர்த்தங்கொண்டு
சொல்லடா சிவயநம வென்றுசொல்லிச்
சுத்தமுடன் விபூதியைநீ கையில்வாங்கி
நில்லடா பலகையின்மேல் நிறுத்திமைந்தா
நீமகனே நவகோணம் நன்றாய்ச்செய்யே. (18)

செய்யடா நவகோணம் நன்றாய்ச்செய்து
திர்க்கமுட னதுமேலே விந்துசாத்தி
மெய்யடா நால்வாசல் கோட்டைசெய்து
மேன்மையுள்ள நவகோணம் நடுவைமைந்தா
கையடா தவறாமுக் கோணத்துள்ளே
கருணைபெற வட்டவிந்துக் குள்ளேபோடு
வையடா ஓம்-றீங் கென்றுசாத்தி
மார்க்கமுட னெட்டெழுத்து வகையாய்ச்சாத்தே. (19)

சாத்தியே நவகோணந் தன்னில்மைந்தா
சங்கையுடன் நவகும்பந் தன்னைவாங்கிப்
போத்தியே கும்பமெல்லாம் நூலணிந்து
பூரணமாய் மனமிருத்திச் சவாதணிந்து
பாத்திபனே மாங்குழையுந் தேங்காய்சாத்திப்
பதிவாகக் கும்பமெல்லா மாடைசாத்தி
நேத்திரத்தின் பேரொளியாய் நவகோணத்தில்
நீமகனே கும்பமெல்லாம் நிறுத்திடாயே. (20)

நிறுத்தியந்த நடுவான கும்பந்தன்னில்
நேர்மையுடன் பரித்தகடு நன்றாய்ச்செய்து
கருத்துடனே பரித்தகட்டில் மைந்தாகேளு
கருணைபெற ஓம்-கிலியுங்-கிறி-றீங்-கென்று
திருத்தமுடன் நடுவான கும்பந்தன்னிற்
றிருவான பரித்தகட்டை அதனுட்போட்டு
மருத்திருந்த கும்பமெல்லாஞ் சொர்னபுட்பம்
வரிசையுடன் தானிருத்தி மலர்கள்தூவே. (21)

தூவிநன்றா யமுதரச வர்க்கம்வைத்துச்
சுத்தமுடன் தாம்பூலந் தேங்காய்சாத்தி
ஆவலுடன் நாலுபுறந் தீபம்வைத்து
அன்பாகச் சற்குருவைத் தியானம்பண்ணித்
தேவிபரி பூரணியே யென்றுபோற்றிச்
சிவசிவா நவகும்பந் தனக்குமைந்தா
பாவகமாய்ப் பூசைபண்ணித் தீபதூபம்
பத்தியுடன் சோடசமாய்ப் பூசைபண்ணே. (22)

பூசையென்ன மானதமாய்ப் பூசையாகும்
புத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
ஆசையுடன் செபதவங்கள் தியானஞ்செய்து
அருள்வளர மனதுருக அன்பாய்நீயும்
நேசமுடன் தோத்திரங்கள் நன்றாய்ச்செய்து
நிமலனுட விபூதியைநீ தரித்துக்கொண்டு
பாசபிர தமையுமுதல் நவமிமட்டும்
பத்தியுடன் நவநாளும் பூசைபண்ணே. (23)

பண்ணப்பா நவநாளும் பூசைபண்ணிப்
பரமகுரு சீர்பாதம் பணிந்துபோற்றி
விண்ணப்பா நோக்கிநவ கோணஞ்செய்த
விசையான விபூதியைநீ யெடுத்துமைந்தா
உண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
உடம்பெல்லாந் தூளிதமா யணிந்துகொண்டு
கண்ணப்பா தானோக்கி யுலகோர்க்கெல்லாம்
கருணையுடன் விபூதியைநீ கடாட்சஞ்செய்யே. (24)

செய்யப்பா விபூதியைநீ கடாட்சித்தாக்காற்
சிவசிவா நவக்கிரகத் தோஷந்தீரும்
நையப்பா பண்ணிவிக்குங் குணமுந்தீரும்
நஞ்சான விஷமுதலாய் நாடாதோடும்
வெய்யதொரு பிணிகளெல்லாம் வீறிட்டோடும்
விதமான நோய்களெல்லாங் கதிகெட்டோடும்
கொய்யப்பா வந்தகூத் துவனும்போவான்
குருவான சற்குருவின் பாதம்போத்தே. (25)

போத்துவது குருபதத்தைப் போத்தவேணும்
பூரணமாய் வாலைபதம் பணியவேணும்
பாத்திபனே சுழிமுனையை அறியவேணும்
பதிவான வாசியிலே பதியவேணும்
ஆத்துமத்தின் செயலறிந்து ஆறாதாரம்
அடங்குமந்த நிலையறிந்து வொடுங்கவேணும்
காத்துநிலை தனையறிந்து ஒடுங்கினைக்காற்
கயிலாச தேகமடா தன்னைப்பாரே. (26)

பாரப்பா தன்னைமிகத் தானேகண்டு
    பாதாதி கேசமுதற் பார்க்கும்போது
நேரப்பா நின்றபொரு ளொன்றேசூட்சம்
    நிசமான சூட்சமடா மாயாமாயம்
ஆரப்பா அறிவார்கள் மாயாரூபம்
    ஆதியந்த மாய்நிறைந்த அரூபந்தானும்
மேரப்பா கொண்டுநின்ற விசுவரூபம்
    மேலான சுழிமுனையில் மேவிப்பாரே. (27)

பாரடா சுழிமுனையில் மேவிப்பார்க்கப்
    பராபரமாய் நின்றபரஞ் சொரூபமைந்தா
நேரடா சுழினைமுதற் றுவாதசாந்தம்
    நிறைந்துநின்ற சோதியைநா னென்னசொல்வேன்
மேரடா அண்டகிரி முடியிற்சென்று
    வேதாந்தத் திருநடனங் காட்சிகண்டால்
தூரடா அடிமுடியு மொன்றாய்ப்போகும்
    துலங்குகின்ற சோதிவெகு மாயந்தானே. (28)

மாயமென்ற மாயமடா உலகவாசம்
    மனுநீதி யறியாத உலகத்துள்ளே
தாயகமாய்த் தானிருந்து தன்னைப்பார்த்துச்
    சகலகலைக் கியானதிரு வாசியேறி
காயமென்ற கருவிகளை நிறுத்திமைந்தா
    கருணையுட னுறுதலங் கண்டுமேவி
நேயமுடன் கலையறிந்து தன்னுள்ளேதான்
    ரேசிப்பாய் பூரிப்பாய் கும்பிப்பாயே. (29)

கும்பித்து யீராறு வரைகள்தாண்டிக்
    குருவான பதியறிந்தப் பதியின்மேலே
தம்பித்துச் சந்திரபுஷ் கரணிதன்னிற்
    றானிருந்து தியானசிவ யோகஞ்செய்து
அம்பரத்து வெளியேறி நடனங்கண்ட
    ஆதிகுரு கொங்கணவ ரருளினாலே
தெம்பித்துச் சகலகலைக் கியானஞ்சொன்னல்
    தீர்க்கமுடன் யானறிந்து திரம்பெற்றேனே. (30)

திரம்பெற்ற மகிமையைநா னறிந்துகொண்டு
சிவசிவா யென்றகலைக் கியானந்தன்னை
உரம்பெற்ற சிந்தைபனி ரண்டுபத்தும்
ஒடுக்கமென்ற கலைக்கியான முறுதிசொன்னேன்
வரம்பெற்ற பெரியோர்க ளெடுத்துப்பார்த்து
வலமிடமாய் நின்றகலை வாசியேறி
சிரம்பெற்ற தெளிவதனு லமுதங்கொண்டு
தேவிபரி பூரணியைப் பூசைபண்ணே. (31)

பூசையென்ன மதியமுத முண்ணவேணும்
பூரணமாய்ச் சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
ஆசையுடன் வாசியின்மேல மனதுவைத்து
ஆதார தெரிசனையை அறியவேணும்
ஓசையுட னுதார நடனங்கண்டு
உண்மையென்ற யிடமறிந்து வொடுங்கவேணும்
பாசையென்ற பலபாஷை பதினெண்பாஷை
டயனறிந்து சாஸ்திரத்தைப் பணிந்திடாயே. (32)

பணியவென்றூற் குருபதத்தைப் பணியவேணும்
பரமகயி லாசவரை காணவேணும்
கணியவென்றூல் வாலைபதங் கனியவேணும்
காலான வாசியிற்சென் றேறவேணும்
மணியான மனுேமணியைக் காணவேணும்
மகத்தான சுழிமுனையில் மனக்கண்சாத்தி
அணியான ஆதார சிவாலயத்தை
அங்கமுடன் பூசித்தோ னவனேசித்தன். (33)

சித்தமுட னிந்நூலைப் பாடினுலும்
சிவசிவா நந்தியிடம் செப்பினேன்யான்
சுத்தமுட னவர்பார்த்து மூலர்க்கீய்ந்தார்
சுகமாக மூலர்கா லாங்கிக்கீய்ந்தார்
பத்தியுடன் காலாங்கி போகர்க்கீய்ந்தார்
பரமான போகருமென் குருவுக்கீய்ந்தார்
வெத்தியுள்ள வென்குருவும் நன்றாய்ப்பார்த்து
வேதமே வுலகமெல்லாம் நிறைந்திட்டாரே. (34)

நிறைந்திட்டே னிந்நூலை யுலகத்துள்ளே
நேரறிந்து சொல்லுதற்கு மனம்பேசாது
உறைந்திட்டே னுலகமெல்லாம் நானேநானாய்
உத்தமருக் குண்மையா யுறுதியாகும்
மறைந்திட்ட தெதினாலே யெந்தன்சாபம்
மார்க்கமுடன் தீர்த்தாக்கால் வளருந்தீட்சை
சிறந்திட்ட பூசையினா லதிகமாகும்
சிவசிவா வாலைகற்பந் திறமாயுண்ணே. (25)

உண்ணப்பா வாலைபதம் பணிந்துகொண்டு
உத்தசிவ யோகமதி லுறுதியாக
நண்ணப்பா ஆதார தியானசூட்சம்
நன்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
விண்ணப்பா நோக்கி-ஓம்-கிலி-அங்-கென்று
விநாயகனைத் தியானித்து அப்பால்மைந்தா
கண்ணப்பா நிறுத்தி அங்-கிலி-நங்-கென்னக்
கருணையுடன் பிரமனுட தியானமாச்சே. (36)

ஆச்சப்பா பிரமனுட தியானம்பண்ணி
அதின்பிறகு நங்-கிலி-மங்-கென்றோத
நீச்சப்பா மாலினுட தியானமாச்சு
நிசமாக மங்-கிலி சிங்-கென்றோத
மூச்சப்பா ருத்திரனுட தியானமாச்சு
முனையறிந்து சிங்-கிலி-வங்-கென்றோத
பேச்சப்பா மயேஸ்பரத்தின் தியானமாச்சு
பெருமையுடன் வங்-கிலி யங்-கென்றோதே. (37)

ஓதவே சதாசிவத்தின் தியானமாச்சு
உத்தமனே அங்-கிலி-உங்-கென்றோத
நீதமா மிரவியுட தியானமாச்சு
நிச்சயமாய் உங்-கிலி-அங்-கென்றோதப்
பேதமிலா மதியினுட தியானமாச்சு
பிலமாக அங்-கிலி மங்-கென்றோதச்
சாதகமாய்ச் சுடரினுட தியானமாச்சு
சங்கையுடன் மங்-கிலி-ஓமென்றெண்ணே. (38)

எண்ணவே ஒளியினுட தியானமாச்சு
என்மகனே ஓம்-கிலி-சிறீங்-றீங்கென்று
உண்ணவே பரமவெளி தியானமாச்சு
உறுதியுள்ள வெளியோடே வெளியாய்நின்று
நண்ணவே வெளியோடே ஒளியாய்நின்று
நாடெல்லாம் வெளியேறிப் போகாமற்றான்
துண்ணவே உடலறிந்து கட்டிக்கொண்டு
சோதிமணி வீடதுவே துலங்குவாயே. (39)

துலங்குமணி மண்டபமாம் புருவமத்தி
சோதியென்ற சுழினையடா அண்டமேரு
இலங்கொளிவாய் நின்றபர மேருதன்னில்
இச்சையுடன் சிவசிவா யோகஞ்செய்யக்
கலங்கமில்லா மாதுரதி வாலைதன்னைக்
கருணைபெற அவள்பதத்தைப் பூசைபண்ணிப்
பலங்கனிந்த அமுதரச பானங்கொண்டாற்
பரப்பிர்ம ரூபமதாய் வாழலாமே. (40)

வாழப்பா யின்னமொரு வரிசைகேளு
மகத்தான மாதுரதி தனக்குமைந்தா
ஆழப்பா அமுதரச பானம்மூட்டி
அன்பான உபசார மநேகஞ்செய்து
மேலப்பா களபசந் தனங்கள்பூசி
மெத்தையின்மேற் றானிருத்தி மேன்மையாகக்
காலப்பா தான்பிடித்துக் கமலக்கண்ணிற்
கனிந்துவரு மமுதரச தேனைவாங்கே. (41)

வாங்கிநன்றாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
வள்மையுடன் றான்பொசிக்க இளமையாகும்
ஓங்கிநின்ற வாசியது ஓடாதையா
உறுதியுடன் சுழிமுனையி லுகந்துநின்று
பாங்குடனே சிவயோகம் பதிவாய்நிற்கும்
பதிவாகக் கற்பூர தீபங்காணும்
பூங்கமல மாதுரதி பழக்கத்தாலே
புத்தியுட னெந்நாளும் வாழலாமே. (42)

ஆமப்பா யின்னமொரு பாகங்கேளு
அருள்பெருகும் மாதுரதிக் கன்பாய்நீயும்
காமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுடன் பாலமுது சீனிகூட்டி
ஓமப்பா நிலையறிந்து ஊட்டினுக்கால்
உண்மையென்ற மந்திரகலை யமுதமூறும்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கெங்கைதனை யுண்போரே. (43)

உண்போ ரமுதரச கெங்கைதன்னை
உத்தமனே சத்தியமாய்க் கொண்டாயானாற்
கண்போர் தேகமது ரவிபோற்காந்தி
காணுமடா பூரணத்தின் கலையினாலே
நின்றுபா ரண்டரண்டங் கண்ணிற்றோணும்
நிசமாக வாலைமன் மதன்போலாவாய்
கொண்டதொரு அமுதரச பானத்தாலே
குடியிருப்புப் பிலத்துதடா குருவைக்காரே. (44)

காரப்பா யின்னமொரு கருவைக்கேளு
கற்புடைய மாதுரதி தனக்குமைந்தா
நேரப்பா பருத்திவிரைப் பாலைவாங்கி
நிசமாகச் சர்க்கரையுந் தேனுங்கூட்டிச்
சேரப்பா அதில்விட்டுப் பிசைந்துகொண்டு
சங்கையுடன் யாதுதனைக் கூட்டிமைந்தா
பேரப்பா கொண்டதொரு அமுதங்கொண்டாற்
பேரண்டஞ் சுத்திவரக் கெவுனமாமே. (45)

ஆமப்பா கெவுனரச பானந்தன்னை
ஆத்தாளை யனுதினமும் பூசைபண்ணி
நாமப்பா சொல்லுகிற லகிரியூட்டி
நன்மையுடன் மெத்தைவிரித் தொலுகுபோட்டுத்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கைக்கரணந் தானேசெய்தாற்
காமப்பால் வடிந்தொழுகு மங்கத்தேனைக்
கருணையுடன் பீங்கானில் வாங்கிக்கொள்ளே. (46)

வாங்கியே காமகளைத் தன்னிலேதான்
மகத்தான குங்குமகஸ் தூரிமஞ்சள்
பாங்குபெறக் கோரோசனைப் புனுகுகூட்டிப்
புத்தியுடன் றானரைத்துத் திலதம்போட்டு
ஆங்காரங் கொண்டதொரு மிருகந்தன்னை
அதட்டிநீ பார்க்கவது அசந்துபோகும்
தீங்கான சத்துருக்கள் வசியமாகும்
திருவான லெட்சுமியும் வசமுமாவாள். (47)

வசமான சத்தியடா யென்தாய்தேவி
மகத்தான சோதியடா மாயாரூபி
தேசமான தீட்சையிலே வெளியாய்நின்று
சிந்தைதன்னில் நினைத்தபடி தீர்க்கஞ்செய்வாள்
விசமான கொடுமைகளை யகற்றிநல்ல
மெய்ஞ்ஞான மானசிவ யோகம்பெற்று
நிசமான பூரணமாங் கலைக்கியானத்தை
நீமகனே அந்திசந்தி நினைவாய்ப்பாரே. (48)

பாரப்பா பதியமர்ந்து நினைவாய்ப்பார்த்தாற்
பத்தியுட னுறுதலம் பதிவாய்த்தோணும்
நேரப்பா ஆதார நிலையில்நின்றால்
நிசமான சுழிமுனையிற் றீபங்காணும்
காரப்பா சுழினையிலே தீபங்கண்டாற்
கருணைவளர் சிவயோகங் கைக்குள்ளாகும்
சாரப்பா சிவயோகத் திருந்துகொண்டு
சதாபோத மானசுழி கண்ணைக்காணே. (49)

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணைவளர் சந்திரகலை அகாரமாச்சு
பூணவே பானுகலை உகாரமாச்சு
பொருந்திநின்று சுழினையிலே மகாரமாச்சு
தோணவே மூன்றுதிரு நேத்திரந்தன்னைச்
சுத்தமுடன் றான்பார்க்க யேகமாச்சு
பேணவே யேகமென்ற தன்னைப்பார்த்தாற்
பிலமான ஓங்காரக் கம்பமாச்சே. (50)

ஆச்சப்பா ஓங்காரக் கம்பந்தன்னை
ஆதிமுத லந்தம்வரை பார்க்கும்போது
பேச்சப்பா பேசுதற்கு நாவங்கேது
பிலமான மூலஓங் காரத்தீய்தான்
மூச்சப்பா நிறைந்தகலை வாசியாகி
மூதண்ட அண்டவரை முட்டிநின்ற
போச்சப்பா நாலுகலை பாழேபாய்ந்து
பொருந்துமடா பெண்கலைதான் மூலங்காணே. (51)

காணவே கலைகள்பனி ரண்டுந்தானும்
கடந்துவெளி பாயாமற் றன்னுள்ளேதான்
பூணவே வங்கென்றும் சிங்கென்றுந்தான்
புத்தியுடன் வாசிகொண்டு புருவத்தேகித்
தோணவே தானிருந்து தன்னைப்பார்த்தாற்
சுகசீவ பிராணகலை சுத்தமாகும்
ஊணவே பிராணகலை சுத்தமானால்
உடலைவிட்டு வுயிரிழந்து போகாதென்னே. (52)

போகாத புனலதுதான் மைந்தாமைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் வாசிவாசி
சாகாத காலதுதா னென்னவென்றாற்
சதாபோத மானதொரு நாதமாகும்
வேகாத தலையதுதான் விந்துவிந்து
வேதாந்த மூலமடா ஆர்க்குந்தோணு
வாகாக யிதுமூன்றுந் தன்னுட்கண்டு
மகத்தான சிவயோகம் வலமைபாரே. (53)

வலமையுடன் பூரணமாங் கலைக்கியானத்தை
மகத்தான வாக்கியமென்று மனத்துட்கொண்டு
தலைமையென்று சுழியறிந்து தன்னைப்பாரு
சதாகாலம் பூரணத்திற் சார்ந்துபாரு
இலமையிலே வலுவறிந்து கற்பங்கொள்ளு
இல்லாட்டாற் சள்ளையடா அத்தைநோக்கு
குலமறிந்து நாதமதைக் கண்டுகொண்டாற்
குறியான வாசியது குதிக்காதென்னே. (54)

குதிக்காது உன்னைவிட்டு வாசிதானும்
குறியான நாதவிந்தைக் கொண்டதாலே
மதிக்காதே யென்னவினை வந்தாலுந்தான்
வாசியென்ற அக்கினியில் மடிந்துபோகும்
கெதிக்கான மோட்சமடா வாசியோகம்
கீழ்மூல வன்னியடா மேல்மூலத்திற்
பதிக்கான அமுதமது யிருக்குதப்பா
பாலகனே வாலைபதம் பதிவாய்க்காரே. (55)

சார்க்கவே யாதியந்தம் பிண்டமாகிக்
கருணையுள்ள நாதவிந்து ரூபமாகி
ஏர்க்கவே சத்தாகிச் சித்துமாகி
ஏகாந்த வாசிகுரு மூலமாகித்
தீர்க்கமுள்ள சிவயநம சித்தமாகித்
தெளியாத பொருளாகித் தெளிவுமாகி
பார்க்கவே ஆறெழுத்தாய் நின்றமூலம்
பத்தியுட னோரெழுத்தாய் நின்றவாரே. (56)

வாரான சுழிமூல மறியவென்றால்
மகத்தான ஓங்கார வடிவுமாச்சு
நேரான ஓங்கார வடிவேதென்றால்
நிலையான ரூபமடா பிராணநாதம்
கூரான நாதசத்தி சிவமதாச்சு
குருசத்தி சிவம்உடலு முயிராய்நிற்கும்
பேரான உடலுயிரைக் காணமற்றான்
பேய்க்கூத்தாய் நின்றலைந்து பிலங்கெட்டாரே. (57)

பிலமான அகாரத்தை மூலந்தொட்டுப்
பிசகாமல் உகாரத்தை நடுவிற்சேரு
குலமான மகாரத்தைச் சுழியிலேற்று
குறையாது வாசியது நிலையில்நிற்கும்
தலமான பதியறிசிங் கென்றேரேசி
தன்மையுடன் சுழினையில்வங் கென்றுபூரி
நலமான ரண்டிற்கும் பித்துக்கொண்டு
நாட்டமுடன் ரேசகபூ ரகமாய்நில்லே. (58)

நில்லென்ற நிலையேது மனமங்கேது
நிரஞ்சனமாய் நிறைகின்ற மவுனமேது
சொல்லென்ற சொல்லேது சுத்தமேது
சுத்தமென்ற யிடமேது நரகமேது
வெல்லென்ற வாசிசிவ யோகமேது
வேதசாஸ் திரபுரா ணங்களேது
அல்லென்ற அசைவேதாங் காரமேது
அரகரா ஒன்றுமில்லை வெளிதானுச்சே. (59)

வெளியாக யின்னமொரு கருவைக்கேளு
விபரமுடன் நாற்கோணம் நன்றாய்கீறி
சுழியாக அதினுள்ளே விந்துபோட்டுச்
சுத்தமுட னதினுள்ளோங் காரஞ்சாத்தி
வழியாக அதினுள்நங் கிலீங்நங்கென்று
மார்க்கமுட னெழுதிமஞ்சள் நூலணிந்து
தெளிவாக மானதமாய்ப் பூசைபண்ணிச்
செகத்தோர்க்கு யெந்திரத்தைக் கட்டிப்பாரே. (60)

பாரப்பா யெந்திரத்தைக் கட்டினுக்காற்
பத்தியுடன் சரஸ்வதியும் நாவில்நின்று
நேரப்பா கவித்திரங்கள் பாடிவிக்கும்
நிசமான தேகவச்சிர காயமாகும்
சாரப்பா சகலகலைக் கியானந்தோற்றும்
சகலருமே வசீகரமாய்த் தானேநிற்பார்
தேரப்பா சரஸ்வதியின் கடாட்சத்தாலே
சித்திமுத்தி யாகியவன் ஜெனிப்பான்காணே. (61)

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணையுட னிருகோணம் பிறையுமிட்டுப்
பூணவே பிறையதனுள் விந்துசாத்திப்
புத்தியுடன் ஓங்கார மதனுள்ளிட்டுத்
தோணவே ஓங்காரத் துள்ளேமைந்தா
சுத்தமுடன் மங்கிலிங் மங்கென்றிட்டு
ஊணவே மானதமாய்ப் பூசைபண்ணி
உத்தமனே மானிடர்க்குக் கட்டித்தீரே. (62)

தீர்க்கமுடன் மானிடர்க்குக் குளிசங்கட்டத்
திருவான லட்சுமியும் வசமாய்நின்று
மார்க்கமுடன் சந்தான பாக்கியங்கள்
வரிசையாய்த் தான்வளர்ந்து மகிழ்ச்சியாகி
ஏர்க்கவே இல்லறத்தோ டிருந்துவாழ்ந்து
எல்லோர்க்குந் தானவனு யிருப்பான்கண்டாய்
ஆர்க்குமிவன் நல்லவனு யருளேதங்கி
அதிகசெல்வப் பதியாகி யாள்வான்காணே. (63)

காணப்பா யின்னமொரு கருமானங்கேள்
கைகண்ட சூட்சமுக் கோணமிட்டு
ஊணப்பா ஓங்காரத் துள்ளேமைந்தா
உத்தமனே சிங்கிலியும் சிங்கென்றிட்டுத்
தாணப்பா வென்றசதா சிவனையெண்ணித்
தன்னினைவை யோர்நினைவாய்த் தங்கவைத்துத்
தோணப்பா மானமதாய்ப் பூசைபண்ணிச்
சுத்தமுடன் மானிடர்க்குக் கட்டித்தேறே. (64)

தேரப்பா யெந்திரத்தைக் கட்டினுக்கால்
தீர்க்கமுள்ள ருத்திரன்றன் கடாட்சத்தாலே
வீரப்பா கொண்டதொரு தோஷமெல்லாம்
விட்டகன்று தேகமதில் வினைநில்லாது
நேரப்பா அவனிடத்தில் ஞானசோதி
நின்றுவிளை யாடுமடா நிசமாம்வித்தை
ஆரப்பா அறிவார்கள் பஞ்சசத்தி
அவர்களுட திருநடனத் தாட்டுத்தானே. (65)

தானுக யின்னமொரு சித்துமார்க்கம்
தன்மையுடன் சொல்லுகிறே முண்மையாகக்
கோனுக அறுகோணம் நன்ருய்க்கீறிக்
குறிப்புடனே நடுமையம் விந்துசாத்தி
ஊனுக விந்துளோங் காரமிட்டு
உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
நானுக வங்-கிலி-வங் கிட்டுக்கொண்டு
நன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணே. (66)

பண்ணப்பா மானதமாய்ப் பூசைபண்ணிப்
பத்தியுட னெந்திரத்தைக் கடாட்சித்தாக்கால்
விண்ணப்பா நிறைந்தமயேஸ் பரியினாலே
மெய்நின்ற தோஷமெல்லாம் விலகிநல்ல
உண்ணப்பா வாசியது உறுதியாகும்
உத்தமனே தேகமது வலுவுண்டாகும்
கண்ணப்பா தான்துலங்கிக் கருணைதங்கும்
கருணையுடன் சிவயோகங் கருத்தொன்றாமே. (67)

ஒன்றாடச் செய்தியைத்தான் சொல்லக்கேளு
உத்தமனே விந்தெழுதி விந்துக்குள்ளே
நன்றாட ஓங்கார மதனுட்போட்டு
நாட்டமுடன் ஓங்காரத் துள்ளேமைந்தா
நின்றாட அங்கிலி உங் கென்றுசாத்தி
நீமகனே மானதமாய்ப் பூசைபண்ணிச்
சென்றாட் யெந்திரத்தை மானிடர்க்குத்
தெளிவாகக் கட்டினதாற் றீர்க்கமாமே. (68)

தீர்க்கமென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு
திருவாகும் பராபரியின் செயலுண்டாகும்
மார்க்கமுடன் கனபவுசு மக்கள்சூழும்
மகத்தான யோகமுடன் வாகனங்கள்
சேர்க்கைபல கழனிநவ தானியங்கள்
சேங்கன்று பசுமாடு சிலதுண்டாகும்
ஆர்க்குமே அவனிதனி லதிகமேன்மை
அன்பான மனோன்மணியா ளருள்தன்னாலே (69)

அருளான கருமானஞ் சொல்லக்கேளு
அங்கமுடன் நவகோணம் நன்றாய்க்கீறிப்
பொருளான நடுமையம் முக்கோணத்திற்
பூரணமாய் விந்தெழுதி விந்துக்குள்ளே
உருவான ஓங்கார மதனுட்சாத்தி
உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
திருவான செயலதினாற் சிங்சிங்கென்று
சித்தமுடன் தானெழுதத் தீர்க்கமாமே. (70)

தீர்க்கமுடன் சக்கரத்தை முன்னேவைத்துச்
சிவசிவா மானதமாய்ப் பூசைபண்ணு
மார்க்கமுடன் மானிடர்க்குக் கட்டினுக்கால்
வஞ்சனைகள் பில்லிமுதல் யேவல்தோஷம்
மூர்க்கமுள்ள கண்ணேறு கிரகதோஷம்
முன்னாளிற் செய்ததொரு பாவமெல்லாம
சேர்க்கையுள்ள நவக்கிரக குளிசத்தாலே
தீருமடா கலைநின்ற நிலையைப்பாரே. (71)

நிலையறிய மாட்டாம லுலகமாந்தர்
நெடுந்தூரஞ் சென்றுகுரு பரனைத்தேடி
மலையேறிச் சடைவளர்த்து மதியுங்கெட்டு
வாழுமிடந் தனையறியா மாண்பர்தானும்
தலைகெட்ட நூல்போலே பின்னலாகித்
தத்தளித்துக் கெட்டவர்கள் கோடாகோடி
அலையாம லடிதொழுது முடிமேலேறி
அம்பரத்தைக் கண்டுநட மாடினாரே. (72)

ஆடியதோர் பரனாட ஆத்தாளாட
அண்டரொடு தேவர்முதல் ரிஷிகளாடப்
பாடியதோர் தோத்திரஞ்சே கண்டிநாதம்
பருமணியுஞ் சங்கினொலி தீபதூபம்
தேடியதோர் சிவகணங்கள் தாளம்போடச்
சிலம்பொலியுங் கலகலென்னச் சிவனுமாட
நாடியதோர் பூரணமும் நானுமாட
நன்மையுடன் நானாட நீயுமாடே. (73)

நீயென்றும் நிலையத்துச் சொல்லுமத்து
நினைப்பதுவு மறப்பதுவு மிரண்டுமத்து
மாயையென்ற மயக்கமொடு தியக்கமத்து
வஞ்சனைகள் பொய்களவு மாயமத்துத்
தாயென்றும் பிள்ளையென்றும் பெண்டீரென்றும்
சங்கையென்ற வுறவத்துத் தயவுமத்துக்
காயென்றும் பழமென்றுங் கர்மமத்துக்
கருணையுடன் ருனிருந்து துலங்குவாரே. (74)

துலங்கியதோர் பூரணமாங் கலைக்கியானத்தைச்
சொல்லறிவுக் கறியாதார்க் கீயவேண்டாம்
இலங்கியதோர் சிவயோகி மவுனயோகி
இல்லறத்தோ டேவாழும் பரமயோகி
விலங்கியதோர் தபோதனருக் கீயவேணும்
விடந்தனையே தருங்குறும்பர்க் கீய்ந்தாயானால்
கலங்கிமனம் தான்வெந்து மயங்குமென்று
கமலமது தானறியக் கடாட்சித்தேனே. (75)

சித்தான மந்திரமாஞ் சித்துஞ்சொன்னேன்
சிவசிவா மூலிகையின் சித்தைக்கேளு
முத்தான மூலியடா குப்பைமேனி
மிளகுடனே இலைபறித்துக் கொண்டாயானாற்
சுத்தான சுரமுடனே யிளைகாசம்
சுருக்காகத் தீருமடா சுத்தமாக
வித்தான மூலமதில் மனதைவைத்து
வேதாந்தக் குருபதியில் மேவிச்செல்லே. (76)

முருங்கை.
செல்லப்பா பட்டையுடன் வெள்ளைப்பூடு
திறமான மிளகுடனே மூன்றுங்கூட்டிக்
கொல்லப்பா தானரைத்துக் கொண்டாயானாற்
குடிலமென்ற கிரந்திமுதற் சொறிசிரங்கு
மல்லப்பா வயிற்றுவலி குன்மரோகம்
வாதபித்த சிலேத்துமத்தால் வருவதென்பார்
வெல்லப்பா மகோதரமும் பெருநோயெல்லாம்
விட்டகன்று போகுமென்று விளம்பினேமோ. (77)

விளம்பெறவே யின்னமொரு கருமானங்கேள்
வெள்ளெருக்கின் வேரினுட பட்டைவாங்கி
வளம்பெறவே ஊடுசுலின் பட்டைகூட்டி
வாட்டமுட னிருவகையு மாவதாக்கி
உளம்பெறவே வெருகடிமா தேனிற்கொள்ள
உத்தமனே பதினெட்டுக் குட்டந்தீரும்
தளம்பெறவே விஷகடிக ளெல்லாந்தீரும்
தன்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணே. (78)

பண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
    பத்தியுடன் பூரணத்திற் பதிவாய்நில்லு
கண்ணப்பா தானறிந்து மனக்கண்கொண்டு
    கருணையுடன் சாஸ்திரத்தைக் கனிவாய்ப்பாரு
உண்ணப்பா வாசியிற்சென் றிருந்துகொண்டு
    உத்தமனே சிவயோகம் உன்னிப்பாரு
விண்ணப்பா தானோக்கி மனக்கண்கொண்டு
    வேதாந்தச் சுழிமுனையில் மேவிநில்லே. (79)

நில்லந்த நிலைதனிலே நின்றுகொண்டு
    நேசமுடன் வாசியுட நிலையைப்பற்றிச்
செல்லந்தப் பூரணத்தில் நின்றாயானாற்
    சிவசிவா சிலம்பினுட நாதங்கேட்கும்
கொல்லந்த நாதமடா குமரிகற்பம்
    குறியறிந்து கற்பமதைக் கொண்டாயானால்
உல்லந்த மானசிவ சோதிசூட்சம்
    உறுதியுள்ள சூட்சமடா வுரைக்கொணாதே. (80)

ஒண்ணான மனதையல்லோ காக்கவேணும்
    உத்தமனே சற்குருவைக் காணவேணும்
கண்ணான வொளியல்லோ பிர்மரூபம்
    கற்பமுண்டு பூரணத்து ளிருக்கவேணும்
பண்ணான பலநூலைப் பார்க்கவேணும்
    பரமான போதையிலே பணியவேணும்
விண்ணான அமுதத்தை யுண்ணவேணும்
    வேதாந்த சாஸ்திரத்தி னுண்மைகேளே. (81)

உண்மையென்ற சிவயோகம் சொல்லக்கேளு
    உறுதியுள்ள சிவகலை நாதனப்பா
வெண்மையென்று வந்ததுதான் அகாரபீடம்
    வேதாந்தக் குருவிருந்தாற் சுழினைக்குள்ளே
தண்மையென்று தானிருந்த உகாரபீடம்
    சார்ந்தங்கு தானிலங்கும் மகாரபீடம்
நன்மையென்ற குருபரன்றன் வொளிபோற்காணும்
    நாதாந்தம் பெற்றவர்கள் சாதித்தாரே. (82)

சாதிக்கும் சிவயோகந் தன்மைகேளு
சங்கையுடன் சொல்லுகிறே னப்பாசிக்க
வேதிக்கும் அன்னமரை வயிறுபுண்ணு
வெண்ணீருங் கால்வயிறு மதுபோற்காலி
பேதிக்கும் பொருமலமும் அபானவாயிற்
பிலக்கவே யிறுக்காதே ஜலத்தைமைந்தா
போதிக்கும் படுக்கையடா யிடக்கைகீழாய்ப்
புறளாம லுறங்குசா தகந்தானெண்ணே. (83)

எண்ணப்பா விந்துதனை யிகழவேண்டாம்
எடுத்ததெல்லாம் மனதாசை கொள்ளவேண்டாம்
நண்ணப்பா அபீனரக்குக் கொள்ளவேண்டாம்
நாதாந்தக் கற்பமதைக் கொள்ளும்போது
உண்ணப்பா லகிரியிலே வாழவேண்டாம்
உண்மையென்று கஞ்சாவை யுணரவேண்டாம்
முண்ணப்பா நாதகற்பங் கொண்டதெல்லாம்
மோசம்வந்து போகாம லுத்துப்பாரே. (84)

உத்திகொண்டு யிப்படியே நடந்தாயானால்
உண்மையென்ற சிவயோகம் உரைக்கும்பாரு
புத்திகொண்டு சரியையொடு கிரியையோகம்
பூரணமாய் ஞானமொடு நாலுமைந்தா
வெத்திகொண்ட சரியையென்ற குணத்தைக்கேளு
வேதாந்தத் தேகமப்பா நாதத்தாலே
முத்திகொண்ட வாயுவுட விசையினாலே
மூன்றுலக முண்டாச்சு சரியைவாழ்வே. (85)

சரியையிலே கிரியையுட குணத்தைக்கேளு
தயவான விந்துவினாற் றேய்வும்வாய்வும்
உரிசையிலே சாதிலிங்க பீடமாச்சு
உண்மையென்ற யோகத்தி னுறுதிகேளு
வரிசையாய் விந்துவுட நாதங்கூட்டி
மகத்தான தத்துவமாய்த் தேகமாச்சு
கரிசனமாய் ஞானத்தின் கருவைக்கேளு
கருணையுள்ள கணபதியுந் தெய்வந்தானே. (86)

தானென்ற கணபதியே பஞ்சபூதம்
தன்மையுடனேபிறப்பால் நின்றஞானம்
ஊனென்ற கணபதியே ஆண்பெண்ணாகி
உறுதியுடன் நடனமொடு பிண்டமானார்
நானென்ற கணபதியே குருவாமென்று
நன்மையுடன் பூரணத்தைக் கண்டோரில்லை
வானென்ற கணபதியே வகையேழாகி
மகத்தான யோனிநால் தோற்றந்தானே. (87)

தானென்ற ரவிமதியே சுழினைக்குள்ளே
தன்னாட்டம் விண்ணாட்டாம் விசையினாட்டம்
கோனென்ற நாட்டமதைக் குறியாயெண்ணிக்
குவிந்துநின்ற நாதமதால் வாசியோகம்
வானென்ற ஞானத்தின் யோகங்கேளு
மகத்தான நந்தியல்லோ மூலத்தீயிற்
றேனென்ற இசைநாத வடிவாய்நிற்கும்
சிவசிவா மூக்குநுனி தெளிவாய்ப்பாரே. (88)

தெளிவான யோகத்தின் குணமுஞ்சொன்னேன்
சிவசிவா முப்புரத்தின் செயலுஞ்சொன்னேன்
ஒளிவான புருவமையத் தமருக்குள்ளே
உண்மையென்ற வாசிசிவ யோகஞ்சொன்னேன்
அழியாத பேரின்ப மோட்சஞ்சொன்னேன்
அருள்பெருகுங் கலைக்கியான கற்பஞ்சொன்னேன்
நெளியாமல் நிற்பதற்கு நிலையுஞ்சொன்னேன்
நிலையறிய ஞானபூ ரணமுஞ்சொன்னேன். (89)

சொன்னதொரு சூட்சமென்ன ஞானமென்ன
சுகமான வாசியென்ன யோகமென்ன
விண்ணதிலே கண்டதொரு சோதியென்ன
வேதமென்ற நாதாந்த விலாசமென்ன
ஒண்ணதிலே ரண்டென்ன ஆண்பெண்ணென்ன
ஒருகோடி மந்திரத்தி லுண்மையென்ன
கண்ணதிலே கண்டதெல்லாம் மாயாமாயம்
கருவறிந்து பார்த்ததெல்லாங் கதையாய்ப்போச்சே. (90)

போச்சென்று நினையாதே தன்னைப்பாரு
பூரணமுங் காரணமும் பொருந்தியொன்றாய்
நீச்சென்ற நிலையறிந்து நீஞ்சினாக்கால்
நெடுந்தூரஞ் சென்றுவிளை யாடலாகும்
மூச்சென்ற வாசியினால் முழங்குஞ்சத்தம்
முன்னேறிப் பாயுதடா முதுகண்வெள்ளம்
ஆச்சென்ற வெள்ளமடா இடைகாலூடே
அமர்ந்துவருங் கெங்கையைநீ அறிவாற்கொள்ளே. (91)

அறிவான அறிவதனால் முக்கண்பார்த்து
ஆதியென்ற மணியதனை அங்கையுண்டு
குறியான அரவுபட மணியைமைந்தா
குணமறிந்து மனம்பொருந்திக் கூர்மையாக
நெறியாகத் தானிருந்து நெருடினாக்கால்
நேரறிந்து சாரையொன்று கீழேபாயும்
சரியாகப் பாய்கிறதோர் வேலைபார்த்துச்
சங்கையுடன் தன்வாயா லுருஞ்சிவாங்கே. (92)

வாங்கிமிக வாசியினா லுருஞ்சிவாங்க
மகத்தான நாதமென்ற வழலைப்பாம்பு
ஓங்கியே வழியாக முதுகண்ணாலே
ஓடிவரு மந்நேர முருஞ்சிக்கொள்ளும்
பூங்கமல மாதுபதம் பணிந்துபோற்றிப்
பூரணமா யெந்நாளும் பூசித்தாக்கால்
ஆங்கெதிகொண் டெந்நாளும் வாழ்வாய்மைந்தா
அன்பான வாலைபத மறிவாய்ப்போத்தே. (93)

போத்தியே யிப்படியே மவுனமூலம்
பூரணமாய்க் கண்டவர்க ளொருவரில்லை
வாத்தியே மவுனத்தை யாருஞ்சொல்லார்
மகத்தான குருச்சொல்ல அறியவேணும்
நாத்திசையும் வெற்றிகொங் கணர்தான்வந்து
நலமான கடைப்பிள்ளை யென்றுமீய்ந்தார்
சாத்தியதோ ருட்தேசப் படியேயானும்
சங்கையுடன் ஓம்-அங்-உங் மங்கென்றஞ்சே. (94)

அஞ்செழுத்தும் மூன்றதிலே அடங்கிப்போச்சே
அரகரா மூன்றுமோங் காரமாச்சு
விஞ்செழுத்தை அறியாத நெஞ்சத்தோரே
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் வினவிப்பார்க்கப்
பஞ்செழுத்தைப் பார்த்தவரே கிரியாயோகம்
பார்தனிலே மேலான ஞானியாவன்
செஞ்சொல்முறை வேதமெனக் கண்டேனையா
செம்மையுடன் றானிருந்து சிவமேயெண்ணே. (95)

எண்ணவே யிடகலைதான் அகாரமாச்சு
இன்பமுள்ள பிங்கலைதான் உகாரமாச்சு
உண்ணவே சுழினையது மகாரமாச்சு
உத்தமனே கண்ணொளிதான் விந்துநாதம்
முன்னமே ஆதியிலே முளைத்தசத்தம்
மூவுலகந் தானறிந்து முளைத்ததையா
சொன்னபடி விழிப்பறிந்து பார்த்தாயானாற்
சோதிசிவ சூட்சமடா சொல்லக்கேளே. (96)

கேளப்பா கண்டதெல்லா மழிந்துபோச்சு
கேள்வியென்ன ஒளிவெளியே நிசமதாச்சு
வாளப்பா அரூபமென்ன சுழினைகாந்தி
மக்களே சுழினையிலே மனதையூணு
வேளப்பா நிற்குணமே துவாதசாந்தம்
மெய்யான நிற்குணமே மூலசூட்சம்
ஆளப்பா நிற்குணமே ஒளிதான்தேகம்
அப்பனே கத்திநடு ஆடும்பாரே. (97)

ஆடுமடா ஓங்கார வாளின்கூர்மை
அரகரா வேதாந்த மானதேகம்
நாடுமடா பூரணத்தை நாடிநாடி
நலமான சுழினையிலே நாடிப்போச்சு
ஓடுமடா ஓட்டம்பூ ரணத்தினோட்டம்
உத்தமனே அண்டபகி ரண்டத்தாட்டு
பாடுமடா ஓசைபரா [illegible]ரையின்நாதம்
பத்திகொண்ட சித்தமதின் மோட்சம்பாரே. (98)

பாரப்பா மோட்சஞ்சின் மயத்தைக்கண்டாற்
 பதிவான சிவயோகம் ஞானமாச்சு
தேரப்பா ஞானியென்றால் ஜடத்தைப்பேணுன்
 சிவசிவா ஜீவநிலை யறியமாட்டான்
காரப்பா சித்தன்கற் பத்தோடொன்றிக்
 கைலாச பாசமதாய்க் கருதிவாழ்வான்
நேரப்பா கற்பமதை வுண்டுதேறி
 நிசமான வாசியிற்சென் றிருப்பான்றானே. (99)

தானான தானவனாய் நின்றுவாழ்வான்
 சதாகோடி நாளுமொரு நாளாய்நிற்பான்
ஊனான காயாதி கற்பமெல்லாம்
 உண்டுகரை யேறியவ னுறுதியாவான்
வானான அண்டபகி ரண்டமெல்லாம்
 வரைகடந்து திரையகற்றி வந்துசேர்வான்
தேனான மொழியுடையா ளமுதுபானம்
 தினந்தோறுங் கொண்டவனே சித்தனாமே. (100)

ஆமப்பா வாலையுட தீட்சைதன்னை
 அருள்பெருகச் சற்குருவி னிடமேகேட்டு
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
 சங்கையுடன் பூரணியைப் பூசைபண்ண
நாமப்பா அவளாகு மவள்நானாகும்
 நாட்டமுட னறுபதுக்குட் சித்தியாகும்
ஓமப்பா அறுபதுக்குள் மேலேமைந்தா
 ஊணுறுதி காலுறுதி உழன்றுபோமே. (101)

உழன்றுசெடம் போகாமற் காத்தோன்சித்தன்
 உண்மையென்ற வாசிகண்டா லவனேயோகி
குழன்றுமனம் போகாமற் காத்தோன்ஞானி
 குறியறிந்து கொண்டவனே கெவுனியாகும்
அழன்றுசெகந் தனைமறந்து அகந்தைபேசி
 அம்பரத்தைக் காணாமல் ஐயோவென்று
தழன்றுகெதி அறியாத மூடரோடே
 தானிருந்து பேசாதே தன்னைக்காணே. (102)

காணப்பா பூரணமாங் கலைக்கியானத்தைக்
　　கருத்துறவே தான்பார்த்துக் கலைகொண்டேறி
ஊணப்பா போம்வாய்வு சிவமதாகும்
　　உள்ளுணர்ந்த வாய்வதுமே சத்தியாகும்
பேணப்பா ரெண்டையுமே ஒன்றுபண்ணிப்
　　பிண்டமுதல் அண்டவரை கொண்டாயானாற்
பூணப்பா பொற்கமலந் தன்னிமேலதான்
　　பூரணமா மமுதநடம் பொங்கும்பாரே. (103)

பாரப்பா பதியறிந்து புருவத்தேகிப்
　　பதிவான கண்ணின்மலர்க் கண்ணுமேலதான்
நேரப்பா வளிந்தொழுகுஞ் செந்தேன்தன்னை
　　நிசமாக அணுவளவு கொண்டாயானால்
ஆரப்பா உனக்கீடு ஆருமில்லை
　　அமுதரசந் தான்கொடுத்த ஆத்தாள்தன்னை
வீரப்பா கொண்டுமதி கெட்டாயானால்
　　விண்ணிடிந்து தலைதெறிக்கும் மெய்தான்பாரே. (104)

மெய்யாகச் சொல்லுகிறேன் மெய்யும்பொய்யும்
　　விளங்குதடா உலகத்தி லதினால்மைந்தா
பொய்யாகப் போகுதடா மனிதர்வாழ்வு
　　பொய்யகற்றி மெய்யாக யிருந்தானால்
கையாறக் கண்டபலன் மெய்யாய்நிற்கும்
　　கண்ணறிந்து பாவமதைச் செய்யவேண்டாம்
ஐயாகே ளறிவுவந்து பாவஞ்செய்தால்
　　அவன்தலையைக் காக்குமடா அறிவாய்க்கேளே. (105)

கேளப்பா அஞ்சான வயதுதன்னிற்
　　கெருவமுடன் செய்ததொரு பாவமெல்லாம்
சூளப்பா தாயிடமே சேருங்கண்டாய்
　　சுத்தமுடன் பத்தான வயதுதன்னில்
வேளப்பா செய்ததொரு பாவமெல்லாம்
　　மெய்யாகத் தகப்பனிடம் மேவும்பாரு
ஆளப்பா பதினஞ்சாம் வயதுதன்னில்
　　அவன்செய்பா வங்குருவுக் காகுங்காரே. (106)

கார்க்குமடா பதினாறு வயதுதன்னிற்
கருத்துறவே செய்ததொரு பாவந்தானும்
ஏர்க்குமடா தெய்வமது காத்துக்கொள்ளும்
என்மகனே பதினாறு வயதுக்கப்பால்
தீர்க்கமுடன் செய்ததொரு பாவமெல்லாம்
சிவசிவா செய்தவனைக் காக்கும்பாரு
மார்க்கமுட னிதையறிந்து அறிவுகொண்டு
மகத்தான புத்தியினால் வாழ்வாய்பாரே. (107)

பாருமப்பா பகுத்தறிவு வந்தபோது
பாழான கொடுமைகளைச் செய்வாயானாற்
சேருமப்பா பாவமெல்லா மவனைக்காத்துச்
சீக்கிரத்தில் நரகமதைச் சேர்வானையோ
காருமப்பா சத்தியத்தைக் காக்கவேணும்
கருணையுடன் செபதவங்கள் செய்யவேணும்
நேருமப்பா நிலையறிந்து குருவைத்தேடி
நித்தியமுஞ் சுழிமுனையை நேர்ந்துநில்லே. (108)

நில்லப்பா வாசிதிரு வாசியேறி
நின்றதொரு பூரணமாங் கலைக்கியானத்திற்
செல்லப்பா சென்றிருந்து வாசியோகம்
தீர்க்கமுடன் நிலையறிந்து கொண்டாயானால்
அல்லப்பா உள்வெளியாய் நின்றவாசி
அடங்குமடா யிருதயத்தி லதுதான்போதம்
சொல்லப்பா சொல்மொழியை மறவாமற்றான்
சுருதியுடன் நாதமதில் வாழ்வாய்காணே. (109)

காணவே யின்னமொரு சூட்சங்கேளு
கருணையுடன் வாலையைநீ பூசைபண்ணி
தோணவே யெச்சாதி யானாலென்ன
சுந்தரமாய் நின்றதொரு வாலைதன்னைப்
பூணவே பூரணமாய்த் தொழுதுபோற்றிப்
புத்தியுடன் மனதுவர நடந்துகொண்டு
ஊணவே அமுதரச வர்க்கமீய்ந்து
உகந்துமன முருகிடநீ பூசைபண்ணே. (110)

பண்ணப்பா வாலைபதம் பூசைபண்ணிப்
பத்தியுடன் தானிருந்து வரும்போதையா
பெண்ணப்பா தன்னையுமே அறியுங்காலம்
பிரியம்மீ ரீட்டியா பரணம்பூட்டி
நண்ணப்பா சுகந்தமுடன் கவளமீய்ந்து
நாதாந்தப் பூரணிக்குத் தாம்பூலங்கள்
உண்ணப்பா தானீய்ந்து மகிழ்ச்சியாக
உத்தியுடன் சூதமதில் ரசத்தைவாங்கே. (111)

வாங்கியே பூரணமாய்ப் பூசைபண்ணி
மாதவமாய்ச் சிவயோக வாழ்க்கையானாற்
பூங்கமல மாதுசெயல் தன்னாலந்தப்
பூரணமுங் காரணமும் பொருந்திநன்றாய்
ஓங்காரக் கம்பமதி லூறியானால்
உண்மையுட னெந்நாளும் உகந்துவாழ்வாய்
சாங்கமதாய் தனையறிந்து சுழியில்நின்றாற்
சதாபோத மானசிவ யோகமாமே. (112)

ஆமப்பா சிவயோகத் திருந்துகொண்டு
அருமையுடன் வாலைபதாம் பூசைபண்ணிக்
காமப்பா லமுதரசங் கொண்டாயானாற்
கருணையுடன் நாதாந்தத் தேகமாகும்
நாமப்பா சொன்னபடி யறிந்துகொண்டு
நாதாந்தப் பூரணமாங் கலைக்யானத்தைத்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
தன்மையுடன் பூசித்துத் தன்னைப்பாரே. (113)

தன்னைத்தா னறியாத மூடர்தானும்
தாரணியிற் பலவேடந் தானேபூண்டு
விண்ணைத்தா னறியாத மூடர்மெத்த
வேணபடி சாஸ்திரத்தை விரும்பிப்பார்த்து
உண்ணத்தா னறியாம லுழன்றுகத்தி
ஊர்வழியே நாய்போலே உருமிக்கொண்டு
கண்ணைத்தான் விண்ணிழந்து காக்கமாட்டார்
கழுதைகளைக் கண்டாக்கா லடித்துத்தள்ளே. (114)

அடியறிந்து முடிமீதில் நிற்கவேணும்
ஆசைகொண்டு சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
முடியறிந்து மோனநிலை காணவேணும்
முத்திபெறச் சிவயோகத் திருக்கவேணும்
பிடியறிந்து சுதிர்மதியிற் சேர்க்கவேணும்
பிங்கலையு மிடகலையுந் தெரியவேணும்
வடிவறிந்து வாலைபதங் காணவேணும்
மகத்தான சிவயோக வளமைகாணே. (115)

காணவே பூரணமாங் கலைக்யானத்தைக்
கருத்தறியா மாந்தருக்கு யீயவேண்டாம்
தோணவே ஆதாரஞ் சொல்லவேண்டாம்
சுத்தமுடன் வாசிநிலை காட்டவேண்டாம்
ஊணவே ஆதியந்தம் பொருளைநீயும்
உற்றிருந்து ரகசியங்கள் பேசவேண்டாம்
பூணவே தன்னறிவைத் தானேகண்டு
புத்தியுடன் சித்தமதாய்ப் பொருளைப்பாரே. (116)

பாரப்பா பொருளறிய வேணுமென்றாற்
பதிவான சற்குருவைக் காக்கவேணும்
நேரப்பா நினைவையொரு நினைவாய்வைத்து
நிலைபெறவே தலமறிந்து நீயும்நன்றாய்ச்
சாரப்பா சார்வறிந்து குருவைமேவிச்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
மேரப்பா அண்டாண்ட முடிவிற்சென்று
மெய்யான அக்கினியில் மேவிநில்லே. (117)

நில்லப்பா அக்கினியே வாசமாகி
நேமமுடன் நித்தியா னுஷ்டானங்கள்
செல்லப்பா விடியவொரு சாமந்தானும்
சிவசிவா வேளைரிஷி யாணவேளை
நல்லப்பா அவ்வேளை தனிலெழுந்து
நாட்டமுட னாதார தியானம்பண்ணி
அல்லப்பா உதயாதி உச்சிநேரம்
அனுசரிப்பாய் சிவயோகம் அன்பாய்த்தானே. (118)

தானேநான் அவனுய் நிற்கவேணும்
  தன்மையுடன் குருபதியிற் சாரவேணும்
வானேதான் கெதியெனவே வாசியேறி
  மந்திரபஞ் சாட்சரத்தில் மனதுகூர்ந்து
கோனேதான் தானாக அந்திசந்தி
  குறியறிந்து ஆதார நிலையில்நின்று
ஊனேதான் தானாக உறுதிபெற்று
  ஓமுடிந்த பட்டணத்தி லொடுக்கமுற்றே. (119)

முத்தான பூரணமாம் கலைக்யானத்தை
  முனையறிந்து பன்னிரண்டு பத்தும்சொன்னேன்
பத்தான வய்தைநா னறிந்துகொண்டு
  பன்னிரண்டு பத்ததையுங் குறுக்கிமைந்தா
சுத்தான சோலியென்று அறுபதுக்குட்
  சுருக்கிவைத்துச் சூஸ்திரத்தைச் சுகமாய்ப்பார்த்துச்
சித்தான சித்தெடுத்து வெத்திகொண்டு
  சிவசிவா சிதம்பரத்திற் றெளிவாய்முற்றே. (120)

கடைப்பிள்ளைக் கலைக்கியானம் ௱உ௰,

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ந.ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

எழுபத்துநான்காவது:

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஞான தீட்சாவிதி ௰௬.

ஆதியந்த முங்கடந்து வெளியுந்தாண்டி
    அகண்டசச்சி தானந்தத் தப்பால்ஞானம்
ஓதியந்த மாகியெங்கும் நிறைந்தேதாளுய்
    ஒளியான புலத்தியன்றன் பாதம்போற்றி
நீதியந்தப் பூரணமாந் தீட்சைதன்னை
    நிச்சயமா யோதிரா மயத்தினுள்ளே
வீதியந்த மான அறு கோணத்துக்கும்
    விநாயகனுய் முன்னிருந்த விதியேகாப்பு.

ஆனந்த மானசிவ நந்திமூலர்
    அருள்பெருகுங் குருமுனிகோ ரக்கநாதர்
தானந்த மாமச்சர் கொங்கணற்குத்
    தாயான போகரிடைக் காடரோடு
வானந்த மாகும்புண் ணாக்குச்சித்தர்
    வாசமுனி கமலமுனி சண்டிகேசர்
கானந்த சுந்தரா னந்தர்பிர்மர்
    கயிலாசச் சட்டைமுனி பாதந்தானே. (1)

தானென்ற கருவூரார் கொங்கணற்குச்
    சமர்த்தான உரோமருட பாதந்தன்னை
நானென்ற ஆணவமும் மலங்கள்போக்கி
    நாயடியேன் சிரத்திலுங்கள் பாதந்தானும்
வானென்ற வெளிகடந்து மவுனத்துள்ளே
    வைத்துபதே சித்த[illegible] தீட்சைதன்னைப்
பானென்ற இரவிமதி சுழி[illegible]
    பாடுகிறே னாறுமுக மஞ்சிற்[illegible]ன. (2)

அஞ்செழுத்தி லாறான சூட்சந்தன்னை
அறைகிறே னன்புடைய அறிவுள்ளோர்க்குப்
பிஞ்செழுத்தாய்ப் போகாமற் பிஞ்சிற்பூத்துப்
பிலமாகி யுட்புகுந்து தீட்சைகண்டால்
வஞ்செழுத்துப் புருவநடு விருந்தவுண்மை
மவுனமுட னுமைபுரு வாகிவந்து
கொஞ்செழுத்தாய் நின்றபொறி யெழுத்துட்பாய்ந்து
கும்மென்ற இருள்நீக்குஞ் சுவாசந்தானே. (3).

வாசமென்ற சுவாசமதாய் வந்தமூலம்
வலமிடமாய் மாறியெழுந் தந்தத்துள்ளே
நேசமென்ற பன்னிரண்டாய்ப் பிரிந்துநாலும்
நேர்நிரையி லெட்டுநா லாகிநின்று
பாசமென்ற எட்டுள்ளாய்ப் பிரிந்துநாலும்
பரமாகி அவ்வெளியிற் பாய்ந்துவோடும்
வீசமென்ற எழுத்தாலே எட்டிற்சேர்ந்து
விண்ணொளியைக் கண்ணொளியால் மேவிக்காணே. (4)

காணப்பா யிதுவழியே தீட்சைசொல்வேன்
கங்கென்ற நந்திதிரு மூலர்தீட்சை
பூணப்பா போகருட தீட்சைசங்கம்
பொருந்துமுக மொன்றாகி ரெண்டிற்கேளு
நாணப்பா குருமுனிக்குத் தீட்சைஒவ்வாம்
ஞானமுள்ள கொங்கணர்க்குச் சுழிமூன்றாகும்
பேணப்பா சட்டைமுனி டகாரந்தானைப்
பேறுபெற்றார் மூன்றுமுகந் தன்னிற்கேளே. (5)

கேளடா சுந்தரற்கு ணகாரமாகிக்
கிருபைதருந் தகாரமடா சண்டிகேசர்
ஆளடா கருவூரார் பகாரத்துள்ளே
ஆகிநின்றார் நானன்கா முகத்துக்குள்ளே
வாளடா பிரமமுனி மகாரத்துள்ளாய்
வாழுகின்ற ரோமரிஷி ரகாரந்தானைச்
சூளடா அவ்வெளியில் அகாரஞ்சாயச்
சூட்சமாய் நின்றபஞ்ச முகத்துட்பாரே. (6)

பாரப்பா அஞ்சான முகத்துக்குள்ளே
பதிந்திருந்த லகாரமடா புண்ணாக்கீசர்
நேரப்பா வகாரத்தி லிடைக்காட்டார்தான்
நேரான கோரக்கர் முகாரதீட்சை
மாரப்பா ஆறான முகத்துக்குள்ளே
மவுனவெளி யுள்நிறைந்த வாசலுக்குத்
தேரப்பா றகாரமடா தீட்சையாகி
செழுங்கமல முனிவகர மிளமைதானே. (7)

இளமையென்ற கயிலாச ரழுகண்ணிக்கு
எனஞ்சேர்ந்தா னிருசுழியில் நாதமாகி
பளமையென்ற ஆறுமுகச் சடாட்சரத்துள்
பதிந்திருந்தார் மும்மூன்று யறுகோணத்துள்
களமையென்ற கோளறுத்து வெளியில்நின்றார்
கண்டுகொண்டு தெரிசிப்பாய் தன்னுட்டாலும்
உள்மையென்ற பதினெட்டுள் ளூறவுமாக
உரைத்திட்டேன் தீட்சைபதி னெட்டுந்தானே. (8)

தானென்ற பதினெட்டுள் பதினேழ்சொன்னேன்
சாற்றவில்லை மூவருக்குக் ககாரந்தானாய்
தேனென்ற தீட்சையடா சுரங்களெல்லாம்
திறமாக மூல்ருட தீட்சைகூட்டிப்
பானென்ற ரவிமதியாம் சுழிமூன்றிற்
பாயுமே அதுமூவா யிரமுஞ்சேர்ந்து
வானென்ற சுழிமுனையி லொன்றாய்க்கூடி
மாசற்ற வெளியினுள்ளே சோதிகாணே. (9)

சோதியொளி கோடியையா ரவியோகோடி
சூழமதி வன்னியுமோ கோடாகோடி
ஆதிபரை யாகிநின்ற ஒளியைத்தன்னுள்
ஐங்கரனைக் காணுதற்குத் தீட்சையானும்
ஓதினேன் பதினெட்டும் மூன்றுக்குள்ளே
ஒன்றான பதினெட்டைத் தெரிசிக்கத்தான்
நீதியாய்ச் சமரசமாய் மவுனந்தாக்கி
நிலைத்துநீ தெரிசிக்கக் காணுவாயே. (10)

காணுவாய் பதினெட்டுந் தாயேதன்னைக்
    காணுதற்குக் கண்கூசுங் கண்டாயானால்
தாணுவாய் நிறைந்தசிவ யோகியாவாய்
    தாயுன்னைத் திரும்பியவள் கண்டாலையா
ஆணுவாய் நின்றமல மாசறுத்து
    அரனுருவாய் நின்றமெய்ஞ் ஞானிநீயே
பேணுவாய் பராபரையும் பதினெட்டொன்றாய்ப்
    பேசினதால் தீட்சைவிதி யானவாறே. (11)

வாறான் தீட்சையுரைத் திட்டநாதர்
    மனமகிழ வந்தகுரு தேசிகாநீ
ஆறான வரையினுள்ளே பதினெட்டொன்றாய்
    அங்கனே தாயாகக் காட்டினாப்போல்
பேறான தீட்சைபதி னெட்டுக்குந்தான்
    பிலத்துநின்ற மூலத்தைப் பேசுவாய்நீ
பாறான வெளிகடந்து சிலம்போசைக்குட்
    பாய்ந்துவந்த குருபரனைப் பணிந்தேனையா. (12)

ஐயனே கடைப்பிள்ளை யாகிவந்தாய்
    ஆனதினாற் கேட்டதெல்லா மருளிச்செய்வோம்
துய்யனே பதினெட்டு மூலங்கேளு
    சூட்சநிலை அரியெழுத்துக் கெட்டாரெண்டை
மெய்யனே அறிந்தறிங் சிங்கென்றேதான்
    விளம்புவாய் சாபமதை நீக்கிமைந்தா
தையனே தையலட் சரங்களெல்லாம்
    க்ஷணத்திலே காணுமையா தங்கம்பூணே. (13)

பூணவே பூசைவிதி நாற்பான்மூன்றிற்
    பூரணமாம் வாலையருள் கற்பந்தன்னைப்
பூணவே யான்சொன்னேன் பூண்டுகொண்டு
    புலத்தியன்றன் பதம்நினைந்து தீட்சைதன்னை
பூணவே அண்டரண்டஞ் சித்தியெல்லாம்
    பொருந்திநின்றே வுன்னுக்குள் ளாடுமையா
பூணவே சிவயோக ஞானியென்னப்
    பூதலமெல் லாம்வணங்கும் புனிதங்காணே. (14)

காணப்பா தீட்சைவிதி கருவாய்ப்பார்த்துக்
கண்டுகொண்டு கரைகண்டோ ரனந்தங்கோடி
ஆணப்பா பிறந்தல்லோ குளிகைகட்டி
அண்டரண்டங் கடந்தவரை தாண்டியேறி
நீணப்பா நிறைந்தசிவ சோதிதன்னை
நிராமயமாய்க் கலந்துநின்றோர் கோடாகோடி
வேணப்பா வேணபேர் தீட்சைபெற்று
வெளியேறிச் சுயம்புக்குட் பிச்சைதானே. (15)

தானேதான் சுயம்பில்வந்து பிச்சையேத்தோர்
சதாகோடி நவகோடி கோடாகோடி
வானேதான் வெளிகடந்து வெளியினுள்ளே
மாசற்ற பிரமமாங் கோடாகோடி
தானேதான் அலையாமற் சூட்சங்கண்டேன்
தன்னினைவு முடிவறிந்தேன் கயிலாசத்தை
நானேதான் தீட்சைவிதி பதினாறுக்குள்
நாயகமாய்ச் சொல்லிவைத்தேன் தீட்சைமுற்றே. (16)

கடைப்பிள்ளை ஞான தீட்சாவிதி ௰சு.

முற்றிற்று.

கடைப்பிள்ளை ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை ஏட்டுப் பிரதிகளிருப்பினும் தற்போது இதிற் சிலதை அச்சிட்டிருக்கிறோம் மற்றவைகள் அடுத்த பாகத்தில் வெளியிடக்கூடும்.

ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் வை. சிவகுருநாத மூப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை,

எழுபத்தைந்தாவது:

ஜெயமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# திருமந்திர ஞானம் ௭௫.

ஆதியிலே பரப்பிர்ம மொன்றதாகி
அதிலிருந்தே சகலஜெந்துக் குயிர்தானாகும்
சோதிதனைக் காண்பதென்று லெளிதோவல்ல
சுத்தசித்தத் துடன்பார்த்தா லறியலாகும்
சேதியல்ல பலகோடிக் கொருவனுண்டு
தெளிந்துமனம் விரியாமல் நிலைநிறுத்திப்
பேதியா திருந்துசுழி முனையின்சூட்சம்
பேரறிவாற் கண்டறிந்தாற் சித்திதானே.

சித்திபெற வேண்டுமென்றால் விகற்பகற்பம்
சிந்தையினிற் கோபமொடு குரோதமோகம்
பத்தியதோர் கொலைகளவு மதமாங்காரம்
பாதகமா மென்றசெய லனைத்தும்போக்கி
நத்திடுவாய் நற்செய்கை யுள்ளதெல்லாம்
நானிலத்துன் பொருளெனவே கொள்ளைகொள்ளு
வெத்திபெற விற்பனர்கள் சொன்னநூலை
மேவிப்பார் மற்றதைநீ பார்த்தால்வீணே. (1)

வீணப்பா வேதமென்றும் சாஸ்திரமென்றும்
விளம்பினார் வயின்பிழைக்க மெய்மைபோலக்
காணப்பா அவைமுற்றும் உலகத்தோர்கள்
கையாண்டு மெய்சலித்து மாண்டுபோனார்
பூணப்பா அவர்களைப்போல் நீயாகாமற்
பூரணத்தை நாடிநிற்பாய் புகலக்கேளு
தோணப்பா வொன்றறியா மடையரெல்லாம்
சோதிநிலை கண்டறிந்தோன் போலப்பேச்சே. (2)

பேச்சப்பா பேசிமாந் தரைமயக்கிப்
பேராசை கொண்டுநாய் போற்றிரிந்து
ஆச்சப்பா ஆச்சரிய மையன்கூத்தை
ஆகாகா வென்றெங்கும் பல்லைக்காட்டி
வீச்சப்பா வீச்சிதெனப் பணம்பரித்து
விருதாவாய்த் திரிவானே கள்ளஞானி
மாச்சப்பா அவர்களைநீ சேர்த்திடாதே
மகத்தான நிலையைக்கண் டப்பாநில்லே. (3)

அப்பனே ஆதிநிலை யறிவதென்றால்
அரிதரிது கண்டிடுவான் வினையன்றானும்
தப்பிதமீ தல்லபலாக் கனிபழுத்துத்
தான்கனியும் ரசம்போல மனங்கனிந்து
ஒப்புயர்வாம் பருவமதில் விதைவிதைத்து
உத்தமனே வளர்த்திடுவாய் பயிரைநன்றாய்க்
கொப்புகவ ரிலைபூபிஞ் சாகுமுன்னே
கொடுமையுள்ள வேடர்வெட் டிடுவார்பாரே. (4)

பார்த்திடுவா யவர்களுக்கு அஞ்சிடாமற்
பரமகுரு தனைமனதிற் றியானஞ்செய்து
சேர்த்திடுவாய் சேனைகளா தாரமாகச்
சேர்த்திடவே வேடரஞ்சி யோடுவார்கள்
பூர்த்தியடா நினதுசெய்கை நாட்டம்பாரு
பூண்டிடுவாய் நித்தனென்ற பூடணத்தை
நேர்த்தியடா நின்பெருமை சொல்லப்போமோ
நினைவொன்றித் தெரிவதென்ன வென்றாற்கேளே. (5)

கேளடா தாய்தந்தை கூடும்போது
கெற்பத்தி லுருவானதெந்தவஸ்து
நாளடா நீயறிந்து தொழுதுநில்லு
நலமில்லா மூடருக்குத் தோணாதப்பா
தாளடா காணுதல்கோ டிக்கொருத்தன்
தன்மனத்தி லுலவோ தெரியவேணும்
வேளடா வேளவினை நீக்கவேணும்
மேன்மைபெற மனம்விட்டால் மோசம்போச்சே. (6)

போச்சப்பா முந்தினதோர் குருக்களெங்கே
　　போராடுஞ் சாதியென்ற குலந்தானெங்கே
நீச்சப்பா நானென்ற சடலமெங்கே
　　நினைவான நினைவுங்கூ டழிந்ததெங்கே
பேச்சப்பா அடங்கிநின்ற விடந்தானெங்கே
　　பிதற்றுவார் மாயையென வறியாமற்றான்
கூச்சப்பா கூச்சலிட வுயிர்போமுந்தன்
　　கூட்டோடே போச்சோசொல் மூச்சுத்தானே. (7)

சொல்லப்பா அடங்குமிட மாருங்காணார்
　　சோதிநிலை யறிந்தவனே காண்பான்காண்பான்
நில்லப்பா அண்டத்துச் சியிலேசென்று
　　நித்தியா னந்தசுக வதீதந்தன்னிற்
செல்லப்பா பவவினைக ளெல்லாம்நீங்கும்
　　செகசோதி யுன்றனக்கே தோணும்தோணும்
அல்லப்பா வொன்றுமில்லை யறிவுதானும்
　　ஆதியந்த மில்லாநற் சோதிகாணே. (8)

காணவே இன்னமொரு வசியஞ்சொல்வேன்
　　கணபதியின் வசியமடா கண்டுதேறு
தோணவே பதினெண்க ணேசனென்று
　　சொன்னாலும் அதிற்சிறந்த திந்தமார்க்கம்
பூணவே நீயிதனைத் தியானம்பண்ணு
　　பூதலத்தி லிதைமறந்தாற் புகழுண்டாமோ
பேணவே ஓர்நினைவாய் நின்றுகொண்டு
　　பிசகாமல் மந்திரத்தைச் செய்யுகந்தே. (9)

ஆதி கணபதி வசியம்.

உகந்தெளிய வசீகரத்தின் சூட்சங்கேளு
　　உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதியுத் தளமாய்ப்பூசி
　　ஆனகலை யாசனமே லிருந்துகொண்டு
முகந்தெளிந்த ருத்ராட்ச மணியைவாங்கி
　　முத்திபெற ஆதிகண பதியைநன்றாய்ச்
செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரத்தைச்
　　செப்புகிறேன் சிவ-ஓம்-ரீங்-அங்-கென்றோதே. (10)

ஓதவா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதான்மைந்தா
நீதமா யுன்னிடத்தில் நின்றுகொண்டு
நீநினைத்த காரியங்கள் வசியஞ்செய்வார்
வேதமாம் புராணமொடு சாஸ்திரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமென்று
சாதகமா யுந்தனுக்குத் தெரியச்சொன்னேன்
தன்னிலையிற் றானிருந்து செய்யலாமே. (11)

ஆரப்பா தேவரொடு முனிவர்தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டநாகம்
ஒடுங்காத பட்சிமுதற் சகலமெல்லாம்
தாமப்பா ஆதிகண பதியின்சூட்சம்
தன்மையுடன் தியானித்துத் தானேநின்றால்
காமப்பால் கானற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமுமே வசியங்காணே. (12)

மகாகணபதி மோகனம்.

காணவே வசிகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கீழ்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதியையுத் தளமாய்ப்பூசித்
தோணவே வெண்புலியா சனமேற்கொண்டு
சுத்தமென்ற துளசிமணி கையில்வாங்கிப்
பூணவே செபிப்பதற்கு மந்திரத்தைப்
புகலமகா கணபதியின் சூட்சந்தானே. (13)

தானென்ற சூட்சமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்-கிலீ-சிங்-கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
கோனென்ற விக்கினேச் சுரன்றான்மைந்தா
குருவான இருதயத்திற் பிரகாசிப்பான்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சர்வமோ கனமாம்பாரே. (14)

பாரப்பா ரிஷிமுனிவ ரருளாலேதான்
பகருகிறேன் கணபதியின் தியானத்தாலே
காரப்பா கடிவிஷங்கள் சகலநோயும்
கண்டவுடன் பறந்தோடிப் போகும்பாரு
நேரப்பா மிருகமுதற் பட்சியெல்லாம்
நின்றவுடனுந்தனையுங் கண்டால்மைந்தா
வீரப்பா வொடுங்குமோ கனமேயாகும்
வேதமஹா கணபதியின் விஞ்சையாச்சே. (15)

நடனகணபதி தம்பனம்.

ஆச்சப்பா மோகனத்தின் அருமைசொன்னேன்
அரகரா தம்பனத்தின் பெருமைபாரு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருத்தி மவுனமாகப்
பெருமையாந் தெற்பையா சனமேற்கொண்டு
மூச்சப்பா யிருத்தித்தா மரைப்பூதன்னில்
முற்றுமணி யாற்செபிக்கும் முறமைகேளே. (16)

கேளப்பா நடனகண பதியின்சூட்சம்
கிருபையுடன் ஓம்-ஸ்ரீயும் கிலி-யென்றேதான்
வாளப்பா தானிருத்தி மைந்தாகேளு
மகிமையா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
வேளப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற விதயத்தில் நடனஞ்செய்து
சூளப்பா உன்னிடத்தி லிருந்துகொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கருள்செய்வாரே. (17)

வாறான தம்பனந்தா னென்னவென்றால்
மகத்தான துஷ்டரொடு மிருகமெல்லாம்
நீறான உன்னுடைய சமுகங்கண்டால்
நேர்மைமன தொடுங்கித்தம் பனமேயாவார்
பேறான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளாமற் றம்பிக்கும் பெருமைபாரு
கூறான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. (18)

சத்திகணபதி உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாமுச் சாடனத்தைச் சொல்லக்கேளு
நேரப்பா தென்திசையை நோக்கிமைந்தா
நேர்மையாய் விபூதியையுத் தளமாய்ப்பூசி
காரப்பா கலைமானு சனமேற்கொண்டு
கருணைபெறச் சங்குமணி கையில்வாங்கிச்
சாரப்பா சத்திகண பதியின்சூட்சம்
தன்மையுடன் ஓம்-கிலியும் சவ்வென்றெண்ணே. (19)

எண்ணியா யிரத்தெண்ணூ றுருவேசெய்ய
ஏகாந்தச் சத்திகண பதியினாலே
உண்ணியுச்சா டனமுந்தான் மைந்தாமைந்தா
உறுதியுடன் சித்திமய மாகும்பாரு
நண்ணியுச்சா டனமுந்தான் சித்தியானால்
நானிலத்தில் ஞானியடா சொல்லக்கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லா முச்சாடிக்கும்
நோக்குமனக் கண்ணதினாற் றன்னைப்பாரே. (20)

பாரப்பா ரவிதனிலே யிருந்துகொண்டு
பத்தியுடன் சிவயோகந் துதிக்கும்போது
வீரப்பா பலவிதமாய்க் கொண்டநோய்கள்
விஷமுடனே பில்லிசூ னியங்களெல்லாம்
நேரப்பா உனைக்கண்டாற் காணாதோடும்
நீடுலகிற் சகலசித்து மாடலாகும்
தேரப்பா சத்திகண பதியினாலே
தீர்க்கமுச்சா டனமுந்தான் சித்தியாமே. (21)

வாலைகணபதி ஆகிருஷணம்.

சித்தியுடன் நானுமுச் சாடனத்தைச்சொன்னேன்
தீர்க்கமுள ஆகிருஷ ணத்தைக்கேளு
முத்தியுடன் வடகிழக்கு முகமிருந்து
மோனமுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பத்தியுடன் பட்டுவஸ் திரமேற்கொண்டு
பதிவாகப் படிகமணி கையில்வாங்கிப்
புத்தியுடன் வாலைகண பதியின்சூட்சம்
பூரணமாய் ஓம்றீயுங் கிலியென்றோதே. (22)

ஓதிடவா யிரத்தெண் ணூ றுருவேசெய்தால்
உத்தமமா கிருஷணந்தா னுறுதியாகும்
நீதிடமா கிருஷணந்தான் சித்தியானால்
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
சோதியென்றே நின்றுவிளை யாடுதற்குச்
சொல்லுகிறேன் வாலைகண பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகும்
அடங்காத வினைகளெல்லா மகலும்பாரே. (23)

பாரான பார்தனிலே அஷ்டகர்மம்
பத்தியுடன் செய்துவிளை யாடும்போது
வீரான மாந்தருட கருமமெல்லாம்
விட்டகன்று போகுமடா விண்ணைநோக்கும்
நேரான நிலையுமனக் கண்ணால்நீயும்
நேர்மையுடன் குருபதியில் நின்றாயாகில்
பேரான வாலைகண பதியினாலே
பெருமையா கிருஷணத்தைப் பேணிப்பாரே. (24)

உச்சிட்டகணபதி வித்துவேசனம்.

பாரடா கிருஷணத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாம்வித் வேசனத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமிருந்து
கருணையாய் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுள்ள பவளமணி கையில்வாங்கி
நேரடா உச்சிட்ட முன்னேன்கூட்சம்
நேர்மையுடன் சொல்லுகிறேன் நினைவாய்க்காணே. (25)

காணவே ஓம்ஸ்ரீயும் கிரியுமென்று
கருணையா யிரத்தெண் ணூ றுருவேசெய்தால்
பூணவே வித்துவே சனந்தான்மைந்தா
பூரணமாய்ப் பூதலத்திற் சித்தியானால்
தோணவே நின்றுவிளை யாடுஞ்செய்தி
சொல்லவித்து வேசனத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்கால்
பெருமையுள்ள திருநீற்றாற் கெற்பமாமே. (26)

கெற்பமென்ன உற்பனந்தான் சித்தியாகும்
கிருபையா யுன்கரத்தா லேதானாலும்
உற்பனமா யுன்கரந்தொட் டீய்ந்தால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தான்வளரும் உண்மைஉண்மை
விற்பனமும் விவேகமுட னிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
அற்புதவுச் சிட்டகண பதியைப்போற்ற
அடுத்திருந்தோர் காரியமுஞ் சித்தியாமே. (27)

உக்கிர கணபதி மாரணம்.

சித்தியுடன் வித்துவே சனத்தைச்சொன்னேன்
தீர்க்கமினி மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமிருந்து
பாலகனே விபூதியுத் தளமாய்ப்பூசி
வெத்தியுடன் வேங்கையா சனமேற்கொண்டு
வேகமா மெட்டிமணி கையில்வாங்கி
முத்தியுட னுக்கிரகண பதியின்சூட்சம்
மூர்க்கமாய் ஓம்றீயும் நசியென்றென்னே. (28)

என்னப்பா ஆயிரத்தெண் ணூறுருத்தான்
இணக்கமாய்ச் செய்திடவே என்னசொல்வேன்
நன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
நாடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்
இன்னப்பா எதிர்த்தசத் துருவின்பேரை
எடுத்தெழுதித் தியானமதா யுருச்செபித்தால்
முன்னப்பா குண்ணியவன் நோயதாவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யோதியூதே. (29)

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
உதரமதி லக்கினிதா னுடனேபாய்ந்து
வீதியென்ற தெருத்தோறும் அலைவான்மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை நெஞ்சுள்வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாக்ஷித்தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகும்
சோதியென்ற உக்ரகண பதியின்சூட்சம்
சுத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. (30)

### மூலகணபதி பேதனம்.

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன்மைந்தா
அரகரா பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
சருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
முத்திபெற வேகிருஷ்ணு சலமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூட்சம்
பத்தியுடன் ஓம்றீங்ஆம் மெனவேயெண்ணே. (31)

எண்ணடா மிளகுமணி தன்னால்மைந்தா
இன்பாயி ரத்தெண் ணூ றுருவேசெய்தால்
உண்ணடா பேதனந்தா னுறுதியாகும்
உத்தமனே அதினுடைய சித்துகேளு
கண்ணடா அறிந்துபே தனத்தையோது
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நண்ணடா உந்தனுட சொரூபந்தானும்
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. (32)

பாரப்பா பாரதனிற் பகரக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா நின்றபிணி யாளருக்கு
நீவிபூ தியுமெடுத்துக் கொடுத்தாயானல்
சாரப்பா சுரதோஷம் வீக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. (33)

### அஷ்ட கணபதி.

செம்மையதாம் அஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
தீர்க்கமா யஷ்டகண பதியின்சூட்சம்
இம்மையதாய்ச் சொன்னனடா நயந்துபாரு
எல்லோர்க்கு மிந்தவழி கிட்டாதப்பா
கொம்மையதா யஷ்டதிசைக் கரசாய்நின்று
கொண்டுவினை யாடுதற்கு இதுவேசூட்சம்
தம்மையதாய்க் காணுவது சாக்ஷியாகத்
தானிருந்து அஷ்டகர்மந் தான்காணுமே. (34)

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
அருமையுள்ள சித்துவிளை யாடப்பாரு
ஓமப்பா ஆதிகண பதிதானென்று — 1
உறுதியாம் மகாகண பதிதானென்று 2
தாமப்பா நடனகண பதிதானென்று — 3
சங்கையுள்ள சத்திகண பதிதானென்று 4
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானென்றே. 5 (35)

ஒன்றாமுச் சிட்டகண பதிதானென்று — 6
உத்தமனே உக்ரகண பதிதானென்று 7
நன்றான மூலகண பதிதானென்று — 8
நாட்டமுட னஷ்டகண பதிக்குமொன்றாய்க் 9
குன்றாத மூலமந்திர சூட்சந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
நின்றாடும் மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓம்-கிலி அங்-உங்-கென்னே. (36)

என்னமோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
இகத்துக்கும் பரத்துக்கும் இதுவேமேன்மை
முன்னமோ சிலமுனிவர் மொழிந்தமார்க்கம்
முறைகள்பல விருந்தாலு மிதனுக்கீடோ
பின்னமொன்றும் வாராது செய்துபாரு
பிராமணர்க்கும் அருந்தபசி தேசிகட்கும்
அன்னமொடு அறுசுவைபா லமுதளிப்பாய்
அதனாலே அருளுண்டா மறிந்துபாரே. (37)

ஜெயமுனிவர் திருமந்திர ஞானம் ௱எ.

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தேண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராபரதிதுணை.

எழுபத்தாறுவது:

கல்லுளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானந்தசூஸ்திரம் ௭௬.

அப்பனே பராபரையாள் பாதங்காப்பு
அடிமுடியும் நடுவான மூலங்காப்பு
இப்புவியில் மனோமணியாள் அருளேகாப்பு
யீரெட்டி லாடுகின்ற கணேசன்காப்பு
செப்பமுள்ள யென்குருவாம் நொண்டிச்சித்தர்
திருவாக்கால் கல்லுள்ளிச் சித்தனென்றே
எப்புவியுங் கீர்த்திபெறச் சொல்லிவிட்டார்
இயல்பான சித்தனென்று இயம்புவாரே. (1)

இயல்பாகச் சூட்சத்தின் மோட்சஞ்சொல்வேன்
என்மகனே பொய்களவு கொலைசெய்யாதே
சுயமாகக் கோபத்தைத் தள்ளிப்போடு
சுந்தரம்போல் புண்ணியத்தைக் கருதிக்கொள்ளு
செயமான பெரியோர்கள் மொழிதட்டாதே
செப்பியநால் வேதமுந்தான் பாருபாரு
பயமில்லா தேயுலகில் ஞானங்கண்டு
பார்த்தறிந்து நடந்துகொள்வாய் பாரிற்றானே. (2)

தானேதான் நால்வேதம் படித்துத்தேறு
சமத்துவமாய் ஓங்கார வட்டம்பாரு
கோனேதா னிதுநான்குந் தெரிந்தபின்பு
குண்டலியின் மூலசத்தி தோணும்பாரு
நானென்ற ஆன்மாவும் நீயேயாகும்
நன்மையுடன் பிரணவத்தை யாருங்காணார்
ஏனென்ற நிலையறியப் போராரப்பா
எண்ணரிய கோடியிலே யொருவன்பாரே. (3)

பாரேதான் சுயரூபந் தெரிந்துகொண்டு
பற்றுசை யொழிக்காதார் ஞானியல்ல
தேராமற் றிரிவார்கள் ஞானியென்றும்
தேசத்தி லலேவார்கள் சித்தனென்றும்
சீரான் தாய்தானும் ஒன்றேதெய்வம்
சிறப்புடனே தாய்தகப்பன் சேரும்போது
நேரான கருப்பிடித்துக் கொண்டுவந்து
நிலேத்தநோர் சுயரூபந் தெரிந்துகொள்ளே. (4)

தெரிந்துகொண்ட தெய்வமதை வணங்கவேணும்
சித்துடனே பூமியிலே யிருக்கவேணும்.
அறிந்துகொண்டு சிவயோகஞ் செய்யவேணும்
அப்பனே ஆங்கார மடக்கவேணும்
பிரியமுடன் அட்டாங்க யோகந்தன்னே
பெரியோர்க ளாற்றெரிந்து கொள்ளவேணும்
சிறியதொரு மந்திரங்கற் றறிபவேணும்
தெரியாம லலேவார்கள் சிலபேரப்பா. (5)

அப்பனே மோட்சத்தின் வழிதானெங்கே
அடவாக முன்செத்தோர் குறிப்புமெங்கே
செப்பமுள்ள குருக்களெங்கே குலங்களெங்கே
செத்தவர்கள் கூடழிந்த தெங்கேஇங்கே
இப்பவே யிறந்தவர்க ளெங்கேபாரு
என்மகனே கூடழிந்தால் மூச்சுப்போச்சு
ஒப்பவே யிதைவெளியா யுனக்குச்சொன்னேன்
ஓங்கார மூலவட்ட மடங்கிப்போச்சே. (6)

போச்சேதான் உயிர்போன இடமுங்காணுர்
பூவுலகில் வந்தவர்க ளிருப்புங்காணுர்
மூச்சடங்கி யிருந்தநிலே யாருங்காணுர்
முன்னிருந்த திருக்கூத்தை யாருங்காணுர்
ஆச்சுதென்று வெட்டவெளி நின்றுய்ப்பாரு
அப்பனே வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பேச்சப்பா கருவமைப்பின் படியேயாகும்
பேணிப்பார் தெரியுமல்லா லறிவாய்ப்பாரே. (7)

பாரேதான் அண்டத்தி லிரவிகோடி
பரமனுட படைப்பென்பார் கோடாகோடி
கூரேதான் மண்டலத்திற் பிறவிகோடி
கூடைவிட்டு அழிந்தோர்கள் அனந்தங்கோடி
சேரேதான் வெளியொளியின் முடிவைக்கண்டு
செப்புமகண் டாகாசந் தன்னிலப்பா
நேரேதான் தெரியுமது வெளியைத்தானே
நேர்த்தியுடன் கண்டுகொள்வாய் நிலையில்நின்றே. (8)

நின்றேதான் அஷ்டாங்க நிலையில்நில்லு
நிஷ்டையுடன் சமாதிவிட்டு நிலைபேராதே
அன்றேதான் அஷ்டாங்க யோகஞ்சித்தி
அதிலிருந்து மூச்சடக்கி யிருந்துகொண்டு
சென்றேதான் பார்த்தாக்கால் ஞானந்தோற்றும்
தெரிந்துகொள்வா யிதன்சூட்சந் திரமையாக
ஒன்றேயென் றேயிருப்பா யறியார்தானும்
உலகத்தி லெட்டியென்பர் பரிவிதாமே. (9)

ரசகற்பூர மாத்திரை.

பரிவுரச கற்பூரம் பலமதொன்று
பண்பாகத் தேனதிலே சுத்திசெய்து
எரிவான சம்பழத்தின் சாற்றினாலே
இணக்கமுடன் சுருக்கிடுவா யிரண்டுசாமம்
தெரிவான முலைப்பாலா லிரண்டுசாமம்
தீர்க்கமாய்ச் செய்தபின்பு கல்வத்திட்டு
விரிவான வெண்மிளகு பலந்தானொன்று
விளங்கவே சேர்த்தரைக்க வழிசொல்வேனே. (10)

சொல்லுறவாம் சம்பழத்தின் சாற்றால்சாமம்
சுருக்காக வரைத்துபனிப் பயறுபோலே
வெல்லுறவாய் மணிமணியா யுருட்டிக்கொண்டு
விவேகமுடன் நிழலில்வைத்து வுலரச்செய்து
நல்லுறவாய்க் குழல்தனிலே அடைத்துதேவ
நாதாந்தக் கடவுள்தன்னைத் தெண்டம்பண்ணி
பல்லுறவாம் வாய்வுபக்கச் சூலைகுத்தல்
பகர்வான குளிர்தனக்குக் கொடுப்பீர்தானே. (11)

கொடுத்துவிடு அந்திசந்தி யிரண்டுவேளை
குறிப்புடனே திரிகடுகு தேனிற்றானும்
அடுத்துவரும் அப்பமுதற் குடைச்சலெல்லாம்
அணுகாமல் நீங்கிவிடும் அறிந்துபாரு
எடுத்ததொழில் தப்பாது வெகுசமர்த்து
ஏற்கனவே செய்தகுண மாக்குமப்பா
விடுத்தசொல்லை மனதில்வைத்துத் தெளிந்தபேர்க்கு
வினவியநற் பாகமது விளங்குந்தானே. (12)

நற்பாகத் துடன்செய்வா யின்னங்கேளு
நலமான சாதிக்காய் சாதிப்பத்திரி
பொற்பாக அதிவிடையம் கூளாத்திக்காய்
பேர்பெரிய வெட்பாலை சிறுநாகப்பூ
வற்பாக லவங்கமுங்காட் டாத்திப்பூவும்
வளமான சீனத்தின் பட்டைவோமம்
சிற்பாகச் சிங்கிகுரோ சானிசுக்கு
சிதளுத புளியன்தோல் காசுகட்டி. (13)

காசுகட்டி மையூரின் கஞ்சாவித்து
கருதரிய பெருங்காயம் அசமதாகம்
ஆசுகளில் லாததிரு பேர்சொல்லாது
அடவுடனே வகைக்குவகை பலமதாகப்
பேசுகிறேன் நீர்க்கமுடன் கேளுகேளு
பிரபலிக்க வரலிலிட்டு யிடித்துநன்றாய்
பூசுகின்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
புளிக்குமிலு மிச்சைபழச் சாற்றாலாட்டே. (14)

ஆட்டியபின் விளாவினுட பிசினிதானும்
அன்பாகப் பலமரைதா னதனிற்போடு
நீட்டியதோ ரபினதுகாற் பலந்தான்போடு
நேர்ந்தரைப்பா யொருசர்மம் நிலைமையாகப்
பூட்டிவிடு லிங்கமரைப் பலந்தானப்பா
புனிதமுள்ள கெந்தகமு மரைப்பலந்தான்
நாட்டமுடன் தேனதனு லிரண்டுசாமம்
நலம்பெறவே அரைத்தபின்போர் பாகங்கேளே. (15)

கேளப்பா மறுபடியும் நிறுத்தியேதான்
　　கிருபைபெற வொருசாம மரைத்துக்கூட்டு
நாளப்பா யிப்படியே மூன்றுநாள்தான்
　　நலம்பெறவே வழித்தெடுத்துப் பரணிதன்னில்
கோளப்பா வாராம லடைத்துக்கொண்டு
　　குணம்பெறவே மனதில்வைத்து வினவதாகத்
தாளப்பா வானதொரு கிராணிமந்தம்
　　தடங்கல்செய்யும் நோய்தனக்குக் கொடுப்பீர்தானே. (16)

பிரமாணம் சுண்டக்காயளவு.

தானப்பா வியாதியது தீர்வதற்குத்
　　தயவாகத் தேனிலிடு பயமோயில்லை
வேனப்பா சர்க்கரைகற் கண்டிலாதால்
　　விசிதழுட னதிவிடையக் கியாழுந்தன்னில்
தேனப்பா அரிசியுட கியாழுமாதல்
　　சேர்த்துவிடு நல்லோம கருக்கல்செய்து
பானப்பா காற்பலநற் சீரகத்தைப்
　　பாகமாய்க் கியாழுங்கற் கண்டுசேரே. (17)

கற்கண்டு சர்க்கரைப்பா லூற்றிக்கொள்வாய்
　　கருத்துடனே கொட்டியதைக் கூட்டியுண்ணு
நெற்கண்டு கோதுமையைக் கஞ்சிசெய்து
　　நீதானும் சீனியிட்டுக் கூட்டியுண்ணு
சற்குணமாய் வாழைகச்சல் பூச்சிராவும்
　　சமைத்துமிகக் கொடுத்தாலும் மெத்தநன்று
பொற்கணமாம் ஆட்டிறைச்சி காடையாகும்
　　பொருதியிதைப் பத்தியமாய்ப் பார்த்துச்செய்யே. (18)

பார்த்தபடி சொன்னதல்லால் மறைப்பொன்றில்லை
　　பதறாமல் ஓமமிட்டு வெந்நீர் தன்னில்
காத்துமிகத் தலைமுழுகி யசனஞ்செய்யக்
　　கடவுளர்தன் கிருபையினாற் சவுக்யமாகச்
சேர்த்ததிந்தப் பாகமது மெத்தநன்மை
　　செழிப்பாகக் குணங்கொடுக்குந் தேகத்திற்கு
ஏர்த்தபடி பண்டிதற்குச் சுளுவதாச்சு
　　யெடுத்ததொழிற் பொய்யாது யிணக்கந்தானே. (19)

கல்லுளிச்சித்தர் ஞானனந்த சூஸ்திரம் ௰௬,

முற்றிற்று.

பாரப்பா மல்லிகைதான் வசியமாகும்
பகரரிய முல்லைமோ கனமுமாகும்
ஆரப்பா தும்பையது சாடனந்தான்
அப்பனே அரளியா கிருஷணந்தான்
வாரப்பா காக்கணத்தி பிரிவுமாகும்
வளமான பேதனமு மத்தம்பூவு
நாரப்பா கடலைப்பூ மாரணந்தான்
நலமான தாமரைதம் பனந்தானுமே. (36)

பட்டு வஸ்திரம்.

ஆமப்பா செம்பட்டு வசியமாகும்
அப்பனே மஞ்சளது மோகந்தான்
நாமப்பா பச்சையுந்தம் பனமதாகும்
நலமான வெள்ளையது பேதனந்தான்
காமப்பா கழுதைநிறம் வேடணந்தான்
கண்மணியுச் சாடனந்தான் பஞ்சவர்னம்
வாமப்பா ஆந்தைவர்னம் அழைப்பதாகும்
வளமான கறுப்புமா ரணமாங்கேளே. (37)

ஓமகுண்டம்.

கேளப்பா மணலில்நவ கோணமாகக்
கீழ்ப்போட்டு மணலாலே கட்டிக்கொண்டு
வாளப்பா கிழக்குமுகம் பார்வையாக
வளமான மணலாலே பரப்பிக்கொண்டு
ஆளப்பா நவகோணம் நடுவேஸமந்தா
அப்பனே சாண்கிகளுஞ் சதுரந்தோண்டி
நாளப்பா சமுத்துவகை சொல்லக்கேளு
நலமான அரசினொடு மாவின்சுப்பி. (38)

சுப்பென்ற புங்கினொடு அத்திக்கொம்பு
சொல்வெட்டி வேர்விழா மிச்சியோடு
அப்பென்ற ஆலுடன்மல் லிகையின்சுப்பி
அப்பனே நெல்லிசுப்பி நவ்வல்சுப்பி
கப்பென்ற ஆத்திசுப்பி யிலுப்பைசுப்பி
கண்மணியே பேயத்திச் சுப்பிலோடு
ப்பென்ற கடுகுமிரா கணியுங்கூட
நலமான யெருக்கினொடு கள்ளிக்கொம்பே. (39)

ஆச்சப்பா மிச்சமதாய் நின்றமிச்சம்
அண்டமென்ற சுழினையிலே நின்றுபார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம்பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம்போலே
பேச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித்தாயே
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
மூனைகண்டு கம்பமதி லேறினேனே. (51)

ஏறினேன் சவுதகிரி வட்டமேறி
யேகாந்த வெளியொளியைப் பார்த்துளைமந்தா
மீறினேன் அகாரமதிற் செயல்தன்னாலே
மின்னொளியி னமுர்தரச பாணங்கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல்நின்று
தெளிந்துகொண்டு போகாத புனலைக்கண்டு
ஆறினேன் வேகாத தலையைக்கொண்டு
அடங்கினே னப்பொழுது அடங்கினேனே. (52)

புலிப்பாணி முனிவர் பூஜாவிதி ௫0.

முற்றிற்று.

.. சாப்டூர், அரமனையார் களஞ்சியத்தில் வசிக்கும் கணபதிப்பிர தேசிபவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

ப

சொன்னபதி சென்றிருந்து வாழ்ந்தேனப்போ
சுத்தகத்து விந்தெண்ணூத் தாறுபேரை
இன்னலன்றிச் சார்ந்திருக்க வேண்டிக்கொண்டேன்
இணங்காதா லவர்களையுஞ் சுட்டுவிட்டு
அன்னையின்றன் சந்நதிபக் குவத்தேநின்றேன்
அதன்மேலென் னுடன்பேசப் பனிரண்டாண்டு
நன்னயமாய்ச் சென்றபின்பு பேசாப்பேச்சை
நவின்றுளப் பொருள்நன்று யறிவேன்பாரே. (4)

பாரடா ஆம்-மென-உளம் மென்றேனித்தைப்
பகருதற்கு ஆண்டுபதி மூன்றேயானால்,
சேரடா மற்றசொற் சொல்வதெப்போ
தென்றுபின் றெரிந்துகொண்ட வுண்மையாரிலே
நேரடா பதியாறுங் கண்டுகொண்டேன்
நிலையாகப் பதிமூன்று கோணத்துள்ளே
சீரடா வெனதன்னை யிருந்தசூட்சம்
செப்பவென்று லெட்டாத பொருளீதாமே. (5)

ஆமப்பா தாயவளும் வளரும்வீட்டில்
ஆரணோடு புருவமையத் தேகமாக
தாமப்பா தலமாறு சரோருகத்திற்
சதிராகப் பதியுடனே நடனங்காணும்
தோமப்பா வென்றுடுங் காலைக்கண்டேன்
சொரூபமுட னடமாடுங் காலைச்சொல்ல
நாமப்பா மாசற்ற துரியாதீத
நடனவொலி யானதையுந் தெரிந்துகொள்ளே. (6)

கொள்வதென்ன கேள்நீட்டி மடக்குங்காலின்
குறிப்பறிந்து தூய்மைநிலை தனிலேநின்று
கள்ளமன்றிக் கால்திறக்குந் திறவுகோலைக்
கண்டுகொண்டாற் பூரணத்தின் புதுமைகாணும்
தெள்ளமுத வெள்ளமது பழமையாகிச்
சிந்துமடா வாறுதலத் துள்ளேமீறி
வள்ளஞ்செல் விதமிரண்டு கரையுஞ்செல்லும்
வகைகண்டு பதினெட்டுப் பேருந்தானே. (7)

உ

பராபரதிதுணை.

எழுபத்தேழாவது:

# கல்லுளிச்சித்தர் பாடல்.

பிர்ம சொரூபத்தை நாடு உன்
கர்ம வினையோட வழிதனைத்தேடு

எட்டி பழுத்தாலு மென்ன காசு
யீயாத லோபிகள் வாழ்ந்தாலுமென்ன
கட்டி வராகனிருந் தென்ன அதைக்
காவல்கள் போட்டுநீ காத்திருந்தென்ன. (1)

நீரிலாக் கிணறிருந் தென்ன மனது
நேராய்நடவாத பிள்ளையிருந் தென்ன
ஊரிலா ஆறிருந் தென்ன நமக்
குதவியில்லாமனித ருறவிருந் தென்ன. (2)

தவமது செய்தாலு மென்ன நீ
சமத்தனென்றேபே ரெடுத்தாலு மென்ன
சிவபூசை செய்தாலு மென்ன அரன்
சேவடியை மறவாம லிருந்தாலுமென்ன. (3)

காசிபோய் வந்தாலு மென்ன பெரிய
கனகதண்டிகையேறித் திரிந்தாலு மென்ன
வாசியைத் தெரிந்தாலு மென்ன நாளும்
மகராஜனென்றுபேர் பெற்றாலு மென்ன. (4)

புராணம் படித்தாலு மென்ன இந்தப்
பூலோகந்தன்னில் மறைந்திருந் தென்ன
நிராசநிலை யாயிருந் தென்ன தினம்
சிவசிவாயென்றே செபித்தாலு மென்ன. (5)

வித்தைகள் பலபடித் தென்ன நீ
மென்மேலுஞ் சாஸ்திரங் கற்றாலுமென்ன

உ
குருவே துணை.

எழுபத்தொன்பதாவது:

# கஞ்சமலைச்சித்தர் பாடல்.

பரிபூர ணானந்த போதம்-சிவ
பரப்பிர்ம மான சதானந்த பாதம்.

உரிதாம் பரம்பொருளை யுள்ளு-மாய
முற்ற பிரபஞ்ச மயக்கத்தைத்தள்ளு
அரிதான சிவநாமம் விள்ளு-சிவ
னடியார்கள் பணிவிடை யன்பாகக்கொள்ளு. (1)

துச்சமு சாரவி சாரம்-அற்ப
சுகமது துக்கமதாம் வெகு கோரம்
நிச்சய மானவி சாரம்-ஞான
நிர்மல வேதாந்த சாரமேசாரம். (2)

கற்பனை யாகிய ஞாலம்-அந்தக்
கரணங்க ளாலே விளைந்த விசாலம்
சொற்பன மாமிந்த்ர ஜாலம்-அன்று
தோன்றி விட்டாலது சூட்சானு கூலம். (3)

அற்பம தானப்பிர பஞ்சம்-அது
அனுசரித்தாலே வுனக்கிது கொஞ்சம்
நிற்பத ருள்மேவி நெஞ்சம்-அன்று
நிகரில்லை நிகரில்லை மெய்ஞ்ஞானபொஞ்சம். (4)

ஆங்காரத் தால்வந்த கேடு-முத
லாசையைக் கட்டோடே அப்பாலேபோடு
தாங்காம லானந்த வீடு-அன்று
தாக்கும னுலயந் தானகக்கூடு. (5)

தத்துவக் குப்பைக ளேது-சித்தி
சாத்திர மான சடங்குகளேது

பத்தி யுடன் மறவாது-குரு
　　பாதத்தைக் கண்டாற் றெரியுமப்போது. (6)

தூராதி தூரங்க ளில்லை-அத்தைத்
　　தொட்டுப்பிடிக்க வென்றால்வெகு தொல்லை
காரண தேசிகன் சொல்லை-நம்பிக்
　　கருத்தில் நிறுத்தியுங் காணலாமெல்லை. (7)

ஆணுவத் தால்வந்த காயம்-அதில்
　　ஐவரிருந்து தொழில்செய்யும் ஞாயம்
காணவ மாம்போகு மாயம்-நன்றாய்க்
　　கைகண்ட சூத்திரஞ் சொன்னேனுபாயம். (8)

மூட ருறவு பிடியாதே-நாரி
　　மோக விகாரத்தால் நீமடியாதே
ஆடம் பரம் படியாதே-ஞான
　　அமுதமிருக்க விஷங்குடியாதே. (9)

தானென்று வாது கூறாதே-பேசி
　　தர்க்கங்களிட்டுச் சளன்று சீறாதே
ஊனென்ற பாச மாறாதே-போனால்
　　உன்னுணை யுன்மனஞ் செத்துந்தீறாதே. (10)

வந்த பொருளைத் தள்ளாதே-நீயும்
　　வாராததற்குவி ணாசை கொள்ளாதே
சிந்தை வசமாய்த் துள்ளாதே-சும்மா
　　சித்திரம் போலிருந் தொன்றும்விள்ளாதே. (11)

தேகபாச பவ பந்தம்-அப்பொருள்
　　சிற்றின்ப மானது சிச்சீதுறக்கந்தம்
பாகம தானவே தந்தம்-பொருள்
　　பாவித்துப் பார்க்கி லுனக்கிது சொந்தம். (12)

வஞ்சிய ராசை யாகாதே-அந்த
　　மயக்கமானாற் கொஞ்ச மட்டிற்போகாதே
அஞ்சி யமன்கைச் சாகாதே-கெட்ட
　　ஆசாபாசமந் நெருப்பில் வேகாதே. (13)

கல்வி மயக்கங் கடந்து-எல்லாங்
கற்றேமென் றெண்ணுங் கசட்டைத்தொலைந்து
சொல்வெப் பினாலே கிடந்து-இரு
சூட்சாதி சூட்சத்தி லாசைபடர்ந்து. (14)

ஓடித் திரியுங் கருத்து-அதை
ஓடாமற் கூட்டிப் பிடித்துத்திருத்து
நாடிக் கொண்டம்பைப் பொருத்து-அந்த
நாதாந்த வெட்டவெளிக் குள்ளிருத்து. (15)

சாண்வயிற் றாலலை யாதே-நிதம்
சஞ்சலப்பட்டுக் கொண்டே மலையாதே
ஆணுவத் தாலுலை யாதே-உனக்
கானந்த முத்தி யதுநில்லாதே. (16)

அபிமானி யாகிய ஜீவன்-அவன்
அஞ்ஞானத்தாலே அழிவுண்டு போவான்
தபம் நினைந்தாற் போதம்சார்வான்-நிலை
சார்ந்து கொண்டாற்சத்தி ரூபமுமாவான். (17)

நற்குரு சொன்னதே சொல்லு-தம்பம்
நாட்ட மென்றால்வன்னி நிலையிலேநில்லு
தற்சம யங்களை விள்ளு-உண்டு
தன்மயமாகவே தானேநீ கொள்ளு. (18)

துன்ப வின்பங்களைத் தொட்டு-அந்தத்
தொந்தங்க ளெல்லாந் துருசறச்சுட்டு
பின்பு பாசத்தைக் கைவிட்டு-ஒன்று
பேசாம லந்தம் பெருமையையீட்டு. (19)

பேச்சினா லென்னென்ன தோணும்-சும்மா
பேசப்பேசப் பிழையல்லோ காணும்
வாச்சுதா லாலம்பு பூணும்-நல்ல
மாசற்ற ஞான விசாரணைவேணும். (20)

அநித்திய மானதுதேகம்-அநி
லாசையு மொன்று லடங்காது மோகம்

தனித்திருந்தாலந்த போகம்-ஒன்று
தானாகி நிற்பது வேசிவயோகம். (21)

விரும்பாசைக் கிடங்கள் கொடாதே-காய
வேதனைக் குள்ளேநீ கட்டுப்படாதே
திரும்பச் செனன மெடாதே-குரு
தேசிகர்பாதத்தி லன்பு விடாதே. (22)

கோடான கோடி தவங்கள்-அந்தக்
கோவிலைச் சுற்றிச் செபிக்குஞ் செபங்கள்
பாடான தல்லோ பவங்கள்-இது
பண்ணுமுன் னண்ணுமத் துன்பமலங்கள். (23)

அந்தக் கரணவி லாசம்-அதை
யாராலுந் தள்ளக்கூ டாதுபிர யாசம்
தொந்தித்து நிற்பதே பாசம்-அதிற்
றோன்றுமற் றோன்றுஞ் சுயம்பிர காசம். (24)

நாமசொ ரூபமே சித்தி-அதை
நாடித் தெளிந்துகொண் டாலல்லோ முத்தி
நேம சொரூபமே வித்து-எங்கும்
நிட்சய மாகும் நிரந்தர வத்து. (25)

கஞ்சமலைச்சித்தர் பாடல் உ௫.

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியுவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதிபின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எண்பதாவது:

புலிப்பாணி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# பூஜாவிதி ருய்.

அத்திமுகன் றனையளித்த அரனேகாப்பு
அகிலமெங்கும் நிறைந்துநின்ற அருளேகாப்பு
முத்திதரும் வேதாந்த முதலேகாப்பு
முப்புரத்தைத் தகித்தெரித்த பரனேகாப்பு
சத்தியொரு பாகம்வைத்த அரசேகாப்பு
சங்கரனே அம்பரனே ஞானமூர்த்தி
வெத்தியாம் சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
விளம்புகிறேன் கணேசனுட பாதங்காப்பே. (1)

காப்பென்ற பிருதிவியி லொன்பதாகும்
கனயான அப்புதனிற் பதினொன்றாகும்
வாப்பென்ற தேய்வுதனில் நாலதாகும்
வளருகின்ற வாய்வுதனிற் பதினைந்தாகும்
தாப்பென்ற ஆகாயந் தனக்குமைந்தா
தன்மையுட னீராறு தானேயாகும்
நாப்பென்ற நடனமிடுஞ் சிதம்பரத்தின்
நல்லதொகை யைம்பத்தொன் றாகத்தானே. (2)

ஆகமாய்ப் பாடுமுன்னே நவசித்தாதி
அதன்பிறகு நவகோடி கோடாகோடி
பாகமாய் ஆச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிட பாலித்தார்காண்
ஏகமாய்ச் சாபமிட்டோம் வாமத்துக்கு
இயல்பான அட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமாய் உயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனால் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே. ()

போச்சுதென்று அலையாமற் சிவனுத்தாரம்
பூட்டியே கேட்டுகா னிந்தநூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லாம் அருளிச்செய்தேன்
அரகரா சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணுமல்
காச்சுதென்று காச்சிவிட்டேன் உலகத்துள்ளே
கண்டவருக் கிந்நூல்தான் சித்திமுத்தி. (4)

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
மூடருக்கும் வீணருக்குங் காட்டொணுது
சத்தியிது சம்புவிது ஒன்ருய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்திஞர் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்திஞற் றீட்சைதா னெளிதிலாகும்
புத்தியுட னிந்நூல்தா ஞர்க்குங்கிட்டாப்
புண்ணியருக் கிதுகிட்டும் பொருளேப்பாரே. (5)

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
புகட்டினேன் சாபமது பொய்யாப்போக
அருளான [illegible]வயநம அம்-உம்-என்று
அப்பனே சிம்-கிலீம் ஸ்ரீம்-ஓம்-என்றே
மருளாமல் ரம்-மம்-யம் ஓம்-என்றேதான்
மாட்டுவாய் லட்சமுரு வேற்றிஞக்கால்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (6)

காணப்பா ஆறுவரை குறுக்கேகீறி
களங்கமில்லா தாறுவரை நேரேகீறி
ஆணப்பா யிருபத்தஞ் சரையுமாச்சு
அடைவான முனைதோறும் சூலம்போடு
தாணப்பா முதலறையில் நாலுகோணம்
தயவான நகராமொடு அகாரங்கூட
வாணப்பா ஐயோடு உகாரந்தோறும்
வளமான லக்கமது ஒன்பதாமே. (7)

ஆமப்பா அடுத்தறைபிற் பிறைதான்கோணம்
அடைவான மகாரமொடு இகாரங்கூடத்
தாமப்பா கிலியோடு வகாரந்தானும்
தயவான லக்கமது பதினொன்றாகும்
வாமப்பா அடுத்தறையில் முக்கோணந்தான்
வளமான சிகாரமொடு உகாரந்தானும்
நாமப்பா சவ்வுடனே நகாரந்தொட்டு
நலமான லக்கமது நாலுமாமே. (8)

ஆமடா யிதனருகே அறுகோணந்தான்
அடைவான வகாரமொடு எகாரந்தானும்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங்கூடத்
தயவான லக்கமது பதினைந்தாகும்
வாமடா யிதனருகே வட்டம்போடு
வளமான யகாரமொடு ஓகாரந்தானும்
நாமடா ஹரிஓம் என்றுநாட்டி
நலமான அகாரலெக்க மீராறுமே. (9)

ஆரப்பா தம்பனத்தின் மகிமைமெத்த
அப்பனே தம்பனம்போ லுண்டோவித்தை
வாரப்பா அஞ்செழுத்தின் பீசஞ்சொல்வேன்
வளமான சிகாரத்தில் நகாரம்வைநீ
காரப்பா யகாரத்தில் மகாரம்வைநீ
நலமான வகாரத்தில் சிகாரம்மாட்டு
காரப்பா மகாரத்தில் வகாரம்மாட்டு
கணக்காக நகாரத்தில் யகாரமாட்டே. (10)

மாட்டடா அஞ்செழுத்துக் காணும்பெண்ணும்
வரைதோறும் பீசத்தை அணுகமாட்டு
வாட்டடா பீசமில்லா விட்டால்மைந்தா
வளமாகப் பலியது பீசம்விட்டால்
ஆட்டடா அஞ்செழுத்தின் தொகைதான்கேளு
அகரமுதல் நகரம்வரை ஒன்பதாச்சு
கூட்டடா மகாரமென்ற மால்தனக்குக்
கொள்அகர முதல்மகரம் பதினொன்றச்சே. (11)

ஏச்சப்பா சிகாரமென்ற ருத்திரற்கு
இகரமுதல் சிகரம்வரை நாலதாகும்
பாச்சப்பா வகாரமென்ற மகேசனுக்குப்
பதிஅகர முதல்வகரம் பதினைந்தாச்சு
வீச்சப்பா யகாரமென்ற சதாசிவற்கு
மேல்அகரம் முதல்யகரம் யீராறுகும்
காச்சப்பா ஐம்பத்தோ ரெழுத்துந்தானுய்க்
கருதிநின்ற சிதம்பரற்குக் கண்தான்மூன்றே. (12)

மூன்றான நடுவணையை எடுத்துமாறி
முன்வரைந்த சக்கரமோ ரிருபத்தஞ்சில்
நான்றான சூலத்தி னிடைகள்தோறும்
நாயகனே றீயும்ஸ்ரீயும் என்றுமாட்டு
பான்றான சூலமுனை ஸ்ரீமம்போடு
பண்பான திரிவட்டம் பாங்காய்ச்சூட்டு
ஊன்றான உள்வட்ட மிதழ்தான்மூன்று
உத்தமனே யிருவட்ட மிதழீரெட்டே. (13)

எட்டான திரிவட்டம் எண்நான்கப்பா
இதமாக நடுவட்ட முதலாம்ஆதி
கட்டான அகாரமுகல் ஒகாரமட்டும்
கனிவாக ஐம்பத்தி யொன்றுமாச்சு
கிட்டான உபரேகை வாசல்நாலு
கீழ்வாசல் கணபதிக்குக் கங்குநாட்டு
நட்டான மேல்வாசல் வடுகன்பீசம்
நாயகனே வங்கென்று நாட்டிடாயே. (14)

நாட்டியே தென்வாசல் பிரிதிபீசம்
நலமாக இம்மென்று நாட்டுகாட்டு
கூட்டியே வடவாசல் மதியின்பீசம்
குணமாகச் சம்மென்று குறித்துப்போடு
ஆட்டியே உபரேகை வீதிக்குள்ளே
அடைவாக இந்திரனில் லம்மாம்பாரு
வாட்டியே அக்கினியில் ரம்மென்றப்பா
வளமாக யெமனிற்சம் மென்றுபோடே. (15)

போடவே நிருதியிலே உம்மேயாகும்
பொலிவான வருணனிலே வம்மேபாரு
சாடவே வாய்வதனில் பம்மேபோடு
சார்வான குபேரனிலே ளம்மேநாட்டு
வீடவே யீசான்யம் சம்மேசேரு
விதமான அஷ்டதிக்குப் பாலராச்சு
ஆடவே போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே. (16)

பாடினேன் தமிழெழுத்தில் அகாரம்தொட்டு
பண்பான பிரணவத்தின் வரைக்கும்போடு
கூடியே தமிழெழுத்தில் அகாரந்தொட்டு
கொற்றவனே ஒவ்வரையி லுயிராய்ப்பாரு
ஆடியே தசாங்கமென்ற எழுத்தோ பத்து
அப்பனே சக்கரத்திற் சுத்திப்போடு
நாடியே சக்கரத்தில் சுத்திப்போட
நலமாக யிரஞ்சு எழுத்துமாச்சே. (17)

ஆச்சப்பா அசபையுட எழுத்துச்சம்அம்
அடைவாக மேல்வாசல் கீழேபோடு
பாச்சப்பா வலமங்கி சத்திபீசம்
பண்பாக அம்மென்று பதித்துப்போடு
வாச்சப்பா யிடம்பரா சத்திபீசம்
வளமாகக் கிரூமென்று குறித்துப்போடு
வீச்சப்பா வலப்பாக மிடப்பாகந்தான்
விதமான ஐயும்கிலியும் சவ்வுமாமே. (18)

ஆமடா அம்இம்உம் எம்ஓம்மென்றே
அய்யபஞ்ச பக்ஷியிரு புறமும்போடு
வாமடா அம்-சம் ஸ்ரீயும்மென்று
வளமாக மங்குடனே நசியென்றோது
தாமடா கிறீம்முடனே றீமுங்கூட்டித்
தயவான விம்முடனே அங்கியென்று
நாமடா நவக்கிரக பீசமாச்சு
நலமான சக்கரத்திற் சுத்திப்போடே. (19)

போடப்பா சொரூபியென்ற வெழுத்துமப்பா
புகழ்தருவம் கிலியல்லோ மதனபீசம்
நாட்டப்பா கீழ்வாசல் மேலேஅப்பா
நலமாக யீதிரண்டும் பதித்துப்போடு
கூடப்பா சிதம்பரத்தின் பூசைசெய்யக்
கூத்தாடுங் கணங்கள்முத லெல்லாமாடும்
ஆடப்பா போகருட கடாக்ஷத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (20)

பாடியே அகாரத்தி லுகாரமிட்டுப்
பண்பான ஓங்காரங் கொண்டுகட்டி
நாடியே அதன்கீழே மகாரமிட்டு
நலமாக வதின்மேலே றீங்காரந்தான்
கூடியே அரியெழுத்து மேலேதாக்கிக்
குணமாகச் சூலமிட்டு ஸ்ரீமம்நாட்டு
ஆடியே சிங்குவங்கு யென்றுநாட்டு
அடைவாயே காட்சரத்தைப் பதித்துப்போடே. (21)

போடுசிந்தா மணிக்குச்சி சாரமிட்டு
பொங்கமுடன் மகாரமொடு யகாரம்போடு
ஆடவே அகாரமுடன் விந்தைப்போட்டு
அடைவாஞ்சக் கரத்தில்திரு வாசிசூட்டுக்
கூடச்சிந் தாமணிக்குப் பீசமாச்சு
குணமான சக்கரத்திற் பதித்துப்போடு
நாடியே போகருட கடாக்ஷத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (22)

பாடியே வலப்புருவம் அகாரம்போடு
பண்பான இடப்புருவம் ஆகாரந்தான்
நாடியே வலக்கண்ணு இகாரம்போடு
நலமான இடக்கண்ணு ஈகாரந்தான்
சாடியே வலக்காது உகாரம்போடு
சமத்தான இடக்காது ஊகாரந்தான்
வாடியே வலக்கன்னம் இரோம்நீபோடு
வடிவான இடக்கன்னம் ஈரோம்நாட்டே. (23)

சித்துகள் தெரிந்தாலு மென்ன நாளும்
சிறப்பாக வார்த்தை யுரைத்தாலுமென்ன. (6)

பெண்டாட்டி பிள்ளையிருந் தென்ன முதிர்ந்த
பெரியோர்கள் பாதத்தைப் பூசித்துமென்ன
துண்டாகப் போயிருந் தென்ன நீ
துலையாத கற்கோட்டை கட்டியிருந்தென்ன. (7)

மாடிமேல் வீடிருந் தென்ன இந்த
வையகத் தோர்மெய்க்க வாழ்ந்தாலுமென்ன
கூடிக் குலாவியிருந் தென்ன கையெடுத்துக்
கும்பிட்டுக் கூத்தாடித் திரிந்தாலுமென்ன. (8)

தாய்தந்தை துணையிருந் தென்ன உற்ற
ஜனங்களு முபகார மாயிருந்தென்ன
நாய்போ லலைந்தாலு மென்ன வரும்
நமனுக்குத் தப்பி யொழிந்தாலுமென்ன. (9)

சரியை கடந்திடவும் வேணும் இந்த
சகத்தினுட மாயை யொழித்திடவும்வேணும்
கிரியையைப் பார்த்தறிய வேணும் மனவாக்குக்
கெட்டாத சொரூபத்தைத் தெரிந்திடவேணும். (10)

யோகந் தெரிந்திட வேணும் உனக்
குண்டிமுத லானதைச் சுருக்கிடவேணும்
பாகமது தெரியவே வேணும் குரு
பாதமதை மறவாம லிருந்திடவேணும். (11)

கொலைகளவு நீக்கிவிட வேணும் உலகில்
கொடியோ னெனும்பேரைப் போக்கிடவேணும்
புலைகளைத் தொலைத்து விடவேணும் இன்று
பொல்லாத மாயையை விலக்கிவிடவேணும். (12)

சோதியைக் கண்டறிய வேணும் வேதச்
சுடரெனுந் தீபத்தைப் பார்த்தறியவேணும்
ஆதியிர் மந்தெரிய வேணும் அதை
அன்புடன் சாஸ்திரத் தாற்றெரியவேணும். (13)

நாட்டடா வலமூக்கு இல்லாவென்று
நாயகனே இடமூக்கு ஈல்லாவாகும்
ஆட்டடா மேலுதடு ஏயைப்போடு
அடைவான கீழுதடு ஐயைப்போடு
கூட்டடா மேற்றந்தம் ஒவ்வைப்போடு
குணமான கீழ்த்தந்தம் ஔவ்வைநாட்டு
மாட்டடா நாவதிலே அம்மென்றப்பா
மணியான கண்டத்தில் அகாரமெண்ணே. (24)

எண்ணவே சக்கரத்திற் பதித்தபின்பு
இதமான சாபங்கள் நிவிர்த்திசெய்து
நண்ணவே பிராணபிர திஷ்டைசெய்து
நவிலுவோம் பூசைசோ டசமும்செய்து
அண்ணவே சுகந்தபரி மளங்கள்புஷ்பம்
அடைவாக வர்ச்சித்துக் கனிகளோடு
தண்ணவே பலகாரம் பரமானந்தம்
தாம்பூலம் இளநீரும் பாலுந்தேனே. (25)

தேனான பானக்கம் அன்னத்தோடு
தெளிவாகு மாறுசுவை வஸ்துசுத்தி
தானான சருவமும் சுத்திவைத்துத்
தயவாகப் பூசித்துத் தியானமோது
வானான கற்பூரத் தீபமேற்றி
வணங்கவே அஷ்டசித்தும் சித்தியாகும்
மானான அஷ்டசத்தி நடனஞ்செய்வாள்
வானவரும் லோகமெல்லாம் வசியமாமே. (26)

ஆமேதான் யநமசிவ வசியமாகும்
வளமான நமசிவய தம்பனந்தான்
தாமேதான் மசிவயந மோகனந்தான்
தன்மைபெற சிவயநம மாரணந்தான்
நாமேதான் வயநமசி யுச்சாடனம்
நலமான யவசிமந பேதனந்தான்
பாமேதான் நமவசிய வித்துவேஷம்
பண்பாக வசிமநய அழைப்புமாமே. (27)

ஆமடா காரீயம் வசியமாகும்
அப்பனே பித்தளைமோ கனமேசித்தி
தாமடா பசும்பொன்தா னழைப்பதாகும்
தயவான செம்புதம் பனமேசெய்யும்
வாமடா வெள்ளீயம் உச்சாடிக்கும்
வளமாம்வெங் கலம்வித்து வேஷணந்தான்
போமடா யிரும்புபே தனமேயாகும்
பொங்கமுடன் வெள்ளிமா ரணந்தானுமே. (28)

தானென்ற தலைமஞ்சள் கொடியுமாவும்
தயவாகத் தான்பூசி வுலரப்போடு
ஊனென்ற முப்புரவி மதியின்பீசம்
உத்தமனே வுடன்கூட்டித் தயிலம்வாங்கி
ஆனென்ற அஷ்டகர்ம மெட்டெட்டுக்கும்
அடைவான தொழில்முறைக்கு மெல்லாமாகும்
நானென்ற போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (29)

பாடியே மோகனதம் பனவசியம்
பண்பான அழைப்புமுத லிவைநாலுக்கும்
வாடியே ஆள்காட்டி விரலேநீளம்
வளமாகப் பெருவிரலி னகலமப்பா
சாடியே மாரணபே தனவித்வேஷம்
சார்ந்திடுமுச் சாடனங்க ளிவ்வைநாலுக்கும்
கூடியே பவுத்திரவிரல் நீளமப்பா
குணமான சிறுவிரலி னகலமாமே. (30)

ஆமடா யிரையாறு வீசமாகும்
அப்பனே பன்னிரண்டு அரைக்காலாகும்
தாமடா மூவெட்டுக் காலேயாகும்
தயவாக இந்திரட்டி அரைபேயாகும்
வாமடா யிதிவிரட்டி முழுதென்பார்கள்
வளமான கனமப்பா நெற்கனந்தான்
நாமடா வீசமது ஒருநெல்லாகும்
நலமான சிதம்பரத்தின் பூசைகாணே. (31)

வாரம்.

காணப்பா ஞாயிறதில் வசியமாகும்
கண்மணியே செவ்வாய்மோ கனமுமாகும்
தாணப்பா வியாழனுமுச் சாடனந்தான்
தகமைபெரும் திங்கள்தம் பனமாம்பாரு
வாணப்பா புதனில்மா ரணமதாகும்
வண்மைவெள்ளி வாரமதி லழைப்பதாகும்
நாணப்பா சனியில்வித்து வேஷணந்தான்
நலமான ஞாயிறுபே தனந்தானுமே. (32)

திக்கு.

நாமேதான் ஈசான்யம் வசியமாகும்
நலமான அக்கினிமோ கனமாம்பாரு
தாமேதான் நிருதியிலுச் சாடனந்தான்
தலைமைபெரும் இந்திரன்தம் பனமதாகும்
வாமேதான் எமன்மா ரணமதாகும்
வளமான வருணனது அழைப்பாம்பாரு
காமேதான் வாயுவித்து வேஷணந்தான்
கனமான குபேரன்பே தனமாம்செய்யே. (33)

செய்யவே ருத்திராக்ஷம் வசியமாகும்
செயலான மிளகுமணி மோகனந்தான்
அய்யமே துளசிமணி உச்சாடனம்
அப்பனே தாமரைதம் பனமாம்பாரு
நையவே நாகமணி மாரணந்தான்
நலமான சங்குமணி அழைப்பதாகும்
வையவே யெட்டிமணி வித்துவேஷம்
வளமான பேதனம்வெண் முத்துத்தானே. (34)

பலகை ஆசனம்.

தானென்ற பலாப்பலகை தம்பனந்தான்
தன்மைபெரும் மாம்பலகை மோகனந்தான்
நானென்ற வில்வமது வசியமாகும்
நல்லபேய்த் தேத்தான்பே தனமதாகும்
கானென்ற எட்டிவித்து வேஷணந்தான்
கண்மணியே அத்தியும்மா ரணமதாகும்
வானென்ற அழைப்புவெண் நாவலாகும்
வளமாம்வெப் பாலையுச்சா டனமாம்பாரே. (35)

கொம்பாம்பன் றூமா ரணத்துக்காகும்
கொடிதாம்வேப் பெண்ணெய்மா ரணத்துக்காகும்
நம்பான யென்னூலிற் சமித்துமெண்ணெய்
நம்பவொளிப் பில்லாமற் றிறந்துசொன்னேன்
அம்பான சிதம்பரத்தின் நடனங்காண
அப்பனே பூசைவிதி நன்றாய்ச்சொன்னேன்
வம்பான போகருட கிருபைதன்னால்
வளமாகச் சிதம்பரத்தின் பூசைப்பாரே. (40)

மூலமந்திரம்

வசியம்-ஓம் யநமசிவ அரிஓம் ஐயும்கிலியும் சுவாகா.
தம்பனம்-ஓம்நமசிவய ஐயும் கிலியும் சவ்வும் சுவாகா.
மோகனம்-ஓம் மசிவயந கிலியும் சவ்வும் ஸ்ரீயும் சுவாகா.
மாரணம்-ஓம் சிவயநம சவ்வும் ஸ்ரீயும் அரிஓம் சுவாகா.
உச்சாடனம்-ஓம் வயநமசி ஸ்ரீயும் அரிஓம் ஐயும் சுவாகா.
பேதனம்-ஓம் யுவசிமந அரிஓம் ஸ்ரீயும் சவ்வும் சுவாகா.
வித்துவேஷணம்-ஓம் நமசிவய ஐயும் கிலியும் ஸ்ரீயும் சுவாகா.
அழைப்பு-ஓம் வசிமநய ஸ்ரீயும் சவ்வும் கிலியும் சுவாகா.

பகவதி தியானம்.

பாரப்பா இன்னமொரு தீட்சைமார்க்கம்
பத்தியுள்ள பாலகனே சொல்லக்கேளு
நேரப்பா பகவதியாள் தியானந்தன்னை
நேர்மையுடன் சொல்லுகிறேன் நிசமதாகச்
சாரப்பா தன்சார்பு நிலையில்நின்று
சங்கையுடன் ஓம்றீங்அங் உங்கென்றேதான்
காரப்பா புருவநடுக் கமலத்தேகி
கருணையுட னுயிரத்தெண் ணுருவேசெய்யே. (41)

செய்யடா மானதமா யுருவேசெய்யத்
திருவுருவாய் நின்றபக வதியாள்தானும்
மெய்யடா வுனதிடமாய் நடனஞ்செய்வாள்
மெய்ஞ்ஞானக் கருணைவிழிக் கண்ணாற்பார்த்துக்
கையடா கூப்பியடி பணிந்துகொண்டு
கருணைபர தேவதா பகவதிவாவென்று
வையடா அமுதரச பானம்வைத்து
மார்க்கமுள்ள ராஜராஜேஸ் பரியேயென்னே. (42)

என்னம்மா ராஜராஜேஸ் பரியேயென்று
ஏகசிரா மயமாகத் தியானம்பண்ணிக்
கன்னம்மா கமலாயி மந்திரரூபி
கமலசித்து ரூபிசிவ சோதித்தாயே
முன்னம்மா நீயிருந்து யென்னைக்காத்து
முத்தியுடன் நினைத்தபடி சுத்தமாகப்
பன்னம்மா யிதுசமய மென்றுநீயும்
பதிவாக விபூதியைநீ தரித்துக்கொள்ளே. (43)

கொள்ளடா விபூதியை தியானம்பண்ணிக்
கூசாமல் நெற்றியிலே அணிந்துகொண்டு
நில்லடா வுன்சமுகங் கண்டோர்க்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப்போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிரு பகவதியாள் சுருக்கினாலே
அல்லடா வுன்மனதை நோகப்பண்ணும்
அவர்கள்குடி செந்தியிலே அழுந்தும்பாரே. (44)

பாரப்பா பகவதிசென் றிருக்குநாடு
பாதாள மலையாளம் நடுநாடாகும்
காரப்பா மலையாள நடுநாடையா
கண்மூக்கு மத்தியென்ற வுச்சிவட்டம்
நேரப்பா வுச்சிவட்ட மலையாளத்தில்
நிலையான பகவதியை யார்தான்காண்பார்
ஆரப்பா அறிவார்க ளொருமில்லை
அந்தமலை யுச்சியடி வாரம்பாரே. (45)

பாரப்பா உச்சியடி வாரமான
பதிவான மலையாள பகவதிதன்பீசம்
நேரப்பா சொல்லுகிறேன் ஸ்ரீம்-றீங்-கென்று
நிலையான மலையாளத் துருவமீதிற்
சாரப்பா சார்ந்துமந்த அடிவாரத்திற்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணிக்
காரப்பா அக்கினிகொண் டேரவேறிக்
கண்ணாரியக் கண்ணாரத் தியானம்பண்ணே. (46)

பண்ணப்பா பகவதியைத் தியானம்பண்ணப்
    பரஞான கேசரியிற் பளீரென்றேதான்
உண்ணப்பா நிறைந்ததிருக் கண்ணிற்றேனும்
    உத்திதரு மவ்வொளியில் நின்றுபாரு
மண்ணப்பா குவிந்தமலை யாளந்தன்னில்
    மக்களே வெகுநிதிகள் காணலாகும்
எண்ணப்பா அதனில்வெகு சோதிகாணும்
    எங்கினும்நன் றாகவேநீ நின்றுபாரே. (47)

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தாமைந்தா
    நிசமாக வருளோடு பொருளுங்கண்டேன்
அண்டரொடு முனிவர்களும் ரிஷிகள்சித்தர்
    அநேகவிதம் விதவிதமா யங்கேகண்டேன்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
    பலவிதமாய் நின்றுவிளை யாடல்கண்டேன்
கண்டதொரு காட்சியெல்லா மங்கேகண்டேன்
    கலந்துவெளி வெளியான கருக்கண்டேனே. (48)

கருக்கண்டு கருவறிந்து உண்ணும்போது
    கருவுருவாய் நின்றதொரு நாதங்கண்டேன்
உருக்கொண்டு நின்றதொரு நாதந்தானும்
    ஒழுடிந்து நின்றவிடம் பார்க்கும்போது
திருக்கண்டு ஆடியது முடிந்ததப்பா
    சிவசிவா வென்னசொல்வேன் வெளிதானுச்சு
மருக்கொண்டு நின்றவெளி தன்னைக்கேளு
    மகத்தான அண்டவெளி உச்சிதானே. (49)

உச்சியென்ற மூலமடா ஆர்தான்காண்பார்
    உண்மையென்ற ரகசியத்தை வெளிவிடாதே
பட்சியென்ற பட்சியடா அண்டரண்டம்
    பாய்ந்துநின்ற மத்தியடா புருவமத்தி
குச்சியென்ற கோலதனு ளளந்துபார்க்கக்
    கொடிமுடிக்கும் அடிப்படைக்கும் மிச்சமாச்சு
உச்சமென்ற மாளிகையில் நின்றுபார்த்தால்
    ஓங்காரக் கம்பநுனி மிச்சமாச்சே. (50)

உ

குருவே துணை.

எண்பத்தோராவது:

கௌசிக முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௧௰.

ஓங்காரச் சுழிமுனையி லொளிவுமாகி
ஒன்றாகி யிரண்டாகி யுலகமாகி
றீங்காரப் பெருவெளியா யணுவதாகி
நிரந்தரமா யருவுருவா யல்லாதாகி
ஆங்கார மத்துவித நிலையதாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
ஸ்ரீங்கார நடுவணைமுச் சுடருமாகிச்
சித்தான வஸ்துதனைச் சிந்தைசெய்வாம். (1)

அகாரமல்லோ கருவுடனே விந்துமாச்சு
அகாரமல்லோ அன்னையொடு தந்தையாச்சு
அகாரமல்லோ ஆடுகிற வித்தையாச்சு
அகாரமல்லோ கண்காணு தெட்டதாச்சு
அகாரமல்லோ மதியுடனே விதியுமாச்சு
அகாரமல்லோ அகண்டபர வெளியுமாச்சு
அகாரமல்லோ குருவுடனே சீடனாச்சு
அகாரமடா வுபதேசப் பொருளுமாச்சே. (2)

ஆச்சப்பா அகாரமுட னுகாரமாகி
அருளொளியா யிருந்தாளே ஆத்தாளாத்தாள்
பேச்சப்பா வயதுபத்து ளென்னையின்முன்
பேரான ராசிகன்னி விண்மீன்சோதி
நீச்சப்பா பூர்வமெனும் தசமிதன்னில்
நிராமயத்தின் பேருரைத்து யென்னையழைத்து
மூச்சப்பா ஆதியென்ற பொருளதாகி
முழங்குகின்ற மூலமந்தி ரஞ்சொன்னாளே. (3)

தானான நவமாகி யறுமூன்றாகித்
தன்மையருட் புனலதனிற் படிந்திட்டாரே
வேனான மூவர்களு மொன்றேயாகும்
வெளிதோணா தெவர்களையு மேச்சுப்போட்டார்
நானான விட்டகுறை மார்க்கங்கண்ட
நல்லவர்க்குச் சாபமதை நிவர்த்திசெய்ய
வானான அக்கரத்தைத் தியானியென்று
வழுத்தினார் மந்திரோப தேசமென்னே. (8)

என்னசொல்வேன் பெரியோர்க்குப் பெருமையாச்சு
இதையறியா மாந்தர்களுக் கழிவுண்டாச்சு
முன்னமே பதினெண்பேர் சொன்னநூலை
முற்றுமுணர்ந் தேசோதி நிலையினோடு
நன்னயமாய் மனதொருமை யாகக்கண்டேன்
நற்செம்பு கற்கரடு யெல்லாம்நீரே
சொன்னநீர் கனலாச்சு பற்பமாச்சு
சோதிசெய லுற்றிடவே மெய்யென்றெப்பே. (9)

ஒப்பிடவே மூன்றுபொரு ளொன்றதாச்சு
உற்றபேச் செல்லாமங் கொடுங்கிப்போச்சு
அப்பனே லகிரியென்ற புரவியேறி
அப்பாற்செல் பொய்நீங்கி மெய்யேயாச்சு
செப்பாதே செகத்தோர்க்குத் தெரிந்தாற்போச்சு
செயலான சொல்லதுவும் பொய்யாப்போச்சு
தப்பாதே நூற்பார்க்கத் தெளிவதாச்சு
தன்மூச்சால் மூச்சற்ற யிடத்தைக்காணே. (10)

காணவே முக்காலுந் தப்பிடாது
கணக்காக அஷ்டசுத்தி யிதனாலாகும்
தோணவித்த நூலறியார்க் கொன்றுமில்லை
சுத்தமுட னெட்டிரண்டு மறிந்துபாரு
நாணமற்று நூலறியா மடையரோடே
நாடிநீ கூடாமல் முத்திசித்தி
பேணவே வாலைபதி மூன்றுள்ளாகப்
பெருமையுடன் மதிபமுத மங்கையுண்டே. (11)

உண்டிருப்பா யதனைவிட்டு மாயைதன்னில்
உழன்றுபொருள் தேடிநர கினில்வீழாதே
கண்டிடுவா யிந்நூல்பூ ரணத்திற்சேர்க்கும்
கதிநிதியுந் தருகும்பன் மூன்றுங்கோணம்
விண்டிடுவா யெட்டிரண்டும் விதியமைப்பும்
விட்டகுறை யுங்கே ணும் நதிபன்மூன்றில்
பண்டான மலங்கழிய மூழ்கினுக்காற்
பவமகன்று முத்திநிலை சித்திகேளே. (12)

கேளப்பா பன்மூன்று பதியினுள்ளே
கெடிபார்த்து நாவுணர்ந்து பூரணத்தை
மீளப்பா பொங்காமற் காத்தாயானல்
விதமான கரணமுடி யொளியேவீசும்
வேளப்பா கோடிமதி கதிருந்தோணும்
மேவியதோர் சோதியதைக் காணக்கூசும்
நாளப்பா லுதயகதி ரிளமைவீசும்
நாடப்பார் சொரூபசித்தி மெய்யுமாமே. (13)

மெய்யான மண்டலமுங் குருவுமாக
மேவியந்தச் சோதிபதந் துலங்கும்பாரு
செய்யாமற் றயங்காதே சுத்தியஞ்சொன்னேன்
சிந்தைமகிழ்ந் தின்னமொரு கருவைக்கேளு
வைபவமாய்ச் சொல்லுகிறேன் சேர்க்கையாக
வளமான நாதமதை முன்னேதானும்
மெய்யப்பா வாங்கிமதி யுப்பினோடு
மேவுபொரி காரமிந்த மூன்றுமொன்றே. (14)

ஒன்றான இடைதசநா தத்தினோடு
உற்றபுழு கும்பழச்சார் பலந்தான்கெந்தி
நன்றான வேழதனுற் கண்டேன்வேதை
ரகசியமீ தெனைப்பெற்றாள் மெச்சிக்கொண்டாள்
வென்றியித னுடனிந்த்ர கோபஞ்சேர
விதமான கருவெட்டு மறைக்கும்போது
கன்றுடனே பசுச்சேருந் தன்மைபோலக்
கனவேந்தன் சார்துளிவிட் டேற்றுவாயே. (15)

ஏற்றசரக் கறுபத்தி நாலுஞ்சாகும்
இதைமதியாற் காணநட மாடும்வேதை
போற்றுவா யிறுகிகுரு வாகியுன்னைப்
பூரணத்திற் சேர்த்துவிடும் பொய்யீதல்ல
சாற்றியதை நம்பாம லலைந்திடாதே
தானீனுப் பசுவுக்குக் கன்றங்கேது
காற்றிரமாய் ஊமையட் சரத்தையோதி
கள்ளமிலா வொன்பதுக்கு மாகுமென்னே. (16)

என்னவெட்டி ரண்டாலே ரசந்தான்கண்டு
இயல்பான மனந்தேறிப் பாருபாரு
நன்மையிந் நூற்பார்க்கக் [illegible]வுமாச்சு
நாடுமே ரணுவாச்சு அணுமேராச்சு
தன்மையா மவுனமல்லோ ஊமென்றாச்சு
தனையனே அறிவினு லறிவைப்பற்றி
ஒன்றிடவே அதீதமடா துரியாதீதம்
உற்றுமனங் குவிந்துபூ ரணத்தைக்காணே. (17)

காணவே அன்னையுனக் கமுதமீய்வாள்
காரணமா மறுபிறவி யில்லையப்பா
தோணவே சொரூபமது வொன்றேயாகும்
சுத்தெழுத்து யிருபத்தி யொன்பதாகும்
பூணவே அருட்கண்ணாற் சூட்சம்பாரு
புகலான வுனதகத்தி லகத்தைக்கண்டு
மாணவனே ஆச்சரிய மைம்பத்தொன்று
மகத்தான யிருபத்தி யொன்றதாமே. (18)

ஆமப்பா சிவலிங்க மானமூலம்
அளவற்ற தேகமதற் கெல்லாமாதி
தாமப்பா யிரண்டொன்றுஞ் சுயம்புஸ்தானம்
தற்பரத்தி லிருபத்தொன் றுகும்பாரு
நாமப்பா நவசித்த சரியைசித்தி
நலமான மண்ணும்விண் ணுனமூலம்
வாமப்பா மற்றதில்லை யிதனின்மூலம்
வளமான நவமூலஞ் சுயம்புதானே. (19)

ஞானநிலை தெரியவே வேணும் இதில்
நால்வேத வுண்மை தெரிந்திடவேணும்
மோன நிலைதெரியவே வேணும் யோக
முடிவான வஸ்துவை முன்தெரியவேணும். (14)

அட்டகரு மந்தெரிய வேணும் அதற்
காதார மானகலை தெரியவேவேணும்
திட்டமாய் வாசிநிலை வேணும் இது
தெரிந்துகொண் டாற்சித்த னாகவேவேணும். (15)

பந்தங் கடந்தவனே சித்தன் பாரில்
பஞ்சமா பாதகத்தை விட்டோனேபத்தன்
இந்தவிதந் தெரிந்தவனே சித்தன் அதி
லென்நிலமை கண்டவ னேசிவமுத்தன். (16)

கல்லுளிச்சித்தர் பாடல் டிசு.

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

சுயம்பதுவே முன்னின்று முடித்தபேச்சு
சூட்சமெனும் மூலமதே யெல்லாமாச்சு
வயமான முப்பொருளோர் வடிவமாச்சு
வல்லவிடந் தண்ணமுத கற்பமாச்சு
பயனறியார் தமக்கிதுவே நரகமாச்சு
பாலமடா மயிர்ப்பாலம் நெருப்பாறுச்சு
நயமான பதியறியக் கதியுண்டாச்சு
நாட்டிலே பேச்சொன்றும் பேசொண்ணாதே. (20)

ஒண்ணாது பேச்சதனால் மோசமாகும்
உற்றமூச் சடக்கியுட் கருவைத்தொட்டு
அண்ணலெனுங் குருவோடு மூலந்தொட்டு
ஆச்சென்று தொட்டவிடம் பொன்னுமென்று
வண்ணமுடன் குருசொன்னார் யானுஞ்சொன்னேன்
மண்டலத்தில் மற்றவர்க்கு விண்டிடாதே
விண்ணமிலா பூரணத்தின் காலைப்பாரு
மேலான வழிகிட்ட வெட்டும்பாரே. (21)

வெட்டியே எட்டிரண்டால் விந்தைக்கட்டு
விளங்கவே கால்நால்சொற் கருவைப்பாரு
எட்டுதிரு வெழுமசபை யேழுக்குள்ளே
ஈசனுடன் சத்தியிரண் டேகம்பாரு.
வெட்டவெளி கண்டதொரு சித்தர்மெச்ச
விளம்புகிறேன் மறைப்புவித்தை தீர்க்கமாகத்
திட்டமுடன் மாதளம்பூ மலரும்பத்து
செப்பும்பூ வாதியேக போகந்தானே. (22)

தானான பூவம்பேய்ப் பீர்க்கன் மூலம்
தனிசித்தா மணக்குரசம் நாலுஞ்சேர்த்து
வேனான சமவிடையா யரைத்துவாங்கி
வையமதில் மணாளனுமே யிறந்தபோது
மானான மாதரழுங் கண்ணீரோடு
வகையுண்ணப் பாலுடன்முற் கநவுஞ்சேர்த்து
கோனாக அதன்பின்பு மறைத்துவாங்கி
குளியானை யஞ்சுபத்தும் வருத்தப்போடே. (23)

போட்டுப்பே ரண்டவெண்ணெய் யேழுங்கூட்டிப்
புகலான யிருட்டறையிற் கலத்துத்தூரில்
நாட்டமுடன் மத்திக்கும் போதுசொல்வேன்
நான்முகத்தோன் சொன்னகால் வேதமொன்றாய்
தேட்டமுடன் கண்டறியா வெழுத்ததான
சிறந்தமொழி யேகமென்ப தூமையூமை
வாட்டமில்லா துன்னியே மத்தித்தாக்கால்
வருநிறஞ்செம் மைப்பிர்ம வித்தையாமே. (24)

வித்தையாம் மாதுமா தளம்பூவாலே
வேண்டிமுன் மறைத்ததையும் வெளியாய்ச்சொன்னாள்
நித்தனாய்ச் சுகானுபவ மிதிலேகாணும்
நினைவாகக் கருமையைச் சிமிழில்வைத்துச்
சத்திபதம் தியானித்துச் சரீரத்துள்ளே
தானுமறைந் திருசுழியு மொன்றாய்நின்ற
பத்தியாய் நந்திகுரு நாசிமூலம்
பார்த்தம்மா வென்றுபல விதமாய்ப்போற்றே. (25)

போற்றியே கருவிருந்த சிமிழைப்பாரு
புகழான சிமிழ்விழிக்குத் தோற்றாதப்பா
சாற்றிடுவேன் சிமிழ்தோணத் தியானந்தன்னைத்
தானேழு வெழுமசபை யிலங்கிநின்று
வீற்றிருக்கும் கிரிமாவே லகிமாவென்று
வேண்டியகி மாமதிமா வாவாவென்றே
மாற்றமிலா கிரிகைசித்தி வாதசித்தி
வாவென்று யேழுதரஞ் சொல்லிப்பாரே. (26)

பார்த்திடவே சிமிழுனக்குத் தோணுமெய்யாய்ப்
பண்பான கடிகையே மூக்குள்தானும்
நேர்த்தியுட னிதையறிந்து கருவாமையை
நீதிலதம் பணவிடைதான் புருவமையம்
சேர்த்தியுடன் திலதமிடப் புவியிலுள்ளோர்
தேடியுனைப் பார்த்தாலும் யாருங்காணார்
பூர்த்தியாம் வெளிகண்டோ ருன்னைக்காண்பார்
புகழான குருவருளாற் பலிதந்தானே. (27)

தானான திலதமிடப் பசாசுபூதம்
தண்ணிரவும் பகலுனக்குக் கண்ணிற்றோணும்
வேனான பல்லோர்வாழ் கூட்டந்தன்னில்
வேணபடி சென்றுசத்த மிட்டாலுந்தான்
கோனான வுன்றனையு மொருவர்காணார்
குறிப்பறிவாய் நந்திதிரு மூலர்மைந்தர்
வானான கருவூரார் செய்தவித்தை
மகிழ்வாய்ச்செய் யோகியடா சித்தனாமே. (28)

ஆமப்பா சிவயோகிக் கிம்மைவேணும்
அவனிதனில் மானிடர்க்கு யீய்ந்திடாதே
நேமப்பா சித்தர்க்குச் சித்ததாடும்
நீதமுள போகர்மன மறிந்ததாகும்
தாமப்பா பூரணத்தோ டுள்ளுந்தானாய்த்
தராதலத்தில் மூவேழுந் தெரியலாகும்
நீமப்பா பிரகசிக்குஞ் சத்திருபம்
நிலையான முப்பாழுக் கப்பால்நீயே. (29)

நீயறிந்து நிற்குணத்தின் குறியைக்காண
நிராமயமே குருவாய்முன் பாகத்தோன்றித்
தூயவெளி நிர்த்தனத்தைத் தோணச்செய்வார்
சுத்தபிர்ம சற்குணமும் நீயேயாவாய்
தாயகமா யட்டசித்தி மெய்யிற்காணும்
தானவனே நீயாகிச் சுகிர்தனாவாய்
சேயனே யிந்நூல்தான் மெய்மையாகும்
சேகரமாய்க் கண்டறிவா யீதுமுற்றே. (30)

கௌசிகமுனிவர் ஞானசூஸ்திரம் ௩௰,
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த வத்திராயிருப்பு அ. மு. பாண்டியம் பிள்ளை யவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எண்பத்திரண்டாவது:

மிருகண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞானம் ௩௰.

ஆதிபர மானகுரு பாதந்தன்னை
அனுதின்மு மனதிருத்தி யருளைப்போற்றிச்
சோதியாம் மெய்ஞ்ஞான முணர்ந்தனைக்குச்
சொல்லுமொரு காரணசற் குருவையண்டி
நீதியுட னெந்நாளுங் காத்துநின்று
நினைவுகெட் டுனைப்புகழ்ந்து மகிழ்ந்திடாமற்
சேதியொன்று செப்புமுனே பணிவாய்ச்செய்து
தேசிகற்குப் பத்துமிரண் டாண்டுதொண்டே. (1)

தொண்டுசெய் திடப்பின்னே காட்சரத்தின்
சுயப்பொருளீ தென்றுசித்தி முத்தியோடு
பண்டுபரி வாசியுமூன் றக்கரத்திற்
பற்றியதோ ரெட்டிரண்டீ தாகுமென்றும்
கண்டுகொள்நீ யென்றுகலை நாலுக்குந்தான்
கணக்கான வழிதுறையு முபதேசிப்பார்
அண்டுமித மூாயிரத்தெட் டானபீட
மானதிரு வாசிதனைப் போற்றிநில்லே. (2)

நில்லப்பா மானதமாய்ப் பூசைசெய்து
நிலைபுருவ மத்தியொளி யறிந்தால்ஞானம்
வெல்லப்பா ஆசையென்ற பாசந்தன்னை
விலக்கிட்டே நின்மனதும் பரத்தைப்பற்றும்
அல்லப்பா வாசிதனை மூலத்தூனு
அப்பவல்லோ பரவெளியைப் பற்றுமாசை
செல்லப்பா பலவழியும் பார்த்தாயானல்
சிலம்பொலியின் நாதமதுந் தோற்றலாச்சே. (3)

ஆச்சப்பா ரேசகத்தை முதன்மையாக
அறிந்துகொண்டு பூரகத்தைப் போற்றிநில்லு
பேச்சப்பா கும்பகத்தை யுணர்ந்துபாரு
புகழூறுதி யுண்மையிடந் தன்னைக்கேளு
நீச்சப்பா பழகுவது கடினமெத்த
நேர்மைசொன்னால் மூன்றினுட நிறத்தைக்கேளு
வாச்சப்பா குணங்குறிமூன் றுக்குஞ்சொன்னால்
வகையாவி யுடல்பொருளைத் தத்தஞ்செய்யே. (4)

செய்யவுட லுயிருமா ரென்றுபாரு
சிறப்பாகும் பொருளுடனுற் குருயாரு
பையவே நின்றகுரு பரத்திறேடு
பகருமா தாரமென்ற வாறும்பாரு
வையத்தே விழியொளியும் வெளியிறேடு
வீரான காலடங்கி நடனஞ்செய்யும்
துய்யமணி யானதொரு கருவிபாரு
சுத்தசித் தாந்தவே தாந்தந்தானே. (5)

தானென்ற முத்தர்களுக் கிரண்டுமொன்றே
தன்மையுடன் நாதவொளி கண்டால்மைந்தா
நானென்ற வகம்போச்சு மாயைபோச்சு
நாதாந்தக் களஞ்சியமாம் வாமபூசை
வேனென்று கும்பித்து வுள்ளேரேசி
விளங்குமொளி கீதமொடு நாதங்கேட்கும்
பானென்று மூன்றறிய மனமடங்கும்
பார்த்திடுவா யின்னமொரு சூட்சங்கேளே. (6)

கேளப்பா மனந்தானே புத்தியோடு
கெடியான வாங்காரஞ் சித்தமாச்சு
வாளப்பா கதிர்மதியு மண்டபிண்டம்
வகையாக மனந்தானீ சுரியுமீசன்
நீளப்பா மாயைமெய்ஞ் ஞானமாச்சு
நிலையான வாசிபர பிர்மத்தோடு
கோளப்பா வன்றிமனம் விந்துநாதம்
குணமான ரூபத்தோ டரூபமென்னே. (7)

உ

பரமபதிதுணை.

எழுபத்தெட்டாவது:

கஞ்சமலைச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# கலைக்கியானம் உ௩.

மூலவட்ட மானகுரு பாதங்காப்பு
முத்திக்கு வித்தான முதலேகாப்பு
ஞாலவட்டந் தங்கிமதி யமுதங்காப்பு
நான்முகனும் நாரணனும் ருத்ரன்காப்பு
காலவட்டச் சுழிமுனையு மிடையுங்காப்பு
கதிர்முனையும் பிங்கலையும் வாசிகாப்பு
கோலவட்டக் குமரியுட பாதங்காப்பு
குருபாதம் மறவாத குணங்காப்பாமே. (1)

காப்பொன்று தப்பாக்கை காட்டிக்கண்டாற்
கண்கெட்ட குருடனுக்குத் தோணுந்தோணும்
கோப்பொன்றும் வேண்டாம்மெய்க் குகைக்குட்செல்லக்
கூசாம லொருமனதாய் நின்றுதேறு
ஏப்பொன்று மில்லையப்பா யெந்தன் நூலில்
என்சொல்வேன் வேதமுறை யியம்பக்கேளு
மாப்பொன்று மில்லையப்பா வகையதான
வழியொன்று யிருபாதை வழியைக்கண்டே. (2)

கண்டுகண்டு சித்தரெல்லாம் மனதிரங்கி
கள்ளம்வைத்துக் கண்திறந்து வெளியாய்ச்சொன்னார்
கொண்டுகொண்டு அவரவர்கள் பாஷையாலே
கொட்டினார் வெகுகோடி தேசபாஷை
விண்டுவிண்டு வெகுகோடி சாஸ்திரத்தை
விளம்பினார் கோணத்தி லிருந்துகொண்டு
பண்டுபண்டு பலநூல்கள் படித்ததெல்லாம்
பார்க்கவிரு தசமூன்றிற் பலனைப்பாரே. (3)

பலனேது ஒன்றுமில்லை பார்த்தறிந்தால்
பரமகுரு வெளிகாணும் பார்க்கும்போது
புலனேது ஒன்றுமில்லை பூமிதன்னிற்
புத்தியுள்ள மானிடரே புகலக்கேளு
கலனேது ஒன்றுமில்லை அழைப்பதற்குக்
கலங்காமல் மயங்காமற் கருதிப்பாரு
தலனேது யவ்விடத்தி லிடமுமுண்டோ
தாயாரைத் தனிவீட்டிற் ருக்கிப்பாரே. (4)

வீட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கெஞ்சி
விளையாட வரவுரைத்தேன் மெய்யுள்ளோரே
நாட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கெஞ்சி
நலமாக இருகாலைப் பிடித்தாயானால்
ஏட்டிலிருந் தாயிதனை யெங்குந்தானாய்
ஏகாந்த வெளிகாண்பாய் இருளைக்காணாய்
பாட்டிலிருந் தாலென்ன பலிக்குமோடா
பாங்கான யொளிமலையிற் பாய்ந்துபாரே. (5)

பாரப்பா கண்மூக்கு மத்திக்குள்ளே
பதறுமற் பார்த்திருந்தாற் பசிதானுண்டோ
காரப்பா அடிமுடியும் நடுவுங்காணும்
கலங்காமல் நாலுமதிற் குள்ளேசேரும்
ஆரப்பா யிந்தமுறை பார்க்கப்போரார்
அருளான தாயெனக்குச் சொன்னவித்தை
தூரப்போ யலைந்தாலுஞ் சொல்வாருண்டோ
சூட்சமிந்த வழிகண்டு தொழிலைப்பாரே. (6)

பாரப்பா வேதமுறை பதியிற்பாரு
பதினாறும் பன்னிரண்டும் அதுதான்வேதம்
மூரப்பா அஞ்செழுத்திற் பிறந்தவேதம்
மூகமதன்பின் னஞ்செழுத்தின் விபரங்கேளு
வேரப்பா அ-இ-உ-எ-ஒ-அஞ்சு
விதமான வேதமென்ற தாய்தானப்பா
சாரப்பா நால்வேத மதினாலாச்சு
சத்திசிவ மென்றறிவீர் நாவினாலே. (7)

நாலென்று சொன்னமொழி யேதென்றக்கால்
நல்லமனப் புத்திஆங் காரசித்தம்
வாலென்றுந் தலையென்று மதுதானப்பா
வசியென்ற வெழுத்துதலை வாசலாச்சு
கோலென்ற சுழிமுனைதான் நடுவதாச்சு
குலமான யிடைபினடி முடிதானாச்சு
பாலென்ற அமுதமையா நினைவதாச்சு
பதினாறும் பனிரண்டும் பதிந்துபாரே. (8)

பாரப்பா ஒளிக்கப்பா லொன்றுமில்லை
பதிகடந்து அப்புறத்தே போனாயானால்
சீரப்பா உன்னிடத்தி லாணிப்பார்த்தாற்
செகமெல்லாஞ் சிற்றண்டத் துள்ளேகாணும்
ஊரப்பா வுலகத்தி லுள்ளதெல்லாம்
உன்னுடம்பிற் றனித்தனியே காணலாகும்
காரப்பா கல்லும்மரங் குளங்கள்கோவில்
கண்மூக்கு மத்தியினுட் கருத்திற்காணே. (9)

கருத்திலே காணுமடா வேதாந்தங்கள்
காலென்றுந் தலையென்றும் மாறிச்சேர்த்தால்
பொருத்திலே காணுமடா சத்திமூலம்
பொல்லாத தோசிகட்கு மெய்பொய்யாகும்.
வருத்தினா லானந்த பால்நீகாண்பாய்
வண்டரெல்லாம் வாய்வீணாய்த் தள்ளுவார்கள்
குருத்துக்குள் இலைபூகாய் பழமுமாகும்
குறியான குலைசாயுங் குன்றும்பாரே. (10)

இரசபதங்கம்.

குன்றான ரசபதங்கங் கூறக்கேளு
குறிப்பாகச் சொல்லுகிறேன் மணியதாக
நன்றான செங்கலுப்பு யிடித்துத்தூளாய்
நயம்பெறவே சட்டிக்குட் பாதியிட்டு
மன்றான குகைதனையே நடுவில்வைத்து
மணம்பெறவே ரசமதனை யூத்தியேதான்
நின்றான மேலுமிந்த வுப்பிட்டேதான்
நிதானமாய் மேற்சட்டி கவிழ்த்துமூடே. (11)

மூடியே அகண்டதொரு அடுப்பின்மேலே
முயற்சிபெற வேற்றிமெள்ளத் தீயைமூட்டு
நாடியே இரவுபக லெரித்துநீயும்
நன்றாக ஆறியபின் னெடுத்துப்பார்க்கத்
தேடியே மேற்சட்டி மேலேநிற்குந்
திறமான பதங்கமது படிகம்போலாம்
சாடியே வாலையினால் வடித்தெடுத்து
தன்மையுடன் பரணிதனி லடைத்துவையே. (12)

அடைத்திருந்த பதங்கமதைப் பனைவெல்லத்தில்
ஐந்தரிசி யிடையாக வெழுநாளீய
நடையிடைதன் கைகாலின் குடைச்சல்மற்ற,
நலமில்லாப் பரங்கிமுதற் சூலையோடும்
தடையில்லாக் கதலியெனுங் கனியிலூட்டு
தவறாமற் பாற்கஞ்சி மிகவேபூட்டு
இடைமீறி வாய்பிடித்தால் வேலாம்பட்டை
யெனுங்கியாழுங் கொப்பளிப்பா யுகந்துதானே. (13)

உகந்தவயச் செந்தூரஞ் செப்பக்கேளு
வுண்மையாய் லாடமதை ராவியேதான்
இகந்துவிடா மற்படிக்குப் பலந்தானைந்து
இன்பமுடன் சம்பளத்தின் சாற்றிலிட்டு
புகந்தவாய் மூன்றுநா ளானபின்பு
புன்மையிலாத் தண்ணீர்விட் டரைத்தெடுத்துச்
சுகந்தரவே வெள்வேலாம் பட்டைச்சாற்றால்
சோம்பாம லைந்துபுடம் அரைத்துப்போடே. (14)

புடமிடுவாய் நெல்லிக்காய்ச் சாற்றிலப்பா
புகழ்ச்சியுட னறிபுடந் தீர்த்துப்போடு
அடவுடனே பார்த்திதனை யெடுத்துக்கொண்டு
அதிவிதமாய் வெற்றிலையின் சாற்றாலப்பா
திடமுடனே பத்துபுடந் தீர்த்தாயானால்
திவ்யமதாய்க் கண்டுகொள் சிவப்புமாகும்
கடவுள்பதந் தொழுதேற்றிக் குழலில்வைத்துக்
கனத்தபித்த வாய்வுதனை யெடுத்துப்பூட்டே. (15)

எடுத்துபல சோகைவிக்கல் வாந்திபாண்டு
எதிர்த்தகுண வெலும்புருக்கி யிளைத்தமேனி
அடுத்ததொரு கழிச்சலன்னத் துவேசம்யாவும்
அகன்றுவிடச் செந்தூரந் தட்டிக்கேட்கும்
தொடுத்துவிடு மனுப்பான மறிந்துமேலாய்த்
தொடர்ந்துசெய்தா லின்னம்வெகு நோய்கள்தன்னைச்
சடுத்தமிட்டுத் தீர்க்குமப்பா ரசபதங்கம்
சமர்த்துடனே யித்தொழிலைச் செய்வாய்நீயே. (16)

தொழில்பார்த்துச் சுளுவாகச் செய்துகொண்டால்
தோற்றாது பலவிதமாய்ப் புத்திதானும்
விழியதனால் நோக்குமெள்ள அறிவைத்தூண்டி
வியப்புடனே கைபாக மேற்றிநின்றால்
ஒழியாது அவிழ்தமதின் மார்க்கமப்பா
ஓதுவாய் பலவிதமாய்ப் பேசுவார்கள்
வழியிதுதா னிலேசான முறையிற்றேர்ந்து
வகுத்தபடி பண்டிதத்தைப் பார்ப்பீர்தாமே. (17)

பார்த்திதனை நோயாள ருண்ணும்போது
பண்புடனே நெய்பாலும் வெண்ணெய்யாகும்
தேர்ந்தாட்டி னிறைச்சிகிச் சடியுமாகும்
தித்தித்த திராட்சியென்ற பழமதாகும்
ஏர்த்தபடி கோதுமையின் ரொட்டியாகும்
இன்பமுடன் கொண்டவர்க்கு ஏற்குமேற்கும்
சீர்த்துவமாய் தெரிந்துணர்ந்து பார்த்துநின்றால்
தெய்வசித்தப் படியெதுவு மாகுந்தானே. (18)

வேறு சந்தம்.

ஆகிய சொல்லே தென்றால் அடவுடன் புகலக் கேளு
பாகிய சந்த ஞதி பண்புறுந் தயிலந் தன்னை
யூகியாய் ஸ்நானஞ் செய்ய வுற்றதோர் பிணிகள் நீங்கும்
யோகிக ளெனக்குச் சொன்ன வுச்சித மொழியி தாமே. (19)

மொழிந்த சொற் றவறிடாமல் முனிந்துநேர் பாகங் கண்டு
அழிந்திடச் செய்யும் நோயை அதட்டியே நீக்கும் பாரு
தெளிந்திடத் தேகந் தன்னைத் திறப்படப் போற்றி நிற்கும்
ஒழிந்திடாத் தேக மென்றே வுயர்பட வுணர்வீர் தாமே. (20)

படர்ந்தது அனேக மென்று பார்ப்பது வொன்று தானே
தடமிது வேறென் றெண்ணித் தவறிடா திருத்தல் நன்று
அடவுடன் செந்தூ ரத்தா லாகிடு மனந்த மார்க்கம்
சடமது தெளிவுற் றோங்கிச் சகலமும் நன்மை யாமே. (21)

நன்மையாய் நான்தான் சொன்ன நடத்தையை யறிந்த மேலோர்
இன்பமாய்க் கண்டு தேர்ந்து யிவ்விதப் பாக மொப்ப
அன்புடன் செய்வோர்க் கெல்லா மதிகநற் குணம தாகும்
முன்புநாம் மொழிந்த நியாய முறையிது நிசம தாமே. (22)

முறையது சுளுவி தென்று முனிவர்க ளெனக்குச் சொன்னார்
நிறைவுட னிந்நூல் யானும் நிகழ்த்தினேன் அருமை யாக
மறைபொரு ளறிய வேண்டி மாநிலத் துதித்தோர்க் கெல்லாம்
குறையிது வணுகிடாது குணந்தருங் கனக மாமே. (23)

கஞ்சமலைச்சித்தர் கலைக்கியானம் உங.

முற்றிற்று.

மதுரை மேலமாசி வீதியிலிருக்கும் பார்த்திபனூர் கிராம முன்சீப் சொக்கலிங்கம்பிள்ளை குமாரர் நாடக உபாத்தியாயர் சங்கிலியா பிள்ளை அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிட்டலானது.

என்னவே நிலம்நீர்தீ காற்றும்விண்ணும்
இயல்புமன முதித்தொடுக்க மானவாறும்
இன்னவகை யென்றுகேள் குருவைத்தானும்
இதையறிந்து வங்கென்று முள்ளேரேசி
நன்னயமாய்ச் சிங்கெனவு முள்ளேபூரி
நாடியே அங்கென்று முள்ளேகும்பி
சொன்னயமாய் அம்-உம்-ஓம், சிம்,யம்,மென்று
சிந்தைநினைந் தேதியானஞ் செய்குவாயே. (8)

செய்துநடு நாடிக்கண் பிரபையேற்றச்
சிறப்பாக அம்-உம்-சிம் வம்-ஓம்-மென்று
பையவே ஓம்-ஐயுங் கிலியும்சவ்வும்
பரவாசி வாலையாம் பரைசிவாவென்
றுய்யவே ரேசகம் முப்பத்திரெண்டு
சுயமான பூரகம்பன் னறதாகும்
வைபவமாய்க் கும்பகமும் அறுபான்நாலு
வகையாகப் பிராணாயங் குருவைக்கேளே. (9)

கேளப்பா பத்தென்ற நாடிதானும்
கெடியான தாரணையாய்ப் பிலமறிந்து
நாளப்பா யோகமென்ற நிலையைப்பற்றி
நன்மையுடன் கண்ணின்ற யிடமறிந்து
வாளப்பா வாமமென்ற பூசைசெய்து
வஸ்தான கருவறிந்தால் யோகமாச்சு
நீளப்பா அம்-உம்-ஓம் வங்-யம்-ஓமே
நெறியான ய-வ-சி-ம-ந வென்றுதானே. (10)

தானாக வைந்தெழுத்தை மாற்றவேணும்
தன்மையுட னிடகலையிற் சிங்-வங்-யங்-நங்
தானமங் ஓம்-ந-ம-ய-வ-சி-யென்று
சத்தான சிகாரமதை யறியவேணும்
தானாகச் சுழிமுனைக்கு ஓம்-மங்-நங்-யங்
சதா-வங் சிங்-ஓம்-சிவய நம-ஓமென்று
தானாக நகாரமதை யறியவேணும்
சதானந்த சுழிமுனையி னொளிவைப்பாரே. (11)

உ

குருவே துணை.

எண்பத்தோராவது:

கௌசிக முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௩௰.

ஓங்காரச் சுழிமுனையி லொளிவுமாகி
ஒன்றாகி யிரண்டாகி யுலகமாகி
றீங்காரப் பெருவெளியா யணுவதாகி
நிரந்தரமா யருவுருவா யல்லாதாகி
ஆங்கார மத்துவித நிலையதாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
ஸ்ரீங்கார நடுவணைமுச் சுடருமாகிச்
சித்தான வஸ்துதனைச் சிந்தைசெய்வாம். (1)

அகாரமல்லோ கருவுடனே விந்துமாச்சு
அகாரமல்லோ அன்னையொடு தந்தையாச்சு
அகாரமல்லோ ஆடுகிற வித்தையாச்சு
அகாரமல்லோ கண்காணு தெட்டதாச்சு
அகாரமல்லோ மதியுடனே விதியுமாச்சு
அகாரமல்லோ அகண்டபர வெளியுமாச்சு
அகாரமல்லோ குருவுடனே சீடனாச்சு
அகாரமடா வுபதேசப் பொருளுமாச்சே. (2)

ஆச்சப்பா அகாரமுட னுகாரமாகி
அருளொளியா யிருந்தாளே ஆத்தாளாத்தாள்.
பேச்சப்பா வயதுபத்து ளென்னையீன்றாள்
பேரான ராசிகன்னி விண்மீன்சோதி
நீச்சப்பா பூர்வமெனுந் தசமிதன்னில்
நிராமயத்தின் பேருரைத்து யெனையழைத்தா
மூச்சப்பா ஆதியென்ற பொருளதாகி
முழங்குகின்ற மூலமந்தி ரஞ்சொன்னாளே. (3)

...மய நடுநாடி யொளியைப்பாரு
கண்ரேகை தன்னுடனே சுழியைப்பாரு
வட்டமென்ற வோங்காரந் தன்னைப்பாரு
மகிமையுள்ள பஞ்சவெழுத் ததனைப்பாரு
கெட்டிவிந்தை விட்டிடாக் கட்டுகட்டு
கேசரமா யதோமுகத்தி லிருந்துநோக்கு
விட்டிடா தேவிந்தை விட்டாற்போச்சு
மேவியதை நீகயிற்றாற் கட்டித்தானே. (16)

தானான மூன்றுடனே வைந்தைச்சேரு
தயங்காதே யெட்டுடனே யிரண்டைச்சேரு
வேனான பத்தோடு வொன்றைச்சேரு
வேறன்றிச் சேர்ந்துமே யேகமாகக்
கோனான துவாதசாந் தத்திற்சேர்ந்தால்
குணமான சுழிமுனைக்கா தாரந்தோன்றும்
வானான தீட்சைபத்துந் தெளிவாய்க்கேளு
வழங்கொளியாம் பூரணத்தைக் கண்டுநோக்கே. (17)

நோக்கிடுவாய் கொங்கணர்சொற் கடைக்காண்டத்தை
நுண்ணறிவாய்க் கண்டுகொள்வாய் பூசைதீட்சை
பாக்கியம்பால் பழஞ்சீனி தேன்கற்கண்டு
பஞ்சசுவை யுண்டருசி போலக்காணும்
வாக்கியமாங் குருமந்திர மமுதந்தன்னில்
வகையாக நியாசவிதம் யாவுஞ்சொன்னார்
தேக்கியதோர் கால்தலைபா னீயங்காணு
தேடிவிழி செவிநாசி யறிந்துகூடே. (18)

...டியே கண்டம்சித் தரியைக்கண்டு
குலவுபுருவத்தினடு வெளியைப்பாரு
...யண்ட வெளிதோணு மதிலிருந்து
நான்குதிசை யானதுவும் நன்றாய்ப்பாரு
...துண்டத் தின்முனைகுண் டலியைப்பாரு
உத்தமொரு மூலவா தாரம்பாரு
...யே மூலவட்டக் கரத்தினோடு
...தெளிவான சடாட்சரத்தின் மகிமைபாரே. (19)

மகிமையா மரியயன்றன் னெழுத்தைக்கண்டால்
வழியான வோங்காரக் கம்பங்காணும்
அகிலத்தில் மாண்பருக்கு வாசிதானும்
அறிந்திடுவாய் யங்-வங்கென் றேதியாணி
பகிர்ந்திடுவாய் ஓம்-அங் கென்றேயூணி
பதியிலே அங்கங்கட் சரத்தைச்சூட்டி
வகிர்ந்திடுவாய் பாழ்வெளியிற் பொன்னும்பச்சை
வாடிடாப் பிங்கலையின் சுழியைச்சுத்தே. (20)

சுத்தியே நந்திகம்ப மதனைப்பாரு
சுருங்காக ஓங்காரஞ் சிம்-வம்-மென்று
நித்தனே யம்-மம்-மென றேநினைந்து
நின்மலமா மூலமெனுந் தலத்தைநாட்டி
நத்தியே பஞ்சகோண மேலேவட்டம்
நாலிதழிட் டக்கரத்தை யமைப்பாய்ப்போடு
புத்தியுடன் வாசிபிரா ணயஞ்செய்ய
புகல்மூல கணேசன்வல் லபையுங்காணே. (21)

காணப்பா அத்தியெனு மூலம்பார்க்க
காரியமாஞ் சித்தெல்லா மதின்மேலாகும்
தோணப்பா பிருதிவியுஞ் சுவாதிஷ்டானம்
சொல்நிறம்பொன் னாற்கோண மிதழ்தானாறு
வேணப்பா வாசிவைத்து ஓம்-நம்-மென்று
வினையமுடன் பிராணயஞ் செய்யநன்று
பூணப்பா சதுர்முகன்நா மகளின்தோற்றம்
புனிதமுடன் நாடோறும் நித்தனுமே. (22)

ஆமப்பா நடனபரா பரியின்பூசை
அனுதினமு மந்திசந்தி நினைவாய்ச்செய்யே
தாமப்பா பிரமநிறம் பசுமையாகும்
தாரணியில் மாந்தரிதை யறியார்காணே
ஓமப்பா மணியான பூரகந்தான்
உற்றபிறை வட்டமிதழ் பத்தேமாயன்
வாமப்பா மாலான பூரகந்தான்
மங்குநிறம் லட்சுமியும் மாலுமாச்சே. (23)

ஆச்சுமர கதமேனி யருணன்காந்தி
அமைப்பான புரிவட்டம் வாசிதேசி
நீச்சப்பா சுகந்தியா லம்பொசித்து
நிலையாக ஓம்-வம்-மம் உம்-மென்றேதான்
பேச்சப்பா பிராணுப வரிசையாகும்
பிராணுன பதியரசன் முன்னேதோன்றி
மாச்சலிலா சகலசித்து முணர்த்திவைப்பார்
மகத்தான நினைவெல்லாம் வசமதாச்சே. (24)

வசமாக மனம்பத்தி சுத்திசெய்து
மகிழ்வான தியானமது புரியவேணும்
வசமாக உணர்வுபற்றி யதற்குப்பின்பு
வல்லசிவன் திரிகோண வட்டமேலே
வசமாகப் பன்னிரண் டிதழ்தான்நிற்கும்
வரைகடந்த ருத்திரன்ருத் திரிதானுன்றன்
வசமாக அம்-உம்-ஓம் ஆம்-மென்றேற்று
மஞ்சனே வாசியொடு ரேசியாதே. (25)

ஆதாவா யறிவிக்கும் ருத்திரன்றன்
அவனுருவுஞ் சரிநாமம் பசுமைநீலம்
நீதமுட னுகதமாஞ் சுழுத்திவீடு
நினைவான அறிவுக்குள் லிங்கபீடம்
போதமீ தன்றிவே றேதுமுண்டோ
புகல்பிரிக்க வொண்ணுச்சின் மயமதொன்று
நாதனவன் செயலறிந்தாற் சித்தன்முத்தன்
நன்மையுடன் ரிஷிமுனியென் றுரைக்கலாமே. (26)

உரைக்கலாம் விசுத்தியறு கோணமாகும்
உற்றநிறங் கறுப்புமேல் வட்டந்தன்னில்
உரைக்கலா மீரெட்டு யிதழேயாகும்
உண்மைமயேஸ் பரன்மயேஸ் பரிதாய்ரூபம்
உரைக்கலாம் அம்-உம்-ஓம் வம்-யம்-மென்ன
உத்தமனே காலடக்கி யோகஞ்செய்ய
உரைக்கலாம் தாய்க்கதிகந் தந்தைகாந்தி
உயர்வாகும் நம்பினபேர்க் கருளுண்டாமே. (27)

உண்டாகும் சகலசித்தி காயசித்தி
ஓகோநா தாக்கள்தெரி சனைகிடைக்கும்
கண்டுடனே விளையாடக் காயசித்தி
கருணையென்ற ஆக்கினை சக்ரவட்டம்
பண்டிரண்டா மிதழாகும் நிறங்கறுப்பு
பருதியா காயவனுக் கிரகதோற்றம்
விண்டு-இம் உம்-ஓம்-ஆம்மென்றுமேவி
வினையமுடன் லட்சியத்தால் யோகஞ்செய்யே. (28)

செய்யவே சதாசிவத்தின் தோற்றங்கண்டு
தெரிசிப்பாய் மனோமணியா மாத்தாள்சத்தி
வெய்யவன்ற னொளிகோடி போலத்தோற்றும்
மிக்கிரண்டு மொன்றாய்ச்சேர் புருவம்பாரு
நையாது அவ்விடந்தா னாதிபீடம்
நலமான சதாசிவத்தி னொளிவைக்காணப்
பையவப்பா கண்கூசும் பார்க்கப்போகா
பாதைமுத்தி தனிற்றுவா தசமதாமே. (29)

ஆமப்பா முத்தியுட னஷ்டசித்தும்
அடிமுடியென் றுரைப்பதற்கு வழியுமாகும்
நாமப்பா விட்டெழுத்துந் தொட்டெழுத்தும்
நலமாக விடாதெழுத்துங் குருவைக்கேளு
தாயப்பா ஆதாரக் கருவைக்கேளு
தன்மனதி னுறுதியதே மாயைவெல்லும்
தேமப்பா அம்பலத்தை முன்னேகாண
சிற்றம்ப லம்போற்ற அறிவுண்டாமே. (30)

அறிவான தேசிகன்றான் வாசியான
அம்பலமாஞ் சித்தறிந்தா லகண்டசோதி
அறிவான அம்பரையும் உம்பரன்றான்
அருள்வடிவ மாகவங்கே உதயமாவார்
அறிவான அம்பலத்தின் புதுமைதோணும்
அடிமுடியாம் புருவமையத் தொளிவுங்காணும்
அறிவான அம்பலமு முயிருங்கண்டு
அழியாத முத்தனுமா யிருப்பாய்முற்றே. (31)

மெய்ஞ்ஞானம் ௩௰ முற்றிற்று.

உ

குருவே துணை.

எண்பத்திமூன்றுவது:

குருராஜர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானரத்தினபாணம் ருய.

அரகரா வெனுமெழுத்தாய் நின்றதுவே போற்றி
ஐயரெனு மெனையாண்ட ஐயனுக்கே போற்றி
திரிபுரையாய்ச் சகலமுமாய் நின்றவற்கே போற்றி
செகசால மெடுத்தாடு மத்தனுக்கே போற்றி
ஒருபொருளாய் உலகமெலாம் நிறைந்தவற்கே போற்றி
யோகமெனப் பலவிதமா யுணர்பவற்கே போற்றி
கருவறிந்து தனையறிந்தோ மென்பவற்கே போற்றி
காசினியி லனைவருட கமலபதம் போற்றி. (1)

வேறு சந்தம்.

ஒன்றாகிப் பலவாகி உபயமாகி
உண்மையுமாய் வெளியாகி யுறவுமாகி
நன்றாகித் தீதாகித் துயரமாகி
நாதமெனும் பேராகி நடுவுமாகி
பொன்றுவதாய் நிசமாகி நடுவுமாகிப்
புகலுவதாய்ப் புகலாத பொருளுமாகிக்
குன்றாத பேரின்ப வீடாய்நின்ற
குருவருளை யெவனாலுங் குறிக்கலாமோ. (2)

சொல்லவரி தெனச்சொன்ன ஆசானையா
துயரமெனும் விஷப்பாம்பைச் சுடுவதெப்போ
வல்லபமா மாணவங்கள் கெடுவதெப்போ
மகத்தான மனக்குரங்கு மடிவதெப்போ
எல்லையில்லாப் பெருவெளியி லிருப்பதெப்போ
இச்சையெனுங் கானல்வெள்ள மிறப்பதெப்போ
தொல்விதமாஞ் செகசாலந் தெரிவதெப்போ
சுகமான சுகத்திலின்பஞ் சொல்லுவீரே. (3)

அருள்பெறவே வணங்கிநின்று கேட்டமைந்தா
அரிதரிது ஞானவழி அறிவதார்க்கும்
பெரிதுபெரி தஞ்ஞானக் கானற்காட்டைப்
பிரிவுசெய்து நீங்கரிது பெரியோராலும்
குருவருளா லப்பொருளைப் பக்குவமாய்க்காணக்
குணங்குறியாம் பெரியோர்க்கே பரமயுகந்தெரியும்
தெரிபொருளைத் தெரியவென்று நாமுழன்றுலாகா
செகத்திலே குருவருளாற் செப்பக்கேளே. (4)

பூசையெனுங் கிரியைவிதம் நூற்றெட்டப்பா
பொருந்துசித்தி மனப்பேயின் புலையாட்டாச்சு
பாசையிலே பதினெட்டு ஊமையென்றும்
பகட்டல்லால் வேறேதும் பழகிக்காணோம்
பேசையிலே பலகோடி நூல்கள்கற்றும்
பிறங்குபல சமையங்கள் பிணக்கதாச்சு
ஆசையுள்ள தந்த்ரவித்தை அனேகங்கோடி
அத்தனையும் நிசம்பார்க்க அகந்தைதானே. (5)

தாயகமா யுலகமெல்லாம் மயக்கஞ்செய்யும்
சல்லியத்தின் மகிமைமெத்தச் சாற்றப்போமோ
ஆயிமனங் கூர்ந்தறிவில் விழலாமப்பா
அறிந்தவர்க்கு மசகமப்பா யகிலசத்தி
நேயமுட னிவையெல்லாம் பிறவியென்றே
நிண்ணயமா யஷ்டாங்க யோகந்தன்னுள்
வாயுவுட யோகவித மொன்பத்தாறு
மனமடைந்த யோகவித மொன்பத்தாறே. (6)

வீறான ஆசையெல்லாம் நீக்கிமேலாய்
மேலான யோகவிதந் தெரிந்துநாடிப்
பேறான குருவருளாற் பழக்கமாகிப்
பிணக்கறவே மனம்வாழப் பேச்சுநீக்கி
கூறாத பொருளதனைக் கூடலாகும்
குருவருளை யல்லாது கூடலாமோ
வாறான யோகவிதம் நூற்றெட்டுக்கும்
வகைதெரிய நாமுரைப்போம் மகிழ்ந்துகேளே. (7)

ஆதார மொன்றுக்கு விதமாறாக
ஐயாறு விண்ணதனில் மூவெட்டப்பா
வாதான குண்டலிக்கு ளெட்டுவிதமப்பா
வகையொன்றுக் கனந்தசித்தி மதிக்கலாகும்
தூதான இதயகுண் டலியேசோமன்
சுகவகையொன் றிற்றுணிந்த சித்திகோடி
சூதான வாகாய குண்டலியுள்யோகம்
துலங்குவித மையாறுந் துணிந்துபார்மகனே. (8)

அடக்கமுள்ள முப்பதுக்கு ளெட்டுவிதமைந்தா
ஐயனுட திருக்கூத்து அதிகதொனிகாணும்
ஒடுக்கமுள்ள அமுதமுண்ணும் யோகவிதம்ரெண்டாம்
உத்தமர்க்கே யல்லாம லுலுத்தருக்கோகிடைக்கும்
திடத்துடனே அமுதமுண்டு வெகுகோடிகாலம்
தேகமழி யாதிருந்து திரமறியலாகும்
மடக்கம்வரத் தெரியாமற் காயசித்தியென்பார்
மலமருந்தோ வுன்சடத்தை மதிக்குமவர்தானே. (9)

நெத்தியென்னும் விழிபார்க்கி லகிலமெல்லாமுருகும்
நேத்திமெத்த நேத்திமெத்த நீலகண்டன்பார்வை
புத்தியுள்ள சீமான்க ளறிந்ததிந்தப்பாதை
புலையறிந்த பாதைவரிற் புத்திகெட்டுமலைப்பார்
சந்தியமாய் மனத்தையுன்னிப் பார்க்கும்வகையறியார்
தன்மாயை பின்தொடறச் சற்குருவென்றலைவார்
நித்திரையில் லாதவிடந் தானுமதுபாரார்
நினவழிந்தாற் சித்திமெத்த நிர்க்குணமாம்பாரே. (10)

மேலான பரஞ்சுடரைப் பார்த்தவரேசித்தர்
விசித்திரமா முலகமெல்லாஞ் சணப்பொழுதிலப்பா
மாலான மனிதரொடு மாபலமிருகம்
மரங்கல்லாய்க் கெடுத்திடலாம் மரங்கல்லேயுயிராம்
நாலிரண்டு சித்தியது நயந்தெரியலாகும்
நாடிநின்று குருபாதம் நாமறியலாகும்
கால்மேலுந் தலைகீழும் நடப்பதுவுந்தெரியும்
காரணசற் குருவருளாற் காண்பவர்க்கேநிசமே. (11)

யோகமென்றுந் திரிந்தலைவார் வகையறியாமாந்தர்
யுகங்கோடி தவஞ்செய்தோர் யோகநெறிசேர்வார்
போகஞ்செய் கழுதைகளும் யோகமறிபவரோ
புத்திகெட்ட மாந்தர்களும் யோகமறிபவரோ
தேகமதி லடையோகந் துன்பமற்றதொழிலாம்
சித்தமற்ற யோகமதாற் சித்திமெத்தப்பெறலாம்
மோகமற்ற பெரியவரே தூயவருஞ்சித்தர்
மூடமற்ற தூயவரே யோகிகளாஞ்சித்தர். (12)

வெளியாக யோகவிதம் விரித்துரைத்தோமானால்
மேலான பெரியோர்கள் சாபமெத்தப்பலிக்கும்
களிகூறச் செகசாலம் யோகவிதமனதிற்
கருதாம லுரைப்பவர்வாய் கனலெழுந்துசூழும்
பளியாக யூழிமட்டும் நரகமதிலுழல்வார்
பஞ்சபா தகச்செனன மெடுத்தொளியாப்பாவம்
தெளியாத மூடருக்கு உண்மைதனைச் செப்பார்
திரமுடைய மனத்தனுக்குச் செப்புவர்நல்லோரே. (13)

கற்பமுண்டு மருந்துமுண்டு சாதகமுமுண்டு
கருத்தொடுங்கத் தந்திரமு மந்திரமுமுண்டு
உப்புடனே புளிப்புவிட்டாற் காயமதுபிலமாம்
உற்றநடு வணைதிரமாம் யோகமதுதிரமாம்
மெய்ப்புடனே யிந்தவகை நிற்கில்நெறியென்பார்
வீணான வுடம்பைநம்பி மெய்புணர்வுண்டாமோ
சர்ப்பனையாய்க் குடிகெடுக்குங் குருக்கள்தனைநம்பி
சளக்கான பிறவியிலே சாருவரோநல்லோர். (14)

ஏதப்பா ஆசையெனும் பேய்கள்பிடித்தலைந்தால்
எவரப்பா யோகத்தி லின்பமுற்றுவுணர்வார்
வாதப்பா பெரிதாகிச் சாஸ்திரங்கள்கற்று
வழியான போர்தனையும் மயக்கவிப்பார்புல்லோர்
சூதப்பா பெரிதாச்சு வாய்பகட்டுமாச்சு
துருத்திதனை மினிக்கிகம்பும் தூர்த்தகுருவாச்சு
ஏதப்பா யினியுலகில் வாய்பேசலாமோ
எல்லாரும் ஞானம்வந்து யிறந்துகெட்டவாறே. (15)

ஆசாரத் தொழிலாகி நோம்பிருந்துதெய்வம்
அனுசரித்துப் பலமிருகம் அறுத்துப்பெலியூட்டிக்
கூசாமல் நிர்வாணச் செபமுருவேசெபித்து
குறியாய்த்தன் னுடற்கிழித்து நரபெலியேகொடுத்து
மாசான அஷ்டகர்மம் விளையாடுஞ்சக்ரம்
மாச்சலெனத் தன்மனத்தை மாய்ந்தலபமாக்கிப்
பேசாமற் கணப்பொழுதி னுலகமெல்லாம்பேயாய்ப்
பிதற்றிவிக்கும் மாயைசித்தி பேசவொருதுகையோ. (16)

சித்தியென்றால் மருத்துவமாய் மருகியலையாதே
ஜெகத்தையெல்லாங் கெடுத்திடலாம் நொடிக்குமுன்னே
புத்தியுள்ள நல்லோர்க்குப் பூசைசெபம்வேண்டாம் [திரமாய்
புவனமதிற் கடைப்பேயா பொய்யுறவுவேண்டாம்
சத்தியமாய்ப் பலகோடி சித்திகள்செய்திடலாம்
சாதித்தாற் செகத்தோர்க்குச் சத்துருவாய்முடியும்
நித்தமுமே பழிபாவங் கொடுமைபயம்வேண்டாம்
நீதியுள்ள நல்லோர்க்கு நினைந்திடிற்சித்தியுமே. (17)

பேசரிது சித்திகள்தான் நான்மறைக்குமுடிவு
பேராளி தவஞ்செய்தோர் சித்திகளைப்பெறுவார்
ஆசில்லா மனத்தவர்க்கே சித்திகள்வந்தெய்தும்
அகந்தைப்பேய் பிடித்தவர்க்குச் சித்தியணுகிடுமோ
பாசமுள்ள மனத்தவரே சித்திகள்பெற்றதனால்
பலபேர்க்குத் தீங்குசெய்து படுநரகில்வீழ்வார்
வேசையர்போல் தனைப்பகட்டிப் பெருமைசெயுங்கயவர்
மேவியசித் தியுங்கொடிதாய் மேலோர்க்குநகையே. (18)

சித்தியினால் மயங்கினவர் சீவன்முத்தி யடையார்
சீவன்முத்தி யடைந்தாலும் செடத்தின்முத்தியடையார்
புத்தியுடன் செடத்தின்முத்தி பெற்றவர்தானெனினும்
பிறர்தனக்கு மெய்ஞ்ஞானம் போதனைசெய்தறியார்
சித்தியுடன் பிறர்தனக்குப் போதனையாலவரைச்
சீவன்முத்தி கொடுத்துவைத்த திறமுடையாரெனினும்
எத்தனைசா தகமிருந்துஞ் செத்தவிடத்திருக்க
எவராலும் முடியாது யிருப்பதுவுமெளிதே. (19)

கிட்டாத ஞானவெளி கிட்டுவதேபெருமை
கிடையாத மதுபானங் கிடைத்தவரேபெரியோர்
கட்டாத மதயானை கட்டினபேரரசர்
கசப்பில்லாப் படைக்கலங்கள் கட்டினபேர்சூரர்
எட்டாத கனியதனைப் புசித்தவரேசித்தர்
எழுதாத மறைப்பொருளி னியல்பறிந்தோர்புலவர்
மட்டில்லாச் சிவலிங்க மறிந்தவர்பூசகரும்
வாய்ப்பேச்சி லேதுவும் வருவதுண்டோபலன்றான். (20)

பெருமையுள்ள நூற்றெட்டுக் கிரியைவிதந்தனக்கும்
பிணிப்பறுத்த நூற்றெட்டு யோகவிதந்தனக்கும்
அருமையுள்ள தந்த்ரவித்தைச் சல்லியங்கள்தனக்கும்
ஆதியாம் பரையொருத்தி யாட்டுவள்மாய்மாலம்
தெரிபொருளாய் திரிபுரையை வணங்கியநல்லோரைத்
திரிலோகஞ் செயித்தவர்கள் செகசாலந்தெரிந்தோர்
குருவருளாற் பூசைவிதி தெரிந்துபராபரையைக்
கூசாமற் றெளிந்தவரே கூடுவர்மெய்ஞ்ஞானம். (21)

ஆத்தாளை யறியாத பூசையென்னபூசை
அம்பிகையைக் காணாத காட்சியென்னகாட்சி
பார்த்தாலும் பசியுண்டோ பாவிமகள்கோலம்
பாதகர்க்குக் கிடைத்திடுமோ பராபரையாள்சேவை
வாழ்த்தியென்ன பூசைசெய்யச் சக்கரந்தானென்ன
மனோமணியைப் பூசைசெய்ய மனோலயமேகோவில்
சாத்திரங்கள் கோடிகற்றும் சாம்பவியைக்காணார்
தாயையல்லாற் பூசையுண்டோ சண்டாளர்தனக்கே. (22)

அகிலாண்டம் பலகோடி யவட்குமொருகோணம்
அப்படியே நாற்பத்தி முக்கோணம்அடைந்தாள்
புகழான மாலயனும் ருத்திரன்மாதவரும்
பூரணியை யல்லாமற் பூசையும்வேறறியார்
உகந்தவளைப் பூசைசெய்யத் திரிதேவர்முனிவோர்
ஓகோகோ பலகோடி யுகந்தோறும்பணிந்தார்
சகலமுமாய் நின்றவள்தன் கோலமிமவரறிவார்
தன்னையறி யாதவனைத் தான்கெடுப்பாள்நீலி. (23)

வேறு

பேசாதே மகனேநீ உலகந்தன்னிற்
பேசினாற் பேயருக்கும் பெரியபேய்கள்
ஆலசகொண்ட பேய்களுடன் பேசலாமோ
அவர்செயலை வினைவே யறிவாயய்யா
வாசனைக ளறிந்துகெட்ட பேய்கள்கூடி
மாதங்கி திருவடியை வணங்கிப்போற்றார்
நேசமதில் திரிபுரையை வணங்கிக்காண
நித்தம்வினைப் பத்தருக்காம் நிசமாய்ப்பாரே. (24)

பாரப்பா மனோலயமேவாங் காரமவள்பீடம்
பாதகத்தி குடியிருந்தாள் ரீங்காசனத்திற்
காரப்பா வுன்னைவிட்டு நீங்காமற்காளி
கடந்துவிட்டா லெவராலுங் காணவரிதாகும்
சேரப்பா அவள்பதத்தி லுன்னறிவுவந்தாற்
செகசாலந் தெரியாதோ சீவன்முத்திபுறம்போ
ஆரப்பா ஆத்தாள்தன் திருக்கூத்துக் காண்பார்
ஆச்சரிய மாச்சரிய மவளுடை மாய்மாலம். (25)

சட்டையில்லாப் பாதகர்க்குக் கிட்டுவளோதாய்தான்
சாத்திரப்பேய் கற்றவர்க்குக் கிட்டுவளோசமர்த்தி
மட்டில்லாக் காமுகர்க்குக் கிட்டுவளோவம்பி
வல்லமைசெய் மூடரிடம் வருந்துவளோதிருடி
பட்டமரம் பால்சொரியும் பழிகாரிநினைந்தால்
பச்சைமரம் பாழாகும் பத்தினிதான்கெடுத்தால்
சுட்டநண்டு குதித்திடுமே நீலியதிகாரம்
துரைமகளைக் காணாத துயரமெங்கேதீரும். (26)

நட்டணைகள் படியாதே வீம்புகள்பேசாதே
நானென்றுஞ் சுதந்தரங்கள் கனவில்நினையாதே
கிட்டநின்று பேசாதே சபைதனிற்செல்லாதே
கேடுகெட்ட வுடலைநம்பி கிடைபொருள்சொல்லாதே
தெட்டியுண்ணும் புசிப்பாலே வுண்மைகள்சொல்லாதே
தேசமதில் மருத்துவமாய்ச் சித்திகள்பண்ணாதே
எட்டிமரக் கனிதனைப்போல் உதவிகள்செய்யாதே
எத்தனைதா னறிந்தாலுஞ் செத்தவர்போற்றிரியே. (27)

நீபிழைக்க வகையறியாய் பிறர்தனக்கேதுரைப்பாய்
நிலையாத பெருங்கடலில் நிலைப்பர்களோமூடர்
வாய்ப்பகட்டிற் பொருள்பரிக்கச் சீவன்முத்தியாமோ
மனக்கசட்டை அறியார்க்கு வாய்மதங்களாமோ
பேய்ப்பகட்டித் திரிந்தாப்போற் றிரிவதென்னஞாயம்
பேருலகில் ஞானமல்லால் பிழைக்கவகையில்லையோ
தாய்பகட்டி யறியாமற் றனையறிந்தோமென்றால்
சதுரயுகம் வெகுகோடி சாருவரேநரகில். (28)

வெள்ளோலை தனையெழுதிக் குவித்ததினாலென்ன
விகடமுள்ள சாஸ்திரங்கள் கற்றதினாலென்ன
உள்ளமனக் கசடறியார் ஞானியராகுவரோ
ஊன்சடத்தைப் பகுத்தறியார் யோகிகளாகுவரோ
கள்ளருந்தித் தீதென்பார் தன்மனதேகள்ளு
காரணிதன் னுருவறிந்தார் கள்ளளவேகள்ளு
துள்ளான மனக்குரங்கு துள்ளும்வகையறியார்
தொல்லுலகிற் சித்தரெனச் சொல்லுவதுநெறியோ. (29)

பாழென்பார் பரையென்பார் பாங்கறியாமாந்தர்
பாழேது பரையேது பரைநடனமேது
கோளான மனமல்லோ பாழாகிக்கெடுக்கும்
குறித்தமன மாயையதே கூர்ந்தபரையாகும்
தாள்தனிலே தாயுமவள் தானிருந்தாளானால்
தனிப்பாழாய் நின்றதிலே தாக்குமிடமேது
பாழ்தனிலே தாயிருந்தால் தாயையெவரறிவார்
பாரேது விண்ணேது பகரவகையேதே. (30)

ஏகவெளி கோடிமதி யெந்தாய்க்கும்வீடு
எண்ணவொண்ணாச் சூரியன்போ லெந்தாய்தன்கோலம்
மோக்முள்ள பாதகர்க்குப் பாழ்போலேகாணும்
முத்தியில்லா அவத்தருக்கு மறைவள்முழுநீலி
சோகமற்று ஆசையற்றுத் துயரமெல்லாந்தீர்ந்து
தொல்லுலகிற் பிறவியெல்லாந் துன்பமெனப்பயந்து
தாகமுள்ள நல்லோர்க்கே தாயும்வெளிப்படுவாள்
சற்குருவா லறிபவர்க்கே தாயும்வெளிப்படுவாள். (31)

எந்தாயை அறியார்க்கு யிருப்பிடந்தானேது
    எந்தவிதஞ் சுகமறிவா ரெப்படிவீடறிவார்
தந்தாய்போல் வடிவெடுப்பாள் தாயமெனவருவாள்
    சந்ததியுங் கிளைபொருளாய்ச் சத்துருவாய்வருவாள்
நொந்தமனந் தானவாள் நோக்கவலையாவாள்
    நோக்கரிய செல்வமுடன் நோக்கியேவாழ்வோர்க்கு
வந்துமனக் கசடதுவே காலனுமாய்விடுவாள்
    பாபாவி செயலையெவர் மதிக்கவும்வல்லோரே. (32)

ஆசாரக் கள்ளியவ ளார்க்கும்வெளியாகாள்
    ஆசையற்ற வன்பருக்கே அவளும்வெளியாவாள்
கூசாதே மகனேநீ உலகம்நகைப்பதற்குக்
    கோகுலம்போல் மிருகமெல்லாங் கூடுமுறவாநீ
பேசாதே மவுனமென்றும் பெருமைகளெண்ணாதே
    பெத்தவன்போல் பெண்களெல்லாம் பிணிப்பறவேநினைப் [பாய்
ஆசையென்ற சிங்கமெல்லாம் அறப்பகையாய்விடுத்தே
    அங்கமுநீ மாத்திரமா யலைவதுவேகுறியே. (33)

வகையறியா மூடரல்லோ மனவிசுத்தியென்பார்
    வகைக்காரர் சத்தியுடன் வாழ்வதுவுமென்பார்
திகையாமற் சிவனுடனே சத்தியுந்தான்கூடி
    செகம்படைத்தார் நாமுமந்தத் திரமுடையோரென்பார்
தொகைப்படைத்தோல் நரம்புசதை படைத்தவுருவந்தோ
    தோகையரைப் பராபரையைச் சொல்லவும்வாய்வருமோ
நகையாரோ பெரியோர்கள் மனமடியார்மாந்தர்
    நாரியரைப் பொருளாக நாய்போலேயலைந்தால். (34)

பெண்ணாசை கொண்டவர்க்கு ஞானமெப்போதெரியும்
    புத்திகெட்ட மூடருக்கோ புலையருக்கோதெரியும்
மண்ணாசை கொண்டிருந்த மாண்பருக்கோதெரியும்
    மதிகெட்ட மாந்தருக்கோ வம்பருக்கோதெரியும்
கண்ணாரக் கண்டிருந்துங் காணாதார்போலே
    காதல்கொண்டு சிலைற்பனத்தி லீப்போலேகலங்கிப்
புண்ணாகி மனங்கரையப் புறவிழிலேயுழல்வார்
    புத்தியில்லா வீணரைப்போற் புலையருண்டோபுவியில். ()

ஓடவுமொட் டாதுபிடி கொடுக்கவுமொட்டாது
 ஒளியாது காமப்பேய் உளுத்தருக்கேபிடித்தால்
வாடுவது மகிழ்ச்சிசளுங் காமக்கோட்டாலே
 மடிவதுவும் பிறப்பதுவும் காமக்கோட்டாலே
பாடுவதேன் படிப்பதுபெண் ணாசையெல்லாம்மனதில்
 பற்றற்றால் நிசமறியப் பாதையெல்லாம்சுத்தித்
தேடுவதே னிருந்தவிடந் தானிசமாகாதோ
 தேன்மொழியா ராசைகொண்டு திரிந்தலேந்தும்பலனோ.()

தன்னாலே யாகாது பெண்ணாசைமறக்கச்
 சாத்திரங்கள் கோடிகற்று தனையறிந்தோமென்பார்
பொன்னாசை மண்ணாசை நீங்கறியாமூடர்
 புத்திசொல்லிப் பிறரிடத்திற் பொருள்தனையேபறிப்பார்
என்னகத்தும் பொருள்பறிக்கப் படித்தவித்தைதானோ
 இடைந்தமனத் துயரமெல்லாம் பொருள்பறிக்கத்தானோ
தன்னையறி வோர்க்குமிந்தப் பகட்டேதுக்கப்பா
 தன்னுடலும் பகையானாற் சற்குருவும்வெளியாம். (37)

நிறுத்தப்பா ஆசையெல்லாம் நீயெனவெண்ணாதே
 நெட்டூரப் பெண்களுட நினைவையெல்லாந்தள்ளு
மறுத்தப்பா குரோதமெல்லாந் தானெனவெண்ணாதே
 மாய்மாலக் காரருடன் வாசனைசேராதே
பொறுத்தப்பா வாசனையைப் பொல்லாங்காய்நீங்கு
 புத்தியில்லா தானல்லோ புகுதுவர் வாசனையில்
நிறுத்தப்பா பாவினையைக் கனவிலுமெண்ணாதே
 நீங்குவது கடினமது வெளிதுடனேநீங்கே. (38)

ஆசான்சொல் தன்னுறவு கூடுவதுங்கடினம்
 அப்பவல்லோ நிசந்தெரியும் அனுபவமுந்தெரியும்
பேசாதே தெரிந்தவர்போல் தலையசைத்தாலாமோ
 பெத்தவிடம் அறியாதார் பேச்சுமெத்தப்படிப்பார்
வாசனையும் பாவனையும் மனத்தைவிட்டுநீங்கி
 மாருத்த தினமுகில்போல் மாய்வதல்லோஞாயம்
நேசமதில் மயக்கமத்தாற் றன்னுருவங்காணும்
 நிஷ்டையில்லாப் பாதகர்தான் நிஷ்டையெங்கேயிருந்தார்,

தன்னையத்த பெரியவர்க்கு நிஷ்டைவிதந்தெரியும்
சாந்தகுணம் பொறுத்தவர்க்கே சாந்திநிலைதெரியும்
பின்னுறவில் லாதவர்க்கே சாங்கிஷமுந்தெரியும்
பேதங்கள் வெறுத்தவர்க்குப் பேருணர்வுந்தெரியும்
அன்னயமுஞ் சுந்தரமுங் கலந்தவிடம்பதியாம்
அப்பதியைப் பார்ப்பதற்கு ஆருரைப்பார்நிஷ்டை
உன்னிநின்ற பதங்காணப் பேதகஞ்சத்தாமோ
ஒப்பாது மனக்கசடு வுள்ளபொருள்காணே. (40)

வாளரவின் வாயிலுழல் மண்டூகம்போலும்
வருங்கெருடன் வாயதனில் மருளரவம்போலும்
கோளான உலகாசை தனக்குமப்பாபாய்ந்து
குறிகள்சத்துந் தவமுமற் குருவருளைநாடி
பாளான உலகிலுள்ளோர் நகைத்துமெத்தக்கேடாய்ப்
பழிப்பதற்கு வெட்காமற் பரம்பொருளேபெரிதாய்த்
தேளான இச்சையத்து மருளுமனந்தெளிந்து
சித்தமுரு வொன்றாகச் செகத்திருப்பார்நல்லோர். (41)

ஊத்தையப்பா திரண்டுகளுக் காணியாவதுபோல்
உள்ளமதி லெள்ளவும் உகந்திடுபாவனையால்
வுத்தமுள்ள கற்பனையா யிச்சைபலவாகி
எண்ணமொடு துயராகி யெளிதுபெரிதாகி
பார்த்ததெல்லாந் தனதாகிப் பந்தமுங்கற்பனையாய்ப்
பாசமுமாய் ஆசையுமாய்ப் பண்டுபுதிதாகி
வார்த்தைபல பேராகி யுலகமயல்நிசமாய்
மறந்தாலும் மறக்கவொண்ணா வல்லிருளாய்நிலைக்கும். (42)

சாந்தியென்ன வேறாமோ பேதமெல்லாம்நீங்கிற்
சத்துவமாங் குணமாகித் தன்னுருவைப்பார்த்தால்
மாந்தர்மனம் நயமாகும் மனோலயமேநிசமாம்
மறந்தாலும் பேரின்ப மார்க்கவழிதெரியும்
சேந்தமனக் கசடருக்குஞ் சிவத்தியானமாமோ
செகமெல்லாந் திரிந்தலைந்து சித்திசெய்தாலாமோ
காந்தமனத் துயரமற்ற பெரும்பதியைநோக்கிக்
கண்டாலு முரைப்பதறவுங் கடினவித்தைகாணே. (43)

எத்தனை நூல் படித்தாலும் மனந்தனக்கேநன்மை
எதுசித்தி படித்தாலும் மனப்பேய்க்கேதூபம்
கத்திமெத்தத் திரிவதெல்லாம் மனப்புலிக்கேபொசிப்பு
கருத்தரிய வாசாரஞ் செய்வதெந்தக்காலம்
பித்தான மனத்தாசை மெள்ளமெள்ளநீங்கிப்
பிரிவான பேதமையைப் பேரறிவாற்றுணித்துச்
சுத்தவெளி வெகுதூரஞ் சூட்சம்வலுவாகித்
தோன்றாத புருவமையஞ் சுகம்பெறநீபாரே. (44)

பாரப்பா எட்டிரெண் டொன்றாய்நின்ற
பதியறிந்தாற் றுயரேது பாசமேது
ஊரப்பா யேதுமில்லை பேருமில்லை
உண்மையதாய் அப்புறமும் உருவிப்பார்த்தாற்
சேரப்பா யெளிதாகச் செத்தவிடங்கலந்தால்
திகைப்பேது பசியேது சித்துமிசையேது
நேரப்பா துயரேது சோபவினையேது
நீங்காத காதலுண்டோ நினைத்திருந்தாற்பாரே. (45)

வகையேது சேர்க்கையென்ன நிஷ்டைபலவேது
மனவருத்த முண்டானால் மசகமப்பாமாயை
துகையேது நெறியேது குருவருளைப்பெற்றால்
தோத்திரவெல் லாம்ஞானந் தொடருமப்பாபாதை
புகையான காமமெனும் புகைகளதுமூடிப்
புத்திமலைந் திருந்தவர்கள் பொருள்தனையேசேரார்
புகையான மன்மதனை யெளிதாகப்பார்க்கிற்
பரம்பொருளும் யெளிதாகும் புத்தியதுபாரே. (46)

எட்டாத பொருளெனவே யெட்டியெட்டிப்பார்த்தால்
எப்படியும் பொருளறியார் யெண்ணிறந்தகாலம்
தொட்டிலையும் பொருளெனவே யெளிதாகநெஞ்சிற்
றோற்றமெல்லாம் அறுத்தளித்துச் சொரூபமதிற்பார்க்கில்
ஒட்டாது பொருளெனவே ஒட்டியதோரெட்டும்
ஓமப்பா வறுமையெல்லாம் ஒன்றுமில்லாதவனைக்
கட்டாணி மணிமுத்தைக் கண்டவர்க்கேயின்பம்
காசினியிற் சரியுண்டோ கண்டதுநீபாரே. (47)

பொய்யாது போகின்ற சரீரமுதற்பொருளும்
பொறுமையென்ற விசித்திரமா முலகமுதல்யாவும்
பொய்யாகு மிதனிலொன்றை நிசமெனவேயெண்ணிற்
பொருந்துமுடல் தனையறிந்து புத்திகள்கற்பதுவும்
செய்யவுல கினிற்பெரியோன் செல்வனெனவாழ்வும்
சேரவெரும் பாழல்லாற் சேரும்பலனில்லை
அய்யமறக் குருவருளை நிசமெனவேயெண்ணில்
அவனிமுத லாசையெல்லா மகற்றுவதுபலனே. (48)

நிசமில்லா வுடலமெப்போ மறைந்திடுமோவதனால்
நெடும்பிறவி தொறும்பொருளாம் பந்தமெல்லாம்பெருகும்
வசமாகப் பேரறிவே கிடவொண்ணுப்பலந்தான்
வலுமாயை யென்னவெல்லாம் மாசறவேதள்ளி
அசைவில்லாப் பரம்பொருளை யறிவர்நல்லோர்தெளிவாய்
ஆசையுள்ள முழுமுடர்க் காயிரஞ்சொன்னாலும்
நிசமான பொருளறிய மனம்வருந்திப்பாரார்
நீதியுள்ள நல்லோர்க்கே நிண்ணயமாம்பொருளே. (49)

அழியாத ஆனந்த வெள்ளமதுபெருகி
அருள்சிறந்த மனம்பொருளே அதிகருசிக்கனியே
தெளிவான குருராச ரத்தினபரணம்
செப்பியநூ லொப்பிடவே இப்படியோர்தமைழக்கச்
சுழிமுனையா முச்சியினி லட்சரமாமொன்றிற்
சுழிசுழித்து முனைவாசல் வழிவருமாதேவி
விழிமுனையி லேநாட்டி விமலியருளாலே
விளக்கொளிபோ லிந்நூலை விலங்கவுரைத்தேனே. (50)

குருராஜர் ஞானரத்தினபரணம் ருய.

முற்றிற்று.

சுந்தரபாண்டியம், புஸ்தகவியாபாரம் வை. சிவகுருநாதமுப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

எண்பத்துநான்காவது:

குருராஜர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவயோக சிந்தாமணி நூல்.

தந்திமுகன் பதம்போற்றி வேலர்பதம்போற்றி
தயவாக எனையீன்ற வாலைபதம்போற்றி
நந்திகுரு பதம்போற்றி மூலர்பதம்போற்றி
நாதாக்கள் பாடிவைத்த யோகந்தன்னைச்
சிந்தாத மணிரத்ன மாலைதனைப்போலே
செப்புகிறேன் மாணாக்கா தெளிவாய்க்கேளு
கந்தன்முன்னு ளகத்தீசர்க் குரைத்தயோகம்
காட்டுகிறேன் குருராஜ பண்டிதனுன்காணே. (1)

பண்டிதனுன் பாடிவைத்த யோகநூற்குப்
பதினெண்பேர் மொருமொருத்துக் கூடியொன்றாய்க்
கண்டவன்போற் சொன்னதென்ன மறைவில்லாமற்
காசினியி லெல்லோரும் சித்தனுகச்
சண்டாளா கிழித்தெரிநீ இந்தநூலைத்
தாரணியிற் காட்டாதே சாபமீய்வோம்
உண்டான பொருளையெல்லாம் வெளியிற்போட்டால்
உலகமெல்லாம் ஞானிகளா யுயர்வார்தானே. (2)

உயர்ந்தாக்கா லெங்களுட வொளிப்பும்போச்சு
ஓகோகோ சித்தரென்ற பெருமைபோச்சு
ஊயர்ந்தமரத் தாணியைப்போற் பிடித்துக்கொள்வார்
ஊரிலெங்கள் நூலதனைப் படிக்கமாட்டார்
அயர்ந்தவன்கைப் பொருள்போல எங்கள்யோகம்
ஆவதற்கோ சிவராஜ யோகஞ்சொன்னாய்
கயர்ந்தவனே என்றடித்தார் ஆத்தாள்பார்த்துக்
கண்சிவந்து சித்தரையும் கோபித்தாளே. (3)

கோவித்து உங்களுக்கே னிந்தவாது
குவலயத்தி லெனைப்பணிந்த குழந்தைகட்குப்
பாவித்த சிவயோக வாழ்க்கைஞானம்
பாலிப்பாய் என்றுரைக்கப் பாடினுன்கேள்
நாவுத்த வுங்களைப்போ லவன்ருனென்று
நயத்துடனும் பயத்துடனுஞ் சொன்னதாலே
சாவுத்த பேர்களுமே சித்தராஞர்
தாயாபரியே குருராஜ னிவன்றன்னாலே. (4)

தன்னாலே யேட்டுடனே சேர்க்கமாட்டார்
சவங்களுக்குத் தெரிந்திடவே தற்பரத்தை
உன்னாலே காட்டிவித்தாய் தம்பியென்று
உத்தமர்கள் மனச்சடவாய் ஒதுங்கிகொண்டார்
நின்னாலே மறைப்புவித்தை யோகமெல்லாம்
நிசங்கண்டோ மென்றெந்தன் செவிகள்மெச்சப்
பன்னாலே சொல்லுகிறேன் வாலையம்மாள்
பதம்போற்றி இடகலையைப் பறிவுற்றேனே. (5)

பறிவுற்ற இடகலையே மூலம்மூலம்
பதமாஞ்சந் திரனென்றும் உகாரமென்றும்
தெரிவுற்ற விந்துவென்றும் வழலையென்றும்
செயமான சேநீரின் வாதமென்றும்
அறிவுற்ற மனமென்றுஞ் சத்தியென்றும்
அரகரா பதினாறி லடக்கமென்றும்
குறிவுற்ற குண்டலியின் வட்டமென்றும்
கூறுவார் வல்லபைதா னிதழ்தானென்றே. (6)

இதழான பஞ்சகலை யிருக்குந்தானம்
இதுகாலம் ஏமனென்றும் இருளாம்மாயை
அதமான கள்ளென்றும் மயில்தானென்றும்
அனேகவிதஞ் சொல்லுவார் மதியைமைந்தா
பதமாக இதைப்பிடித்துப் பிசகிடாமற்
பலகோடி யெண்ணத்தில் வீழ்ந்திடாமல்
நிதசரிதா னிரவுபகல் ரேசிரேசி
நினைவைவிட்டா லொன்றுமிலை நிசஞ்சொன்னோமே. (7)

சொன்னதொரு பிங்கலையின் மார்க்கங்கேளு
சூரியன்றன் வட்டமென்றும் அகாரமென்றும்
வன்னியென்ற முக்கோண வாலையென்றும்
மதியுண்ட விதியென்றும் அண்டமென்றும்
கன்னியுட நாதமென்றும் வஸ்துவென்றும்
கனமான திராவகமாங் குளிகையென்றும்
உன்னியே கயிலாச மேருவென்றும்
ஓரறிவாய் விளங்குகின்ற பிரமமொன்றே. (8)

ஒன்றான பிரமத்தின் அமுதசாரம்
உத்தமனே பூரித்து எப்போதுந்தான்
நன்றான பேதமில்வல் லாரையென்றும்
நாற்பத்தி முக்கோணந் தில்லையென்றும்
கன்றான வாசியென்றுங் கடுக்காயென்றும்
கருஞ்சாரை வெண்சாரை கருத்தநெல்லி
நின்றாடுங் கஞ்சாவும் அமுதமென்றும்
நிகழ்த்தினார் பானமென்றும் மதுவென்பாரே. (9)

மதுவென்றுஞ் சுத்திகுண் டலியாமென்றும்
வாலையென்றும் புவனைசிவ ரூபமென்றும்
இதுவென்றும் பெண்ணென்றும் ஆண்தானென்றும்
இகாரமென்றும் மகாரமுண்ட வெறிநீரென்றும்
அதுவென்றும் அனந்தமென்றும் ஏகமென்றும்
அம்பரமே அழிவில்லா வீடேயென்றும்
சதுர்முகனார் சிருட்டிப்புப் போலமைந்தா
சாற்றுவார் வெகுகோடி பேர்கள்தானே. (10)

தானான பெருமையிங் கலையினூடே
சந்திரனை யிடகலையை யொன்றாய்ச்சேர்த்து
வேனான ரேசகபூ ரகமுங்கும்பம்
விடிந்துதய மாகுமட்டுஞ் சலிப்பில்லாமல்
மானார்கள் மயக்கத்தில் வீழ்ந்திடாமல்
மைந்தனே முச்சுடராஞ் சுழிமுனைபார்த்துக்
கோனான நந்திதெரி சனமுமாகும்
கூடழிந்து போகாது கூடுகூடே. (11)

கூடுகிற இந்தமுறை தெரியாமாண்பர்
    கூறுகெட்டு யோகதா ரணைகள்செய்து
மாடுபோற் பெருமூச்சு விட்டுவிட்டு
    மைந்தனே மலையென்றும் காடென்றுந்தான்
நாடுதொறும் ஓட்டமதாய்த் தவித்திளைத்து
    நாய்போலே அலைந்துநரை திரையுமாகி
வீடுதொறும் பேச்சிட்டு நோய்கண்மிஞ்சி
    விருதாவி லிறந்திட்டால் வெகுபேர்தானே. (12)

வெகுபேர்க ளெத்தனையோ மாண்டார்கோடி
    விதவிதமாய் வாசியைத்தான் பெருக்கப்பேசி
அகுதமாய் அஞ்செழுத்தை மூக்கில்மாறி
    அதற்கடுத்த ரெண்டெழுத்தைப் பின்னுமாறி
உகிதமாய் அகரவுக ரம்ஓங்காரம்
    உத்தமனே மந்திரயோ கங்கள்செய்து
விகிதமிடை பிங்கலையைக் காணுத்தோஷம்
    விட்டுவிட்டார் சடத்தையுமே வீணர்தானே. (13)

வீணான காமிக்கும் ஆங்காரிக்கும்
    வேகமுள்ள கோபன்லோ பிக்குஞ்சாந்தம்
காணாத புல்லனுக்குந் தர்க்கவாதி
    காரியத்துக் காய்வணங்குங் கள்ளவாதி
கோணாத குருவைநிந் தனையேசெய்து
    குறைசொல்லிச் சொத்தீயாக் குருடருக்கும்
பூணான சிவசிந்தை யில்லானுக்கும்
    புகட்டினாற் பலியாபூ ரணமென்றோதே. (14)

பூரணமே தெய்வமென்ற உறுதிவேணும்
    புண்ணியமாந் தருமத்தின் புகழும்வேணும்
காரணமாங் குருவுக்குட லாதிபோலும்
    கைக்குநீர் வார்த்தொன்றாய்க் கலந்தெப்போதும்
நாரணனும் லக்ஷிமிபோல் வாழவேணும்
    நயம்வேணும் பயம்வேணும் நட்புவேணும்
ஆரணமாங் கருவிடையந் தோணவேணும்
    அன்புசிவ சிந்தையுந்தா னதிகமாமே. (15)

அதிகமாம் புண்ணியர்க்கு இந்தயோகம்
அகப்படுங்காண் பழுதொன்றும் வாராதப்பா
மதிவிதியாய் நின்றிலங்கும் இடையின்யோகம்
வருந்தினுல் வாராதோ வாலைபாதம்
சதிருடனே போற்றினுற் சொல்லாதுண்டோ
சலியாதே மெலியாதே கோவியாதே
கெதிபெறவே வேணுமென்று துணிந்துகொண்டால்
கேசரியாள் கண்பார்த்து ரெட்சிப்பாளே. (16)

பாளென்றும் பரையென்றும் பவானியென்றும்
பழிகாரி உபகாரி யுமையாளென்றும்
நாளென்றும் வாரமென்றும் ரவிதானென்றும்
நமனைவென்ற சங்கார ருத்ரியென்றும்
தாளென்றும் முக்குணத்தாள் குருவேயென்றும்
சதுர்வேத மாறுசாஸ் திரமாமென்றும்
கோளென்றும் வாருமலவளுக்கன்பு
கொண்டோரை ரெட்சிக்குங் குமரியாமே. (17)

ஆமடா யிவளைவிட்டு யோகம்பெற்றூர்
அப்பனே கண்டதில்லை ஞானப்போக்கு
ஓமடா வாராது முத்தியில்லை
ஒளியாது காமப்பேய் ஒருநாளுந்தான்
நாமடா யிவளைமுந்தி அர்ச்சித்தேத்தி
நலமான பனிரண்டு வரையுந்தாண்டி
காமடா வென்றுமன வரையுந்தாண்டக்
கர்ப்பசித்தி யோகசித்தி கடாக்ஷித்தாளே. (18)

கடாட்சித்த படியாலே மயக்கம்போச்சு
கருவிகர ணுதியெல்லா மாண்டுபோச்சு
உடாச்சித்த புரியட்ச ரத்தும்போச்சு
ஒன்றுபொரு ளென்றெண்ணித் தெளிவதாச்சு
அடாச்சித்த பயங்கோபம் வீறும்போச்சு
அஷ்டமா சித்திபெற அறிவுமாச்சு
படாச்சித்த மாயையெல்லாம் பறந்துபோச்சு
பரம்பொருளே கெதியென்று பணிந்திட்டோமே. (19)

ஓமென்ற அட்சரமும் வாலையாச்சு
ஒருத்திவயித் துலகமெல்லா முதிக்கலாச்சு
ஆமென்ற பேருக்கு அருளுமாச்சு
அறிவில்லா மூடருக்குக் காலனாச்சு
நாமென்ற அகங்கார மத்துப்போச்சு
நழுவிநின்ற குணம்போச்சு உறுதியாச்சு
போமென்ற யெவர்களையும் மெய்க்கலாச்சு
பூரணியும் என்வசமா யிருக்கலாச்சே. (20)

இருக்கமட்டும் நான்கேட்ட வரங்களெல்லாம்
இறையளவு தப்பாமற் கொடுக்கலாச்சு
அறுக்கமட்டும் பாசத்தை யோகமார்க்கம்
அடிக்கடியே அவ்வந்து சொல்லலாச்சு
பருக்கமட்டுங் குஞ்சியைத்தான் சிறகால்கொண்டு
பாதுகாத்த குக்குடம்போற் பேணலாச்சு
பொருக்குமட்டும் பிடைபின்னே வெளியிலேத்தி
போகாமற் பிங்கலையிற் புக்கினேனே. (21)

புக்கினேன் சுழிமுனையில் மனக்கண்ணாட்டிப்
பொருத்துறைந்தே னேகாமல் வாசிகட்டி
சிக்கினே னென்றமன மொன்றிநிற்கச்
சிவசிவா அண்டவுச்சி யமுதமூறும்
நக்கினேன் அமுதத்தை யுண்டுதேறி
நாட்டிலுள்ள கிரியைவிதம் நன்றாய்க்கண்டு
மொக்கினேன் பிரபஞ்சம் பொய்தானென்று
முத்திபெற்றேன் சித்திபெற்றேன் மூச்சுள்ளாச்சே. (22)

ஆச்சுதடா ஓராண்டில் வியாதிபோச்சு
அப்பனே ரெண்டாண்டில் மோகம்போச்சு
வாச்சுதடா மூன்றாண்டிற் சாந்தியாச்சு
வைதாலும் புகழ்ந்தாலும் நிதானமாச்சு
போச்சுதடா நாலாண்டில் விஷமேறாது
பொய்யென்ற தேகமது மெய்யதாச்சு
காச்சுதடா பூகாயுங் கனியதாச்சு
கருதிப்பா ரஞ்சினிலே பொரிவெவ்றேனே. (23)

பொரிவென்றேன் ஆறாண்டில் எமனுமாண்டான்
பூரணத்தாய் பதத்துக்கு ஆளுமானேன்
நரியென்று எனையேய்த்த மனதையேழில்
நன்றாக வென்றுவிட்டு அறிவைக்கண்டு
பரிகுருவாந் தங்கத்தின் மகிமைகண்டு
பதைப்பறவே அஷ்டாங்க யோகம்பார்த்து
வரிவரியாய் எட்டாண்டில் நிஷ்களத்தின்
மலரடியைப் போற்றிமனம் மகிழ்ந்திட்டேனே. (24)

மகிழ்ந்திட்டேன் சிந்தித்த படிமுடித்தேன்
வாலையெனுந் துரைப்பெண்ணாள் மகிமையாலே
புகழ்ந்திட்டேன் நிராமயத்தை யென்நாளுந்தான்
போக்குவரத் தொழில்தந்த நிலைபெறாமல்
இகழ்ந்திட்டேன் மயக்கமெல்லாங் கீழேதள்ளி
எனக்கொருவ ரிணையேது என்றுமெச்சி
அகழ்ந்திட்டேன் அண்டத்தைக் கண்டுதேறி
ஆரறிவா ளவளறிவா ளதீதந்தானே. (25)

அதீதமாம் ஒன்பதிலே நடந்தமார்க்கம்
அறைகிறேன் அழகுடைய மைந்தாகேளு
நதீதமாங் காசியிலே நடக்குஞ்செய்கை
நான்தெரிந்து கௌனசித்தர் தன்னைக்கண்டேன்
பதீதமாந் தூரதிஷ்டி யென்னைப்பெற்றாள்
பகலவனுஞ் சொல்லிவந்த பண்புங்கண்டேன்
விதீதமாய் மனிதருட நிகலுந்தோன்றி
விதவிதமாய்ப் பாடியே விளங்கினேனே. (26)

விளங்கினேன் பத்தாண்டா யிரத்தெட்டண்டம்
விசாலமெல்லாம் ஒருநொடியில் மேவிப்பார்த்தேன்
துளங்கினேன் பிரமலோ கத்திற்சொன்ன
சுகமான சரசுவதி நிலையுங்கண்டேன்
வளங்கினேன் பொன்னுலகத் தேவரெல்லாம்
வணங்கவே வரம்பெற்றேன் மாயனூர்தன்
களங்கமில்லா வைகுண்டந் தன்னிற்சென்று
கயிலாசங் களைகண்டு களிப்புற்றேனே. (27)

களிப்புற்றேன் சிவனாரை வணங்கியிந்தக்
சயிலாசந் தனைத்தாண்டி அப்பாலேக
விளிப்புற்ற குளிகையொன்று வேண்டிக்கேட்டேன்
விமலனார் எனைப்பார்த்து மெச்சிக்கொண்டு
ஒளிப்புற்ற கயிலாசங் கைக்கொண்டாயே
ஒருவருந்தா னுனைப்போலே வருவார்காணேன்
அளிப்புற்ற பிரபஞ்ச மயக்கம்விட்டு
அறிவுண்மை நிராசையினா லறிவுற்றாயே. (28)

ஆயிவல்ல பத்தாவிவ் வளவுங்கண்ட
அருளுமையுள்ள சுப்ரமண்யம் நீயேயென்று
தாயிடத்தி லின்னமுங்கேள் நானுனக்குச்
சாத்துகிறேன் முப்பதிலே சவுமியமோனம்
நீயிதற்கு அப்பாலே போகவென்றால்
நிருவாணி கோவிப்பாள் நில்லென்றெண்ணி
நாயனார் புத்திசொல்லி சாங்கியயோகம்
நவின்றிருக்கேன் தாயிடத்திற் கேளென்றாரே. (29)

என்றவுடன் மறுபடிகை லாசந்தன்னில்
எனையீன்ற புவனையுட பதத்தைப்போற்றி
நன்றியுள்ள மாதாவே மேருக்கப்பால்
நான்சேரக் குளிகையொன்று நக்கன்பக்கல்
வென்றியுடன் கேட்டதற்குச் சாங்கியயோகம்
விபரமுற வறிந்தாக்கால் வெளிபாழ்தன்னிற்
பொன்றுமலேறிடலா மிப்போதுன்னாற்
பொறுகாது உறுதியில்லை போவென்றாரே. (30)

உறுதியில்லாப் பிள்ளைகளை யேன்தான்பெற்றாய்
உத்தமியே பத்தினியே உமையேஅம்மா
விருதாவி லித்தனைநாள் பட்டபாடு
விதியெழுத்தின் படியோநா னுன்னைக்கண்டும்
கருதாமல் அரைகுறையாய்ப் போகநன்றோ
காரணியே பூரணியே கருணைபூண்டு
குருவருளாற் சாங்கியயோ கத்தைச்சொல்லும்
கும்பகமே தம்பமெனக் கும்பிட்டேனே. (31)

கும்பிட்ட மைந்தனேகேள் குருராஜய்யா
கூறுகிறேன் முன்சொன்ன சுழினையோகம்
அன்பிட்ட பிள்ளைகட்குச் சொல்லுசொல்லு
ஆறுக்கும் நவிலாதே சாங்க்யயோகம்
நம்பிட்ட படியாலே உனக்குச்சொல்வேன்
நடுவில்லை முடிவில்லை அடியுமில்லை
தெம்பிட்டுப் பார்ப்பதற்குச் சற்றுமில்லை
சிவசிவா மனமில்லை வெளிநீடவொளியே. (32)

வெளியொளியாம் அகண்டவெளி அல்லஅல்ல
விகற்பமத்த மனவெளியும் அல்லஅல்ல
களிவுற்ற பூதவெளி அல்லஅல்ல
கண்ணுற்ற பிண்டவழி அல்லஅல்ல
அளிவுற்ற ஆகாச வெளியுமல்ல
அஷ்டதிக்கா மெண்திசையும் வெளியுமல்ல
மொளிவுற்ற பனிரண்டு வருஷயோகம்
முச்சுடரின் கண்டமூ தறிவிதாமே. (33)

அறிவான முப்பாழுங் கடந்துவெளியொளியாய்
அத்தொய்தங் கடந்துநின்ற அருளொளியாம்உண்மை
பெருவெளியாம் அறிவுற்ற வெளிகடந்தப்பாலே
பெரியோர்க்குப் பஞ்சகர்த்தா ஐவருமேயறியாக்
குருவெளியாங் கயிலாசத் தப்புறமாம்வடக்கே
கூறுத மோனவெளி சாங்கியமாமதனைப்
பருவங்தொண் ணூத்தாறைப் பழகிப்பார்த்துவந்தால்
பகர்மோட்ச மூர்த்தியுமுன் பாரிலுன்றன்பரமே. (34)

பரமான உங்களையர் எனக்குமுன்னாள்
பகர்ந்திட்ட சாங்கியயோ கத்தினாலே
அறமான முப்பத்தி ரெண்டுஞ்செய்து
ஆறுமுகன் கணேசனுக்குச் சாங்கியஞ்சொல்லி
வருமான பொருளீய்ந்து அசுரர்களைவெல்ல
வடிவேலைக் குகனிடத்தில் மனதோடீய்ந்தேன்
தரமான கிரவுஞ்ச கிரியைவென்று
தானவரைக் க்ண்டுவீய்த்தான் சத்தியமாய்த்தானே. (35)

சத்தியமா யிருந்தவர்க்கு இந்தயோகம்
தவருது சாங்கியந்தான் வருந்தன்ஞலே
முத்திபெற வேணுமென்ருல் என்னைப்போற்று
முழுமுதலாம் உங்களையர் தன்னைப்போற்று
சித்திபெற வேணுமென்ருல் பொய்யாகாது
செடமிருக்க வேணுமென்ருல் சஞ்சலமாகாது
பத்தியுள்ள என்மகனே என்று அம்பாள்
பகர்ந்திட்டம் பரவெளியிற் பாய்ந்திட்டாளே. (36)

இட்டாளே இவ்வண்ணம் யோகமென்று
என்றனக்குப் பிள்ளைதொண்ணூற் ருறுபேர்க்குத்
திட்டமுடன் சொல்லிவைத்து அவரவர்க்குச்
சேஷவர்க்கம் வெகுகோடி கண்டோரில்லை
அட்டதிசை யெங்கிலும்போய் அண்டமெல்லாம்
அவர்கூடி விளையாடி அறிவைப்பெற்று
பட்டமிடுங் கயிறதுபோற் கெவுனத்தூடி
பகிரண்டங் கடந்துவெளி பரங்கண்டாரே. (37)

பரங்கண்டு புசுண்டரையுங் கண்டுபேசி
பண்புள்ள கொங்கணரும் நந்திமூலர்
திரங்கண்ட சேய்க்குருரு ராஜன்பிள்ளை
திடமெத்தத் துடிமெத்தச் சிவமுமெத்த
உரம்மெத்த இவர்களுக்கோ குளிகையில்லை
உண்மையினுல் ரசமணியின் வேகத்தாலே
வரம்பெற்ருர் பதினெண்பேர் மார்க்கமெல்லாம்
மாயையென்று எந்தனையும் மெச்சினுரே. (38)

மெச்சினுர் நவகோடி சித்தரெல்லாம்
மேலுலகுங் கீழுலகும் நடுக்கண்டத்தும்
நச்சினுர் குருராஜ னெங்கேயென்று
நானவர்க்கு யேழையைப்போல் நயந்துகொண்டு
துச்சமுள்ள சித்தருக்குப் பிடிகொடாமற்
சோதிதனை நம்புண்மை யுணருவோர்க்கு
அச்சங்கள் தனைத்தீர்த்தம் பரத்தைக்காட்டி
அரகரா தொண்ணூறு யுகங்கண்டேனே. (39)

கண்டேன்நான் வெகுகோடி காலம்வாழ்ந்து
கண்மணியாம் நாம்பெற்ற பிள்ளைக்கெல்லாம்
விண்டேன்நான் இந்தமுறை யோகமெல்லாம்
விளிப்போர்க்குச் சூரியன்றன் வெளிச்சம்போல
பண்டேன்நான் பதினெண்பேர் வாதைவென்று
பகர்ந்தசிவ யோகசிந்தா மணியையப்பா
கொண்டேன்நான் சதுரகிரி சார்புசித்தர்
கொடுவென்று கேட்டார்கள் கொடுத்திட்டேனே. (40)

கொடுத்திட்டேன் கலியுகத்திற் போஜன்சீமை
குணமாக ஆளுகிற நாலாமாண்டில்
விடுத்திட்டேன் காசியிலே சமாதிகூடி
மேவினேன் மூவாயி ரத்துச்சொச்சம்
அடுத்திட்டேன் பரவெளியே நாமேயென்று
அலைச்சலற்று வெகுகாலஞ் சென்றபின்பு
படுத்திட்டேன் பாவநாசந் தெற்குமூலை
பார்பொதிகை சார்புதனிற் பண்புற்றேனே. (41)

பண்புற்றேன் சாதியிலே வசியன்சூத்திரன்
பகருவா ரெங்கப்பன் நந்திபாட்டர்
நண்புற்ற என்தாயோ சிவகாமிவாமி
நாங்களுமே உடன்பிறந்தோர் பத்துப்பேர்கள்
தென்புற்ற என்தாயார் கிருபையாலே
தீவினைகள் தானகற்றித் திறமையாமேனும்
அன்புற்ற என்பேரோ வேதமூர்த்தி
அஷ்டாங்க சாங்கியமும் பார்த்தபின்பே. (42)

பின்பல்லோ குருராஜ னெனப்பேர்பெற்றுப்
பெரியோர்கள் தங்களுக்கும் பிரியமாகி
அன்பல்லோ வாலைபெற்ற மைந்தனாகி
அருளாலே முன்னேம்பத் தொன்றுபாடி
நன்பல்லோ ரத்தின பரணமென்று
நாட்டினேன் அதன்பிறகு இந்தநூலை
ஒன்பதுபேர் பிள்ளைகட்கு அன்போடின்று
உருக்கமுடன் பாடிவைத்த துண்மையாமே. (43)

ஆமப்பா முன்பட்ட பாட்டைக்கேளு
ஆதிகுரு வம்பலவ ரிடத்தில்நானும்
தாமப்பா மந்திரத்தி லாறுகோடி
சாதித்தேன் பலவகையாம் யோகமார்க்கம்
நாமப்பா வென்றகுரு பரமானந்தர்
நாதரிடஞ் சாசாத்ரம் நன்றாய்க்கற்று
ஓமப்பா சிவயோக வாழ்க்கைதன்னில்
ஒருத்திவந்து சொல்லஅதைச் சொல்லினேனே. (44)

சொல்லாமற் சொன்னகுரு வாக்கியம்வேணும்
சுருதிநிலை வேதாந்தம் பார்க்கவேணும்
கல்லாமற் கற்றுணர்ந்து கொள்ளவேணும்
கால்கண்டு கண்கொண்டு நடக்கவேணும்
வெல்லாமல் வெல்வதற்கு வேலும்வேணும்
விகற்பமுள்ள மனதைலயம் பண்ணவேணும்
அல்லாமற் பொய்தள்ளிப் பழகவேணும்
அறிவுகுரு வாய்ப்பதுவும் அருமைதானே. (45)

அருமையென்ன பெரியோரை அடுக்கவேணும்
அடிபணிந்து கேட்டதெல்லாங் கொடுக்கவேணும்
பொருமையென்ன அளவில்லாச் சாந்தம்வேணும்
புத்திமதி புண்ணியமுங் காணவேணும்
வெருமையொன்று மில்லாம லிருக்கவேணும்
விசாரமொடு கோபத்தைத் தள்ளவேணும்
சிறுமையென்ற கொலைகளவு காமம்போனாற்
சிவயோக மானதுவுஞ் சித்திதானே. (46)

சித்தியுண்டாம் இந்நூலைப் பார்ப்போர்க்கையா
சிவசிவா திருவுளமே கெதியென்றுக்கால்
முத்தியுண்டாம் மயக்கமற்ற பேர்க்குமோட்சம்
முச்சுடரின் னுச்சிவெளி திறக்கும்மூலம்
பத்தியுண்டாம் பரம்பொருளுங் கிருபைசெய்வார்
பலகாலம் பார்வதியைப் பணிந்ததாலே
வித்தையுண்டாஞ் செல்வமுண்டாம் அருளுமுண்டாம்
வேணபடி யிருந்துவிளை யாடலாமே. (47)

ஆடலாம் அறுபத்து நாலுசித்து
அணுமாதி கிரிகைமுத லானதெல்லாம்
பாடலாம் வெகுகோடி சாஸ்திரக்குப்பை
பகரவே தாந்தஞ்சித் தாந்தங்கோடி
நாடலாம் வாதமயு மாகப்பொன்னும்
நவநீதச் சுருக்காலே தங்கமாகும்
காடெல்லாம் வயித்தியன்றான் சொன்னசொன்ன
கருவெல்லாம் குருவாகக் காணுந்தானே. (48)

தானேதா னாகுமடா வாலைபாதம்
தஞ்சமென்று நம்பிடிலோ தவறவொட்டாள்
கோனேநீ திரியாதே சாதகத்தைக்
கூடியிரு வீண்காலம் போக்காமற்றான்
நானேநீ யாயிருந்து யோகம்பாரு
நாதனரு ளுண்டாகும் நன்மைநன்மை
வேணுன பூலோக வாழ்க்கைபொய்பொய்,
விட்டுவிடு பட்டமரம் வெந்தீய்க்காமே. (49)

வெந்தீயோ நந்தீயோ தந்தீயோதான்
விருதாமோ சரசோதி விமலத்தாயோ
செந்தீயோ உந்தீயோ கண்டதில்லை
சிவமயமாய் நின்றதிரு சின்மயந்தான்
வந்தீயோ என்றழைத்து என்னையாண்ட
மனோமணியுங் குருபாதம் வாழியாகச்
சந்தியிலே முச்சந்தி தன்னிற்போட
தமிழுக்குக் குருபரனுங் காக்கமுற்றே. (50)

குருராஜர் சிவயோக சிந்தாமணி ருய,
முற்றிற்று.

சுந்தரபாண்டியம், புஸ்தகவியாபாரம் வை. சிவகுருநாதமுப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எண்பத்தைந்தாவது:

இராமரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# சிவயோக ஞானம் ௰அ.

ஆதியாய் நின்றமனோ மணியைப்போற்றி
அகண்டவடி வானபொரு ளதனைப்போற்றி
சோதியாய் நின்றபூ ரணத்தைப்போற்றி
சொல்லுகிறேன் நாதாக்கள் பாதம்போற்றி
நீதியாய் நின்றசித்தர் பாதம்போற்றி
நிறைந்திருந்த மறைமுனிவர் பாதம்போற்றி
வீதியாம் நடுவீதி கமலத்துள்ளே
வீற்றிருந்த நந்திகுரு கணேசன்காப்பே. (1)

உத்தமனே மனப்புரவி யென்றதோடு
உரிமையுள்ள வாசியெனும் யோகந்தன்னை
சித்தியென்ற பூரணத்தி லிலங்குந்தீபம்
தெரிசித்து மயக்கமென்ற லகிரிகொண்டு
வெத்திபெறக் காயாதி கற்பஞ்சேரு
வீரப்பா அடிமுடியு முகந்துபாரு
புத்தியுட னிந்தநூ லதனைப்பார்க்கப்
புகழாகும் அறுசமயம் நன்றாய்க்காணே. (2)

காணவே மேருவதிற் றீபந்தோற்றும்
கலையான மதியவனுந் தேய்ந்தேசற்று
தோணவே கதிரவனாற் சேவையாகும்
சுகிர்தமதி குறைந்தசூ ரியனைக்காணப்
பூணவே மதிமறைந்த செயலைக்கண்டு
பொருமையுடன் வாக்குமன தொன்றதாகி
வேணவே மதிமுழங்குந் தன்மைதன்னை
உற்றுணர்ந்து பார்த்திடவே சீரதாமே. (3)

சீரப்பா சூரியசந் திரனைக்காணச்
சேருமடா சிவயோகம் உண்மையாகப்
பேரப்பா காமப்பால் கானற்பாலும்
பிரியமுடன் சித்தர்களுக் குகந்தவாறும்
வேரப்பா நாமெனுமோர் மதத்தினாலே
வீரான வாசியென்ற கம்பந்தன்னை
நேரப்பா அறிந்துகரை சேர்ந்தாயானால்
நிலையான வாசிதனைச் சேரலாமே. (4)

ஆமப்பா யெந்தவித மானாலுந்தான்
ஆனந்த மானபர வெளியிற்சார்ந்து
நாமப்பா கலைக்யானந் தனையுணர்ந்து
நலமான வாசிதனைக் கூர்ந்துநோக்கித்
தாமப்பா மதியைகதி ரவனிலேற்றத்
தன்மையுள்ள புரவியெனும் வாசிதன்னை
நேமப்பார் சுற்றிவரச் சாரிசெய்து
நினைவான விடமெங்குஞ் செல்லலாமே. (5)

செல்லலா மெப்பதியும் வாசிபூட்டித்
திரமாக ரேசகபூ ரகமுஞ்செய்து
வல்லதிட மாகக்கும் பகத்தேநின்று
வறிந்தோட்ட மாகநேர் சோதிகண்டு
சொல்லந்த மானசத்த வண்டந்தன்னிற்
சுடரொளியாய் நின்றகுரு பாதம்போற்றி
கல்லாகத் தேகத்தின் கசடையெல்லாம்
கனற்கொளுத்திக் கோலாலே சுட்டுப்போடே. (6)

போடப்பா கசடற்றுற் சுத்தமாகும்
பூமிதனிற் பயிர்கருகுஞ் செயலைக்கண்டு
நாட்டப்பா சாகாத கல்விதன்னை
நலமாகக் கற்பதற்கு வுன்னைத்தேற்று
தேடப்பா வமுதகலை தன்னிலேறித்
தீயாறு மயிர்ப்பாலத் தின்மேலாகச்
சாடப்பா ஆசையைநீ விட்டுவிட்டால்
தனல்பற்று மயிர்பாலஞ் செயமதாமே. (7)

செயமான பாலமதின் மீதிலேறிச்
சித்தான வீட்டைலெகு வாகத்தாண்டி
வயமான விதியாலே மகிமையப்போக்கி
வருமந்த ரவிதனிலே பதிவாய்நின்று
சுயமான முத்திமத்தி சோதிவீட்டிற்
சுகமாக முன்பிருந்து விழித்துப்பாரு
நயமாக நின்றிலங்குஞ் சொரூபசோதி
நன்றான தீபமதைப் போற்றிப்பாரே. (8)

போற்றிடுவாய் நிஷ்களங்க மாசதற்றுப்
பூரணமாய்ச் சுயஞ்சோதி யானதீபம்
சாற்றிடுவாய் மேருவின்மே லானதீபம்
சார்ந்துகீழ் மேலாக விலங்குந்தீபம்
ஏற்றிடுவாய் வாலையபி ராமிபாதம்
இணங்கினு லட்டசித்தி யெல்லாமாடும்
நாற்றிசையு முனைபோல்மற் றொருவருண்டோ
நலமான அறிவல்லோ தீபந்தானே. (9)

தானான அகாரமடா தீபமாகும்
தன்மயமாய் நின்றதுவும் வாமதீபம்
கோனான சோதிகுறி யாகக்கண்டாற்
கூச்சமில்லை நீச்சுமில்லை பேச்சுமில்லை
தேனான குறியோடே காலாலேறித்
தேறிகுடி யிருந்திறந்த யிடத்தைப்பாரு
வேனான மூலமுழுப் பாழதாகும்
விசனமற்ற இடமன்னை வீடதாச்சே. (10)

ஆச்சப்பா மூலத்தாய் உகாரரூபி
அளவில்லாக் கந்தமொடு செல்வாக்குள்ள
மாச்சரியம் மாயையென்ற மாயாரூபி
வளமாக மயக்கமென்ற லகிரியுள்ளாள்
பேச்சறியாள் மூச்சறியாள் மதிமயக்கம்
பேயாகிப் பேசவறி யாமல்நிற்பாள்
வாச்சமதி வழுதுண்ணு ளந்தப்பேதை
வல்லமைசேர் பூரணியை வணக்கஞ்செய்யே. (11)

செய்தடிமை யாகிமன மகிழ்ந்துநின்றால்
சித்துடைய சத்தியவ ளுந்தனோடு
வைபவமாய் விளையாடி யுறவாய்நிற்பாள்
மகத்தாமீ ரெழுத்துமோரெ ழுத்துஞ்சொல்வாள்
வையகத்திற் குணநலமாய்க் குருவைப்போற்றி
வாழ்வதற்குக் கூருடனே குறிப்பைக்கண்டு
வையசுணங் கனைப்போலே திரிந்தாலென்ன
பாருசுழி முனையும்வழி துறையாய்த்தானே. (12)

ஆய்ந்தறியார் சடமென்ற அருளைத்தானும்
அருளான பூரணத்தி னடியைக்காணார்
தோய்ந்தறிவாய் சதுரகிரி முடியிற்றானும்
சுகமாய்ச்சென் றக்கிரியின் முடியைக்கண்டால்
வாய்ந்தமுடி மீதினிலே குகைதானுண்டு
வளமாயக் குகைதனிலே வாசிதேவர்
பாய்ந்துதவஞ் செய்திடுவார் வாசியென்று
பண்பாக அவர்பதத்தைப் பூசிப்பாயே. (13)

பூசிப்பாய் நவக்கிரக மறிந்தேனந்தப்
புலனறிய வனுக்கிரக மெங்கேயென்று
நேசிப்பாய் சிவமகிமை தன்னாற்றானும்
நிலைபெறவே அனுக்கிரகம் நேரலாகும்
போசிப்பாய் நந்தியொளி தன்னில்நின்று
போற்றிடுவா யனுக்கிரகப் பதிவைத்தானும்
வாசிப்பாய் பதியறிந்து பதியிற்செல்ல
வாசியென்ற பரவாசி பற்றியேதே. (14)

ஏறிடவே மோனமெனச் சொன்னேனந்த
இயல்பான கேசரத்தின் கிரியையாலே
மீறிடவே பிரபையொளி தன்னிலேறி
வினையமுடன் ரவியொளியி லமுதங்காணு
தூறிடவே மதியும்பூ ரணமேயென்று
துரிதமாய்க் கண்டேநீ யிருந்துபார்த்துத்
தேறிடவே பதியறிந்து அத்தலத்தில்
தென்பாக நிற்கையிலே வாசிதேவர். (15)

தேவேநீ யானல்நின் பெருமைதன்னைச்
செப்பமுடி யாதவரம் பலத்தைக்கண்டால்
பாவவினை யண்டாது சமாதிநிஷ்டை
பண்பான வெட்டிரண்டும் பத்ததாகும்
தேவையுடன் பத்தையுமே பற்றியேறிச்
செயலறிந்து பதியுடனே பத்தைக்கண்டு
சேவைசெய்து பூரணத்தைச் சிமிழில்வாங்கிச்
சிவமான பூரணத்தைக் கையிலேந்தே. (16)

ஏந்தியே வித்திரண்டு மொன்றாய்க்கூடும்
இயல்பான நேசமதி லொளியென்சொல்வேன்
பூந்தவொரு பூரணத்தைக் கண்டதாலே
பூரணமாய் முத்தனென்று பேரேவாய்க்கும்
சாந்தமுடன் பூரணச மூலம்வாங்கித்
தன்மையுள்ள ரவிபீசங் கூடச்சேர்த்துக்
காந்தியாய்க் கீயாதி கற்பமென்று
கண்மணியே சிமிழதனிற் பதனம்பண்ணே. (17)

பண்ணவே குருபதத்தைப் போற்றிசெய்து
பண்பாக வமுதமெனக் கொண்டேனங்கு
உண்ணவே சிவயோக ஞானமார்க்கம்
உரைத்தேனே மக்களுக்கே யுலகமீதில்
எண்ணவே சின்மயத்தைச் சார்ந்துநீயும்
இடமறிவோ டுகந்துபர வெளியைச்சேர்ந்து
வண்ணமுடன் சிவரூப மாகநின்று
மகத்தான நிலையறிவா யீதுமுற்றே. (18)

இராமரிஷி சிவயோக ஞானம் ம௩.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் மம்மதுசாயபுபுரம் எட்மாஸ்டர் அன்பிராஸ் போஸ்ட்டுமாஸ்டர், M. R. இராக்கப்பபிள்ளையவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எண்பத்தாறுவது:

அத்திரிமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# உண்மைஞானபோதகம்.

அரியென்ற அட்சரத்திற் காதியாகி
அண்டபிண்டத் தப்பாலும் முப்பாழாகி
அரியாகி அயனாகி அரனுமாகி
அருளாகி இருளாகி யொளிவுமாகி
அரிதாகிச் சிறிதாகிப் பெரிதுமாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
அரியணையே வேதாங்க பீடமேவும்
அம்பரத்தின் செம்மலர்த்தா ளுமைக்காப்பாமே. (1)

ஆமப்பா சரியையதே உரியதென்ன
அமர்ந்தசடா தரன்றனது வரையைக்கட்டி
நாமப்பா மூலமெனும் பரையைப்போற்ற
நலமாச்சு சகலசித் தியுமுண்டாச்சு
வாமப்பா வாலைதனைக் காண்பதென்றால்
வழியறிந்தோர்க் கன்றிமற்றோர்க் கெய்திடாது
தேமப்பா யெட்டிரண்டு வயததாகித்
திகழ்கின்ற சோதியுரு வானுள்பாரே. (2)

பார்க்கவென்று நெருப்பாறு கடந்துசென்றால்
பரையவளுந் தனித்திருப்பா ளொருவரின்றிச்
சேர்க்கவே யிவ்வழியைச் சித்தரெல்லாம்
தெரியவொண்ணா தேமறைத்துத் தியங்கச்செய்தார்
தீர்க்கமுட னுயிர்நீங்கும் போதிற்றானும்
சிறந்திருந்த வைம்பூதம் பிரிவதாகி
ஆர்க்கவே யினத்தோடு யினமதாக
அடையுமென்று கூறிடுவார் மடையர்தானே. (3)

தானாகப் போவதற்கு வழியொன்றில்லை
சடந்தனிலே யுறங்கும்போ தொளிந்துதோன்றும்
கோனான பிருதிவியே மலமதாச்சு
கூறுகின்ற அப்புவிலே ஜலமதாச்சு
வாஞன தேயுவதே விந்துமாச்சு
வகையாக வாய்வதுதான் கழியலாச்சு
தேஞன வாகாயம் மூச்சுமாச்சு
தினந்தோறுங் கழிவதனு லென்னபாரே. (4)

பாரப்பா சடலமது தளர்ந்துபோச்சு
பகரரிது பரவான்மா சீவான்மாவும்
ஓரப்பா சத்திசிவ மென்பதாச்சு
உண்மையிவர்க் கொருபோதுஞ் சாவதில்லை
நேரப்பா கணமைந்தை வீடாய்க்கட்டி
நிலைகைலை போன்றவிந்த சடலத்துள்ளே
சீரப்பா ஜீவனுயி ரிரண்டதாச்சு
சித்தறிந்தால் நான்முகன்ற னுண்மைபோச்சே. (5)

போச்சப்பா பூதமது கழிந்தபோது
புகழான சடலமது நிலைதளர்ந்து
நீச்சப்பா ஜீவான்மா தேகமாகி
நின்றபர வான்மாவு மூட்கலந்து
ஓச்சப்பா சூக்குமமாந் தேகமாகி
உற்றுகெற்பம் பூகாயாய்க் கனியதாகி
காச்சப்பா பழுத்துவிழுந் தன்மைபோலக்
கனிந்தபின் பதுபிறக்கும் பூதங்கூடே. (6)

கூடியே தரிக்ககிர கத்தின்வேளை
குறிப்பாயு ளுண்டாச்சு அந்தக்கூட்டில்
நாடியிரு வருஞ்சென்று வெவ்வேருக
நயந்திருப்பா ரவர்களைநீ புத்தியாலே
தேடியொன்ருய்ச் சேர்த்துயிரைப் பற்றிக்கொண்டால்
சித்தறிந்தாய் சடலம்விட்டு வெளிகிளம்பி
ஓடிவேற் றெருகூட்டிற் புக்கலாகும்
உண்மையடா தேவனும்நீ யாவாய்காணே. (7)

காணவே கடிகைதனி லண்டமெல்லாம்
        கண்டுசுற்றி வந்திடுவாய் வேதன்றனே
தோணவுனே யென்செய்வான் விதியென்செய்யும்
        சுத்தலிங்கத் துயிரடங்கு மென்றோராது
நாணமில்லா தெமதூத காலபாசன்
        நாடியுயிர் கவர்வனென்ப ரவ்வாறல்ல
பூணவே விண்மீன்றான் காலனச்சு
        புகழான கோட்களுந்தா னேமனென்னே. (8)

என்னப்பா ராசியல்லோ தூதனகும்
        இயலான தேகம்வா கனமுமாச்சு
நன்னயமாய்ச் செனிக்கும்போ திருந்தகோட்கள்
        நடுநிலையாய்த் தரும்வயது சென்றதானல்
வின்னமதாய்த் தேகமது அழிந்துபோகும்
        விஞ்சையென்ற யிருவரையு மொன்றுசேர்த்தால்
உன்னியுன்னைக் கொல்லுகின்ற வாயுதங்க
        ளொன்றுமில்லை யெனநன்று யுணர்ந்துகொள்ளே. (9)

கொள்ளப்பா பிடிப்பதற்கு வமனேது
        குவலயத்திற் பிறப்பிக்கப் பிரமனுக்கு
விள்ளப்பா ஆண்மையே தண்டந்தன்னை
        விற்பனமாய் சிருஷ்டிகர்த்தன் பிண்டத்திற்குள்
கள்ளப்பா ஒன்றுமிலா திருவராகிக்
        கனிந்திருந்தா ரிதனையார் கோவிலென்பார்
தள்ளப்பா யிதனலே யொன்றுமில்லை
        சடலத்துட் சத்திசிவந் தனைக்கண்டோரே. (10)

கண்டவர்க்கே தவமாச்சு பிறப்பும்போச்சு
        கலந்தொன்றாய்ப் பிரமத்தோ டிருக்கலாச்சு
உண்டப்பா கைலைசொர்க்க மண்டரண்டம்
        உற்றுப்பார் பிரமத்துள் ளயிக்கமாச்சு
விண்டார்கள் சடலமுரு வாகும்போது
        விகற்பமிரு கிரகமொன் றாகச்சேர்ந்தார்
தொண்டப்பா அதிலொருவன் சுகங்கொடுப்பான்
        துற்றியதை மற்றொருவன் கெடுப்பான்பாரே. (11)

பாரப்பா யிவ்விதமாய் நேர்ந்ததாலே
பண்பான வாயுள்நிறை யொருவனீய
வீரப்பா கொண்டொருவன் மாளச்செய்வான்
விதிதவறி மாண்டவன்முன் கிரகந்தந்த
சீரப்பா வயதுவரை சூக்குமதேகத்
திடம்பெற்றுப் பசாசரெனத் திரிவார்மீண்டும்
நேரப்பா சடலத்துட் புகுதவென்றால்
நெட்டிதள்ளிக் குட்டிடுவான் புகுதொட்டானே. (12)

ஓட்டானே வுயிரெழுத்தைக் கண்டோனானால்
உண்மையாய் முனியுடனே தேவனாவான்
நிட்டையிலே மோகமுடன் தியானஞ்செய்தோன்
நேரிழையார் தங்களையும் பற்றிக்கொள்வான்
சட்டமுள்ள வுயிரெழுத்தின் தன்மையாலே
சகலமந்தி ரங்களுக்கு மடங்கானப்பா
திட்டமுள்ள தேவர்களும் மாந்தராவார்
செகமனிதர் தேவர்களு மாவார்செப்பே. (13)

செப்பிடுவாய் கிரகமைந்துட் சரமேயாகும்
திசழ்கின்ற நகாரமல்லோ ஆதிவாரம்
ஒப்பிடுவாய் மகாரந்தான் திங்களாகும்
உறுதியுள்ள சிகாரமடா சேயனாகும்
தப்பிதமீ தல்லவெள்ளி வகாரமாகும்
சித்தியுள்ள யகாரமது பொன்னனாகும்
துப்பற்ற விவர்கள்தா னைவராவார்
சிறந்தரிதான் சனியாகு முற்றப்பாரே. (14)

உற்றமுக்கோ ணப்புருவச் சுழிபுதன்றான்
உகந்தவா ரமதான வெழுவருந்தான்
நற்றவஞ்சே ரக்காரத்தின் ரூபமாவார்
நாடியவோங் காரமிரண் டக்கரந்தான்
பெற்றிரண்டு பாய்பாச்சோங்காரத்தோரம்
பேணிதனு வுயிருடனே பேருமாச்சு
கற்றவர்க்கு அட்சரந்தான் ரேறுணுமன்றிக்
கசடரிதைக் கண்டறிந்து வெல்லொண்ணாதே. (15)

வெல்லமற்றே ரில்லையிதே தேகமாச்சு
 வேண்டி லுக முடிப்பதற்கு மிவர்களாச்சு
சொல்லடா ராகுடனே கேதுதானும்
 சுடரான கதிரவனும் மதியென்றோரு
நில்லடா வாரமே மூலகமாச்சு
 நிலைகருவா மிரண்டுங்கீழ் மேலாயாடும்
வல்லதொரு வாரமடா தேகமாச்சு
 வந்திருபாம் படிமுடியுஞ் சுற்றும்பாரே. (16)

பார்த்திடுவாய் பீஜநிலை யறிந்தோரில்லை
 பண்பதனிற் சுழன்றெழுந்து வலமாய்ச்சுற்றி
நேர்த்தியா யண்டபிண்ட கபாலமுட்டி
 நிமிடமதில் வெளியினிலே வந்துபோகி
சீர்த்திவலப் புறமண்டத் தேயுதைத்து
 செனித்திடது பக்கமார் பதனிற்குத்தும்
பூர்த்தியிரு பாம்பிரண்டு கலையதாகும்
 புகழ்பற்றி யடக்ககதிர் மதியென்றோதே. (17)

ஓதபாம் படங்குபெட்டி கபாலமாகும்
 உற்றடக்க விட்டாக்கால் தேகமாறும்
நீதசர்ப்ப மிடங்கீழ்தேய் வதிற்சுழன்று
 நின்றுபா தாளமெனும் வாயலாலே
சேதமுடன் சிறிதுசிறி தாய்க்குறைந்து
 தீபனத்தீ யேழதுவும் பற்றிப்பின்பு
பேதமிலாப் பீஜமுடன் கனலைச்சுற்றப்
 பேணியுந்தி கீழாக நதியுண்டாச்சே. (18)

உண்டாகச் சிவமாமக் கினியேகொல்லும்
 உமையான வாயுவடா வேந்தித்தள்ளும்
விண்டரவி மதியதுவும் லோகந்தன்னில்
 விதமாகச் சுருளதைப்போற் சுற்றும்பாரு
கண்டதப்பா கன்னிவல மார்பிற்சுற்றி
 கதித்தண்ட பிண்டகபா லத்தில்முட்டிப்
பண்டுவந் திடமார்பிற் சுழன்றுநின்று
 பற்றியெழுந் தேய்வைசுற்றி யகன்றுபோமே. (19)

அகன்றதடா மார்பதனிற் சுழன்றதாலே
அதுபலிபீ டமதாகிச் சிருட்டிப்பாச்சு
சுகவல்ல குட்டிவட கோலந்தன்னிற்
சென்றிருக்க விந்துபோற் சுழன்றதாலே
தகமையுள்ள சுரோணிதம்பீ டத்துள்ளாச்சு
தானதுவிட் டால்மூர்த்த ரூபமாச்சு
உகந்துசிவ கூறிற்சுக் கிலந்தான்நிற்கும்
உற்றசுரோ ணிதஞ்சுழுத்தி நிற்குந்தானே. (20)

தானெழுகாற் றூற்றேகச் சுரைதான்பூட்டி
சத்திபங்க டைந்துபொழி பூரணத்தின்
வேனென்ற தினப்பார்த்துக் கபாலந்தன்னில்
மேவியுநின் றிரங்கிவாண் புறத்தடங்கும்
கோனென்ற வளர்பிறையில் விந்தவூறிக்
கூடியே பூரணத்தில் நிறைந்துநின்று
தேனென்ற தேய்பிறையி லழிந்துபோகும்
செயலறியா விட்டாற்குத் தவமும்போச்சே. (21)

போச்சென்ற சுக்லசுரோ ணிதமுங்கூடிப்
பொருந்திநின்ற சத்திசிவ மாகுமென்பார்
ஆச்சிவிட்டுச் சிவன்றானே வெளியிற்சென்றால்
அமர்ந்திருப்ப தில்லையுயிர் விந்துக்குத்தான்
பேச்சென்ன விந்ததற்குப் பேரநேகம்
பிறங்குநா தங்கருவாஞ் சிவன்றானென்றும்
நீச்சென்ன பொருளோடு சித்தனென்றும்
நிகழ்த்துவா ராதிவஸ்து தேகமென்னே. (22)

என்னவே ஆதிவஸ்து உயிருமாச்சு
ஈதிரண்டும் நிலைப்பதற்கு மார்க்கங்கேளு
நன்னயமாய்ப் பூரணநா ளாதிவஸ்து
நாடியே பராபரையைப் பூசைசெய்து
சின்னமிலா சுக்லவர்னப் பாத்திரத்தில்
தேறியே யாதிவஸ்தை வாங்கிக்கொண்டால்
இன்னமென்ன குறையுனக்குத் தேகத்தோடு
இயல்பான வுயிர்நிலைத்துச் சத்தாம்பாரே. (23)

சத்தாச்சு சிவனையுந்தா னறியலாச்சு
சள்ளையில்லா வெளிதனிலே யொளியைப்பார்த்து
சித்தறிய வென்றாலே சல்லவப்பா
திரமாகச் சரியையிலே கூடிநின்று
வெத்தியா யிரத்தெட்டுப் பிறைபூசிக்க
வீரமுடன் தேகம்விட்டுச் சென்றுதானால்
பத்தியுடன் கிரியைசெய்யப் பிறையாற்றேனும்
புகழான கிரியையிலப் படியேசெய்யே. (24)

செய்யவது கலந்துசட லத்தின்பூசை
செப்பொட்டி ரெட்டிமூ விரட்டியாக
வைபவமாய் மூலத்திற் பூசைசெய்ய
வருஞ்செனன ஞானங்கா ணுமற்போனால்
எய்தியே மறுசெனன மாவான்பாரு
இயலான அறிவோடே நான்கிரட்டி
பையவே போற்றிப்பின் ஞானங்காண்பான்
பரவெளியி னொளியறிந்து புக்குவானே. (25)

புக்குவான் சிவந்தேடிப் பூசித்தாக்கால்
புகழான ஆறுவரை யாறுந்தாண்டி
சிக்கென்றே றிடவெளியோ டொளியுமாவான்
சென்றிருந்து ஆசையுற்றாற் கீழேவீழ்வான்
பக்குவமா யாசையற்றுச் சிவத்தைச்சார்ந்தால்
பகிர்ந்துசடந் தனைத்தின்ற வுயிர்போலாகும்
திக்குவெளி சேர்ந்திருந்த வொளிதானப்பா
திகழ்ரூப மரூபமென் றெவர்காணாரே. (26)

காணார்கள் வெளியுடனே வொளிபோச்சென்பார்
கனமாகச் சுற்றியண்ட மட்டுஞ்செல்லும்
வேணான பிரமசத்திக் கிருளோமெத்த
வெளியான சிவன்சேர வொளிவுண்டாச்சு
தாணுவென்ற சிவனுக்கு முகமதைந்து
தண்விழிகள் மூன்றுடனே சுழியுமூன்று
ஆணவமாங் கதிர்மதியக் கினியுங்கண்கள்
ஆகும்பார் முகமைந்தி னிறத்தைக்கேளே. (27)

கேளப்பா பச்சைசிகப் போடுவெள்ளை
கெடியான மஞ்சளொடு கருப்புமாகும்
நாளப்பா மும்மூர்த்தி யாதியாகி
நலமாக அண்டமெங்கும் நிறைந்துநிற்பார்
ஆளப்பா முகமைந்துங் கண்மூன்றெட்டும்
அட்டாங்கம் பொருந்துகின்ற தேகமாகும்
நீளப்பா யாவர்களு மேகமாவார்
நிலையான எட்டுப்பேர் பிரிவும்பாரே. (28)

பார்த்திடுவா யயன்றனே பூமியாகும்
பண்டரிவிண் கதிருருத்தி ரன்சோமன்றன்
சேர்த்திடுவாய் சதாசிவனு மேல்மகேசன்
திடமான மகேசனுக்கு நீலமாகும்
ஆர்த்திடுவாய் வெளியுடனே யொளிபோச்சென்பார்
அருளான மகேசனல்லோ தேவனாகும்
பூர்த்தியாய்ச் சோதிதனித் தனியேநின்று
புகழான விந்துபல பேதமாச்சே. (29)

ஆச்சடா முகிலேழு வானமேழு
அதனுடனே மின்கூட வெட்டுமாச்சு
பாச்சடா அட்டபா லகருமாகும்
பகிர்தற்கு மகேஸ்பரனே தேவனாகி
நீச்சடா வாய்வாகி யண்டபிண்டம்
நிறைந்துநிற்பார் சகலருமின் னவர்க்குளாவார்
பேச்சடா பேசாமற் பாதம்பற்று
பிரளாதே சாகாக்கால் வலையைக்காணே. (30)

காணவே சித்தனென்ற பேருமாச்சு
கண்டசதா சிவன்பிடித்த காலுமாகும்
பூணவே யறிந்தாலே கர்த்தாவாச்சு
புகழ்வாசி ஜீவனுந்தா னவனலாச்சு
பேணவே சிவனெழுத்தே யதுதானப்பா
பேணியறிந் துய்த்திடுவா யாசானாகும்
தோணவே கண்டறிவாய் முத்தனாவாய்
சொன்னமொழி தவறாதின் னாலதாமே. (31)

ஆமப்பா பூவுதித்த மாந்தருக்கு
அரியகரு வெண்குட்டம் பெருவியாதி
தாமப்பா தீரநீர் வெட்டிமுத்துந்
தாளகங்குக் கில்கெந்த கத்திஞேடு
வாமப்பா சேங்கொட்டை பலமொன்ருக
வகைக்குநிறுத் தெடுத்துப்பின் சிவனூர்வேம்பு
வேமப்பா வெள்ளறுகு சங்கங்குப்பி
வேருடனே நல்லவிளாம் பட்டைதானே. (32)

பட்டையுடன் நிலவாகை வெவ்வேறெட்டுப்
பலஞ்சேரு காரெள்ளூப் படிகாலாகத்
திட்டநாற் பலங்தேங்காய் சிரட்டைகூட்டித்
தியங்காம லிடித்துப்பாண் டத்திலிட்டுச்
சட்டமுடன் குளித்தயில மிறக்கிக்கொண்டு
சாமைபொறி மாவில்வெரு கடிப்ரமாணம்
இட்டதிலே தயிலமிரு பணவிடைதான்
ஈய்ந்திடுவாய் தினமுமோர் போதென்றேதே. (33)

ஓதிடுவா யேழுநாட் கொடுக்கும்போது
உணவுடனே ரணத்தின்மேற் றயிலந்தன்னை
நீதியுட னேபூசி மூன்றும்நாளில்
நீயிலுப்பைப் பிண்ணுக்கை யரைத்துத்தேய்த்து
சேதியென்ன வெண்ணீர்விட் டலம்பத்தானும்
தீருமடா பதினெட்டுக் குட்டமெல்லாம்
ஆதிபோற் றேகமாங் காணுக்கடியு
மகன்றுவிடு மிச்சாபத் தியந்தானன்றே. (34)

அத்திரிமகாரிஷி உண்மைஞான போதகம் ௩௰.

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர ... யவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

திருச்சிற்றம்பலம்.

எண்பத்தேழாவது:

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞானவிளக்கம் அ௰

சிறந்தபரா பரமாகி யெங்குந்தானாய்த்
 தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
பறந்தருளு மைம்பூத மாயைதோன்றிப்
 பல்லாயி ரத்தண்டம் படைத்தபோதம்
வரம்பெருகு மானந்த வுயிருமாகி
 மதபேத மாகவுமே வடிவைக்காட்டிச்
சரமாகி யண்டத்தி லெழுந்துநின்ற
 சச்சிதா னந்தமதைப் பணிகுவோமே. (1)

ஓமென்ற சுழினையடா வண்டவுச்சி
 ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற்சென்று
நாமென்ற சொல்லற்று யோகஞானம்
 நாட்டுகிறே னஞ்சனமுந் திலதப்போக்கும்
வாமென்ற வைத்தியமும் அஷ்டகர்மம்
 வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவதாகக்
காமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
 காட்டுகிறேன் மெய்ஞ்ஞானக் கருவைப்பாரே. (2)

பாரேநீ யோகமென்ற வழியைச்சொல்வேன்
 பத்தடா வைம்புலனைப் பரத்தினூடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள்பேசித்
 திருவான வுச்சியிலே சேராமற்றான்
ஆறொருவ ராதாரம் வெவ்வேறாக
 அடுக்கடுக்காய்ப் பனிரெண்டு தலங்களென்றும்
வீரேதான் பேசியுமே மெலிந்துபோவார்
 விடமுண்ட வண்டமதை விரும்பிக்காணே. (3)

காணப்பா தலமெல்லா மண்டவுச்சி
கடினமடா பதினெட்டாங் கோட்டிற்சென்று
பூணப்பா மனதையுந்தான் பிசகொட்டாமற்
பூட்டடா பிராணயம் புகுந்தென்னாளும்
வீணப்பா மந்திரங்க ளேதுமில்லை
விதியில்லை மதியில்லை கெதியுமில்லை
தோணப்பா தோன்றுமடா மனதொன்றாகச்
சுத்தமுடன் நீயிருந்து தவஞ்செய்வாயே. (4)

செய்யப்பா வாசிமுனி மகனேகேளு
தீர்க்கமுடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சரக்குவகை விதமாய்நீத்து
மேன்மையுடன் கட்டினங்க ளுறுக்கினங்கள்
பொய்யப்பா சொல்லவில்லை ரெத்தினப்போக்கு
புனிதமுடன் வெளியாகச் சொல்லிப்போட்டோம்
வையப்பா விந்நூலின் மௌனமெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் வணங்கிக்கேளே. (5)

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மௌனமாகும்
ஆளப்பா பரப்பிர்ம யோகமென்று
அடுக்கையிலே போகமுந்தா னுயரத்தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்துநாதம்
வலுத்துதடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
நாளப்பா வண்டமெல்லாஞ் சுத்தியோடும்
நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே. (௬)

காணலாம் பிரமத்தின் நிர்ணயந்தான்
காட்டுகிறேன் வாசிமுனி கருவாய்க்கேளு
பூணலாம் அண்டவுச்சி தன்னில்நின்று
பொறிகளாயு முண்டாக்கிப் புவனந்தன்னில்
தோணலா முயிர்ப்பயிரைப் படைத்தெங்காளும்
தொந்தமெனு மேழுவகைத் தோற்றமாகி
ஆணலாம் நாலுவகை யோனியாகி
யண்டமடா அனந்தனந்த மானவாறே. (7)

வாரான பிரமத்தின் நடுவேமைந்தா
வந்துதடா ரவிமதியுஞ் சுடர்மூன்ருகிக்
கூருகப் பின்னியடா கீழேபாயும்
கூறுகிறேன் கண்ணினிடை வொளிவைக்கேளு
வீரான அண்டவுச்சி முனைக்கப்பாலே
வெத்தியுடன் நரம்பதுதான் விழுதுபோலே
நேரான விருகண்ணிற் பின்னலாகி
நிச்சயமா யொளிவாகி நிறைந்தார்பாரே. (8)

பாரப்பா பரப்பிர்மம் ஒளியினாலே
பத்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா விருகண்ணில் ஒளிவதாகி
அண்டமெல்லாம் ஏகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில் முக்கூருய்ச் சுழினைபோலே
வீரப்பா காதுக்கும் நாக்குக்குந்தான்
வெத்திபெற வேயின்னம் விளம்பக்கேளே. (9)

கேளப்பா மூலமடா லிங்கந்தன்னிற்
கிருபையுடன் தண்டுக்குங் கீழ்மேலாக
நாளப்பா தமர்போலே பிடரிமார்க்கம்
நன்ருக வோடுமடா நரம்பினூடே
வாளப்பா அண்டமுட்டி யுயரமைந்தா
வலுவாக முன்சொன்ன நரம்பினூடே
தேளப்பா சேர்த்துமிகப் பின்னலாகிச்
சிறந்திடவே புருவமத்தி யாகும்பாரே. (10)

பாரடா புருவமத்தி யேதென்ருக்கால்
பரப்பிர்ம மானதொரு வண்டவுச்சி
நேரடா முன்சொன்ன நரம்புமத்தி
நிலைத்துதடா சுழினையென்று நினைவாய்ப்பாரு
வீரடா அண்ணாக்கின் நேரேமைந்தா
மேவடா மனந்தனையுஞ் செலுத்தும்போது
காரடா சுழினையிலே மனந்தான்பாய்ந்து
கலங்கதைந்து பூதமுந்தா னென்ருய்ப்போமே. (11)

போமடா முன்சொன்ன நரம்பினூடே
பூரித்து ரவிமதியுஞ் சுடர்தான்மூன்றும்
ஆமடா பின்னியுந்தான் கீழேபாயும்
அந்தரங்கந் தனைப்பார்க்க அடங்கிப்போகும்
நாமடா வெளிதிறந்து சொல்லிவிட்டோம்
நாதாந்தப் பரப்பிர்ம நாட்டந்தன்னை
ஓமடா விந்துவுந்தா னண்டவுச்சி
உறுதியுடன் சித்தமதை யூணிப்பாரே. (12)

பாரான சாகரமே அண்டவுச்சி
பதினாலு லோகமெல்லாம் பரத்தினூடே
சீராகத் தெரியுமடா மவுனமார்க்கஞ்
சித்தான சித்துவிளை யாடிநிற்கும்
வீரான மந்திரங்கள் பிறந்ததெப்போ
விஷ்ணுவென்றும் பிரமனென்றும் வந்ததெப்போ
கூரான முக்குணங்க ளுதித்ததெப்போ
கூறாத அட்சரத்தின் குறியைக்காணே. (13)

காணார்கள் பிரமந்தா னுதிக்குமுன்னே
கருணையுள்ள மந்திரங்கள் பிறந்ததுண்டோ
தோணாமல் மந்திரங்க ளனந்தங்கற்று
சுழினையென்ற மூக்குநுனி தன்னைப்பார்த்து
வீணாகத் திரிந்துமிகப் பார்த்ததாலே
வேறோடே கெட்டுழல்வான் விருதாமாடு
கோணாம லண்ணாக்கின் நேரேமைந்தா
குறிப்பறிந்து பார்த்தவர்க்கு முத்திதானே. (14)

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மோசமடா மனந்தானும் ரெண்டாய்ப்போகும்
சத்தியடா மனந்தானே யேகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரமத்திற் புகுந்துகொண்டாற்
பூலோக மெல்லாந்தான் பணிவாருன்னை
எத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுண்ணக் கர்ப்பந்தானே. (15)

தானென்ற கர்ப்பமெனும் மதுவுண்டாக்காற்
சஞ்சாரச் சமாதியென்றே யிதற்குப்பேரு
ஊனென்ற பசிதீருங் கோபம்போகும்
உதயகிரி தனிற்சென்றா டுருவிப்பார்க்கத்
தேனென்ற திரையேழுந் தேய்ந்துபோகும்
திருவான வுச்சிகடுச் சென்றபோது
கோனென்ற கருவியெல்லா மொடுங்கிப்போகும்
கூத்துவனு ராட்டமதைப் பார்க்கலாமே. (16)

பார்க்கலா மொருகாலை யுயரத்தூக்கிப்
பாடுவா ரொருகாலைத் தாழவிட்டு
ஏர்க்கையிலே மேல்நோக்குங் காலைக்கேளு
என்மகனே மதியென்று மதற்குப்பேரு
காக்கையிலே கீழ்நோக்குங் காலைமைந்தா
கண்டுபா ரிரவியென்று கருதலாகும்
மார்க்கமுட னண்டவுச்சி மேலேதானும்
மகத்தான வன்னியிருப் பிடந்தான்பாரே. (17)

பாரப்பா யிதையறியாச் சித்தர்கோடி
பார்தனிலே யறுபத்து நாலுயோகம்
ஆரப்பா யிருக்குதென்று வெவ்வேறாக
அலைந்தலைந்து கெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பா ராஜாங்க யோகந்தன்னை
நிலையறிந்து கண்டவனே கோடிக்கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடா பாய்ந்ததுவும் வெளியாய்க்காணே. (18)

காணாத காட்சியெல்லாங் கண்ணிற்கண்டு
காகவுருப் புசுண்டனென்று பேரும்பெற்றேன்
தோணாமல் நானலைந்து சிலதுகாலம்
துருவமென்ற பிரமத்தை யடுத்துக்கேட்க
நாணாமல் அண்டவுச்சி தன்னிலேதான்
நாடியே மனதாலே நாட்டமாகக்
கோணாமற் பாருமென்று யெனக்குசொல்லக்
கூசாமல் மனதொன்றாய் நிறுத்தினேனே. (19)

நிருத்தியே வெகுகோடி காலமட்டும்
நிருவிகர்ப்ப சமாதியிலே நிறைந்தேன்னாளும்
பொருத்தியே லலாடக்கண் டிறந்துபார்க்கப்
பூலோக மெங்குமொன்றாய் நிறைந்தேன்மைந்தா
திருத்தியாய்ச் சின்மயத்தைக் காண்பதற்குச்
சிவசிவா வென்றுபல முறையேகூறிக்
கருத்தொன்றாய் நிருத்தியடா கபாட நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளை யாடலாமே. (20)

விளையாடிப் போதமய மாகவுந்தான்
வெட்டாத சக்கரத்தின் வெளிச்சம்பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக்கண்ணை
நீயறிந்து அரவுவிடந் தன்னைப்போக்கி
அலையாம லாரொருவ ருறவுமற்று
ஆயிழையாள் போகமதை யதட்டித்தள்ளி
மலையாமற் பிரமமே துணையாயெண்ணி
மௌனமென்ற மனந்தனையு மடக்கிநில்லே. (21)

நில்லென்றால் லோகத்தின் மனிதர்தாமும்
நிஷ்டையுடன் சமாதியுமே பொருந்தாமற்றான்
வல்லவர்போல் வேதகா வியபுராணம்
மந்திரங்கள் கோடானு கோடியென்றும்
செல்லுவார் கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
திருடர்கள்போ லலைந்தலைந்து திரிவான்மட்டை
வெல்வதொரு பிரமநிலை யறியாமற்றான்
வேரற்ற மரம்போலே விழுவான்பாரே. (22)

பாரப்பா மலரெடுத்து லிங்கம்வைத்துப்
பார்த்திப லிங்கமதைப் பணியாமற்றான்
வீரப்பா மணியாட்டிப் பூசைசெய்து
வீணர்களுங் கத்தபம்போற் கதறுவார்கள்
தேரப்பா மலர்தனையே கிள்ளும்போது
செத்தசவம் போலாச்சு தெளிந்துபாரு
காரப்பா மனங்கொண்டு பரத்தினூடே
கண்டவர்கள் கயிலாசத் தேகந்தானே. (23)

தானென்ற பிரமமதை யடுத்திடாமற்
றாரணியி லனந்தமடா தெய்வமென்றும்
ஊனென்ற குருவென்றுஞ் சீடனென்றும்
உதயகிரி பாராத வுலுத்தமாடு
வேனென்ற பொய்களவு கொலைகள்செய்து
வேசையர்மே லாசையுந்தான் விருப்பமாகக்
கோனென்ற குருபாத மடுக்காமற்றான்
கூடுவான் நரகமதில் விழுவான்பாரே. (24)

பாரப்பா நாக்கையுந்தா னண்ணாக்கேத்திப்
பார்தனிலே பார்த்தவர்க்குப் பலிதமில்லை
ஆரப்பா கண்வெடிக்குந் தேகம்போகும்
அடையோக மென்பார்க ளாகாதப்பா
சாரப்பா மனந்தனையு மண்ணாக்கேத்திச்
சார்ந்துமிகப் பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பா மேலடங்குங் கீழ்நோக்காது
வெட்டாத சக்கரத்தை யறியலாமே. (25)

அறியலாம் மனந்தானே உயிர்தானாகும்
அண்டத்திற் சேர்ந்திடவே யாகும்முத்தி
பரியேறிச் சாரியுமே நடக்கலாகும்
பஞ்சமா பாதகங்கள் பறந்தேபோகும்
விரிவான மனந்தனையும் அணுவதாக்கி
விட்டகுறை தொட்டகுறை விதியைப்பார்த்துக்
குறியான குண்டலியா மண்டவுச்சி
கூறுகிறேன் முக்கோண நிலையதாமே. (26)

தாமென்ற வுலகத்தில் மனிதரோடே
சஞ்சாரஞ் செய்யாதே தவர்செய்யாதே
ஓமென்ற வூண்மிகுந்து வுண்டிடாதே
ஓரமாய் வழக்குகளை யுரைத்திடாதே
ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே
ஆயாச மாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய் கொண்டவரோ டிணங்கிடாதே
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே. (27)

விளையாடிக் கருநெல்லி பறித்துவுண்ணு
வேகாத தலையாகும் விரும்பிப்பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்துவுண்ணு
மைந்தனே சாகாக்கா லிதுவேயாகும்
அலையாமற் சோதியுட பாலையுண்ணு
அக்கினியாங் கம்பமடா சுழினையாச்சு
கலைநாலு பேராதையு மெட்டிற்சேரு
கபடற்ற தேகமடா கண்டுபாரே. (28)

கண்டுகண்டு மனந்தானே யண்டஞ்செல்லக்
கலைநாலும் எட்டிலையுஞ் சேர்ந்துபோகும்
தண்டுமுண்டு செய்யாதே மனம்வேறாகத்
தற்பரத்தை யெப்போதும் அறியமாட்டாய்
தொண்டுசெய்து பெரியோரை யடுத்துமைந்தா
தொழுதுநீ யென்னூலின் பயனைக்கேளு
விண்டுமவர் சொல்லாட்டா லின்னூலிற்சொல்லும்
வெற்றிபெற மனதடக்கம் வைத்துப்பாரே. (29)

பாரப்பா விஞ்சைமந்த்ர மென்பார்வீணர்
பாயடா விஞ்சைகிரி தன்னில்மைந்தா
ஆரப்பா சென்றேறிப் பார்க்கும்போது
அதீதமுள்ள விஞ்சைமந்த்ர மனந்தங்காட்டும்
நேரப்பா சிருஷ்டிப்புச் சங்காரங்கள்
நிமிடத்திற் செய்திடுவாய் நிலையைக்கண்டால்
வீரப்பா அமுதமுந்தான் குமிழிபாயும்
வேறில்லாக் கனிகளையு முண்கலாமே. (30)

உங்கலாம் பிரமமுந்தா னடங்கும்போது
உறுதியுள்ள அண்டத்தி லுருவிப்பாயும்
இங்கலாம் அமுதமடா தேனுஞ்சீனி
இத்திப்புப் பாலுடனே திடமாம்மைந்தா
தங்கலாந் தேகமது அழியாமற்றான்
சட்டையுமே கழன்றுமிகத் தங்கம்போலே
பொங்கலாம் மெய்ஞ்ஞான தீபம்போலே
பூரித்துப் பார்த்திடவே புவனமொன்றே. (31)

ஒன்றாச்சு பிரமமே வெவ்வேறாக
உலகத்தி லனந்தமடா கூத்துமாச்சு
நன்றாச்சு தீதாச்சு நாளுமாச்சு
ஞாயிறுந் திங்களென்று பேருமாச்சு
குன்றாச்சு வூர்வனங்க ளனந்தமாச்சு
குருக்களென்றுஞ் சீடரென்றுங் குறிகளாச்சு
நன்றாச்சு நாதவிந்தும் அடங்கிநின்ற
நாதனையு மோர்மனதாய் நாட்டுவாயே. (32)

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாஸ்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமா யண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே யடைந்திருக்குங் குயிலைப்பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப்பாரே. (33)

குறியென்ற வுலகத்திற் குருக்கள்தானும்
கோடிமறை வேதமெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற் பிரமமதைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை யழிம்புபேசி
விரிவான வேடமிட்டுக் காவிபூண்டு
வெறும்பிலுக்கா யலைந்திடுவார் நாயைப்போலே
யரியாச மாகவுந்தான் தெண்டுமேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான்பாரே. (34)

பாரப்பா சீடர்களை யழைப்பான்பாவி
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பா பிரமநிலை காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்றான்சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்கிநின்ற விடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே. (35)

வானென்ற அண்டத்திற் சென்றுபுக்கி
வடவரையி னுச்சிநடு தீபங்கண்டு
தேனென்ற சுத்தசிவ கெங்கைதன்னிற்
றீர்த்தங்க ளாடிவெகு நாமமிட்டு
கோனென்ற மனதன்பால் மலராய்ச்சாத்திக்
கோடிமறை வேதமுந்தா னண்டங்கண்டு
தேனென்ற சித்தமது புத்தியாகத்
தெரிந்தவரே மெய்ஞ்ஞானி யாகும்பாரே. (36)

பாரண்ட மதையொன்றாய்ப் பார்க்கும்போது
பலபேத மாயையெல்லாம் பறந்தேயோடும்
சீரண்ட மகிலாண்ட பிரமாண்டங்கள்
ஜெனித்தவகை யுயிர்தோறும் நீயாய்நிற்பாய்
காரண்ட லலாடக்கண் டிறந்தபோது
கண்கொள்ளாக் காச்சியெல்லாங் கலந்தேகாட்டும்
வீரண்ட மேல்வட்டம் விரிந்தசக்ரம்
மெய்ஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்துகூடே. (37)

கூடுவதே குணமறிந்து மனதொன்றாகக்
கூத்தாடித் திரியாமற் கெவுனமாகப்
பாடுவதே பலநூலைப் படித்திடாமற்
பராபரத்தின் உச்சிநடு வெளியிற்சென்று
ஆடுவதே தொங்தோமென் றாட்டைப்பார்த்து
அடுக்கடுக்கா யாயிரத்தெட் டிதழுங்கண்டு
வாடுகிற பயிர்களுக்கு மழைபெய்தாப்போல்
வாடாத தீபத்தை யறிந்துபாரே. (38)

பாரென்று மெய்ஞ்ஞானம் பகர்ந்துசொன்னீர்
பராபரத்தின் நிலையினுட பாதஞ்சொன்னீர்
வீரென்ற அண்டமெல்லாம் பாழதாகி
விராட்பிர்ம மொண்டியா யிருக்கும்போது
சீரென்ற வுயிர்களெல்லா மிருப்பதெங்கே
சித்தருடன் திரிமூர்த்தி யிருப்பதெங்கே
கூரென்ற நீர்தங்கு மிடந்தானெங்கே
குருபரனே யிந்தவகை கூறுவீரே. (39)

கூறுகிறே னென்மகனே வாசிநாதா
குணமான யீஸ்பரனார் சபையிற்கூடி
தேறுகின்ற பிரளயமாங் காலந்தன்னிற்
சீவஜெந்து சித்தருடன் முனிவர்தாமும்
வீறுடனே யெங்கேதா னிருப்பாரென்று
விமலருந்தான் விஷ்ணுவையும் விபரங்கேட்க
காறில்லா நெடுமாலுங் கடவுளாரைக்
கண்டுமிகப் பணிந்துமினி கருதுவாரே. (40)

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வோன்றானும்
கனமான ஜீவஜெந்து மனந்தஞ்சித்தர்
உறுதியா யெந்தனுட கமலந்தன்னில்
ஒடுங்குவா ராதரித்து மிகவேநிற்பேன்
வருந்தியே புசுண்டருந்தான் வருவாரென்று
வல்லரிடம் மால்தானும் உரைக்கும்போது
சுருதியா யெனையழைத்துச் சிவன்றான்கேட்கச்
சூத்திரமாய் நல்வசன மொழிந்தேன்பாரே. (41)

பாரென்று சிவனுடைய முகத்தைப்பார்த்துப்
பல்லாயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்
சீரென்ற சித்தருடன் முனிவர்தானும்
திருமாலும் ஆலிலைமேற் றுயிலும்போது
கூரென்ற வுந்தியுட கமலந்தன்னிற்
கூடியே யடைந்திருக்குங் குணமதாக
வீரென்ற ஐவரையுந் தாண்டியப்பால்
வெகுசுருக்காய் வீதிவழி வந்தேன்பாரே. (42)

பாரப்பா ஆகாசஞ் செல்லும்போது
பாலகனே சக்கரந்தான் சுத்தியாட
ஆரப்பா சக்கரத்தைப் பிசகொட்டாமல்
அதன்பேரி லேறியுந்தா னப்பாற்சென்றேன்
நேரப்பா நெடுந்தூர மேறும்போது
நிட்சயமாய்க் கம்பத்தின் நிலையைக்கண்டு
வீரப்பா அக்கினிபோற் படர்ந்திருக்கும்
வெளியொன்றுந் தெரியாம லிருக்குந்தானே. (43)

இருக்குமெங்கு மொன்ருயக் கினியின்கம்பம்
என்மகனே கம்பத்தின் நடுவேமைந்தா
உருக்கமுடன் பெண்ணரசி யொன்றிநிற்பாள்
ஓகோகோ அவள்முகத்தைப் பார்க்கும்போது
பெருக்கமுடன் முன்பார்த்தாற் புருடரூபம்
புத்திரனே பின்பார்த்தாற் பெண்போல்ரூபம்
வருக்கமுடன் யான்ருனுங் கம்பத்தூடே
வஸ்தோடே வஸ்தாக யிருந்தேன்பாரே. (44)

பாரப்பா யிப்படியே அனந்தகாலம்
பராபரத்தி னூடேதா னிருந்துவாழ்ந்தேன்
ஆரப்பா பிரமமுந்தான் மனதிரங்கி
அண்டமதைப் படைப்பதற்கு அருளும்போது
வீரப்பா கம்பத்தி லிருந்தபெண்ணும்
விமலரென்றும் உமையென்றும் மிகவேதோன்றி
சீரப்பா சக்கரத்தி லிருந்துகொண்டு
திருமாலைத் தானழைக்கத் தீர்க்கம்பாரே. (45)

பாரப்பா திருமாலுங் கமலந்தன்னிற்
பல்லாயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்
நேரப்பா அழைத்துமுக் குணத்தைக்காட்டி
நிலையான சமுத்திரங்கள் பூமிதானும்
சேரப்பா ரவியோடு திங்கள்தானும்
சிறந்தெழுந்த மலைகறடு சீவஜெந்து
வீரப்பா கிரகநட் சேத்திரங்கள்
வெத்தியுடன் நால்வேதம் வகுத்தவாறே. (46)

வாருகத் தேகமென்றும் பூதமென்றும்
வையகத்தில் வானமென்றும் பூமியென்றும்
கூருக மகாமேரு கிரிகளென்றும்
கோவிலென்றுந் தீர்த்தமென்றுங் குளமுண்டாக்கி
நேருகப் பரப்பிரமஞ் சாட்சியாக
நிலைத்ததெங்கு முயிர்தோறும் நிறைந்தாரையா
வீருகத் திரியாமல் மௌனம்பார்த்து
வெத்திபெற வின்னமுந்தா னுரைக்கக்கேளே. (47)

கேளப்பா யிப்படியே பிரளயந்தான்
 கிருபையுடன் ஏழுலட்சங் கோடியானால்
ஆளப்பா அரியயனுஞ் சீவஜெந்தும்
 அகண்டமென்ற பிரமத்தி லடங்குவார்கள்
நாளப்பா நானுமந்தப் படியேசெல்வேன்
 நலமாக வின்னமுந்தான் அகண்டமானால்
வாளப்பா காகமென்ற ரூபமாகி
 வடவரையிற் கூடுகட்டி யிருந்தேன்பாரே. (48)

பாரடா விப்படியே யுகங்கள்தோறும்
 பார்தனில்நா னறிந்ததெத் தனையோகோடி
ஆரடா வென்னைப்போலே அறிவாருண்டோ
 ஆதியென்ற சித்தருக்கு மாதியானேன்
வீரடா விமலரிடஞ் செல்லும்போது
 வெற்றியுட னென்னையெடுத்து முத்தமிட்டார்
காரடா கயிலையின்மே லிருக்கச்சொன்னார்
 காகமென்ற ரூபமா யிருந்தேன்பாரே. (49)

காகமென்ற ரூபமா யிருந்துகொண்டு
 காரணங்க ளனைத்தையும்நற் கருவைப்பார்த்து
வேகமுடன் வெளியோடு நிலையைப்பார்த்து
 வெகுதூரஞ் சுத்தியின்னம் விபரங்காணேன்
மோகமுடன் பறந்தமனம் அணுவதாக்கி
 மூர்க்கமுடன் பரவெளியை வெளியதாக்கி
நாகரிக மாகவுந்தா னண்டமேவி
 நடுவணையா முச்சிநடு மத்திதானே. (50)

மத்தியதி லானதிலே முளைத்தலிங்கம்
 மகாமேரு முச்சியிலே வளர்ந்தலிங்கம்
சத்தியுட னுவிடையு மானலிங்கம்
 சஞ்சாரச் சமாதியிலே நிறைந்தலிங்கம்
புத்தியாய் மனதொன்றாய்ப் புகழ்ந்தலிங்கம்
 பூருவந் தன்னிலேதான் முளைத்தலிங்கம்
எத்திசையும் புகழ்ந்திடவே வந்தலிங்கம்
 ஏகபர மானதொரு லிங்கந்தானே. (51

தானென்ற சிறுவீட்டுக் குள்ளேசென்று
தலைமாறிப் போரதொரு வாசியைத்தான்
கோனென்ற பிரமத்தி லடக்கமாகும்
குறித்திடுவாய் மனதடங்குங் கூர்ந்துபாரு
வானென்று பொழியுமடா பானம்பானம்
மைந்தனே உண்டிடவே பசிதான்தீரும்
தேனென்ற சட்டைகளுங் கழன்றுபோகும்
தேவனுக்குந் தேவனா யிருக்கலாமே. (52)

இருக்கலா மெந்தெந்த யுகங்களுக்கும்
யேகாந்த மானதொரு பிரமந்தன்னிற்
பெருக்கவே மனதடங்கி மௌனம்பெத்து
பேராசை யாகவுந்தான் பிரமந்தன்னிற்
குருக்களைப்போ லரசனைப்போல் வலாரியைப்போற்
குணமான மூவரைப்போற் சிவனைப்போல்
திருக்கெடுத்து வெந்தெந்த வவதாரங்கள்.
செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே. (53)

தானவனே யென்குருவே புசுண்டநாதா
தாரணியி லுயிர்களுட னண்டமெல்லாம்
தோணவே மும்மூர்த்தி தோற்றுமென்றீர்
துடியான பிரமத்தி லடங்குமென்றீர்
கோனவனே பின்னுந்தா னண்டமெல்லாம்
குறிப்புடனே படைக்கும்வகை குறிப்புச்சொன்னீர்
தானவனே மதுவுண்கச் சொன்னீரையா
தலந்தனிலே வாசியது சாற்றுவீரே. (54)

சாற்றுகிறே னென்மகனே வாசிநாதா
சத்தியமா யண்டமதிற் செல்லும்போது
போற்றுகிற வக்கினியும் பிரவேசித்துப்
புலன்களைந்துஞ் சேர்ந்ததினாற் போதமாகும்
மாற்றிலையு மதிகமடா வுன்றன்தேகம்
மைந்தனே யபுரூப மாகுமப்பா
வாற்றியே நிழல்சாயை யற்றுப்போகும்
வலுத்ததடா காயசித்தி யாச்சுபாரே. (55)

ஆச்சென்ற வரூபமய மானபோது
    அஷ்டமா சித்திவகை யெட்டுமாடும்
மூச்சொன்றி லடங்கிப்போம் பிரமத்தூடே
    முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப்போகும்
காச்சென்று காச்சிவிடு மௌனங்கண்டு
    கலைமாறி நின்றிடமே கனகபீடம்
நீச்சொன்று மில்லையடா வுன்னைக்கண்டால்
    நிலைத்துதடா சமாதியென்ற மார்க்கந்தானே. (56)

மார்க்கமுடன் தவசுநிலை யறியாமற்றான்
    மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத்தோர்கள்
ஏர்க்கமுடன் முப்பதுக்குள் மௌனங்கண்டு
    இளவயதா யிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவே சற்குருவின் பாதங்கண்டு
    கருணையுட னவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன் பிர்மத்தில் மனந்தான்செல்லச்
    சிவனுக்குஞ் சிவனா யிருக்கலாமே. (57)

இருக்கலாஞ் செடிபூடு கற்பமில்லை
    ஏகாந்த மானதொரு பிரமந்தன்னில்
உருக்கியே மனதடங்கி யார்க்கும்போது
    உத்தமனே கர்ப்பத்துக் குறுதியாச்சு
மருக்கியே திரியாமல் மதம்பேசாமல்
    வண்டரோ டிணங்கியடா மருவிடாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்திடாமற்
    குருபாதங் கண்டுமிகப் பணிந்துபாரே. (58)

பாரென்று சொன்னமெய்ஞ் ஞானமூர்த்தி
    பரத்தினுட வடிமுடியும் பகர்ந்துசொல்லும்
சீரென்று சொற்பனங்கள் பேதமாகத்
    திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்று மனம்பிறந்த இடந்தான்சொல்லும்
    கதிர்மதியுஞ் சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
ஊரென்றும் பிறந்தவிடந் தலந்தான்சொல்லும்
    உத்தமனே பிறந்தவகை யியம்புவாயே. (59)

வாயாலே சொல்லுகிறேன் மகனேகேளு
மகத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல் முன்சொன்ன நரம்புபின்னி
உத்தமனே ரவிமதியுஞ் சுத்தியாகும்
மாயமடா வாசியுந்தான் நடுவேநின்று
மார்க்கமுடன் சுழுத்தியுள்ளே மனந்தான்சென்றால்
காயான சுழுத்தியென் றிதற்குப்பேரு
கண்டுபார் கண்கொள்ளாப் போதந்தானே. (60)

தானென்ற பலரூப மதிசுங்காணும்
தன்னுடைய தேவதைபோற் பின்னுங்காட்டும்
ஊனென்ற பெண்ணைப்போ லுன்னைக்கட்டி
யுத்தமனே சையோகஞ் செய்தாற்போலே
தேனென்று மயக்கிவைக்குஞ் சுழுத்தியாலே
தித்திப்புப் போலேயும் ருசியைகாட்டும்
கோனென்ற குருவருளைப் பணிந்துகொண்டு
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப்பாரே. (61)

நிலையாக சமுத்திரமே சுழுத்தியாச்சு
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற்சேரு
தலையாமக் கினியைவப் படியேசேரு
சத்தியமாய் ரவிமதியைக் கூடச்சேர்த்து
மலையாம லேகபரா பரனேயென்று
மனதடங்கி யண்டவுச்சி தன்னைப்பார்க்க
அலையாது மனந்தானும் பரத்திற்சென்று
ஆகாச வீதிவெளி யாட்டும்பாரே. (62)

ஆட்டுமடா ஆசையற்று ரோசமற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடா நவத்துவா ரங்கள்தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாகக்
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங்கண்டாற்
காமதேனுங் கற்பகமு முனக்கேசித்தி
வீட்டிலேயுந் தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னூற்றீபம் விழலாய்ப்போமே. (63)

போகுமடா புத்திசித்த மொன்றதாக்கிப்
புசுண்டரென்று பேரெடுத்துப் புவனந்தன்னில்
ஆகுமடா வடகாளி மைந்தனென்றும்
அருமையாங் கன்னியுட புதல்வனென்றும்
நாகுமடா வைந்துபேர் தன்னிலேதான்
நாட்டமுடன் முன்பிறந்தேன் நான்ருன்மைந்தா
வாகுமடா சாண்முழத்திற் காட்சிபார்க்க
வஸ்துவுந்தான் யீஸ்பரனு ரென்ருர்பாரே. (6 )

பாரப்பா யென்குலந்தான் சொல்லக்கேளு
பார்தனிலே பரமனுட விந்துவாலே
ஆரப்பா பிறந்துவிட்டோ மைந்துபேரும்
ஆகாச வண்டமதை யடுத்தேசென்றேன்
நேரப்பா வெகுகோடி காலம்வாழ்ந்தேன்
நிஷ்டையிலே மனந்தளரா திருந்துகொண்டேன்
வீரப்பா பேசுவர்கள் லோகத்தோர்கள்
விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக்காணே. (65)

காணப்பா சாதிகுல மெங்கட்கில்லை
கருத்துடனே யென்குலஞ்சுக் கிலமேயாகும்
தோணப்பா தோணுமற் சர்திபேதஞ்
சொல்லுவான் புத்திகெட்டு முருண்டுபோவான்
வீணப்பா பிர்மத்தி லாதிகாலம்
வீரமுடன் பிறந்துதடா வுயிர்களெல்லாம்
நாணப்பா அப்படியே யுதித்தேன்முன்னே
நன்ருக வுதித்தவிடம் நாடினேனே. (66)

நாடியே வுதித்தவிட மறியாத்தோடம்
நடுவாக வந்தவிட மறியாத்தோடம்
கூடியே பிறந்தவிடங் காணுத்தோடம்
குருபரனை நிந்தனைகள் செய்ததோடம்
வாடியே வஸ்தோடே சேராத்தோடம்
வம்பரோ டிணங்கியே திரிந்ததோடம்
கூடியே வுறவற்று யிருந்ததோடம்
கும்பிடுங்கற் சிப்பிலையயும் அறியான்பாவி. (67)

அறியாத பாவிகட்கு ஞானமேது
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமர் தன்னுடைய நூலும்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூல்களெல்லாம்
வீணாக மறைப்பாகச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார் வெவ்வேறாய்க் குற்றந்தானே. (68)

சூத்தமது வையாம லண்டத்தேகிக்
கூறாத மந்திரங்கள் குறியைப்பார்த்துச்
சித்தம்வைத்து அந்திசந்தி யுச்சிக்காலம்
தேவனுக்குப் பூசைசெய்து தெளிவுபெற்றுக்
சூத்தமது வையாமற் றனதன்பாலே
குருபரனை நோக்கியடா தவமேசெய்து
பத்தாசை வைத்துமிகப் பார்க்கும்போது
பராபரையுங் கைவசமா யாகுவாளே. (69)

ஆகுமே அந்திசந்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றுகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி
யிருந்திடவே பிரமத்தின் நிலையதாகும்
போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனதிரி சூலியுட கிருபையாலே
வாகுமே வழியோடே நடந்தாயானால்
வாணியுந்தான் நாவில்நடஞ் செய்வாள்பாரே. (70)

பாரப்பா வாணியுந்தா னிருந்தவீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆர்டா அண்ணாக்கின் கொடியினூடே
அண்டத்தைப் பத்தியடா விழுதுபோல
நேரடா நரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலையான வக்கினியின் மத்திதன்னில்
வீரடா அதுவழியே அருள்தான்பாய்ந்து
விண்ணுலகி லென்றமிழைச் சொல்லுவாளே. (71)

சொல்லுவா னனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமத்தாலே
வெல்லுவாள் தனையறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மை பேசார்கள் மௌனமாக
அல்லுபக லற்றதொரு பிரமந்தன்னை
யாரறிவா ருலகத்தி லறியமாட்டார்
சொல்லடங்கு மிடந்தனையுங் கண்டுபோற்றிச்
சூத்திரமாய்க் கல்லுப்பு வாங்குவாங்கே. (72)

வாங்கியே அண்டத்தில் மூளைசேர்த்து
வளமாக வுப்பிலேயும் பிசறிமைந்தா
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளேவைத்துத்
தமர்வாயைத் தான்மூடிச் சாபந்தீர்த்து
ஓங்கியே திங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் றரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சீலமண்ணுஞ்
சத்தியமாய்ச் செய்தபின்பு உலர்த்திப்பாரே. (73)

பாரப்பா வுலர்ந்தபின்பு யெடுத்துமைந்தா
பத்தியுடன் கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆரவைத்து யெடுக்கும்போது
அருணனிற மாயிருக்குஞ் செந்தூரந்தான்
நேரப்பா அணுப்போலே சரக்குக்கெல்லாம்
நிட்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (74)

ஆச்சப்பா வுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அணுப்போலே வுண்டிடவே பறந்துபோகும்
வாச்சப்பா தேகசித்தி யதிகமாச்சு
வஸ்துவுடன் கூடியுந்தான் வாழலாச்சு
மூச்சப்பா தலையிண்டங் கொடியுமாவும்
முக்கியமாய் வாங்கியதைத் தயிலம்வாங்கு
ஏச்சப்பா திரியாதே கூடன்சேர்த்து
இன்பமுடன் வஸ்துவையும் பூசைசெய்யே. (75)

பூசையடா செய்தபின்பு பதனம்பண்ணு
புத்திரனே பேய்ப்பீர்க்கின் தயிலம்வாங்கு
ஆசைபுல்லா மணக்கதுவு மதுபோல்வாங்கி
அப்பனே கேசரியின் நெய்யுஞ்சேர்த்து
ஓசையுடன் தேவாங்குப் பித்துஞ்சேர்த்து
உத்தமனே தலேயிண்டத் தயிலஞ்சேர்த்து
பாசையடா பேசாம லரைத்துமைந்தா
பாலகனே சவாதோடு புனுகுஞ்சேரே. (76)

சேரடா அணுப்போலே புருவத்திட்டு
தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும்போது
ஆரடா வுனைத்தானும் யார்தான்காண்பார்
அண்டமெனும் பிரமத்தி னருளினாலே
நேரடா திகைப்பூடு கொண்டுவந்து
நிட்சயமாய் முன்சொன்ன தயிலம்விட்டு
வீரடா அரைத்தபின்பு புருவத்திட்டால்
வேசையர்கள் வெகுபேர்கள் மயங்குவாரே. (77)

வாரான தில்லேப்பால் கருந்துளசி
வெளவாலின் பித்துகரு மந்திப்பித்தும்
சீராக முன்சொன்ன கருவைவிட்டுத்
திடமாக வறைத்திடுவாய் சாமமொன்று
நேராக அறைத்ததையு மெடுத்துமைந்தா
நிட்சயமாய்ப் புருவத்தி லிட்டுப்பார்க்க
வீராகப் பாதாளம் பிளந்தேயோடும்
வேதாந்த விசாரணையை விரும்பிப்பாரே. (78)

பாரடா பரப்பிரமத் தூடேசென்று
பரிதிமதி யக்கினியும் மூன்றுமொன்றாய்
நேரடா ஆதியுந்தா னெதிரிதன்னே
நிட்சயமாய்ப் பார்த்திடவே நீறிப்போவான்
கூரடா கோடானு கோடிசித்து
குறித்திடவே யாடுமடா பிரமத்தாலே
வீரடா யிந்நூலேக் கொடுத்திடாதே
வெத்தியுட னெண்பதுமே விளங்குமுற்றே. (79)

ஹரிஓம்ஸ்ரீ சொல்லையிலே தொட்டுக்காட்டு
ஆமடா காட்டையிலே தெரியாவிட்டால்
குரியாகக் கூட்டிப்போய்க் கையைக்கொண்டு
குறிப்பாகத் தீர்த்தத்தாற் குண்மாய்ச்சொல்லு
அரிஓம்ஙா ணப்படியே தெரியாவிட்டால்
அப்பனே யினிமேற்றான் சொல்லக்கேளு
கிரிவான நாணேற்றி யம்பைப்பூட்டி
விதமாக வவன்பார்க்க வெய்துகாட்டே. (80)

பூசுண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் ௮௰,

முற்றிற்று.

மதுரை சிவஞானதீபச்சபை காரியதரிசி ம. அழகர்சாமி பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

எண்பத்தெட்டாவது:

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞான காவியம் ௩௩.

கணபதியே அடியாகி யகிலமாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே கொங்கையின்னாள் வெள்ளைஞானக்
குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலேயும் நினைவிலேயும் ஒளியாய்நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசிநேர்மை
பாடுகிறேன் காவியந்தா னெண்ணிப்பாரே. (*)

## நூல்.

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப்பாரு
எங்நேரங் காமசிந்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
பதியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணிசண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
சக்கரமு மக்கரமும் க்ஷணத்திற்றோன்றும்
தண்ணிதண்ணி யென்றலைந்தாற் றாகம்போமோ
சாஸ்திரத்தி லேபுகட்டித் தள்ளியேறே. (1)

புகட்டினாள் தசதீட்சை மகிமைதன்னைப்
பூரணப்பா லெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினாள் சகலசித்து மாடச்சொன்னாள்
சந்திரபுஷ் கரணிதனில் தானஞ்சொன்னாள்
பகட்டினா ளுலகமெல்லாம் முக்கோணத்திற்
பரஞான சிவபோதம் பண்பாய்ச்சொன்னாள்
அகட்டினா ளவர்களை யீன்றாளம்மன்
அந்தருமை சொல்லவினி யடிதான்கேளே். (2)

கேளப்பா யீசனொரு காலந்தன்னிற்
கிருபையுடன் சபைகூடி யிருக்கும்போது
வாளப்பா மாலயன்றன் முகத்தைநோக்கி
வந்தவா றெவ்வகையோ சென்றதேதோ
கோளப்பா ஜெயகால லயம்தானெங்கே
குருநமசி வாயமெங்கே நீங்களெங்கே
ஆளப்பா ஐவர்களு மொடுக்கமெங்கே
அறிந்தெனக்கு யின்னவகை யுரைசெய்வீரே. (3)

இன்னவகை யீசரவர் கேட்கும்போது
எல்லோரும் வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன
அன்னைதனை முகம்பார்த்து மாலைநோக்கி
அரிகரி யீசர்மொழிக் குரைநீர்சொல்வீர்
பின்னைவகை யாருரைப்பார் மாயைமூர்த்தி
பேசாம லிருந்துவிட்டா லொழிவாரெங்கே. (4)

எங்கையென்று மார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
என்னசொல்வா ரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப் பூண்டோனே கடவுளோனே
காரணமே பூரணமே கண்ணேமின்னே
சங்கையினி யேதறிவேன் மகுடச்சோதி
சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப் பாகம்வைத்த மகுடத்தோனே
மகாமுனிகள் ரிஷிகள்சித்தர் அறிவார்காணே. (5)

அறிவார்கள் ரிஷிகள்சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குக்கோ ளாரென்றக்கால்
பொறியாகப் புசுண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகைநா னறிவேனையா
நிலைத்தமொழி புசுண்டரல்லால் மற்றோர்சொல்லார்
புரிவாரு மிவ்வளவென் றுரைத்தார்மாயன்
பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார். (6)

மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறு நீயெனமா யறிவாய்சொல்லாய்
சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறும்
சூட்சமிந்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இசழ்ச்சியுட னிவற்குப்பின் னெவரோகாணேன்
இவ்வார்த்தை நானறிவே னவரைக்கேளீர். (7)

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவன்தானப்போ
கிருபையுட னிவ்வளவு மறிவாயோடா
ஆளுகின்ற யீசனுநா மறியோமிந்த
அருமைதனை நீயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர் மாயோனைச் சொல்வீரென்றார்
கருவேது நீயறிந்த வாறுமேது
பாலுகின்ற முப்பாழுந் தாண்டிநின்ற
பரஞான சின்மயமின் பகர்ந்திடீரே. (8)

பரமான பரமகயி லாசவாசா
பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளியாகி
தரமான புசுண்டமுனி யந்தவேளை
சக்கரத்தைப் பிரளொட்டார். தவத்தினாலே
துரமாக யெவ்வாறோ திரும்பப்போவார்
சூட்சமதை நாமறிவோம் பின்னேதோதான்
வரமான வரமளித்த ஞானவாழ்வே
வசிஷ்டர்போ யழைத்துவரத் தருமென்றாரே. (9)

தருமென்ற வார்த்தைதனை யறிந்துயீசர்
தவமான வசிஷ்டரேநீர் புசுண்டர்ஜாகை
அகமகிழ வங்கேகி யவற்குரைத்து
அவரையிங்கு சபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமான ஜெகமுழுது மாண்டஜோதி
திருவடிக்கே நமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானந் தனையறிந்தும் அரனார்சொன்ன
உளவுகண்டார் புசுண்டரெனுங் காகந்தானே. (10)

காகமென்ற வேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார் வசிஷ்டர்வரக் கண்டார்நாதன்
ஏகமதா யொட்டினை வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர் வாருமென்று இடமுமீயத்
தாகமுடன் யீசனும்மை யழைச்சச்சொன்னார்
சங்கதியைத் 'தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாசமுடன் எட்டான விபரந்தன்னைப்
பத்துமெய்ஞ் ஞானபொரு ளருள்பெற்றாரே. (11)

பெற்றாரே யென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்து எட்டாங்காற் பிறந்துவந்தீர்
சத்தான சந்துகளு மடங்குங்காலம்
சக்கரமுந் திரும்பிவிட்டாற் சமையம்வேறும்
சித்தான பஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவே ரிஷிமுனிவர் சித்தரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுக்கமாவார்
முத்துமணிக் கொடியின்றாள் முளைத்திட்டீரே. (12)

முளைத்திட்ட ரித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்ட ரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திட்டுப் போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில் விஷம்பூண்டார்க் கனுவலென்ன
கிளைத்திட்டுப் போனக்கால் மறந்துபோவார்.
கிளர்நான்கு யுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைத்திட்டுப் போவமென்று லங்கேபோவோம்
பேய்பிடித்தோர் வார்த்தைசொல நீர்வந்தீரே. (13)

வந்தீரே வசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைநான் சொல்லிவந்தேன் வேஷம்நீங்கி
இந்தமா மரக்கொப்பி லிருந்தேனிப்போ
இதுவேனோ யெவ்வளவோ ஜனமோகானும்
அந்தமோ ஆதியோ யிரண்டுங்காணு
ரவர்களெல்லாம் ரிஷியோகி சித்தரானார்
சந்தேக முமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கே சொல்லுமையா யிதோவந்தேனே. (14)

வந்தேனே யென்றுரைத்த வாறுகொண்டு
    வசிஷ்டருமே வாயுலர்ந்து காலும்பின்னி
இந்தேனே முனிநாதா சரணங்காரும்
    எழுந்துசிவன் சபைநாடி முனிவர்வந்தார்
மைந்தனையே யீன்றருளுங் கடவுள்நாதா
    மாமுனிவன் வாயெடுக்கப் புசுண்டர்சொல்வார்
சிந்தனைசெய் யீஸ்பரனே வந்தேனையா
    சிவசிவா யின்னதென்று செப்பிடீரே. (15)

செப்புமென்ற புசுண்டமுனி முகத்தைநோக்கிச்
    சிவன்மகிழ்ந்து யேதுமொழி செப்புவார்கேள்
கொப்புமென்ற யுகமாறிப் பிறனுங்காலம்
    குருநமசி வாயமெங்கே பரந்தானெங்கே
அப்புமென்ற பஞ்சகணத் தேவரெங்கே
    அயன்மாலும் சிவன்மூவ ரடக்கமெங்கே
ஒப்புமிந்த யுகமாறிப் பிறந்ததெங்கே
    ஓகோகோ முனிநாதா வுரைசெய்வீரே. (16)

உரையென்றீ ருன்றனுக்குப் புத்திபோச்சு
    உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள்போச்சு
பரையென்றால் பரைநாடி நிலைக்கமாட்டீர்
    பரமசிவன் தானமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றால் வாய்திறந்த பட்சிபோலே
    எல்லோரு மப்படிக்கே இறந்திட்டார்கள்
நிரையென்ற வார்த்தைதனைச் சொன்னேனானால்
    நிசங்கொள்ளா தந்தரங்கம் நிசங்கொள்ளாதே. (17)

கொள்ளாமற் போவதுண்டோ மவுனயோகி
    கோடியிலே உனைப்போலே ரிஷியோகாணேன்
உள்ளாக ரிஷியொருவ ரில்லாவிட்டால்
    யுகவார்த்தை யாருரைப்பார் யானுங்காணேன்
விள்ளாமற் றீராது முனிவரேகேள்
    மெய்ஞ்ஞானப் பரம்புகுந்த அருள்மெய்ஞ்ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
    சாற்றிடீர் முனிநாதா சாற்றிடீரே. (18)

சாற்றுகிறே னுள்ளபடி யுகங்கள்தோறும்
தமக்குவந்து சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் க்ஷணத்தின்முன் னுரைத்துப்போனேன்
வாதாட்ட மெனக்காச்சு இனியென்சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம்போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள்தோறும்
ஆற்றுகிறே னந்தமது ஆகும்போது
அரகரா அந்நேரம் நீட்கைகேளே. (19)

கேளப்பா நடந்தகதை சிவமேயுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பா தச்நாதம் மவுனம்பாயும்
பரமான மவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பா அடுக்குகளும் இடிந்துவீழும்
இருந்தசதா சிவமோடி மணியில்மீளும்
ஊளப்பா யிதுகோரு மெவருஞ்சொல்வார்
ஓகோகோ அண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே. (20)

கவிழ்ந்துபோ மப்போது அடியேனங்கே
கருத்துவைத்துத் தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங் காலமப்போ நிறுத்துவேன்யான்
சமையமதி லக்கினிபோல் ஸ்தம்பங்காணுஞ்
சிவந்தவர்னம் நீலவுரு சுடர்விட்டேகும்
சிவசிவா அக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்துஅதி னருகேதான் சென்றுநிற்பேன்
நகாரமுத லஞ்செழுத்து வரக்காண்பேனே. (21)

காண்பேனே நகாரமது மகாரம்புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம்புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம்புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனே யகாரமது சுடரிற்புக்குங்
குருவான சுடரோடி மணியிற்புக்கும்
நாண்பான மணியோடி பரத்திற்புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே. (22)

கேளப்பா சிவமோடி அண்டம்பாயும்
கிருபையா யண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பா அண்டமது|கம்பத்தூண்தான்
குருவான தசதீட்சை யொன்றுமாச்சு
மீளப்பா ஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
மேலுமில்லை கீழுமில்லை யானுங்காணேன்
ஆளப்பா நரைத்தமா டேறுவோனே
அண்ணளவோ யிண்ணளவோ அறிந்திலேனே. (23)

அறிந்திலே னென்றுரைத்த புசுண்டமூர்த்தி
அரகரா உன்போலே முனியார்காணேன்
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கேளாது
சிவனயந்து கேட்கவும்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன் பூருவத்தில் நடந்தசெய்கை
பூரணத்தா லுள்ளபடி புகழ்ந்துசொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டேனையா
பழமுனியே கிழமுனியே பயன்சொல்வீரே. (24)

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவுளாரே
பருந்தீபஸ் தம்பத்தைப் பலுக்கக்கேளும்
குழவுடனே ஸ்தம்பத்தில் யானும்போவேன்
கோகோகோ சக்கரமும் பிரண்டுபோகும்
தழும்பணியச் சாகரங்க ளெங்குந்தானுப்ச்
சத்தசா கரம்பிரண்டு யெங்கும்பாழாய்
அழகுடைய மாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
அரகரா கண்ணாடி லீலைதானே. (25)

லீலைபோற் காணுமுகம் போலேகாணும்
நிலைபார்த்தால் புருடரைப்போற் றிருப்பிக்காணும்
ஆலைபோற் சுழன்றாடுங் கம்பத்துள்ளே
அரகரா சக்கரங்க ளாறுங்காணும்
வ... லைபோற் காணுமையா பின்னேபார்த்தால்
மகத்தான அண்டமது கோர்வைகாணுஞ்
சோலையா யண்டமதிற் சிவம்தான்வீசும்
சிவத்திலே அரகரா பரமுங்காணே. (26)

பாத்திலே மணிபிறக்கும் மணியினுள்ளே
 பரம்நிற்குஞ் சுடர்வீசும் யிப்பாற்கேளு
நிரத்திலே சடமதனில் யகாரங்காணும்
 நிக்ஷயமாம் யகாரமதில் வகாரங்காணும்
வரத்திலே வகாரமதிற் சிகாரங்காணும்
 வரும்போலே சிகாரத்தில் மகாரங்காணும்
நரத்திலே மகாரத்தில் நகாரங்காணும்
 நன்றாமப் பூமியப்போ பிறந்ததன்றே. (27)

பிறந்ததையா யிவ்வளவு மெங்கேயென்றால்
 பெண்ணொருத்தி தூணதிலே நின்றகோலம்
சுறந்ததையா யிவ்வளவும் அந்தமாது
 சூட்சமதே அல்லாது வேறொன்றில்லை
கறந்ததையர் உலகமெல்லாங் காமப்பாலைக்
 காலடியிற் காக்கவைத்து சகலஜெந்தும்
இருந்ததையா யிவ்வளவுஞ் செய்தமாது
 எங்கையென்று னுன்னிடத்தி லிருந்தாள்கன்னி. (28)

இடப்பாக மிருந்தவளு மிவளேமூலம்
 இருவருக்கும் நடுவான திவளேமூலம்
தொடக்காக நின்றவளு மிவளேமூலம்
 சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளேமூலம்
 ஐவருக்குங் குருமூல மாதிமூலம்
கடக்கோடிக் கொப்பதனில் நின்றமூலம்
 கன்னியவள் சிறுவாலை கன்னிதானே. (29)

கன்னியிவ ளென்றுரைத்தார் புசுண்டமூர்த்தி
 கர்த்தனப்போ மனதுசற்றே கசங்கினார்பின்
மண்ணுள்ள தேவர்களும் பிறப்பித்திந்த
 மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனம்பெண்ணே
உன்னிதமா யுன்கருணை யெங்கேகாண்போம்
 ஓகோகோ ஐவருந்தான் வணங்கினார்கள்
சொன்னியவள் வாக்குரைக்காள் சிவமேகன்னி
 கொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கினாரே. (30)

வணங்கியவர் வாய்புதைத்து நின்றார்பின்னே
மாதுகலி யாணியென வசனித்தார்கள்
வணங்கினார் தேவரொடு முனிவர்தாமும்
மற்றுமுள்ள தேவர்களும் நவபடாளும்
வணங்கினா ரஷ்டகெஜந் திகிரியெட்டும்
வாரிதியுஞ் சேடனுமா லயனும்மூவர்
வணங்கினார் மிகவணங்கித் தொழுதாரப்போ
வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளீவாளே. (31)

அருளீவாள் சூடிமணியை மாலைபூண்டாள்
அரகரா சின்மயத்தின் நீறுபூசி
பொருளீவா ளவரவர்க்கு ஏவல்சொல்லிப்
பொன்றாத பல்வுயிர்க்கைக் கிடங்கள்வேறாய்த்
தெருளீவாள் சிவயோகந் தெளிவதற்குச்
செயலுறுதி யாகவல்லோ தெரியவேண்டித்
திருளீவாள் தாயான சிறியவாலை
சிவசிவா சூட்சம்பூ ரணமுமுற்றே. (32)

பூருவத்தில் நடக்கதகதை இதுதானென்று
புகன்றுவிட்டுப் புசுண்டருந்தான் பதிக்குச்சென்றார்
காரணத்தி லேவகுத்தே னிந்தஞானங்
கம்பமணி வாலைகொலுக் கூட்டமப்பா
நாரணத்தில் நின்றிலங்கும் மவுனவாலை
நாட்டினாள் சிவராஜ யோகங்கேளு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
ஆதிசத்தி வேதமுத்தி யருள்சொல்வாளே. (33)

புசுண்டர் ஞான காவியம் ௩௩,

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் குருவமூப்பனார் மகன் வைகுண்ட மூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எண்பத்தொன்பதாவது:

புசுண்டமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# ஞானோபநிடதம் நஉ.

ஆதியெனை யீன்றகுரு பாதங்காப்பு
அத்துவிதப் பிரணவத்தி னருளேகாப்பு
நீதியா மாரூட ஞானம்பெற்ற
நிர்மலமாஞ் சித்தருட பாதங்காப்பு
சோதியெனப் பாடிவைத்தேன் முப்பான்ரெண்டில்
துரியாதீ தப்பொருளைத் துலக்கமாகத்
தீதில்லாக் குணமுடைய பிள்ளையானுற்
சீவேச வைக்கியமது தெரியுந்தானே. (1)

தானென்ற குருவினுப தேசத்தாலே
தனுகரண வவித்தையெல்லாந் தவறுண்டேபோம்
வானென்ற சுவானுபவ ஞானமுண்டாம்
மவுனுதி யோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்ற பிரபஞ்ச வுற்பத்திக்கு
நாதாதீ தக்யானம் நன்றுயெய்தும்
கோனென்ற கொங்கணவர் தனக்குச்சொன்ன
குறிப்பான யோகமிதைக் கூர்ந்துபாரே. (2)

பாருநீ பிரமமிலே யார்தான்சொல்வார்
பதமில்லை யாதெனினும் பவ்யமில்லை
சேருமிந்தப் பிரமாணந் தானுணர்ந்து
தெரிவிக்கப் படாதருளிற் சிவசொரூபம்
ஊருகின்ற காலத்ர யங்களாலே
உபாதிக்கப் பரதத்வ முற்பத்திக்கும்
சாருமிந்த வுபாதான காரணத்தின்
சம்பந்த மில்லாத சாட்சிதானே. (3)

சாட்சிசத்தா யதீதகுணா தீதமாகிச்
சட்சுமனத் தாலறியத் தகாதுயாதும்
சாட்சியதே யேதுசா தனமுந்தள்ளிச்
சகலவிந்த்ரி யாமியதாய்ச் சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குறித்து நிர்ணயிக்கத் தகாதுயோகம்
சாட்சியதே ஞாதுர்ஞான ஞேயரூபஞ்
சத்தாதிபிர மாதிகளைத் தானேசொல்வாம். (4)

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணாக்காவுன்
தூலகா ரணப்பிரமந் துரியாதீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
ஹம்சோகம் அசபாமந் திரத்தியானம்
செல்லுமவ னேநானென் றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தியோகி
விவேகதியா னாதிகளே மேலாம்பிர்ம்ம. (5)

பிர்மசுரோத் ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுகர்ம வாக்காதியிந் திரியமைந்தும்
கர்மமெனுஞ் சத்தாதி விடயமைந்தும்
கரணாதி நான்குபிரா ணாதியைந்தும்
வர்மமிவை யிருபத்தி னன்குங்கூடி
வருந்தூல சரீரவிராட் டெனவேசொல்லும்
தர்மவத்தை சாக்கிரபி மானிவிஸ்வன்
தனக்குவமை யாங்கிரியா சத்திதானே. (6)

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்ரத்தானம்
தனிப்போக மிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும் ஜீவாத்மா அகாரமாச்சு
விவகார ஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனு மவித்தையிலே பிரதிவிம்பம்
விசாலமிந்தத் தூலசூக்ம விருத்தியாச்சு
தத்தொமசி வாக்கியசோ தனையினாலே
தான்கடந்து சூட்சமத்திற் சார்ந்துகொள்ளே. (7)

கொள்ளடா ஞானேந்திரி யங்களைந்து
　　கூடினது கர்மேந்திரி யங்களைந்து
தள்ளடா பிராணாதி வாயுவைந்து
　　சார்வான மனம்புத்தி தானிரண்டு
விள்ளடா பதினேழு தத்துவங்கள்
　　விர்த்தியெனுஞ் சூட்சுமமா மிரண்யகர்ப்பந்
துள்ளவபி மானிசை தன்யனாகும்
　　சொற்பன வத்தையெனச் சொல்லுநூலே. (8)

நூலான சாத்மிகமா மகங்காரத்துள்
　　நுழைந்தவிச்சா சத்தியல்லோ நுணுக்கமாச்சு
காலான அண்டமெனுந் தானத்துள்ளே
　　கலந்திருக்கும் போகமல்லோ யிச்சாபோகம்
நாலான ஆன்மாவே அந்திரான்மா
　　ஞாயமிந்தப் படியறிந்தா லுகாரமாச்சு
தூலமெனுஞ் சூட்சுமத்தைக் கடந்துநின்று
　　சொல்லுகிறேன் காரணத்தின் சுயம்புதானே. (9)

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
　　தானமதே இருதயமா ஞானசத்தி
வானமதே அகங்காரம் வித்தையாகில்
　　வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்யனாகும்
கோணிதற்கு ஆனந்த போகமாகும்
　　கூடுகின்ற ஆன்மாவே பரமான்மாவாம்
காணிதற்கு பரமான்மா ஜீவனிந்தக்
　　காரணமே மகாரமெனக் கண்டுகொள்ளே. (10)

கொள்ளுமந்தப் பொருள்தானே சத்துமல்ல
　　கூறான வசத்துமல்ல கூர்மையல்ல
உள்ளுநிரா மயமல்ல சர்வமயமல்ல
　　உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏகமாச்சு
தள்ளுகின்ற பொருளல்ல தள்ளாதல்ல
　　தானப்பிர மயிக்யஞ்சந் தானமுத்தி
விள்ளுமிந்தப் படிதானே வேதபாடம்
　　விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப்போமே. (11)

விட்டுப்போம் சமுசார வியாபாரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
துரியநிலை நன்முகத் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதிவாக்யத்
தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்ற ஜீவத்வம் தனக்கில்லாமற்
சமாதியுற்றால் நாமதுவே சாக்ஷாத்காரம். (12)

சாக்ஷாதி பிரமத்தால் பூர்வகர்மம்
தத்வாதி வாசனைகள் தானேபோகும்
குக்ஷாதி பிராந்தியெனும் மாயாசத்தி
தொடராமற் சேர்வதுவே சொரூபஞானம்
தீக்ஷைபினாற் பிரமாண்டம் பிண்டாண்டங்கள்
சிருஷ்டிமுதல் யாவற்றுந் தெரியும்நன்றாய்
காக்ஷியென்ன ஏகவஸ்து வொன்றல்லாமற்
காண்பதெல்லாம் வியர்த்தமெனக் கண்டுகொள்ளே. (13)

கண்டுபார் மூடமெனு மஞ்ஞானிக்குக்
காணாது ஜீவான்மா பரமான்மாவும்
தொண்டுபண்ணி குருமுகத்தில் விசேடமாகச்
சுருதியெனும் வேதாந்த மப்பியாசித்து
உண்டுமனு பவஞானங் கிர்த்யாகிர்த்யம்
யோகிதனக் கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம் நதிகடக்க வோடமல்லால்
விஷயத்தாற் சாதனங்கள் வீணுமென்றே. (14)

வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்தினிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே. (15)

வேணுமென்று லெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம்போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம்போலும்
கன்றுவின் பாலினுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வர்னம்போலும்
தூலமதிற் சூட்சமந்தான் துலங்கிநிற்கும்
ஆணுவத்தாற் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே. (16)

அரிதில்லை பிரமவியா கிருதஜீவ
னயிக்யமெனுஞ் சந்த்யான மப்யாசித்துச்
சுருதிகயிற் றூல்மனமாம் யானைதன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்த சிரவணத்தின் படியேநின்றால்
குதியாது பிரபஞ்ச கோட்டிற்றனும்
திரிவதில்லை திரிந்தாலும் மதமீறாது
ஜீவவை ராக்யமெனுந் திரமிதாமே. (17)

திரமென்ன ஹம்சோகம் மந்த்ராதீதம்
திருசியசூன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ரசத்தா வவித்தைசூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விர்த்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே. (18)

என்னவே அஞ்ஞானி யுலகாசாரத்
திச்சையினற் றர்மார்த்த வியாபாரங்கள்
முன்னமே செய்ததின்பின் மரணமானால்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட்பீரால்
வின்னமதா யாங்கார பஞ்சபூத
விடயவுபா திகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையா யிலிங்கசரீரத்தோடொத்துச்
சதாகாலம் போக்குவரத் தாகுந்தானே. (19)

தானிந்தப் படியாகச் சீவரெல்லாம்
சகசபிரா ரத்வவசத் தாகினார்கள்
ஏனிந்தக் கூரபிமா னத்தினாலே
இத்யாதி குணங்களெல்லாம் வியாபிக்கும்பார்
வானிந்து போன்மெலிந்து வளர்ந்துபோகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்றவேண்டி
நானிந்தப் பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டம்வைத்தோ மவித்தையெலாம் நாசமாச்சே. (20)

ஆச்சப்பா எத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப் பிரளயத்துக் கதுவாய்நின்றேன்
மூச்சப்பா வோடவில்லை பிரமாதீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற்சென்றேன்
கூச்சப்பா வற்றபிர்ம சாக்ஷாத்காரம்
குருபாத மாகியகோ சரமாய்நின்றேன்
பேச்சப்பா சராசரங்க ளுதிக்கும்போது
பின்னுமந்தப் புசுண்டனெனப் பேர்கொண்டேனே. (21)

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரீதியானேன்
மேர்கண்டே னாயிரத்தெட் டண்டங்கூட
வீதியெல்லா மோர்நொடிக்குள் விரைந்துசென்றேன்
தார்கண்டேன் பிருதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவே தங்கள்வெகு சர்யுங்கண்டேன்
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோ விதுவெல்லாம் யோகத்தாட்டே. (22)

யோகத்தின் சாலம்ப நிராலம்பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டாமென்று
ஆகமத்தின் படியாலே சாலம்பந்தான்
அநித்யமல்ல நித்தியமென் றறையலாகும்
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம்பந்தான்
சூன்யவபிப் பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்த விருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூட்சு பிர்ம்மயிக்ய மோட்சமென்னே. (23)

மோட்சசாம்பி ராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக் கபரோட்சம் மொழியலாகா
சூட்சமறிந் தாலவனுக் கனுசந்தானம்
சொரூபலட்ச ணந்தெரியச் சொல்லலாகும்
தாட்சியில்லை சாதனை சதுட்டியத்திற்
சட்சேந்த்ரி யாநாதா தீதமாகும்
மூச்சுலயப் படுவதல்லோ பிரமநிட்டை
மூலவிந்து களாதீத மொழியலாமே. (24)

மொழிவதிலே அகாரமெனும் பிரணவத்தின்
மோனபிரா ணாதியதே நாதமாச்சு
தெளியுமிந்த ஓங்காரத் தொனிவிடாமற்
சிற்ககனத் தேலயமாய்ச் சேர்க்கவேணும்
ஒளிதானே நிராலம்பம் நிர்விசேடம்
உத்க்ருஷ்ட பரமபத வுபகாரஸ்தன்
வெளியோடே வெளிசேர்ந்தால் வஸ்துவாச்சு
விரோதசந் ராதியெலாம் விருத்தமாச்சே. (25)

விருத்தமா மனாதியெனும் பிரார்த்வகர்மம்
விஷயாதி பிரபஞ்ச வீஷ்மமெல்லாம்
ஒருத்தவனே யோகியென்பா னவனூடன்
உலகமெலாந் தானாவ துண்மையாகும்
நிறுத்தவென்றால் நாசிகாக் கிரகவான்மா
நிலைபுருவ மத்தியிலே நிஷ்டனாகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாக்ஷாத்காரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. (26)

பார்ப்பதற்கு நீண்டதுவாய் குறுகிவட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்காகாசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னாய்நிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப்பாரு
சேர்ப்பதற்குச் சுழிமுனையென் றிதற்குநாமம்
திரிகோணக் குண்டலியே சிவசொரூபம்
காப்பதற்கு நடுநாடி யூடேசென்று
கால்நிறுத்திப் பிடரிவழி கண்ணைப்பாரே. (27)

கண்ணான பிடாரிமூது கோடரந்த்ரம்
காற்கூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு ளிணங்கிற்றானால்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான்சொல்லும்
ஒண்ணான யோகமல்லோ இந்தநிஷ்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோஞானம்
அசபாமந் திரத்யானம் அறைகிறேனே. (28)

அறைகிறேன் அசபையெனும் பிராணன்மாவை
அகண்டபரா பரத்தினுள்ளே ஐக்யஞ்செய்ய
குறைவில்லை ஓங்கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குணாதீதந்தான்
நிறைகிறேன் நாசிகா ரந்த்ரவாயு
நீக்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னட்சரசா தனமுந்தள்ளிப்
பந்தமற்ற மகாமோட்சப் பதிபெற்றேனே. (29)

பதிபுருவத் தடிமுனைக்கீ ழண்ணாக்கென்னும்
பவளநிறம் போன்றிருக்குந் திரிகோணந்தான்
துதிபெறுசிங் குவையுபஸ்த சுகந்தியாக
சுபாவசா தனையினால் மவுனமாச்சு
விதிலிகித பிராரத்வ கர்மம்போச்சு
விடயபோ கத்தினிச்சை விட்டுப்போச்சு
மதியெனுமோர் வாயுவது அமிர்தமாச்சு
வஸ்துவதே காரணமா மகிமையாச்சே. (30)

மகிமையென்று யோகசா தனையினாலே
மகாகாச நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றுணவத்தை நீக்கலாச்சு
அத்துவித பிரமசித்தா னந்தகாரம்
சகளாதி தங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
பந்தமற்ற மகாமோக்ஷ பதம்பெற்றேனே. (31)

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் திரண்டினிலே பிரமஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானல்
சாதனைசெய் வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடை வானதிலே நிருத்தஞ்செய்வான்
மும்முட்சுத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே. (32)

புசுண்டர் ஞானோபநிடதம் ௩௨,

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகர் ரிஷி கோத்திரம் குருவமுப்பனர் குமாரர் மாமுண்டி மூப்பனரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

தொண்ணூறாவது:

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞானசூஸ்திரம் ௯௦.

பன்னுமே உப்புக் கட்டின் பருவத்தைச் சொல்லக் கேளு
மன்னுமே கூர்ப்பா நின்ற மலமது தேங்காய் மட்டும்
தென்னுமே அமுரி தானும் சிறந்தொரு படியே வார்த்து
உன்னுமே கலக்கிக் கிண்டி உருகவே ரவியில் வையே. (1)

வைத்ததோர் குளம்புக் குள்ளே மாட்டுற மருந்து கேளு
கைத்ததோர் உப்பு ரெண்டு கடியதோர் காரம் ரெண்டு
பைத்ததோர் காரத் தின்பின் பரிவுடன் சூட னாறு
ஐத்ததோர் வகையொன் றுக்கு அரைப்பலம் பொடித்துப் போடே.

போட்டதை யொன்றாய்க் கிண்டி புகழ்பெற ரவியில் வைத்து
மாட்டது அமுரி தானும் வளமதாய்ப் படிய தொன்று
ஈட்டது வுலர்ந்த பின்பு யீரஞ்சு தரமே வார்த்து
கூட்டது மெழுகு போலே கொடுஞ்சில்லும் ரெண்டாய்ச் செய்யே. ()

செய்திடுஞ் சில்லுக் கொன்று சிறந்தொரு வோட்டில் வைத்துக்
கைத்திடுங் கட்டி யானுற் கல்லுப்புப் பதிப்பா யப்பா
வைத்திடு மேலே நீயும் மறுசில்லுப் போட்டு மூடி
தைத்திடும் சீலை சுத்தி தனிப்புடம் போட்டி டாயே. (4)

போட்டபின் உப்பை வாங்கிப் புகழ்பெற வுருக்கிப் பாரு
ஆட்டபின் தெரித்து தானால் அப்பனே நீதான் கேளு
நீட்டிபின் வில்லை ரெண்டும் நேரவே அமுரி யாலே
காட்டிபின் வில்லை செய்து தனியுப்பு வைத்துப் போடே. (5)

போடுநீ உப்புக் கட்டு போகாது தீய்க்கே அப்பா
நீடுநீ உறுகும் உப்பு நீட்டின தெல்லாங் கொல்லும்

ஆடுநீ வாத வித்தை அறுபத்து நாலுங் கட்டும்
தேடுநீ யல்ல வென்றாற் சேர்ந்துடன் தேறி யேறே. (6)

ஏறலாம் உப்பைத் தொட்டு எளிதாக யெவர்க்கு மப்பா
கூறலா மென்றாள் தாயுங் கூறாதே யென்றா ரீசன்
மாறலாம் பொன்னே யாருமு மகாசித்தி காய மாகும்
தேறலாம் போதங் கண்டு செயமாகுங் காணுங் காணே. (7)

காணிந்த உப்பு வேதைக் கடியதோர் பலம தொன்று
பூணிந்தச் சாரங் கால்தான் புகழுறு காரங் கால்தான்
தோணிந்த ரெண்டுக் கொக்கச் சுகம்படக் கெந்தி கூட்டி
ஆணிந்த மூன்றைத் தானும் அமுரியா லரைத்து வையே. (8)

வைத்திட்ட வுப்பை மூசை வைத்துநீ யுருக்கும் போது
கைத்திட்ட மரைத்த மூன்று காட்டிநீ வாங்கு வாங்கு
தைத்திட்ட காரம் போடு தன்மையா மட்டுந் தானே
ஐத்திட்ட உப்புத் தானும் அடுத்திட மயன மாமே. (9)

மயனமா முப்புத் தன்னை வளைந்திடு மால்தே விக்கு
மயனமா முப்புத் தன்னை வளைந்திடும் வீரத் துக்கு
மயனமா முப்புத் தன்னை வளைந்திடு கெவுரி மேலே
மயனமா முப்புத் தன்னை வளைந்துநீ சிலைக்குக் கட்டே. (10)

கட்டிய நாலை யுந்தான் கனலிலே வாட்டு வாட்டு
அட்டியா யுருகி யுள்ளே அப்பனே மணியாய் நிற்கும்
இட்டியே வரைந்த மற்ற யிலைசந்தறு பத்துஞ் சாகும்
மட்டியே கெவுரி மாட்ட வளமிது சத்துக் காணே. (11)

காணென்ற உப்பு வென்ன கவளிக்க நாகஞ் சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க யீயஞ் சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க மைந்தா கேளு
தாணென்ற உப்பு வென்ன கவளிக்கச் சுண்ணந் தானே. (12)

வேறு

தானென்ற உப்பாகுங் குருவாற்கேளு
சாற்றுகிறேன் சூதத்தைத் தலைதூக்காமற்
காமினன்ற உப்புஒன்று சூதம்நாலும்
உ கட்டியப்பா முலைப்பாலிற் கலந்துஆட்டு

ஊமெனன்று வுருட்டியதை யுண்டைபண்ணி
உறவான காரத்தை மேலேபூசி
வாமெனன்ற வுமியிமேல புடத்தைப்போட்டு
வாங்கியே குகைக்குள்ளே வைத்தவூதே. (13)

ஊதையிலே யிடைபோகா மணிபோகாது
ஓட்டொத்த தொந்திக்கி யொருநூறென்று
வேதையிலே வெகுசுருக்கு மேலாஞ்சுண்ணம்
வெண்கலமும் பித்தளையும் ரசிதமாகும்.
பாதையிலே யொருகோடி வித்தையாகும்
பாரப்பா வெள்ளியிட்டால் வெள்ளியாகும்
போதையிலே பொன்னிட்டாற் பொன்னேயாகும்
பொற்கொடிக்கு யீசனிது புகன்றவாறே (14)

உப்பையே கட்ட வென்றால் ஒன்றிலு மாகா தப்பா
உப்பையே புளிபு முப்பும் உடனஞ்சு கூடிக் கொல்லும்
உப்பையே கொண்டு தானும் ஓடலா மாட்டலாகும்
உப்பையே மூல மூர்த்தி யுரைத்தவைஞ் ஞானும் பாரே. (15)

பாரேநீ உப்பைக் கட்டப் பகருவேன் பாருள் ளோர்க்காய்
நேரேநீ யிணங்கன் சுண்ணம் நேராக வெள்ளை கூட்டித்
தாரேநீ வெள்ளை வார்த்துத் தாக்கியே அரைத்துக் கட்டி
கோரேநீ யூதிப் போடு கொடுவெள்ளைச் சுண்ண மாமே. (16)

சுண்ணத்திற் பாதி தண்ணீர் சூட்டியே சூதந் தன்னை
மண்ணுமே அரைத்துக் கொண்டு வகையான உப்புக் குள்ளே
பண்ணிட்டுப் பிரட்டிக் காச்சி பாச்சியே குகையில் வைத்தே
கண்ணிட்டு ஊது ஊது கண்விட்டு ஆடும் பாரு. (17)

வைத்துநீ யெரிக்குங் குப்பி வாய்தனைத் திறந்து பின்னை
பத்தியே சலாகை போடும் பருவமாம் பாரு பாரு
கைத்துநீ சிகப்ப தாறுற் கடுந்தீயை அவித்துப் போடு
பொத்திய செந்தூ ரத்தாற் புகட்டிய முறையைக் கேளே. (18)

கேளுநீ நவலோ கத்திற் கெடிசகஸ் திரமே போடு
வாழுநீ உபர சத்தில் மாட்டுவைஞ் ஞானுற்க் கொன்று
தோளுநீ கல்லும் செங்கல் தொடர்ந்திடப் பொன்னே யாகும்
வேளுநீ யினியென் சொல்வேன் வேதையுங் காட்டிட் டேனே.

புசுண்டர் ஞான சூஸ்திரம் ய௬ முற்றிற்று.

உ

குமரன் துணை.

தொண்ணூற்தோராவது:

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞானக்குறள் ௰௬

சின்மயத்தைப் போற்றிச் சிவராஜ யோகத்தில்
நன்மை பராபரத்தை நாடு.

அண்ட முடிமீதி லங்கி ரவிமதியைக்
கண்டு தரிசித்தாற் கதி.

வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு

அறுபத்து நால்யோக மவ்வளவுந் தள்ளி
யொருபொழுது முண்டுநில் யோர். (4)

உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நம்பு. (5)

சித்தர் பதினெண்மர் செய்கையிற் றேன்றுந
அத்தனரு ளும்புசுண்டன் யான். (6)

சொன்னே னறிந்து சுகமா யுலகோருக்
கெந்நாளும் வாழ்கவென்றே யான். (7)

கண்ணுண் மணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணு முயிர்பதியு மாறு. (8)

விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். (9)

நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய் நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம். (10)

உலகி லறிந்தோ ரொருநாளு மாளார்
பலநினைவை விட்டுநீ பார். (11)

கண்டோருஞ் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்ற சுகம். (12)

ஆதியிற் சொன்னவுய ரண்டமதை யெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. (13)

முப்பொருளைச் சுட்டு முழுதுமே நீறாக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். (14)

யோகமுடன் கற்ப முரைத்தேனீ ரெட்டில்
வேகமுடன் கண்டுணரு வீர். (15)

வாசிமுனி மைந்தா மருவு பிரமத்தில்
மோசம்வரா தென்குறள்முற் றும். (16)

புசுண்டர் ஞானக்குறள் ௰௬,

முற்றிற்று.

புசுண்டமகாரிஷி ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அனேகம் ஓலை யேட்டுப்பிரதிகளிருக்கிறது அவைகளை அடுத்த பதிப்பில் அச்சிட்டு வெளியிடக்கூடும்.

சதுரகிரி மாவூற்று இராமகிரி சாமியாரிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

தொண்ணூத்திரண்டாவது:

## வகுளிநாதரென்னும்

# மௌனச்சித்தர் ஞான ப

சொல்லவொண்ணா விராட்பிரம வஸ்துவாகி
சுத்தசின் மயமாகிச் சோதியாகி
அல்லலிலா ஆதியாகி நடுவுமாகி
அந்தமுமாய் அனாதியுமாய் அகிலமாகி
வெல்லுதற்கு மரிதாகி விண்ணுமாகி
விண்டுவன்னி யப்புவுமாய் விளங்குகின்ற
நல்லதொரு மவுனசித்தாய் நாடிநின்ற
நாதாந்த மனோமணியாள் பாதங்காப்பே.

வணங்குதற்கு எட்டுரெண்டும் அறியவேணும்
மகத்தான வித்தையிது சிவயோகிக்காம்
இணங்குதற்குக் குருவேணும் யில்லாவிட்டால்
என்னாலதா மின்னாலா மெட்டுக்குள்ளே
குணங்காமற் சொல்லிவைத்தேன் அகாரபீசம்
கூடிநின்ற உகாரமல்லோ சத்திபீசம்
அணங்கினுக்குத் தானுரைத்தா ரீசனன்று
ஆச்சரியம் அகாரத்தி லடங்கிப்போச்சே. (1)

அடங்கிநின்ற மகாரமல்லோ மவுனதீட்சை
ஆதாரங் கடந்துநின்ற தத்துவந்தக்கில்
சடந்தனைக்கொண் டாகாசங் கலந்துபோச்சு
தாரகப்பிர மக்கியானம் சார்வதாச்சு
துடந்தேறிப் பார்த்தாக்கா லிதுவேமுக்தி
தூலமதைப் பார்ப்பவர்க்குச் சொரூபமில்லை
குடந்தனக்கு ளாகாசம் நிராகாசத்தைக்
கூட்டுகின்ற தன்மையல்லோ கொழுகிப்பாரே. (2)

பாரப்பா என்மகனே மகாரசூட்சம்
பலித்தாக்கால் யோகியென்றே பகரலாகும்
சேரப்பா அகாரத்தில் உகாரங்கூட்டு
சிகாரத்தில் வகாரத்தைச் சேர்த்துப்போடு
நேரப்பா அரியெழுத்துக் குயிர்தான்சீவன்
நின்றவிடம் நகாரத்தில் மூலங்காணும்
பேரப்பா உகாரமென்ற பிரணவத்தாற்
பேச்சான சீவகலை பிறக்குந்தானே. (3)

தானென்ற மூலத்தில் வாசியாட்டம்
சதாசிவனார் பீடமதிற் புக்கித்தானல்
ஊனென்ற சடம்போச்சு கற்பூரதேகம்
உந்தனுக்கு வாச்சுதடா யீசன்வாழ்க்கை
நானென்ற ஆணுவத்தை நீற்றவென்றால்
நகாரமென்ற கீழாணி வேரைத்தள்ளு
பானென்ற அகாரமுனை ஊடுதாக்கு
பனிரண்டுக் குள்ளடங்கிப் பதிவுள்ளாச்சே. (4)

உள்ளாகச் சிகாரவன்னி பத்திற்கொண்டால்
ஓடாமற் பிரணவம்வந் தொட்டிக்கொள்ளும்
தள்ளாமல் ஓரெழுத்து மகாரமப்பா
சகஸ்திரத்தெண் மலர்க்குள்ளாய்ச் சார்ந்துகொள்ளும்
விள்ளாதே மேற்கொண்டால் துவாதசாந்தம்
வெட்டவெளிக் குள்ளான ஞானமாச்சு
துள்ளாட்டம் ஏதுமில்லை புருவமையச்
சுழிக்குள்ளோ ரெழுத்தறிந்தால் துரியமாச்சே. (5)

துரியமென்ற வகாரத்தை மாறியேற்றச்
சுடரான சிகாரமதே சோதியாகும்
அரியெழுத்துக் குள்ளாக நத்தாநிற்கும்
ஐந்தெழுத்தும் ஆறெழுத்தி லடங்கிநிற்கும்
எரியெழுத்தைப் பற்றிநின்றால் ஈ-ஊ-ஏ-ஓம்
எட்டெழுத்தும் விட்டெழுத்துக் கேறுதையா
[illegible]பிருக்கும் இடத்திலொரு வகையதாகக்
[illegible]தற்றெழுத்தைப் போற்றிவிட்டாற் குருவிதாச்சே. (6)

குருவிக்கும் இடந்தானே புருவமையம்
கூடும்வலக் கண்தானே சிவமதாச்சு
திருவிருக்கும் மவுனத்தி விருந்தமார்க்கம்
செயல்காட்டிச் சொல்வதற்கு அறிவேஆசான்
தருவிருக்குஞ் சொற்படிநீ நடந்துகொண்டால
தானவனே தானாகித் தனியனாவான்
வுருவெடுத்தா லாவதென்ன பலனேவிந்து
ஒன்பதுநெற் பிரமாணம் ஊடுதாக்கே.

தாக்கப்பா யிடக்கண்வலக் கண்ணுஞ்சேரும்
சச்சிதா னந்தவன்னி தானேயேகும்
மூக்கிலே ஓடாது சுத்தம்பாரார்
முத்திபென்ன நெற்றிக்கண் உள்ளேநிற்கும்
நாக்கிலே பூரிபரி யாததுண்டோ
நாவில்ரெண்டு மூவில்ரெண்டு ஞானயோகம்
பாக்கியங்கள் செய்வதற்கு மகாரதீட்சை
பலிக்குமடா யிருநான்கு பாடல்முற்றே. (௪)

மௌனச்சித்தர் ஞானம் ௫,

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் ஒத்தத்தெரு வெங்கடா[illegible]
ஐயரவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திர[illegible]ச்
சிடலானது.

உ

பராசத்திதுணை.

தொண்ணூத்திமூன்ருவது:

## வகுளிநாதரென்னும்

# மௌனச்சித்தர் பாடல்.

குறவஞ்சீப்பா.

ஆதிபெருஞ் சோதிதனை யனுதினமும்நாடி
ஐயர்பதந் தேடிக்கொண் டருள்பெறவேபாடி
சோதியெனும் மனோன்மணியா ளருளதனைப்பெற்றுச்
சுகருடைய பாதமதை மனந்தனிலே புற்று. (1)

ஆங்காரந் தனையடக்கி யருள்நிலையைநோக்கி
அரியபுவ னங்களெல்லாம் அறியமனதாக்கி
பாங்காகப் பெரியோர்கள் பாதமதுபணிவோம்
பத்தியொடு போகநிஷ்டை நித்தியமும்புரிவோம். (2)

பேய்க்குணத்தைச் சுட்டலவோ பிர்மநிலைகண்டோம்
பிரமபதி தான்கடந்து சுழிமுனையுட்கொண்டோம்
நாய்போலே அலையாமல் நாமிருந்தோம்தவசில்
நல்லதொரு ஆங்காரம் மடக்கிமிகப் பவுசாய். (3)

வஞ்சகமாம் வாழ்வைநம்பிச் சஞ்சலங்க ளடையோம்
மகத்தான மகரிஷிகள் பதங்காணச் சடையோம்
பஞ்சமா பாதகரை யொருநாளும்பாரோம்
பாவவினை பற்றறுத்தோர் சிநேகிதங்கள்மறவோம். (4)

ஆயிரம்பேர் சித்தருடன் அனுதினமும்பாடி
ஆனந்தத் திருநடன மாடுவமேகூடி
தாயிபுமை மனோன்மணியாள் எனக்குசொன்னசித்தைத்
தானறிந்து நடந்துகொள்வோம் பெரியோரையடுத்தே. (5)

[illegible]யைக்கண்டு கொள்வதற்கு நினைந்துருகிவாடி
நிர்மலமா யையன்பதம் தினந்தினமுந்தேடி

கலையறிந்து வாசியையுங் கட்டுடனேபிடித்தோம்
சனலெழுப்பி மூலமதைச் சுகமுடனேபடித்தோம்.

ஊணுறக்கம் நீக்கியல்லோ யோகநிஷ்டைபுரிந்தோம்
உற்றாரைப் பற்றறுத்து மலைகுகையி லிருந்தோம்
காணுதற்கு மெட்டாத பரவெளியைக்கண்டோம்
கற்பமது சாப்பிட்டு உடல்வளர்த்துக்கொண்டோம்.

தந்தைதாயார் சுற்றமொடு தளர்ந்துவுறவாடோம்
தவநிலையைப் பெற்றுணராச் செய்கைதனைத்தேடோம்
விந்தையுடன் ஞானமதை மேன்பாடாய்த்தெரிந்தோம்
மேலான பரவெளியி னருளதனையறிந்தோம்.

நாசிநுனி வழியதனில் நாட்டமதைத்தெரிந்தோம்
நல்லதொரு மூலவட்டம் சுழினையதையறிந்தோம்
வாசியேற்ற வகையறிந்து ஆசைகளையறுப்போம்
வையகத்தின் செய்கைதன்னை வழுவாமல்மறுப்போம்.

சத்திசக்ர பீடமேறிச் சுத்தவெளியைக்கண்டோம்
சகலமும்பரவெளியென்றெண்ணிமனமதனிற்கொண்டோம்
சித்திபெற்ற முத்தர்களை யெத்தினமுமறிவோம்
சீவகலை யின்னதென்று நாட்டமுடன்தெரிவோம். (10)

தொண்ணுத்தாறு தத்துவத்து ஊரத்தனங்கைக்கொண்டோம்
துய்யபர வெளிதனிலே அய்யர்பதங்கண்டோம்
விண்ணுலகு இன்னதென்று அறிந்துக்கொண்டேன்யானே
மேலான பரவெளியி னொளிவைக்கண்டுதானே. (11)

நானென்ற ஆணுவத்தை நயந்தறுத்துவிடுத்தேன்
நன்மைபெற்றுக் குகைதனிலே வாழ்ந்திருக்கஅடுத்தேன்
தானென்ற கெருவமதைத் தணித்துவிட்டுவந்தோம்
தவமேதான் கெதியென்று சரவழியிலுகந்தோம். (12)

மௌனச்சித்தர் பாடல் முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் வெங்கடாசலமையரவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

தொண்ணூத்திநான்காவது:

சூதமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௯௪.

உண்மையெனும் பொருளாய்க்கண் மணியதாகி
யொளிவாகி மண்ணும்விண் ணெங்குமாகி
ஒண்மையெனும் சித்தர்முத்தர்க் குரியதாகி
உற்றசுழி முனையில்முச் சுடருமாகி
வண்மையெனும் ஆதார மூலமாகி
மாசற்ற பிரணவத்தின் சொரூபமாகி
பெண்மையெனும் வடிவாகிச் சீவனாகிப்
பேரான மௌனகுரு பாதங்காப்பே. (1)

அரிதான மாந்தருக்கு ஞானமார்க்கம்
அறைகிறேன் நிறைநிறையா யோர்ந்துபாரு
சரியையென்ற படிகடந்தால் கிரியைசேர்க்கும்
தன்மையாய் கிரியைவிட்டால் யோகமாகும்
விரிவான யோகம்விட்டுச் சென்றால்ஞானம்
வினையமுடன் கண்டறிந்தால் முத்தியாகும்
தெரிவாய்நீ மெய்ஞ்ஞான போதந்தன்னைச்
செப்புகிறேன் புலனதனைப் பரத்திற்சேரே. (2)

சேரப்பா கருவான முடியின்மீது
சென்றேவெண் டாமரையின் பீடங்கண்டு
காரப்பா மனம்வேறு வழிசெல்லாமல்
கனகமய மானபூ ரணத்தைநாடி
ஆரப்பா சாண்போர்க்கு மவுனமாச்சு
அடுத்திடவே யோகமது போதமாச்சு
நேரப்பா தலமெங்கும் வாசிசெல்லும்
நிலையான கீதவொலி கேட்குந்தானே. (3)

தானான வுருவல்லோ சத்தியாச்சு
தனியான வம்பலந்தான் சொரூபமாச்சு
வேனான உருவருவு மற்றதாயி
விளங்குகின்ற முச்சுடரின் ரூபமாகி
வானான பரையுடனே சதாசிவன்றான்
வானவெளி தனில்வாய்வு வன்னிதோன்றி
தேனான அதிலிருந்து மனந்தான்தோன்றிச்
சித்தான அண்டபிண்ட மறிவாம்பாரே.

அறிவல்லோ மெய்ஞ்ஞானக் கருவதாகும்
அஞ்ஞானம் தவிர்க்கவென்று லறிவுவேணும்
அறிவாலே சுழிமுனையைக் காணவேணும்
அன்னையென்ற வாலைபதம் பணியவேணும்
அறிவாலே குருபதத்தைப் போற்றவேணும்
அண்டமுடி மீதிற்சென் றேறவேணும்
அறிவாலே சோதிதனை யறியவேணும்
அதன்பின்பு முத்தியென்ற பேச்சுண்டாச்சே.

உண்டான பூமிநான் முகனுமாச்சு
உற்றபுனல் விட்டுணுவென் றுறுதியாச்சு
பண்டான அக்கினிசங் காரனாச்சு
பலமுடைய வாயுவல்லோ மயேசனாச்சு
கண்டான வெளிசதா சிவனுமாச்சு
கருவான பூதமல்லோ வுருவதாச்சு
தொண்டான தொழில்புரிந்தால் பெரியோர்தானும்
சூட்சமதைச் சொல்லுதற்கு அஞ்சுவாரே. (6)

அஞ்சுவா ரிதையறியா வீணர்தானும்
அநேகசித் தறிவனென வெளிகிளம்பி
பஞ்சுபொதி யானதொந்தி வயின்பிழைக்கப்
பாசாங்கு மேசெய்து மயக்கச்செய்வான்
கெஞ்சுவான் பல்லெல்லாம் வெளியேதோணக்
கெம்பீர மானசொல்லை நம்பிடாமல்
பிஞ்சுகா யாகிபழங் கனிரசம்போல்
பேதமுள்ள மனந்தனையு முருகச்செய்யே. (7)

செய்தபின்பு தனியாய்ப்பூ ரணத்தைப்பாரு
சேட்டைசெய்யுந் தத்துவங்க ளொடுக்கம்பாரு
உய்யவே மனந்தன்னை யறிவிற்சேரு
உற்றுநின்ற வொளிகாணத் திடந்தான்வேணும்
வையமிசை பிங்கலைதா னிரவியாகும்
மகத்தான யிடகலையும் மதிதானுகும்
துய்யலுங் காரமதன் மத்திநிற்கும்
சுத்தகலை யிரண்டொன்ருய்ச் சேரும்போதே. (8)

போதப்பா விட்டகுறை விந்திஞலே
புகழுடைய ஞானம்வந் தெய்தும்பாரு
நீதப்பா மதியமுத மதனையுண்ணு
நேரான வழியைவிட்டால் வருத்தங்கணும்
ஓதப்பா விண்ணமுதம் விந்தாற்சிந்தும்
உற்றவிடங் கண்டாலே கிட்டுமப்பா
சேதமதாய்ப் பொங்கவிட்டா லொன்றுமில்லை
திடமாகக் கண்டுண்டு தெளிந்துபாரே. (9)

பாரப்பா மனந்தானே அறிவிற்கூடப்
பஞ்சபூ தந்தானுஞ் செளிக்கும்பாரு
சீரப்பா பொய்யைவிட்டு மெய்யைப்பற்றச்
செங்கதிரோன் மதிகோடி யொளியுமாகும்
நேரப்பா சொல்நிலையும் நினைப்புமற்று
நிலையான வமுதமது மதியில்வீழும்
சேரப்பா மாளாத வழியிற்சேர்க்கும்
தியங்காதே பூரணத்தைக் கண்டுசெல்லே. (10)

செல்லப்பா வுரைக்கவொண்ணுச் சொரூபமாகி
சுத்தமொடு மவுனமா யரூபமாகி
சொல்லப்பா பகலிரவு மற்றதாகி
துரியாதீ தத்தினிலே நடனமாகி
வல்லதொரு பரையுடனே பரனுமாகி
மகத்தான நிற்குணமாய் நின்றசத்தி
[illegible]லப்பா சதாசிவன்று னுலகமாச்சு
நேரான கருக்குருவைப் பொருதிப்பாரே. (11)

பொருதியதோர் மேகநாதக் குளிகைதன்னைப்
புகழ்ச்சியுட னேயிரைப்பேன் பெரியோர்முன்ட
கருதியதோர் வெண்காரம் சாதிலிங்கம்
கனமான திவதைவேர் வசம்புசுக்கு
நிருதியதோர் இந்துப்பு வாய்விளங்கம்
நேரான ஓமமொடு பெருங்காயந்தான்
விருதியதோர் காட்டாம ணக்கன்வேரும்
வினையமுடன் ருனெடுப்பாய் பலமொன்ருமே.

பலமொன்ருப் பார்த்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பண்பான மைபோல அரைத்தெடுத்துப்
பெலமான சரக்கிடைநேர் வாளந்தூக்கிப்
பிரியமுடன் சம்பளத்தின் சாற்றினலே
கலனைக விடாமலேகன் ருகவாட்டிக்
கண்ணிடும் மைபோல வானபின்பு
நலமாக வழித்தெடுத்துக் குன்றியைப்போல்
நயனமென வுருட்டியொரு குழலில்வையே.

குழலில்வைத் தாதிபரை தியானஞ்செய்து
குறிப்பறிந்து குளிகையொன் றிரண்டளிக்க
விழலான குன்மமொடு குளிர்சுரங்கள்
விதிவயிற்றி லேநிற்குந் திரைகள்வாதம்
உழலான பித்தநீர் சோகைப்பாண்டு
உற்றவித க்ஷயரோகம் வயின்வலித்தல்
தழலான அசீரணம்பல் கனத்தநோயைத்
தப்பாமல் நீக்கிவிடுந் தனித்துப்பாரே. (14)

சூதமுனிவர் ஞான சூஸ்திரம் ௰௪ முற்றிற்று.

இப்பாகத்தில் அச்சிட்டிருக்கின்ற சாஸ்திரங்களில் மறைபொருளா யுரைத்துள்ள இரகசியங்கட்குத் திறவுகோலாகத் தெளிவித்திருக்கின்ற ஞானசாஸ்திரங்களை அடுத்தபாகத்தில் வெளியிட்டிருக்கிறேம், அதனைக் கண்ணுற்றால் நன்கு விளங்கும்.

குருவே துணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# யோக ஞான சாஸ்திரத் திரட்டின்

நான்காம் பாகத்தில் சொல்லியிருக்கிற

## முக்கிய விஷயங்கள்.

ஐயா! இதற்கடுத்த நான்காம்பாகத்தில், மச்சமுனி, வேதமுனி, துர்வாசமுனி, யூகிமுனி, வசிஷ்டமாமுனி, பிரம்பாட்டிச் சித்தர், ஞானச்சித்தர், சுகப்பிர்மரிஷி, கூர்மானந்தர், சூரியானந்தர், கண்ணானந்தர், அசுவினிதேவர், பராசர், தேரையர் முதலிய மேலான தேவ ரிஷிகளாற் சொல்லப்பெற்ற அருமையான இருபத்தைந்து சாஸ்திரங்கள் அடங்கியுள்ளவிஷயங்களை இதனடியிற் காணலாம். அவையாவன:

முதலாவது: மச்சமுனிவர் மூலஞானம் பத்தில், இடகலை பிங்கலை சுழிமுனைக் குரிய வாசியோக சாதன கேசரி மார்க்க முதலிய விபரங்களையும்;

2-வது: மச்சமுனிவர் சூட்சும ஞானம் பத்தில், கற்பமுறையும், சிவயோகி அனுஷ்டிக்கவேண்டிய குளிகைகளும், ஞானசோதி சித்தியும், சமாதி தசதீட்சை முதலிய விபரங்களையும்;

3-வது: மச்சமுனிவர் காரண ஞானம் பத்தில், நான்குவேத பிரணவமுடிவையும், ரவிமதி சுடர் கேசரி தெரிசனமும், அஷ்டாங்க யோக சித்தியின் விபரங்களையும்;

4-வது: மச்சமுனிவர் தீட்சை ஞானம் ஐம்பத்தைந்தில், பஞ்சபூத தேவதையும், பானுபிறை அக்கினியென்ற நாடியும், பத்துவாயுவும், பகருதற்கரிய நந்திதெரிசன விபரங்களையும்;

5-வது: மச்சமுனிவர் ஞான தண்டகம் தொண்ணூற்றேழில், அஷ்டமாசித்தி கருக்குரு கற்பம் வாதம் மை மெழுகு மூலிகை வேரு ரேசக பூரக கும்பக மூலாட்சர யோக ஞான சாதன விபரங்களையும்;

6-வது: மச்சமுனிவர் ஞான தீட்சாவிதி நூறில், நந்திதெரிசனமும், குண்டலிசத்தியும், ஆதியந்தம் பூரணசோதியும், அறுகோணத்தியல்பும், வாதமுறை கருமானம் வாசியின் தீட்சை விபரங்களையும்;

7-வது: வேதமுனிவர் ஞான சூஸ்திரம் இருபத்திநான்கில், அடி நடு முடி பரவெளி ரசகுளிகை சூடாமணி மாத்திரை விபரங்களையும்;

8-வது: தூர்வாசமகாரிஷி ஞானசூஸ்திரம் எழுபத்தேழில், வழலை குரு சவுக்காரம் மயிற்பாலம் கெருப்பாறு செயநீரும், சுண்ணமுடன் சிலவேதை விபரங்களையும்;

9-வது: யூகிமுனி தத்துவ ஞானம் நூற்றைந்தில், யோக ஞான சாதனங்களுக் குரிய மூலாட்சரங்களும், மூலாதாரத்தின் முடிவும், பஞ்ச பூதங்களுக்குரிய அஞ்சு தேவதைகளும், இடகலை பிங்கலை சுழிமுனை சோதிசொரூபமும், ஜனங்க ளுற்பத்தியும், தத்துவம் தொண்ணூற்றாறும், சரீர மர்ம முதலிய விபரங்களையும்;

10-வது: வசிஷ்டர் ஞானோதயம் பதினாறில், அறுகோண சக்கர மூலாட்சரங்களையும், ஆதியாஞ் சோதி தெரிசன யோக சாதன முதலிய விபரங்களையும்;

11-வது: வசிஷ்டர் வைத்திய சூஸ்திரம் இருநூற்றியாறில், செயநீர் சுண்ணம் செந்தூரம் மெழுகு தாம்பூர வங்கதங்கபற்பங்களையும், கிசாயம் லேகியம் சூரணம் முதலிய அவிழ்தங்களைச் செய்பாகம் கைபாகமாய்ச் செய்து பலவித நோய்களைப் பறக்கச்செய்யும் பலவித விபரங்களையும்;

12-வது: பாம்பாட்டிச் சித்தர் ஞான சூஸ்திரம் பதினாறில், யோக சாதன மர்மங்களின வல்லப விபரங்களையும்;

13-வது: பாம்பாட்டிச்சித்தர் பாடல் மூந்நூறில், பிரபஞ்சம் பொய்யென்றும், பிர்மமொன்றே மெய்யென்றும், அப் பிர்மத்தைச் சாரும் விபரங்களையும;

14-வது: ஞானச்சித்தர் மெய்ஞ்ஞானம் பன்னிரண்டில், யோக ஞான சாதனங்களுக்குரிய விபரங்களையும்;

15-வது: ஞானச் சித்தர் பாடல் முப்பத்தைந்தில், சிவயோக ஞான பிர்மனிலை விபரங்களையும்;

16-வது: சுகப்பிர்மரிஷி ஞான சூஸ்திரம் முப்பத் திரண்டில், திருசு சுண்ணம் குரு குளிகை வேதை கற்பம் செய்முறை முதலிய விபரங்களையும், யோகசாதனத்துக்குரிய விபரங்களையும்;

17-வது: கூர்மானந்தர் மவுனஞானம் ஐந்தில், மூன்றெழுத்தும் ஐந்தெழுத்தும், வாலை சித்தி முதலிய விபரங்களையும்;

18-வது: கூர்மானந்தர் ஞானசூஸ்திரம் ஐம்பதில், வாதவயித்தியம், காயகற்பமுறைகளையும், யோகசாதனமூலமந்திர விபரங்களையும்;

19-வது: சூரியானந்தர் ஞான சூஸ்திரம் பதிமூன்றில், பூநீர் வழலை தரு அண்டபிண்டம் உப்பு காயசித்தி மூலசுத்தி மூலமந்திர முதலிய விபரங்களையும்;

20-வது: சூரியானந்தர் கற்பஞான சூஸ்திரம் இருபத்தைந்தில், காயசித்தி யோகசாதனம் கெவுனகுளிகை முதலிய விபரங்களையும்;

21-வது: கண்ணானந்தர் சிவராஜயோகம் பதினான்கில், யோக சாதனத்துக்குரிய மூலாட்சரங்களையும், ஞான சித்தி விபரங்களையும்;

22-வது: அசுவினி தேவர் சிவயோக கற்பம் பதினாறில், வாசி நிலை யோக சாதனங்களுக்கு வேண்டிய விபரங்களையும்;

23-வது: பராசரிஷி ஞானோபதேசம் இருபத்திரண்டில், பூரண வஸ்துவைக்காணும் ஞானசாதன விபரங்களையும்;

24-வது: தேரையர் நவலோக பற்பம் பதினாறில், இரும்பு பித்தளையியம் வெள்வங்கம் திராவுருக்குச் செம்புடன் நாகம் வெள்ளி முத்து வெண்கலம் தங்கம் முதலிய நவலோகங்களையும், நன்றாய்ச் சுத்திமுறையுடன் பற்பஞ்செய்யும் விபரங்களையும்;

25-வது: தேரையர் சிவபூஜாவிதி எழுபத்தைந்தில், சிதம்பரச் சக்கரம், அஷ்டகர்மம், தேவிபூஜாவிதிக் கிரமங்களையும், சித்தியிற் சிறந்த யோகசித்தி காயசித்தி அஷ்டமாசித்தி முதலிய அநேக நுட்ப விபரங்களையும் சொல்லப்பெற்றிருக்கின்றது.

முன்னர் சொன்ன மூன்று பாகங்களிலும் ஒழுங்கா யுரைத்துள்ளதை, நன்றாய்த் தெரியவேண்டுமானால் நான்காம்பாகத்தை வாங்கி வாசிக்க நன்குவிளங்கும். தவசிரேஷ்டரின் சாதுரிய வாக்கியத் தன்மையை இதனாலறியலாம். ஆகையால் யாவரும் நான்காம்வாலியத்தையும் சேர்த்துப் பார்க்கும்படி கோருகிறேன்.

---

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.